தமிழ் பதிப்பு - இதழ் எண் 92

# நடபடிகள்



# பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம்

*"பலத்தினாலும் அல்ல,
பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய
ஆவியினாலேயே ஆகும் என்று
சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்"
(சகரியா 4:6).*

By Rev. Frank R. Parrish

தொடர்ந்து நடபடிகள் பத்திரிகையைப் பெற்றுக்கொள்ள கடைசி பக்கக்குறிப்புகளைக் காணவும். இமெயில் மூலம் கூட கிடைக்கும்

# நடபடிகள்

# பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம்

“பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல,
என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று
சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்” (சகரியா 4:6).

**WORLD MAP**
67, Beracah Road,
Kilpauk, Chennai -600 010.

ACTS Tamil Edition
**THE ANOINTING OF THE HOLY SPIRIT**
English Acts Vol. 36 / No. 1

Founder : Ralph Mahoney
Editors : Frank and Wendy Parrish
Managing Editor, India : E. Velayutham

Tamil Translation ACTS TA - 92
*Parisutha Aaviyanavarin Abishekam*
TA - 90 / 2009
© 2009

**WORLD MAP**
67, Beracah Road
Kilpauk, Chennai 600 010.



# பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம்

- ஃப்ராங்க் ஆர். பேர்ரிஷ்

## ஆசிரியர் குறிப்பு - முக்கியமானது!

அன்பான கிறிஸ்தவ சபைத் தலைவரே,



“அபிஷேகத்தைப்” பற்றிய இந்த *நடபடிகள்* இதழ் இதைப் பற்றிய ஒரு வேதாகமரீதியிலான ஆழமான ஆய்வாக இருக்கும்படி வடிவமைக்கப் பட்டிருக்கிறது. இந்த முக்கியமான தலைப்பைப்பற்றி நீங்கள் இன்னும் சிறப்பாகப் புரிந்துகொள்ள வேண்டுமானால், இதற்காகத் தீவிரமாகச் சிந்தித்து, படித்து, முயற்சி செய்ய வேண்டியிருக்கும்.

இந்த ஆய்வுக்காக நீங்கள் தொடர்ந்து கூடுதலான நேரம் செலவழிக்க வேண்டியிருக்கும். நீங்கள் ஒரு வேளை ஒவ்வொரு நாளும் ஒரு சில பக்கங்களை மட்டுமே வாசிக்கலாம். ஆனால் ஜெபத்தோடும் மிகுந்த கவனத்துடனும் இதில் ஈடுபடும்படி நான் உங்களை வற்புறுத்துகிறேன். அப்படிச் செய்வீர்களானால் உங்கள் வாழ்க்கையிலும், ஊழியத்திலும் மாற்றம் ஏற்படும்!

நான் பல ஆண்டுகள் ஊழியம் செய்த பிறகே, தேவன் எனது வாழ்க்கையிலும் ஊழியத்திலும் அவருடைய ஆவியானவரின் அபிஷேகம் காணப்பட வேண்டுமென்று வாஞ்சிக்கிறார் என்பதைப் புரிந்துகொண்டேன். நான் என் இருதயத்தைத் திறந்துகொடுத்து, தேவன் ‘‘என் அறிவுக் கண்களைத் திறக்க’’ அனுமதித்தபோது, நான் மாற்றப்பட்டேன்! என் ஊழியத்திலும் மாற்றம் காணப்பட்டது! என் வாழ்க்கை மற்றும் ஊழியத்தின் மூலமாக பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னமும், வல்லமையும் அதிகத் துடிப்போடும் காணக்கூடிய வகையிலும் வெளிப்பட்டன. எனது ஊழியத்தில் அதிகமான கனி காணப்பட்டது. முன்பு எப்போதும் இல்லாத வகையில் தேவனுடைய பிரசன்னத்தை நான் அளவிட முடியாத அளவுக்கு உணர்ந்தேன். எனது வாழ்க்கை எளிதாகிவிடவில்லை, ஆனால் என்னை நேசிக்கும்



கிறிஸ்துவின் மூலமாக முற்றிலும் ஜெயங்கொண்டவனாக வாழுவதற்கேற்ற அதிகமான திறன் காணப்பட்டது (பார்க்க, ரோமர் 8:37).

இந்த விவரங்களை நீங்கள் ஊக்கத்தோடும் உறுதியோடும் படிக்கும்படி நான் உங்களை ஊக்குவிக்கிறேன். உங்களுக்கு உதவியாக இருக்கும் சில செயல்பூர்வமான ஆலோசனைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

முதலாவதாக, இந்தப் போதனை முழுவதிலும் நான் பல வேதாகம மேற்கோள்களைக் கொடுத்திருக்கிறேன். தயவு செய்து ***ஒவ்வொரு வேத வசனத்தையும் எடுத்துப் படிக்க*** நேரம் செலவிடுங்கள். இதன் மூலம் சில மிகவும் முக்கியமான நோக்கங்கள் நிறைவேறும். 1) ஒரு சபைத்தலைவராக, அது எந்த ஆதாரத்திலிருந்து வந்தாலும், நீங்கள் வாசிக்கும் அல்லது கேட்கும் ஒவ்வொரு போதனையையும் அப்படியே ஏற்றுக்கொள்ளக் கூடாது. நீங்களே வேதவசனங்களை ஆராய்ந்து பார்க்க வேண்டும் (அப்போஸ்தலர் 17:11). 2) ஒரு சபைத்தலைவராக, வேதவசனங்களை அறிவதிலும், புரிந்து கொள்ளுவதிலும் முன்னேறுவது முக்கியமானதாகும் (2 தீமோத்தேயு 2:15-18). இது உங்களையும், நீங்கள் வழிநடத்துகிறவர்களையும் பிழையிலிருந்து காத்துக்கொள்ளும். மேலும் தேவனுடைய வார்த்தைகளில் நீங்கள் கைதேர்ந்தவராக ஆக முடியும். 3) தேவனுடைய வார்த்தை மட்டுமே தேவனுடைய வல்லமையினால் தாங்கப்படுகிறது (2 தீமோ. 3:16, 17; எபி. 4:12, 13; 2 பேதுரு 1:20, 21). 4) உன் இருதயத்தைத் திறந்து பரிசுத்த ஆவியானவர் உனக்குப் போதிக்கவும் உன்னை வனையவும் விட்டுக்கொடு. ஒரு காரியத்தை நீ அறிந்து அனுபவித்திருந்தால்தான் பிறருக்கு எடுத்துக்கூற முடியும். பரிசுத்த ஆவியானவரும் தேவனுடைய வார்த்தையும் இணைந்து செயல்படும் போதே மானிட இருதயத்தை மாற்ற முடியும்.

இரண்டாவதாக, ஒரு நோட்டுப் புத்தகத்தையோ அல்லது காகிதத்தையோ அருகில் வைத்திருங்கள். மேலும் ஆய்வு செய்வதற்காகக் குறிப்புக்களையும், கேள்விகளையும், வசனங்களையும் எழுதிவையுங்கள். நீங்கள் தேவனுடைய வார்த்தையை ஆய்வுசெய்யும்போது, அவர் உங்களோடு பேசி, சத்தியத்தை உங்களுக்கு வெளிப்படுத்துவார். இந்த ஆய்வு உங்களுடைய *தனிப்பட்ட வளர்ச்சியின்* பயணமாக இருக்கட்டும். இது நல்ல போதனையைப் பெறுவதற்கும் அப்பால் உங்களுக்கு அதிக உதவியாக இருக்கும்.

இறுதியாக, எனது அன்பான சக ஊழியரே, உங்களுடைய ஆய்வு வேளையில் ஜெபத்தோடு கர்த்தருக்குக் காத்திருக்கும்படி நான் வலுவாக

உங்களை ஊக்குவிக்கிறேன். ஏனென்றால் பரிசுத்த ஆவியானவரே சத்தியத்தையும், கிறிஸ்துவின் இயல்பு மற்றும் குணாதிசயத்தையும் வெளிப்படுத்துகிறார் (யோவான் 14:17, 26). உங்கள் மனதை மட்டும் இந்த ஆய்வில் ஈடுபடுத்தாதீர்கள். அப்போது நீங்கள் பெற்றுக்கொள்ளுவது கட்டுப்படுத்தப்படும். நமது சிந்தைகள் தேவனால் கொடுக்கப்பட்ட **ஈவு**களாக இருக்கின்றன. என்றாலும் அவை எல்லைக்குட்பட்டவையாக இருக்கின்றன (பார்க்க, 1 கொரிந்தியர் அதிகாரம் 3, 4). உங்களுடைய இருதயத்தை தெரிந்தெடுத்து, பரிசுத்த ஆவியானவர் *உங்களுக்குப்* போதிக்கவும், *உங்களை* வடிவமைக்கவும் இடம் கொடுங்கள். நீங்கள் சென்றிருக்கும் இடம் வரையில்தான் மற்றவர்களை உங்களால் வழிநடத்த முடியும். எனவே ஜெபித்து, ஆய்வுசெய்து, இந்தப் போதனையை அனுபவியுங்கள். நீங்கள் வாசிக்கும்போதே தேவனுடைய அபிஷேகத்தின் வல்லமையில் வளர்ச்சி பெறுவீர்களாக!

மேலும், இந்த *நடபடிகள்* இதழில் நாங்கள் அறிமுகம் செய்துள்ள புதிய அம்சங்களையும் கவனியுங்கள். இந்தப் போதனை முழுவதிலும் நான் உங்களுக்காகச் சிறப்பான குறிப்புகளைக் (in screen) கொடுத்திருக்கிறேன். ஒரு சபைத் தலைவராக ஊழியம் அல்லது தனிப்பட்ட வளர்ச்சியைக் குறித்த வேதாகமக் கொள்கைகளை நீங்கள் இன்னும் ஆழமான வகையில் ஆய்வு செய்யும்படி அவை வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்தச் சிறப்பான போதனைகள் "**போதகரிடமிருந்து போதகருக்கு**" என்ற தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. நீங்கள் அவைகளை எளிதாகக் கண்டுகொள்ளும்படியாக அவை சாம்பல் வண்ணப் பின்னணியில் கொடுக்கப்பட்டுள்ளன.

அன்பான போதகரே, கிறிஸ்துவில் நான் உங்களை நேசிக்கிறேன். உங்களுக்கான தேவனுடைய நோக்கத்தில் நான் விசுவாசம் வைத்திருக்கிறேன். நீங்கள் தேவனுடைய தெரிந்தெடுக்கப்பட்ட கருவியாக இருக்கிறீர்கள். அவர் உங்களைத் தம்முடைய ராஜ்யத்துக்காகவும், மகிமைக்காகவும், தமது சபையை ஆசீர்வதிப்பதற்காகவும் பயன்படுத்த வாஞ்சிக்கிறார். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன். நீங்கள் ஆய்வுசெய்து, தேவனுடைய வார்த்தையிலிருந்தும், அவருடைய ஆவியானவரிலிருந்தும் பெற்றுக்கொள்ளும்போது, தேவன்தாமே உங்களை ஆசீர்வதித்து, பலப்படுத்தி, விரிவாக்குவாராக!

உங்கள் சகோதரன் மறைதிரு **பிராங்க் ஆர். பேர்ரிஷ்**
இயக்குநர், வேர்ல்ட் மேப்



## "பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம்"

**-சுருக்கக் குறிப்பு**

**முன்னுரை**

**I. சரித்திர மற்றும் வேதாகமப் பின்னணியில் அபிஷேகத்தின் வரலாறு**

**A. பழைய ஏற்பாட்டில் அபிஷேகம்**

1. "அபிஷேகம் செய்தல்" என்ற சொல்லின் துவக்கம்.
2. "மேசியா" என்ற சொல்லின் துவக்கம்

**B. புதிய ஏற்பாட்டில் அபிஷேகம்**

1. அலெய்போ (aleipho)
2. கிரையோ (chrio)
3. கிறிஸ்மா (chrisma)

**II. அபிஷேகத்தின் இயல்பு, நோக்கம் மற்றும் செயல்பாடு**

**A. அபிஷேகத்தின் இயல்பு**

1. அபிஷேகம் என்பது எதுவல்ல
2. பரிசுத்தமாக்கப்படுதலின் மூன்று அம்சங்கள்
3. வளர்ச்சிக்கான பாதை

**B. அபிஷேகத்தின் நோக்கம்**

1. அபிஷேகத்தின் விளக்கம்
2. ஒரு நோக்கத்தோடு கூடிய வல்லமை
   a. தேவனால் பலப்படுத்தப்படுதல்
   b. அபிஷேகத்தை யாரால் பெற முடியும்?

**C. அபிஷேகத்தின் செயல்பாடு**

1. அழைப்போடு தொடர்புடைய அபிஷேகம்
2. நாமே வைத்துக் கொள்ளக்கூடாத அபிஷேகம்
3. அபிஷேகத்தைக் கட்டுப்படுத்த முடியும் அல்லது நிறுத்த முடியும்.
4. அபிஷேகத்தைத் தவறாகப் பயன்படுத்த முடியும்.

**D. அபிஷேகத்துக்குப் பழைய ஏற்பாட்டு முன்வடிவங்கள்**

1. முன்வடிவங்களின் அடையாளங்கள்
2. அபிஷேகத் தைலத்திலிருந்து பாடங்கள்

**III. அபிஷேகத்தில் நடத்தல்**

**A. அபிஷேகத்தைப் பாதுகாத்தல்**

1. கிணற்றில் எலிகள்
2. தூய்மையடையும் வழி
3. உண்மையான அபிஷேகத்தின் ஏழு குணாதிசயங்கள்.

**B. அபிஷேகத்தில் வளருதல்**

1. குணமும் அபிஷேகமும்
2. எஜமானரின் அடிச்சுவடுகள்
   a. இயேசு அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டிருந்தார்.
   b. இயேசு முதிர்ச்சியில் வளர்ச்சியடைந்தார்
   c. இயேசு தாழ்மையில் நடந்தார்
   d. இயேசு பரீட்சிக்கப்படுவதைப் புரிந்துகொண்டார்

**C. அவருடைய அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்ளுதல்**

1. நிரப்பப்படுங்கள்!
2. தேவனைத் தேடுங்கள்!





# பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம்

***பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் (சகரியா 4:6).***

- மறைதிரு ஃப்ராங்க் ஆர். பேர்ரிஷ்

## இந்தப் போதனைக்கு முன்னுரை

“அபிஷேகத்தைப்” பற்றிய ஒரு பயனுள்ள வேதாகம ஆய்வைத் துவங்குவதற்கு முன்பாக, சில முக்கியமான அடிப்படைக் கொள்கைகளை நாம் உறுதிப்படுத்த வேண்டும். இந்தக் கொள்கைகள் ஒரு வேதாகமரீதியான மேடையாக அமையும். அதிலிருந்து அபிஷேகத்தைக் குறித்த சரியான பார்வையைப் பெற முடியும்.

இந்தக் கட்டுரையின் துவக்கப்பகுதிகளில் இந்த அடிப்படையான கொள்கைகளைப்பற்றி நாம் பார்ப்போம். இவை உங்களுக்குப் புதிதாக இருக்கலாம் அல்லது ஏற்கெனவே அறிமுகமானவையாக இருக்கலாம். என்றாலும், நாம் இந்த ஆய்வைச் செய்ய ஒரு பொதுவான அஸ்திபாரம் தேவைப்படுகிறபடியால் இவை முக்கியமானவையாகும். கீழே கொடுக்கப்பட்டுள்ள கொள்கைகளைக் கவனமாகப் படியுங்கள். இந்தக் கொள்கைகள் எவ்வாறு சிறப்பாக நிறுவப்பட்டிருக்கின்றன என்பதைப் பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு வெளிப்படுத்தி, உணர்த்தி, சோதித்து, உறுதிப்படுத்த நேரம் கொடுங்கள். உங்கள் சொந்த வாழ்க்கையிலும் ஊழியத்திலும் இவைகளை நீங்கள் வாழ்ந்துகாட்ட வேண்டும். சக தலைவரே, இது முதிர்ச்சியை எட்டும்படிக் “குறுக்கு வழிகள்” பற்றிய ஆய்வு அல்ல. அல்லது உங்களை “வெற்றியாளராக” ஆக்கும்படியாக அவசர சூத்திரங்களையும், வேடிக்கையான கொள்கைகளையும் இது கொடுக்கவில்லை. மாறாக, இது சபைத் தலைவர்களாகிய நாம் எப்படி வளர்ந்து, தேவனுடைய ராஜ்யத்துக்குள்ளாகச் செயல்பட வேண்டும்

என்பது பற்றிய வேதாகம ஆய்வாகும். மெய்யாகவே கனிகொடுக்க வேண்டுமானால், தேவனுக்கு அதிகமான மகிமையைக் கொண்டுவரும் நிலைத்திருக்கும் ஊழியத்தைப் பெற்றிருக்க வேண்டுமானால் முதிர்ச்சியை நோக்கிச் செல்லும் செயல்முறை முக்கியமானதாகும்.

எனவே, நாம் அபிஷேகத்தைப்பற்றிக் கற்றுக்கொள்ளுவதில் ஊக்கத்தோடு ஈடுபடுவோமாக. தமது வழியாகவும், தம் சித்தத்தின்படியும் உறுதிப்படுத்தியிருக்கிறவைகளை மட்டுமே தேவனால் ஆசீர்வதிக்க முடியும். நாம் அபிஷேகத்துக்கடுத்த காரியங்களை அறிந்து கொள்ளுவதற்கு முன்பாக அவருடைய வார்த்தையில் சரியான அஸ்திபாரத்தை அமைப்பது அத்தியாவசியமாகும் (ஏசாயா 28:10).

### வரம்பற்ற ஊழியம்

இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கும் **எந்த** மற்றும் **ஒவ்வொரு** விசுவாசியும் **அபிஷேகத்தைப்** பற்றி அறிந்திருப்பது மிகவும் முக்கியமானதாகும். என்றாலும் **அபிஷேகத்தைப்** புரிந்துகொள்ளுவது - அது என்ன, அது எப்படிச் செயல்படுகிறது, அதில் நடந்து வளர்ச்சி பெறுவது எப்படி என்பதை அறிந்திருப்பது, மிகவும் **அத்தியாவசியமானதாகும்.** முழுநேர ஊழியத்துக்காக அழைக்கப்பட்டிருக்கிறவர்களைப் பொருத்தவரையில் இது உண்மையாகும்.

துரதிருஷ்டவசமாக, சில தலைவர்கள் அபிஷேகத்தைச் சரியாகப் புரிந்துகொள்ளுவதில்லை, அல்லது அதைத் தவிர்த்து விடுகிறார்கள். தேவன் அதை நமக்குக் கொடுக்க விரும்பினாலும், பல தலைவர்கள் அது என்ன, அதை எப்படிப் பெறுவது என்பதை அறியாதிருக்கிறார்கள். இதனால், பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தின் இடத்தில் வேறு காரியங்களை வைக்க முயலுகிறார்கள்.

சில தலைவர்கள் நிர்வாகத்திலோ அல்லது அமைப்பிலோ திறமைசாலிகளாக ஆகலாம். ஒருவேளை அவர்கள் அதிகமாகப் படித்து, தங்களுடைய பெயருக்கு முன்னாலும், பின்னாலும் பட்டங்களைச் சேர்த்துக் கொள்ளலாம். அவர்கள் பல மாநாடுகளிலும் கலந்துகொண்டு, பெரிய பேச்சாளர்களின்மூலம் தூண்டுதலைப் பெறலாம். மக்களை ஆற்றலுள்ள வகையில் வழிநடத்தித் தூண்டுதலளிப்பதற்காகத் தங்கள் சொந்தப் பேச்சுத் திறனையும், பாடும் திறனையும் வளர்த்துக்கொள்ளலாம்.



மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் காரியங்கள் தவறானவை அல்ல. அவை ஒருவேளை ஊழியத்துக்கு உதவியாக இருக்கலாம். அல்லது இல்லாமலுமிருக்கலாம். **ஆனால் இவை அபிஷேகம் அல்ல!** ஒரு ஊழியரின் வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவரின் மெய்யான அபிஷேகத்தின் இடத்தை இவை எடுத்துக்கொள்ள முடியாது.

கல்வியும், நிர்வாகத் திறன்களும் நல்லவையாகவும், உதவியாகவும் இருக்கலாம். என்றாலும் தலைவர் சாதிக்க உதவுவதில் அவை வரம்புக்குட்பட்டவையாக இருக்கின்றன. நாம் நமது கல்வியைச் சார்ந்திருக்கும்போது, அந்தக் கல்வியின் வரம்பு வரையே சிறப்பான விளைபயன்களைப் பெற முடியும். நமது பேச்சுத் திறனையோ அல்லது மற்ற திறன்களையோ நாம் சார்ந்திருக்கும்போது, இந்தத் திறன்களைக் கொண்டு எதைச் சாதிக்க முடியுமோ அதுவே எல்லையாக இருக்கிறது.

**ஆனால் நாம் பரிசுத்த ஆவியானவரைச் சார்ந்திருக்கும்போது, அவரால் செய்யக்கூடியது மட்டுமே நமது எல்லையாக இருக்கிறது!**

ஊழியத்திற்கான அழைப்பை நிறைவேற்றுவதற்கு நாம் எதைச் சார்ந்திருக்கிறோமோ அல்லது எதன்மீது நம்பிக்கை வைத்திருக்கிறோமோ அதுவே நம்மால் செய்யக்கூடியவைகளைக் கட்டுப்படுத்துகிறது. உங்களுடைய ஊழியத்தில் எவ்வளவு தூரம் கட்டுப்பாடு இருக்க வேண்டுமென்று விரும்புகிறீர்கள்?

*ஆனால் தேவனுக்கு எந்த வரம்பும் கிடையாது!* (பார்க்க, லூக்கா 18:27). எனவே, நான் தேவன்மீதும், அவருடைய வல்லமை மற்றும் திறமையின்மீதும், நம்பிக்கை வைத்து அவைகளைச் சார்ந்திருப்பேன் என்றால், தேவனுடைய சித்தமும் எனக்கான அவருடைய வாஞ்சையுமே ஊழியத்தில் எனது வரம்புகளாக இருக்கின்றன (பிலி. 4:13).

மறுபடியும் பிறந்த விசுவாசிகள் எல்லோருமே தங்கள் நடத்தையிலும் செயலிலும் ஆவியின் கனியை வெளிப்படுத்த வேண்டும் என்பது தேவனுடைய சித்தமாகும் (கலா. 5:16-26). ஆவியின் கனியே கிறிஸ்துவின் குணாதிசயமாகும். கிறிஸ்துவின் சரீரத்தில் மற்றவர்களை வழிநடத்தும்படி அழைக்கப்பட்டவர்களிடம் இதே குணாதிசயம் காணப்பட வேண்டும். தங்களால் வழிநடத்தப்படுகிறவர்களுக்குப் பயபக்தியான நடத்தையின் முன்மாதிரியைக் காட்டுவது ஒரு

தலைவரின் பங்காகும் (1 கொரி. 11:1; பிலி. 3:17; 1 தீமோ. 4:12). எந்த வரங்களும், நிர்வாகத் திறன்களும், பிரசங்கிக்கும் மற்றும் போதிக்கும் திறன்களும், கிறிஸ்துவைப் போன்ற குணாதிசயத்துக்கும் நேர்மைக்கும் மாற்றாக இருக்க முடியாது.

நாம், குறிப்பாக மற்றவர்களை வழிநடத்தும்படி அழைக்கப் பட்டிருப்பவர்கள், பரிசுத்த ஆவியானவரின் இயல்புக்கு அப்பாற்பட்ட வல்லமையைப் பெற்றிருப்பதும் தேவனுடைய சித்தமாகும். இயேசுவானவர் தமது சீஷர்களிடம் *“நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்; நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன்”* என்று சொல்லியிருக்கிறார் (யோவான் 15:16).

இந்த வசனத்திலிருந்து நமது வாழ்க்கையில் கனி நிலைத்திருப்பதை இயேசு விரும்புகிறார் என்று அறிகிறோம். இது எப்படி நடக்கும்? நமது ஊழியம் தேவனுடைய அபிஷேக வல்லமையினால் - பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் - நிரப்பப்பட்டிருக்கும்போது, *நம்மூலமாக* வெளிப்படும் **அவருடைய** வல்லமை கனிகொடுக்கும் வகையிலும், நிலைத்திருக்கும் வகையிலும் மக்களில் தாக்கம் உண்டாக்கும்படி நம்மைப் பலப்படுத்துகிறது.

நாம் எவ்வளவு தாலந்துகளைக் கொண்ட புத்திசாலியான தலைவராக இருக்கிறோம் என்பது முக்கியமல்ல. பரிசுத்த ஆவியானவரால் பலப்படுத்தப்படாவிட்டால், ஒரு தலைவரால் ஊழியத்தில் தேவனுடைய வழியில் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற முடியாது. அதிர்ஷ்டவசமாக, நமக்கு எது தேவை என்பதைத் தேவன் நம்மைவிடச் சிறப்பாக அறிந்திருக்கிறார். தமது மேலான அழைப்பை நிறைவேற்றும்படியாக அவர் ஏற்கெனவே தமது வல்லமையையும், திறனையும் நமக்கு அருளியிருக்கிறார்.

### வல்லமையில்லாத வடிவம்

இன்று பல சபைகளிலும், ஊழியங்களிலும் தேவனுடைய பிரசன்னமும், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையும்



கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த ஊழியங்கள் திரளான மக்களை இழுக்கலாம், நவீன வசதிகளைக் கொண்டிருக்கலாம் அல்லது கிளர்ச்சியளிக்கும் நிகழ்ச்சிகளை நடத்தலாம். ஆனால் பரிசுத்த ஆவியானவரின் மெய்யான பிரசன்னமும், வல்லமையும் வரவேற்கப்பட்டு, காணப்படாவிட்டால், இந்தக் கூட்டங்கள் வெறுமையான சமயக் கொண்டாட்டங்களாகவே இருக்கும்.

ஒரு பெரிய கட்டிடத்திலோ அல்லது அரங்கிலோ நவீன வசதிகள் காணப்படும். *கால்ப்பந்துப்போட்டி போன்ற* கிளர்ச்சியான நிகழ்ச்சிகள் நடத்தப்படலாம். ஆனால் இந்த வெளியரங்கமான சூழ்நிலைகளுக்கும், இயேசுகிறிஸ்துவை ஊக்கமாகப் பின்பற்றும் சீஷர்களை உருவாக்கு வதற்கும் எந்தச் சம்பந்தமும் கிடையாது!

சபையின் வரலாற்றைப் பார்க்கும்போது, தங்களை ஒப்புக்கொடுத்த மானிடப் பாத்திரங்களின் மூலமாகத் தேவன் நமது உலகத்தில் பல இடங்களில் பெரியதும், அற்புதமானதுமுமான கிரியைகளைச் செய்திருப்பதை நாம் காண்கிறோம். இந்தச் சபைகளில் பெரும்பாலானவைகளும், இந்தப் பரந்த பூகோளப் பிராந்தியங்களும் முன்பு துடிப்பான கிறிஸ்தவப் பிரசன்னத்துக்காகப் புகழ்பெற்றிருந்தன. ஆனால் இப்போது அவை ஆவிக்குரிய பிரகாரமாக அந்தகாரப்பட்டிருப்பது சோகமான காரியமாகும். முன்பு சபையானது திளைத்து, செல்வாக்கைப் பெற்றிருந்த பல இடங்கள் இப்போது வெறுமையாகவும், சுவிசேஷத்தின் வெளிச்சமில்லாமலும் காணப் படுகின்றன.

புதிய ஏற்பாட்டு வரலாற்றில் சின்ன ஆசியாவிலிருந்த (தற்போது துருக்கி) சபைகள் அதிகப் புகழ்பெற்றிருந்தன. இந்தச் சபைகளைப் பற்றி வெளிப்படுத்தலின் புத்தகத்தில் வாசிக்கலாம். இவை பொதுவாக “வெளிப்படுத்தலின் ஏழு சபைகள்” என்று அழைக்கப்படுகின்றன.

இந்தச் சபைகள் ஒரு காலத்தில் மனிதரின் இருதயத்தில் கிறிஸ்துவின் மீட்பின் கிரியையை அறிவிக்கும் வல்லமையான அரண்களாகப் போற்றப்பட்டன. இங்கே பல அற்புதங்களும் நடந்திருக்கின்றன (நடபடிகளின் புத்தகத்தை வாசியுங்கள்). ஆனால் இன்று சுற்றுலா செல்லுகிறவர்கள் பணம் கொடுத்து அப்போஸ்தலர்கள் முன்பு ஜீவவார்த்தையை அறிவித்த இந்தப் பட்டணங்களின்



**ஜீவனுள்ள வார்த்தையைக் பிடித்துக்கொள்ளுதல்**

அழிவுகளைச் சுற்றிப் பார்க்கிறார்கள். இப்போது இந்த இடங்கள் ஜீவனில்லா தவையாக, சுவிசேஷத்தின் வல்லமை இல்லாதவை யாகக் காணப்படுகின்றன.

முன்பு பெரிய சபை களாகவும், ஊழியங்களா கவும் காணப்பட்ட இவைக ளுக்கு என்ன நேர்ந்தது? இப்போது ஆகாயத்துப் பறவைகள் மட்டுமே கூடியி ருக்கும் இந்த வெறுமையான அழிவுகள் நமக்கு எச்சரிப்பாகவும், பாடமாகவும் இருக்கின்றன. இங்கேதான் நாம் இதைக் கற்றுக்கொள்ளுகிறோம்: ***சபைத் தலைவர்கள் தேவனுடைய பரிசுத்த ஆவியானவரையும் அவருடைய காலம் கடந்து நிற்கும் சத்தியங்களையும்*** *சார்ந்திருக்காமல், தங்கள் சொந்த பலத்தை சார்ந்திருக்கத் துவங்கும் போது அல்லது பாரம்பரியங்களையும், பட்டங்களையும், சபை அரசியலையும், கல்வியையும் சார்ந்தி ருக்கும்போது, தேவனுடைய பிரசன்னமும் வல்லமையையும், தலைவர்களாகிய நம்மையும், நமது ஊழியங்களையும், சபைகளையும் விட்டு விலகுகிறது.*

### சபை என்றால் என்ன?

சபையின் நிலையைக் குறித்துக் கவனிக்கும்படி பரிசுத்த ஆவியானவர் பவுலுக்குத் தூண்டுதலளித்தார் (பார்க்க 1 கொரிந்தியர் 3ஆம் அதிகாரம்). கொரிந்திய சபையினர் அவர்களுடைய மாம்சீகமான, முதிர்ச்சியில்லாத நடத்தைக்காகவும், ஒருவர் மற்றவர்மீது சண்டை போட்டுக்கொள்ளுவதற்காகவும் கடிந்து கொள்ளப்பட்டார்கள். ஒருவர் மற்றவர்களின்மீது அதிகாரம் செய்யும் நோக்கத்தோடு அவர்கள் குழுக்களாகப் பிரிந்து போயிருந்தார்கள் (3:1-4). அன்று மட்டுமின்றி, இன்றும் கூடத் தன்னையே உயர்த்திக் காட்டும் இந்தப் பெருமை காணப்படுகிறது. இது பிசாசின் பாவமாகும் (1 தீமோ. 3:6). இன்றும்



சபையில் கனிகொடுப்பதை தடுப்பதற்கு மனிதர்களின் *பெருமையான நடத்தையும், தன்னையே சார்ந்திருக்கும் முயற்சிகளும்* காரணமாக இருக்கின்றன.

பவுல் தொடர்ந்து தேவனே சபை மெய்யாக வளர்ச்சிபெறும்படி செய்கிறார் என்று சுட்டிக்காட்டுகிறார். *“அப்படியிருக்க, நடுகிறவனாலும் ஒன்றுமில்லை, நீர்ப்பாய்ச்சுகிறவனாலும் ஒன்றுமில்லை, விளையச் செய்கிற தேவனாலே எல்லாமாகும்.”* (1 கொரிந்தியர் 3:7)

**ஒரேயொரு அஸ்திபாரத்தின்மீது** மட்டுமே சபையைக் கட்ட முடியும். மூலைக்குத் தலைக்கல்லாக இருக்கும் இயேசு கிறிஸ்துவே அஸ்திபாரமாக இருக்கிறார் (1 கொரி. 3:10, 11; மேலும் பார்க்க, எபேசியர் 2:20-22). இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் சபை பிறந்தபோது அவர் மூலைக்குத் தலைக்கல்லாக இருந்ததுபோல இன்றும் இருக்கிறார்.

### சபையின் மையம்

இயேசுவானவர் ஏன் ***“மூலைக்குத் தலைக்கல்”*** என்று அழைக்கப்படுகிறார் (மத். 21:42) என்பதைப் புரிந்துகொள்ள வேண்டுமானால் பண்டைய நாட்களில் மூலைக்குத் தலைக்கல் எப்படிப் பயன்படுத்தப்பட்டது என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.



**மக்களைச் சீஷராக்கி கட்டியெழுப்புதல்**

புராதன மத்தியக் கிழக்கு நாடுகளில் வீடுகளும் கட்டி டங்களும் ஒரே வகையில் தான் கட்டப்பட்டன. முதலில் ஒரு கல் மிகவும் கவனமாக நாட்டப்படுகிறது. இதுவே மூலைக்குத் தலைக்கல் லாகும். இந்தக் *குறிப்பிட்ட மூலைக்கல்லுக்கு* ஏற்றபடி யாகத்தான் கட்டிடத்தின் அளவும், அதன் வடிவ மைப்பும் திட்டமிடப்பட்டு

கிறது. ஜீவனுள்ள சபை எப்படிக் கட்டப்படுகிறதோ அதில் கிறிஸ்துவின் மேன்மையைச் சுட்டிக்காட்டும்படியாக, பரிசுத்த ஆவியானவர் பவுலின் மூலமாக இந்த எடுத்துக்காட்டைப் பயன்படுத்தியிருக்கிறார். அது வளர்ந்துகொண்டிருக்கும், ஆவிக்குரிய ஜீவனோடிருக்கும் ஜீவனுள்ள கற்களைக் கொண்டு, இயேசு கிறிஸ்துவின் மூலமாக இரட்சிப்பின் மூலைக்கல்லின்மீது கட்டப்படுகிறது (1 பேதுரு 2:4-10). சபையின் மத்தியிலுள்ள இந்த மூலைக்கல் இல்லாமல் வேறு எதுவும் சரியாகக் கட்டப்பட முடியாது.

சபைத்தலைவர்களாகிய நாம் தேவனுடைய ஜீவனுள்ள சபையைக் கட்டுவதில் உதவும்படியாக, அவருடைய நோக்கத்துக்கும், திட்டத்துக்கும் கீழ்ப்படிவதில் கிறிஸ்துவோடுகூடப் பங்காளிகளாக இருக்கும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம். புதிய ஏற்பாட்டுச் சபையானது - கிறிஸ்துவின் சபையானது, இயேசு கிறிஸ்துவின் மீதான விசுவாசத்தின்மூலமாக இரட்சிப்பின் அறிவைப் பெற்றிருக்கும் மக்களைக் கொண்டதாகும். புதிய ஏற்பாட்டில் “சபை” என்ற சொல் அமைப்புரீதியான வடிவமைப்புகளையோ, பட்டங்களையோ, கட்டிடங்களையோ அல்லது சபைப் பிரிவுகளையோ குறிக்கவில்லை. “சபை” என்பது கிறிஸ்துவில் விசுவாசத்தின்மூலம் இரட்சிக்கப்பட்டு, நீதிமானாக்கப்பட்ட **மக்களைக்** கொண்டது, இவர்கள் முதிர்ச்சியடைந்து வரும் சீஷர்களாவர்.

## மெய்யாகக் கனிகொடுத்தல்

புதிய ஏற்பாட்டில் சபையைக் குறிக்க இந்த சொற்களும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன: *“ஜீவனுள்ள கற்கள்”* (1 பேதுரு 2:5); *“கிறிஸ்துவின் சரீரம்”* (1 கொரி. 12:27); தேவனுடைய *“பண்ணை” “மாளிகை”* அல்லது *“ஆலயம்”* (1 கொரி. 3:9, 16, 17). இந்த எல்லாப் பதங்களிலும் ஒரு காரியம் பொதுவாக இருக்கிறது; இவை எல்லாமே இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கும் மெய்யான விசுவாசிகளான **மக்களைக்** குறிக்கிறது.

இதைக் கண்டிப்பாகப் புரிந்துகொள்ள வேண்டும். சபைத் தலைவர்களாக நாம் சபையை நிர்வாகம் செய்வதற்கும், புதிய கட்டிடங்களைக் கண்காணிப்பதற்கும், சபையின் செயல்பாடுகளை ஒருங்கிணைப்பதற்கும் மட்டும் அழைக்கப்படவில்லை. நாம் *மக்களைச்*



சீஷராக்கி, கட்டியெழுப்பும்படித் தேவனோடு கூடப் பங்காளராக இருக்கும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம். ஜீவனுள்ள தேவனுடைய ஜீவனுள்ள சபையாக இருக்கும் விசுவாசிக்கும் **மக்களுக்கு** மேய்ப்பராக இருந்து போஷாக்கு அளிக்கும்படிக்கும், அவர்கள் இயேசுகிறிஸ்துவின் வளர்ந்துவரும் சீஷராகும்படி உதவிசெய்வதற்கும் தேவனால் அழைக்கப்பட்டிருக்கிறோம். தேவனுடைய உதவியோ அல்லது வல்லமையோ இல்லாமல் இந்த உக்கிராணத்துவப் பணியை நம்மால் சரியாகச் செய்ய முடியாது (பார்க்க, சங்கீதம் 127:1).

கிறிஸ்துவின் மூலமாக இரட்சிப்பு என்னும் ஒரே அஸ்திபாரத்தின்மீது நாம் எப்படிக் கட்டுகிறோம் என்பதற்குத் தேவனுக்கு ஒருநாளில் கணக்குக் கொடுக்க வேண்டும் (1 கொரி. 3:12-23). நமது கருத்துக்கள், பலம், புத்திசாலித்தனத்தின் மூலமாக நாம் திரளான மக்களை இழுத்துக்கொண்டிருக்கிறோமா? சிறிது காலத்துக்கு இது வெற்றியாகத் தோன்றலாம், ஆனால் அது தேவன் விரும்பும் நிலைத்திருக்கும் கனியைக் கொடுக்காது (யோவான் 15:5, 8, 16).

அல்லது இதற்கு மாறாக, நாம் நாள்தோறும் தேவ ஆவியானவருக்கு ஒப்புக்கொடுத்து, அவருடைய சித்தத்துக்கு நம்மை அர்ப்பணிக்கிக்கிறோமா? அல்லது, அவர் நமக்குக் கொடுக்கும் ஊழியத்தின் ஒவ்வொரு கணத்திலும் தேவனுடைய மெய்யான குமாரர்களாக (ரோமர் 8:14) அவரால் வழிநடத்தப்படுகிறோமா? அப்படியானால், அவருடைய வல்லமை மற்றும் உதவியின் மூலமாக நாம் மெய்யாகவே கனிகொடுக்க முடியும். அந்தக் கனி நிலைத்திருக்கும் (யோவான் 15:16).

*கனி* என்பதற்கும் *கனிகொடுத்தல்* என்பதற்கும் மானிட ஞானத்தில் அர்த்தம் கொடுக்கும் அதே வகையில் தேவன் அவைகளுக்கு வரையறை செய்யவில்லை என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். கனிகொடுத்தல் என்றால் அதிகமான மக்கள் பின்பற்றும்படி செய்தல் என்றோ அல்லது செல்வத்தையும் செல்வாக்கையும் பெறுதல் என்றோ மானிட ஞானத்தில் சொல்லப்படலாம். புகழையும், அதிகாரத்தையும், அதிர்ஷ்டத்தையும் கொண்டிருப்பதே கனிகொடுத்தல் என்று சொல்லலாம்.

ஆனால் தேவனுடைய பார்வையில் கனிகொடுத்தல் என்பது ஒரே அளவுகோலைக் கொண்டே அளக்கப்படுகிறது: *மக்கள் கிறிஸ்துவின்*

*சீஷர்களாக முதிர்ச்சியடையும்போது, அவர்களுடைய வாழ்க்கை கிறிஸ்துவின் சாயலுக்கும், குணாதிசயத்துக்கும் மாற்றப்படுதல்.* இந்த விளக்கத்தின் சத்தியத்தைப் புரிந்து கொள்ள கீழ்க்கண்ட கொள்கைகள் உங்களுக்கு உதவியாக இருக்கும்.

### அவருடைய சாயலுக்குச் சீர்பொருந்தப்பண்ணப்படுதல்

மனிதன் தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறான் (ஆதி. 1:26, 27). இது சரீரப்பிரகாரமான சாயலாக இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. ஆனால் இது திறமைகளையும் திறன்களையும் குறித்ததாகும். இந்த வேதவசனப் பின்னணியில் "சாயல்" என்பது பகுத்தறிதல், அறிவு, உணர்வுகள், ஆர்வம், தெரிந்துகொள்ளும் திறன் ஆகிய பண்புகளைக் குறிக்கிறது. நாம் அன்புகாட்டவும், தியாகம் செய்யவும், நல்லதையும் மெய்யானதையும், சரியானதையும் பாராட்டவும் ஏற்றபடி திறனோடு படைக்கப்பட்டிருக்கிறோம்.

தேவன் ஏன் இந்த வகையில் நம்மைப் படைத்தார்? தேவன் நம்மை *ஒரே நோக்கத்துக்காவே* சிருஷ்டித்தார். நாம் அவரோடு உறவுவைத்துக்கொள்ள வேண்டும் என்று அவர் தமக்காகவே நம்மைச் சிருஷ்டித்தார். இதுவே நமது மேலான அழைப்பாகும்! தேவனுக்கு அதிகமான தேவதூதர்கள் தேவைப்படவில்லை, அவர் அதை விரும்பவுமில்லை. அல்லது அவர் இன்னுமதிக தூதர்களைப் படைத்திருப்பார். மாறாக, வேதாகமம் முழுவதிலும் நாம் பார்க்கிறபடி, தம்மோடு கூட நெருக்கமானதும் அன்பானதுமான உறவைக் கொண்டிருக்கும் குமாரர்களுக்காகவும், குமாரத்திகளுக்காகவுமே அவர் வாஞ்சித்தார் என்று பார்க்கிறோம்.

ஆனால் ஆதாம், ஏவாளின் கீழ்ப்படியாமையின் மூலமாகப் பாவம் இந்த உலகத்தில் நுழைந்தபோது, தேவனோடு உறவு கொள்ளுவதற்கான வாய்ப்பு அழிக்கப்பட்டது. அவர்களுடைய கீழ்ப்படியாமை முழு மானிட இனத்துக்கும் பாவத்தைக் கொண்டு வந்தது (ரோமர் 5:12-21). என்றாலும் அந்த வேளையில் மனுக்குலத்தைத் தம்மோடு மறுபடியுமாக மீட்டுக்கொள்ளும் தேவனுடைய அற்புதமான திட்டம் செயல்படத் துவங்கியது (ஆதி. 3:15). *"அவளுடைய வித்து"* என்பது வரப்போகிற குமாரனாகிய தேவன் இயேசுவின் மானிட அவதாரத்தையும், கன்னிப் பிறப்பையும் குறிக்கிறது.



காலம் நிறைவேறினபோது (கலா. 4:4, 5) கிறிஸ்து இந்த உலகத்துக்கு வந்து நமது பாவங்களுக்காக மரித்தார். அவர் தம்மையே பலியாக ஒப்புக்கொடுத்தது நமது பாவத்தினால் அழிக்கப்பட்டிருந்த சிருஷ்டிகராகிய தேவனோடுள்ள உறவு சீர்பொருந்தப்பண்ணப் படுவதற்கான வாய்ப்பைக் கொடுத்தது. கிறிஸ்துவின் இரட்சிப்பின் கிரியையை ஏற்றுக்கொண்டு அவரில் விசுவாசம் வைப்பதின்மூலம் நமது பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. நாம் தேவனை அறிந்து அவரோடுகூட ஐக்கியம் கொள்ள முடியும்.

### மறுரூபமாக்குதலின் கிரியை

ஆனால் இதற்கும் அப்பால், தேவன் நம்மைப் பாவத்தின் விளைவுகளிலிருந்தும், நமது வாழ்க்கையில் அதன் பாதிப்பிலிருந்தும் நம்மை விடுவிக்க விரும்புகிறார். எனவே கிறிஸ்துவில் நமது இரட்சிப்பின் நேரடி விளைவாக தேவன் நம்மை நாம் சிருஷ்டிக்கப்பட்டிருந்த அதே சாயலைத் திரும்பப் பெறும்படியாக நம்மில் கிரியைசெய்யத் துவங்குகிறார்.

*"தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறான வராயிருக்கும்பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்'* (ரோமர் 8;29). இரட்சிப்பில் கிறிஸ்துவிடம் வருகிறவர்கள் *"தம்முடைய குமாரனின் சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு"* ஏற்ற வகையில் மாற்றப்படும்படிக்குத் தேவன் முன்குறித்திருக்கிறார் என்று இந்த வசனம் கூறுகிறது.

இந்த மறுரூபமாக்குதலின் கிரியை இரட்சிப்பில் துவங்கி, நமது வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து நடக்கிறது. தேவன் வரம்பில்லாத ஞானத்தைக் கொண்டிருக்கிறார். குறிப்பிட்ட நோக்கங்களுக்காக ஒரு குறிப்பிட்ட வழியில் செயல்படும்படி அவர் தமது ராஜ்யத்தை வடிவமைத்திருக்கிறார். நாம் இன்னுமதிகமாக நம்முடைய ஆதிச் சிருஷ்டிப்பின் "சாயலுக்கு" (அவருடைய குமாரனின் சாயலுக்கு) மாற்றப்படும்போது, இரண்டு முக்கியமான காரியங்கள்' நடக்கின்றன.

1) நாம் தேவனோடு தடையில்லாததும், இன்னும் ஆழமாகிக் கொண்டிருக்கிறதுமான உறவில் நடக்க முடியும். பாவமே தேவனோடுள்ள நமது உறவை அழித்துப் போட்டது, இப்போதும் அழித்துப் போடுகிறது.

**பரிசுத்த ஆவியாஸ்னவர் உங்கள் மூலமாக மற்றவர் மீது தாக்கம் விளைவிப்பார்**



இப்படியாக நாம் பாவத்திலிருந்தும் அதன் விளைவுகளிலிருந்தும் விடுவிக்கப்படும்போது, நமது சிருஷ்டிகளோடு இன்னுமதிக அன்பானதும், ஆழமானதுமான உறவை அனுபவிக்கும் அதிகமான திறனைப் பெறுகிறோம்.

2) தேவன் நமக்காக நோக்கம் கொண்டிருந்த இடத்துக்கும், நோக்கத்துக்கும் நாம் மறுபடியுமாகக் கொண்டுசெல்லப்படுவோம். மனிதன் பாவத்திலோ அல்லது பாவத்துக்காகவோ படைக்கப்படவில்லை. நாம் பரிசுத்தத்திலும், பாவமறியாத நிலையிலும், சுத்தத்திலும் படைக்கப்பட்டோம். தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட எல்லாமே நல்லவையாக இருந்தன. *"அப்பொழுது தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது"* (ஆதி. 1:31).

நாம் பிழைகளோடு படைக்கப்படவில்லை. ஆனால் பாவம் நமது ஆதி ஒழுங்குமுறையின் நன்மையை அழித்துப்போட்டது. எனவே நாம் பாவத்திலிருந்து விடுவிக்கப்பட்டு, மேலும் அதன் விளைவுகளிலிருந்து விடுவிக்கப்படும்படியாக மாற்றப்படும்போது அதிகமான சந்தோஷத்தையும், சாமாதானத்தையும், விடுதலை உணர்வையும் பெறுகிறோம். அப்போது தேவனுடைய சித்தத்தையும், நோக்கத்தையும் நிறைவேற்ற நாம் இன்னும் சிறப்பாக ஆயத்தப் படுத்தப்படுவோம்.

எனவே, **தனிப்பட்ட மறுரூபமாகுதலே தனிப்பட்ட ஒவ்வொருவருக்காகவும் தேவனுடைய மிக மேன்மையான முன்னுரிமையாக இருக்கிறது** என்று நாம் நம்பிக்கையோடு சொல்ல முடியும். "நமது சிந்தனைகளிலும், விருப்பங்களிலும், செயல்களிலும் இன்னுமதிகமாக இயேசுவைப் போலாக்கப்படுவது" என்பதே மறுரூபமாக்கப்படுதலுக்குச் சரியான விளக்கமாகும்.



## பரிசுத்த ஆவியானவரால் வல்லமையளிக்கப்படும் மாற்றம்

நாம் இரட்சிக்கப்படும்போது நமது பழைய வாழ்க்கை கடந்து போகிறது. எல்லாமே புதிதாக்கப்படும் வாழ்நாள் முழுவதும் நடக்கும் ஒரு செயல்முறை துவங்குகிறது (2 கொரி. 5:17). நாம் ஆவியானவர் மற்றும் தேவனுடைய வார்த்தையின் வல்லமையினால் *"தமது குமாரனுடைய சாயலுக்கு"* ஒப்பாயிருக்கும்படி மாற்றப்படுகிறோம் (ரோமர் 8:29).

நமது சொந்தப் பலத்தினாலோ அல்லது முயற்சிகளினாலோ இந்த மாற்றத்தின் கிரியையைச் செய்து முடிக்க முடியாது (எரே. 13:25). சிறிய வழிகளில் நம்மை நாமே மாற்றிக்கொள்ளலாம். பெரும்பாலும் இவை வெளித்தோற்றமாகவே இருக்கும். நமது வாழ்க்கையை ஒழுங்குபடுத்தி, நல்ல பழக்கங்களை வளர்த்துக் கொள்ள நாம் கடுமையாக உழைக்கலாம்.

ஆனால் நமக்கு இன்னும் ஆழமான கிரியை அவசியமாகத் தேவைப்படுகிறது: நொறுக்கப்பட்டிருப்பதிலிருந்தும் வேதனையிலிருந்தும் குணமாக்கப்படுதல்; புறக்கணிக்கப்படுவதிலிருந்தும் மற்ற அடிமைத்தனங்களிலிருந்தும் விடுதலை; நமது சுயநலமானதும் பாவகரமானதுமான வழிகளிலிருந்து விடுதலை ஆகியவை நமக்குத் தேவைப்படுகின்றன. பரிசுத்த ஆவியானவரின் வல்லமையின் மூலமாக மட்டுமே இப்படிப்பட்ட மாற்றம் சாத்தியமாகும் (ரோமர் 8:1-11; மேலும் பார்க்க, மத்தேயு 19:23-26; எபேசியர் 2:1-10; எபிரெயர் 9:13, 14).

கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்ட பிறகு நாம் வளர்ந்து முதிர்ச்சியடைய வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார். அவருடைய கிருபையும், மன்னிப்பும் உண்மையானவையாகவும், எப்போதும் இருப்பவையாகவும் இருந்தாலும் (1 யோவான் 1:9), தொடர்ந்து பாவகரமானதும், சுயநலமானதுமான நடத்தையில் இருப்பதற்கு அவை ஒருபோதும் சாக்குப்போக்காக இருக்க மாட்டா. தேவன் ஒரு இடறுதலையோ அல்லது தோல்வியையோ மன்னிக்கிறார். என்றாலும் நாம் அந்தப் பாவத்தில் தொடர்ந்து செல்லக் கூடாது. இதற்கு மாறாக, தேவனோடுள்ள நடக்கையில் தொடர்ந்து முன்னேற வேண்டும் (லூக்கா 9:23-26). அவ்வாறு மாற்றத்தை எதிர்ப்பவர்கள் தேவனையே எதிர்ப்பவர்களாவர். அவர்கள் பயங்கரமாக நியாயந்தீர்க்கப்படுவார்கள் (யாக். 1:21–25; நீதி. 29:1, எபி. 3:8-11).

## தேவன் தேடும் கனி

சுவிசேஷத்துக்காகக் **கனிகொடுக்கும்** ஊழியராக இருப்பது என்றால் நீங்கள் யாருக்கு ஊழியம் செய்கிறீர்களோ அந்த மக்களின் வாழ்க்கை இன்னுமதிகமாக இயேசுவைப்போலாகும்படி மாற்றப்பட வேண்டும் என்பதாகும். கனிகொடுப்பது என்பது திரளான கூட்டத்தையோ அல்லது புள்ளிவிவரங்களையோ பொருத்தது அல்ல என்பதை நினைவில் வைத்திருங்கள். உங்களுடைய சபையில் அதிகமான மக்களைச் சேர்ப்பது எளிதான காரியமாகும். இலவசமான உணவையோ, உடையையோ அல்லது பணத்தையோ கொடுத்தால் திரளான கூட்டத்தை இழுத்து விடலாம்! அல்லது கேளிக்கைகளைக் காட்டுங்கள் அல்லது அவர்களைச் "செவித்தினவுள்ளவர்களாக" ஆக்கக்கூடிய காரியங்களைச் சொல்லுங்கள் (2 தீமோ. 4:3-4) அல்லது தாங்கள் நல்லவர்கள் என்ற உணர்வை அவர்கள் பெறும்படிச் செய்யுங்கள். கூட்டம் நிரம்பும்

ஆனால் திரளான கூட்டம் ஒரு *சபையாக* ஆகிவிடுவதில்லை. அதிகமான மக்கள் வந்து கூடுகிறார்கள் என்பதினால் ஒரு ஆரோக்கியமான புதிய ஏற்பாட்டுச் சபையை நீங்கள் கொண்டிருக்கிறீர்கள் என்றோ அல்லது நீங்கள் சீஷர்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறீர்கள் என்றோ ஆகிவிடாது!

இதுவே நமது ஊழியத்தைக் குறித்து நாம் எப்போதுமே கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்வியாகும்: நான் ஊழியம் செய்யும் மக்களின் வாழ்க்கை இன்னுமதிகமாக இயேசுவைப் போலாகும்படி மாற்றப்படுகிறதா? உங்கள் சபைக்கு அதிகமான மக்களைச் சேர்க்க வேண்டும் என்பது உங்களுடைய இலக்காக இருக்கிறதா அல்லது கிறிஸ்துவில் முதர்ச்சியடைந்து வளர்ந்து வரும் சீஷர்களை உருவாக்க வேண்டும் என்பது உங்கள் நோக்கமாக இருக்கிறதா? அங்கே பத்துப் பேர் இருந்தாலும் சரி, ஆயிரம் பேர் இருந்தாலும் சரி, உங்களுடைய மந்தை இன்னுமதிகமாக இயேசுவைப்போல மாறினால் மட்டுமே நீங்கள் கனி கொடுப்பவராக இருக்கிறீர்கள்!

## சரியான வகை பலவீனம்

கிறிஸ்துவின் சாயலில் மறுரூபமாக்கப்படுவதே கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களைக் குறித்த தேவனுடைய சித்தமாகும் என்பதை நாம்



ஏற்கெனவே உறுதிப்படுத்தியிருக்கிறோம். மனித முயற்சியினால் இதை முழுமையாகச் சாதிக்க முடியாது, பரிசுத்த ஆவியானவரின் வல்லமை மற்றும் பிரசன்னத்தின் மூலமாக மட்டுமே இதைச் செய்ய முடியும் என்பதை நாம் அறிவோம். அப்படியானால், தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் ஊழியத்தை எப்படி நடத்த வேண்டும் என்பதைக் குறித்து இது போதிப்பது என்ன?

எளிதாகச் சொல்லுவோமானால் நாம் இதைப் புரிந்துகொள்ள வேண்டும்: **ஒப்புக்கொடுக்கப்பட்ட ஒரு மானிடப் பாத்திரத்தின் மூலமாக பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்து அசைவாடும் வல்லமையான பிரசன்னமே மற்றொரு மனிதனின் வாழ்க்கையில் மிகப் பெரிய தாக்கத்தை உண்டுபண்ண முடியும்.**

இது தெளிவான சத்தியம் போலத் தோன்றலாம்! ஆனால் பெரும்பாலும் நமது நல்லெண்ணம் கொண்ட மானிட முயற்சிகள் பரிசுத்த ஆவியானவரின் கிரியையின் இடத்தை எடுத்துக் கொள்ளுகின்றன அல்லவா? தலைவர்களாகிய நாம் நேர்மையோடு நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போமானால், பெரும்பாலும் நாமே **பிரச்சினையாக இருக்கிறோம்** என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். மிக விரைவிலேயே நமது ஊழியத்தில் நாம் பணிக்கேற்றபடி போதுமானவர்களாக இல்லை என்பதை உணர்ந்து கொள்ள முடியும். எனவே நாம் ஆற்றலோடு செயல்படும்படியோ அல்லது வெற்றிபெறும்படியோ செயல்திட்டங்களிலும், கற்பதிலும், மற்றக் காரியங்களிலும் பரபரப்பாக ஈடுபடுகிறோம். ஆனால் தேவன் நாம் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கும் எல்லாவற்றையும் செய்துமுடிக்க நாம் எல்லாவற்றையும் பெற்றிருக்கவில்லை என்பதே உண்மையாகும். உங்களைக் குறித்து இதை நீங்கள் ஒப்புக்கொள்ளு கிறீர்களா?

தலைவர்களாகிய நாம் எல்லா வேலைகளிலும் சிறப்பாகச் செயல்பட வேண்டுமென்று விரும்புகிறோம். ஆனால் தேவனுடைய நோக்கத்தையும் சித்தத்தையும் நிறைவேற்றுவதற்கு மானிட முயற்சிகள் போதுமானவையாக இருப்பதில்லை.

இது மோசமான செய்திபோலத் தோன்றலாம். ஆனால் உண்மையில் - நாம் இதை ஏற்றுக்கொள்ளச் சித்தமுள்ளவர்களாக இருப்போமானால், நமது *பற்றாக்குறையே நற்செய்தியின்* துவக்கமாக இருக்கிறது! ஒன்றுக்கொன்று முரண்பாடானது போலக் காணப்படும் இதைக் குறித்து

ஒரு மிகப் பெரிய அப்போஸ்தலன் என்ன சொல்லியிருக்கிறார் என்பதைப் பாருங்கள்: “*அது* (பவுலின் மாம்சத்திலுள்ள முள்) *என்னைவிட்டு நீங்கும்படிக்கு, நான் மூன்றுதரம் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொண்டேன். அதற்கு அவர்: என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக் குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன். அந்தப்படி* ***நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்;*** *ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும் பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன்”* (2 கொரி. 12:8-10).

பவுல் தோல்வியின் மனோபாவத்தை ஏற்றுக் கொள்ளவுமில்லை, தான் தேவனால் தண்டிக்கப்படுகிறோம் என்று அவர் நினைக்கவுமில்லை. மாறாக தேவனுடைய கிருபையின் வெளிப்பாடு மற்றும் தனிப்பட்ட அனுபவத்தைக் குறித்து அவர் களிகூருகிறார்!




தேவனுடைய கிருபையின் மூலமாகவே நாம் ஜெயங்கொள்ளும் ஒருவருடைய வாழ்க்கையையும் வெற்றியையும் பெற்றிருக்கிறோம் (ரோமர் 8:37). ஆனால் பவுல் தன்னை ஒப்புக்கொடுத்து, தனது தேவையை வெளியரங்கமாக ஒப்புக்கொண்டதின் மூலமாகவே அவரிலும் அவருடைய வாழ்க்கை மூலமாகவும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமை விடுவிக்கப்படுவதற்கான வழி திறக்கப்பட்டது.



பவுல் தனது பலவீனத்தை மறைக்கவோ அல்லது மூடிவைக்கவோ முயற்சிக்கவில்லை உண்மையில் அவர் *தன் பலவீனங்களைக் குறித்து மேன்மைபாராட்டினார்* (வச. 9). *தன் இடுக்கண்களில் பிரியப்படுவதாகவும்* அவர் சொல்லியிருக்கிறார் (வச. 10). ஏனென்றால் இக்காரியங்களில் தான் பவுல் தேவனுடைய வல்லமையை முழுவதுமாகச் சார்ந்திருந்தார். தேவனுடைய வல்லமையை அவரால் *அனுபவிக்க* முடிந்தது! (மேலும் பார்க்க, 2 கொரிந்தியர் 3:1-6).

**போதகரிடமிருந்து போதகருக்கு:** பவுலின் *“மாம்சத்தில் முள்”* எப்படிப்பட்டது என்று நமக்குத் தெரியாது. ஆனால் அது பவுல் செய்த பாவமோ அல்லது நல்லொழுக்கத் தோல்வியோ **அல்ல** என்பது நமக்குத் தெரியும். தேவன் ஒருபோதும் நமது பாவத்தைக் காணாமல் விட மாட்டார். மாறாக, பாவத்தைக் குறித்து நமக்கு உணர்த்தி, நாம் மெய்யாக மனந்திரும்பும்படி நம்மைச் சிட்சிக்கிறார் (நீதி. 3:11, 12; 2 கொரி. 7:9, 10; 1 யோவான் 19). எதுவும் தேவனுக்கு மறைவானது கிடையாது. அவர் தமது இரக்கத்தின்மூலமாக ஒருவர் மனந்திரும்புவதற்காக காலம் கொடுத்தாலும், நாம் பாவத்தை மறைந்து அவரை முட்டாளாக்க முடியாது. நமது பாவம் இறுதியில் கண்டுபிடிக்கப்படும் (எண். 32:23; கலா. 6:7; 1 தீமோ. 5:24).

### தேவன் தாழ்மையுள்ளவர்களைப் பயன்படுத்துகிறார்

இந்தப் போதனைக்கு உதவியாக நாம் *பலவீனம்* என்பதற்கு இப்படி வரையறை கொடுப்போம்:

- நாமாகவே தேவனுடைய சித்தத்தைச் செய்ய நம்மால் முடியாது என்பதை ஒப்புக்கொள்ளுதல்;
- நமது இருதயத்தை பரிசுத்த ஆவியானவருக்கு ஒப்புக்கொடுத்து அவர் வல்லமையை முற்றிலுமாக சார்ந்திருத்தல்.
- ஊழியத்தில் நித்திய மதிப்புள்ள காரியங்களை நிறைவேற்றும்படி பரிசுத்த ஆவியானவர் நம்மூலமாகக் கிரியைசெய்ய அனுமதித்தல். - நமது சொந்த சக்தியினால்

அல்ல, அவருடைய வல்லமையினால் மாற்றப்பட்ட வாழ்க்கைகள்.

சபைத்தலைவர்கள் அடிக்கடி ஊழியத்தில் “வெற்றி பெறும்படி” அதிகமாக நெருக்கப்படுகிறார்கள். துரதிருஷ்டவசமாக வெற்றியைக் குறித்த நமது கருத்து பெரும்பாலும் உலகத் தகுதிநிலைகளைக் கொண்டோ அல்லது நமது சொந்தப் பெருமையைக் கொண்டோ வரையறை செய்யப்படுகிறது. மற்றவர்களின் பார்வையில் நாம் முக்கியமானவர்களாகக் காணப்பட விரும்புகிறோம். தேவன் நம்மை அதிகமாகப் பயன்படுத்தும்படியாகத் தேவனுடைய ராஜ்யத்தில் “பெரியவர்களாக” இருக்க விரும்புகிறோம்.

*ஆனால் தேவனுடைய பெரிய மனிதர்கள் என்று எவரும் கிடையாது.* ***தாழ்மையுள்ள*** *மக்களே தேவனால் பெரிய அளவில் பயன்படுத்தப்பட்டிருக்கிறார்கள்* என்பதே எப்போதும் உண்மையாக இருந்து வந்திருக்கிறது (பார்க்க, மத்தேயு 20:20-28).

மறுபடியுமாக, மெய்யான கனிகொடுக்கும் ஊழியத்துக்கு அத்தியாவசியமானது ***பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னமும் கிரியை செய்தலுமே*** என்று பார்க்கிறோம். தேவன் கல்வியறிவு, நிர்வாகத் திறன் அல்லது பல தாலந்துகளைப் பெற்றவர்களுக்கு எதிர்த்து நிற்கவில்லை. ஆனால் ஊழியத்தில் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேக வல்லமைக்கு இவை எதுவும் **மாற்றுக்** கிடையாது. தேவனால் நமது ஆற்றலைப் பெருக்கி, நமது திறமைகளையும், வரங்களையும் பயன்படுத்த முடியும். ஆனால் *“என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக் கூடாது”* என்று அவர் வேதவசனங்களில் தெளிவுப்படுத்தி யிருக்கிறார் (யோவான் 15:5). *“பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தி னாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்”* (சகரி. 4:6).

நமக்கு என்ன தேவை என்பதை அறிந்து, தேவன் ஏற்கெனவே அதைப் பூரணமாக அருளியிருக்கிறார். நாம் ஊழியத்துக்கான அவருடைய அழைப்பை நிறைவேற்றுவதில் கனிகொடுக்கும்படியாக அவர் **பரிசுத்த ஆவியானவரின்** அபிஷேகத்தைக் கொடுத்திருக் கிறார்.



எனவே **பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப்** பற்றிய உறுதியான வேதாகமரீதியான அறிவைப் பெறும்படி ஒன்றாக ஆய்வுசெய்வோம்.

இந்த ஆய்வின் மூலம்:1) அபிஷேகம் என்றால் என்ன, எது அபிஷேகம் அல்ல என்பதை வரையறை செய்தல். 2) ஊழியரின் வாழ்க்கையிலும் வாழ்க்கை மூலமாகவும் அபிஷேகம் எப்படிச் செயல்படுகிறது. 3) நாம் இந்த அபிஷேகத்தை எப்படிப் *பெற்று*, எப்படி அதில் *வளர முடியும்?* என்று கற்றுக்கொள்வோம்.



## பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம்

பகுதி 1

# சரித்திர மற்றும் வேதாகமப் பின்னணியில் அபிஷேகத்தின் வரலாறு

### A. பழைய ஏற்பாட்டில் அபிஷேகம்

பழைய ஏற்பாட்டை நாம் முழுவதுமாகப் புரிந்துகொள்ள வேண்டுமானால் புதிய ஏற்பாட்டையும் பயன்படுத்த வேண்டும். புதிய ஏற்பாட்டு வசனங்கள் *பழைய உடன்படிக்கையின்* (''ஏற்பாடு'') வசனங்களுக்கு மையப் பார்வையையும், தெளிவையும் கொடுக்கக்கூடிய ''லென்சுகளாக'' (lens) இருக்கின்றன. பழைய ஏற்பாடு *(பழைய உடன்படிக்கை அல்லது பழைய ஒப்பந்தம்)* தேவனுடைய வார்த்தை என்று விளக்கம் கொடுக்கிறது (மத். 5:17, 18; 2 பேதுரு 1:20, 21). என்றாலும் நாம் இப்போது இயேசு கிறிஸ்துவை இரட்சகராக விசுவாசிப்பதின் மூலமாகக் கிருபை மற்றும் இரட்சிப்பின் *புதிய உடன்படிக்கையின்* கீழாக ("ஏற்பாடு" அல்லது "ஒப்பந்தம்") வாழுகிறோம். இனிமேலும் நாம் பழைய உடன்படிக்கையின் நியாயப்பிரமாணத்தின்கீழாக வாழவில்லை. ***நாம் சொந்தக் கிரியைகளின் மூலமாக நம் இரட்சிப்பைப் பெற முடியாது*** (கலா. 3:21-25).

புதிய உடன்படிக்கையானது பழைய உடன்படிக்கையைவிட **பூரணப்படுத்தப்பட்டது** (பார்க்க, எபிரெயர் அதிகாரம் 7-8). இந்தப் புதிய உடன்படிக்கை பழைய உடன்படிக்கையை நிறைவேற்றுகிறது (மத். 5:17, 18; லூக்கா 24:25-27). தேவனோடுள்ள மனிதனுடைய உறவுக்கு அடிப்படையாக *"புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை'* உண்டுபண்ணியிருக்கிறது (எபி. 10:19).



என்றாலும், பழைய ஏற்பாட்டு வசனங்கள் இன்றும் தேவனுடைய நித்திய வார்த்தையின் பகுதியாக இருக்கின்றன. (ஏசாயா 40:8) பழைய உடன்படிக்கையின் கீழான வாழ்க்கையில் நமக்கு உதவக்கூடிய பல முக்கியமான கொள்கைகளை நாம் காணலாம். பவுல் கொரிந்தியருக்கு எழுதும்போது (1 கொரி. 10:1-13) பழைய ஏற்பாட்டிலுள்ள வரலாற்றையும், நிகழ்வுகளையும், பாடங்களையும் நாம் படித்து, புரிந்துகொண்டு, புதிய ஏற்பாட்டு விசுவாசிகளாக நம்முடைய வாழ்க்கையில் செயல்படுத்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். *''இவைகள் நமக்குத் திருஷ்டாந்தங்களாயிருக்கிறது''* (1 கொரி. 10:6).

இப்படியாக, பழைய ஏற்பாட்டில் அபிஷேகத்தைக் குறித்து முன் அடையாளங்களாகக் கொடுக்கப்பட்டுள்ள சித்திரங்களையும் "வகைகளையும்" ஆராய்வதின் மூலம் இப்போது புதிய ஏற்பாட்டு விசுவாசிகளாகிய நாம் **பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப்** பற்றி நல்ல நுண்ணறிவைப் பெற முடியும்.

#### 1. "அபிஷேகம்" என்ற சொல்லின் துவக்கம்

பழைய ஏற்பாட்டில் **அபிஷேகத்தைக்** குறிக்க *மாசா* (masah) என்ற எபிரெயச் சொல் 69 முறை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அபிஷேகம் செய்யப்படும் பொருள் அல்லது நபரின்மீது எண்ணெயை ஊற்றுதல், தடவுதல் அல்லது பூசுதல் என்பது இதற்கு அர்த்தமாகும்.

புராதன மத்தியக் கிழக்கின் பல கலாச்சாரங்களில் அபிஷேகம் செய்யும் பழக்கம் பொதுவாகக் காணப்பட்டது. இது சாதாரணமாகவும் பரிசுத்தமான வகையிலும் பயன்படுத்தப்பட்டது. எடுத்துக்காட்டாக, இயேசுவின் நாட்களிலும்கூட விருந்தினர்களுக்கு அபிஷேகம் செய்வது விருந்தோம்பலின் ஒரு வெளிப்பாடாகச் செய்யப்பட்டது (சங். 23:5; லூக்கா 7:46; யோவான் 12:3).

ஆனால் பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேல் மக்களைப் பொருத்த வரையில் அபிஷேகம் செய்தல் இன்னும் ஆழமான அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டது. தேவனோடு தனது முதல் சந்திப்புக்கு யாக்கோபு நினைவுச் சின்னம் அமைக்கும்போது அபிஷேகம் செய்வதைப் பற்றி வேதாகமத்தில் முதன் முறையாகப் பார்க்கிறோம். யாக்கோபு தான் கனவு கண்டபோது தலைக்கு வைத்துப் படுத்திருந்த கல்லை நாட்டி அதற்கு எண்ணெய் வார்த்தான் (ஆதி. 28:10-18).

பிறகு ஆசரிப்புக் கூடாரத்தில் தேவனை ஆராதித்தபோது பலிபீடம்

மற்றும் பிற பொருட்களின் மீது ஊற்றுவதற்கு எண்ணெய் பயன்படுத்தப்பட்டது (யாத். 30:26-29; லேவி. 8:10-11). ஆசாரியரும் எண்ணெயினால் அபிஷேகம் செய்யப்பட்டார்கள். (யாத். 28:41; 30:30; லேவி. 8:12). ராஜாக்களும்கூட அபிஷேகம் செய்யப்பட்டார்கள் (1 சாமு. 9:16, 15:1; 16:3; 12). இடையிடையே தீர்க்கதரிசிகளும்கூட அபிஷேகம் செய்யப்பட்டார்கள் (1 இரா. 19:16).

பழைய ஏற்பாட்டில் அபிஷேகம் செய்வது மூன்று முக்கியமான காரணங்களுக்காகப் பயன்படுத்தப் பட்டது. முதலாவதாக, தேவனை ஆராதிப்பதில் பயன்படுத்தப்படும் பொருட்களைப் *பரிசுத்தப்படுத்தி*, தனித்தெடுப்பதற்காக அவை அபிஷேகம் செய்யப்பட்டன. இப்படியாக தேவனுக்கு ஊழியம் செய்வதற்காக அந்தப் பொருள் *அதிகாரபூர்வமாகப்பட்டது*. (எடுத்துக்காட்டாக, ஆசரிப்புக்கூடாரத்தில் ஆராதிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட பொருட்கள் (யாத். 30:26-29).

இரண்டாவதாக, மானிடர் ஒருவரின்மூலம் அபிஷேகம் செய்யப்பட்டாலும் அது தேவனிடமிருந்து வருவதாகக் கருதப்பட்டது. சாமுவேல் இஸ்ரவேலருக்கு ராஜாவாக ஊழியம் செய்யும்படி சவுலையும், தாவீதையும் அபிஷேகம் செய்தது இதற்குத் தெளிவான எடுத்துக்காட்டாக இருக்கிறது (1 சாமு. 10:1; 16:12, 13; 2 சாமு. 12:7). தேவன் தனிப்பட்டவர்களைத் தமக்கு ஊழியர்களாக இருக்கும்படி தெரிந்துகொண்டு, அழைத்ததற்கு இந்த அபிஷேகம் அடையாளமாக இருந்தது.

மூன்றாவதாக, சில வேலைகளில் அபிஷேகத்தோடு கூடத் தேவனுடைய வல்லமையும் கொடுக்கப்பட்டது. இது தேவனிடமிருந்து வந்தது. தேவன் அந்தக் குறிப்பிட்ட நபருக்குச் செய்யும்படி எந்தப் பொறுப்பைக் கொடுத்திருந்தாரோ அதோடு நேரடியான தொடர்பைக் கொண்டதாக இருந்தது (பார்க்க, 1 சாமுவேல் 16:1-13; 2 இராஜாக்கள் 2:9,15).

### 2. "மேசியா" என்ற சொல்லின் துவக்கம்

மாசா என்ற எபிரெய வேர்ச்சொல்லிலிருந்து *மெசாயா* (messiah) என்ற சொல் வந்திருக்கிறது. இது 'மேசியா' என்று மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. ''அபிஷேகம் செய்யப்பட்டவர்'' என்பது இதன் அர்த்தமாகும். இது பல்வேறு வகைப்பட்ட தனிப்பட்டவர்களைக் குறிப்பிடப் பழைய ஏற்பாட்டில் 39 முறைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.



இவைகளில் மிக முக்கியமாக, தேவனுடைய குமாரனாகிய இயேசுவை, ***மேசியாவைக்*** குறிக்கப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது (ஏசாயா 9:7; 11:15; ஏசாயா அதிகாரம் 53). ஆனால் 1 சாமுவேல், 2 சாமுவேல் மற்றும் சங்கீதத்தில் இஸ்ரவேலின் ராஜாக்களைக் குறிக்கவும் இந்தச் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. குறிப்பாக, தாவீதின் ராஜ வம்சாவளியைக் குறிப்பிட இந்தச் சொல் பயன்படுத்தப்படுகிறது (சங்கீதம் 2:2; 18:50; 84:9; போன்றவை).

### B. புதிய ஏற்பாட்டில் அபிஷேகம்

புதிய ஏற்பாட்டில் "அபிஷேகத்தைக்" குறிக்க மூன்று வெவ்வேறான சொற்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்தச் சொற்கள் ஒவ்வொன்றும் அபிஷேகத்தின் வெவ்வேறான அம்சங்களைக் குறிக்கின்றன.

1. ***அலிபோ*** *(Aleipho)* (எட்டு முறை பயன்படுத்தப்பட்டிருக்கிறது). இது நேரடியாகச் சரீரத்தின்மீது எண்ணெய் அல்லது தைலத்தைப் பூசுவதைக் குறிக்கிறது (பார்க்க, மாற்கு 6:13; லூக்கா 7:38, 46; யாக்கோபு 5:14). யாக்கோபு 5:14 வசனத்தில் எண்ணெய் பூசுதல் **மருத்துவ நோக்கம் கொண்டதல்ல.** மாறாக, இந்த எண்ணெய் பூசுதல் பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னத்துக்கும், விசுவாசத்தில் தேவனுடைய குணமாகுதலுக்காக வேண்டிக்கொள்ளுவதில் நோயாளியின் அர்ப்பணிப்புக்கும் அடையாளமாக இருக்கிறது.

மருத்துவ உதவி பெறுவது தவறானதல்ல என்பதை இங்கே குறிப்பிட வேண்டும், தேவன் மருந்துகள் உருவாக்கப் பயன்படும் சாதனங்களை (elements) உருவாக்கியிருக்கிறார். அவைகளைச் சரியாகப் பயன்படுத்தும் ஞானத்தை மருத்துவர்களுக்குக் கொடுத்திருக்கிறார். என்றாலும், கிறிஸ்தவர்கள் வாழ்க்கையின் எல்லாத் தீர்மானங்களிலும் விசுவாசத்தின்படி வாழ வேண்டும். வேறு எதுவும் செயல்படாதபோது, ஜெபத்தை இறுதி வாய்ப்பாகப் பயன்படுத்தக் கூடாது. நோயினால் பாதிக்கப்பட்டாலோ அல்லது காயப்பட்டாலோ *முதலில்* குணமாகுதலுக்காக தேவனைத் தேட வேண்டும். தேவன் அற்புதவிதமாகக் குணமாக்கினால், அவருடைய நாமத்தைத் துதியுங்கள்! குணமாகுதல் இல்லாவிட்டாலும் அவருடைய நாமத்தைத் துதியுங்கள் - நமது இறுதியான குணமாகுதலுக்காகவும், அவரை முகமுகமாகக் காணும்படி நாம் அவருடைய பிரசன்னத்தைச்

சென்றடையப் போவதற்காகவும் அவரைத் துதியுங்கள் (1 தெச. 4:16-18). நமது தேவன் எப்போதும் நம்பிக்கைக்குரியவராகவும், உண்மையுள்ளவரா கவும் இருக்கிறார்.

***2. கிரியோ (Chrio)*** (மூன்று முறை பயன்படுத்தப்பட்டிருக்கிறது). இது தேவனால் ஒரு சிறப்பான பொறுப்புக்காகவோ அல்லது பணிக் காகவோ நியமிக்கப்படுவதைக் குறிக்கிறது; அந்த நபர் (நபர்கள்) குறிப் பிட்ட பொறுப்பை நிறைவேற்றும்படி பிரித்தெடுக்கப்படுகிறார்கள் (பார்க்க, லூக்கா 4:18; அப்போஸ்தலர் 10:38; 2 கொரிந்தியர் 1:21; எபிரெயர் 1:9)

***3. கிரிஸ்மா (Chrisma)*** (மூன்று முறை பயன்படுத்தப்பட்டிருக்கிறது). இது, எது சரி, எது தவறு என்பதை அறியும்படியாகப் பரிசுத்த ஆவியானவரால் வல்லமையளிக்கப்படுவதைக் குறிக்கிறது. விசுவாசியின் இருதயத்தில் தேவனுடைய வார்த்தையோடுகூடப் பரிசுத்த ஆவியானவரின் வல்லமை கிரியை செய்கிறது.

கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவரின் இருதயத்தில் சத்தியத்தை வெளிப்படுத்தும் பரிசுத்த ஆவியானவரின் ஊழியத்தைப் பற்றி 1 யோவான் 2:20 மற்றும் 2:27 இரண்டு வசனங்களும் கூறுகின்றன. (மேலும் பார்க்க, யோவான் 14:16, 17, 26; 1 கொரிந்தியர் 2:10-16; எபேசியர் 1:17, 18).

தேவனைக்குறித்த சிறப்பான அறிவைப் பெற்றிருப்பதாகச் சொல்லிக் கள்ளப்போதகத்தைப் போதித்த சிலருக்குப் பதிலளிக்கும் விதமாக யோவான் இந்த நிருபத்தை (1 யோவான்) எழுதினார். *குமாரனாகிய தேவன்* மாம்சத்தில் வந்தார் (*அவதாரம்)* என்பதை இந்தக் கள்ளப்போதகர்கள் மறுத்தார்கள் (1 யோவான் 2:18-23). *தாங்கள்* மட்டுமே தேவனைப்பற்றிய மெய்யான அறிவைப் பெற்றிருப்பதாகவும், எல்லோரும் தங்களைப் பின்பற்ற வேண்டும் என்றும் அவர்கள் கூறினார்கள்.

இவர்கள் அந்திக்கிறிஸ்துவின் ஆவியின் பிசாசின் கீழாகச் செயல்படுகிறார்கள் என்று யோவான் கிறிஸ்தவர்களுக்குச் சுட்டிக்காட்டினார் (வச. 18). இந்தக் கள்ளப் போதகத்துக்கு எதிராக யோவான் விசுவாசிகளிடம் அவர்கள் ஏற்கெனவே பரிசுத்த ஆவியானவரைப் பெற்றிருக்கிறார்கள் என்றும் அவர் எது சத்தியம் என்பதை அவர்களுக்கு உணர்த்துவார் என்றும் நினைவுபடுத்தினார் (வச. 20). *"அந்த அபிஷேகம் சகலத்தையுங்குறித்து உங்களுக்குப் போதிக்கிறது'* என்று அவர் சொல்லுகிறார் (வச. 27).



போதிக்கும் ஊழியத்தை யோவான் குறைத்துக்காட்டவோ அல்லது தகுதியில்லாததாக்கவோ முயலவில்லை (பார்க்க, ரோமர் 12:7 மற்றும் எபேசியர் 4:11). மாறாக, யோவான் தேவனுடைய வார்த்தையிலுள்ள சத்தியத்தைப் புரிந்துகொள்ளும்படி நம்மை வழிநடத்தும் பரிசுத்த ஆவியானவரை மேம்படுத்துகிறார் (யோவான் 16:13).

### மேசியா, அபிஷேகம் பண்ணப்பட்டவர்

*மேசியா* என்றால் "அபிஷேகம் பண்ணப்பட்ட ஒருவர்" என்று அர்த்தம் என்று நாம் ஏற்கெனவே பார்த்தோம். புதிய ஏற்பாட்டுச் சுவிசேஷங்கள் இயேசுவே **அபிஷேகம் பண்ணப்பட்டவராகிய மேசியா** என்று எந்தவிதச் சந்தேகமும் இல்லாமல் அறிவிக்கின்றன. இயேசு ஒரு குறிப்பிட்ட ஊழியத்துக்காக அபிஷேகம் பண்ணப் பட்டிருந்தார் (பண்ணப்பட்டிருக்கிறார்).

புதிய ஏற்பாட்டின் ஆதி கிரேக்க மொழியில் இயேசு *"கிறிஸ்து"* அல்லது *"இயேசு கிறிஸ்து"* என்று அழைக்கப்படுகிறார். "இயேசு" என்பது ஒரு பெயராகும். ஆனால் "கிறிஸ்து" என்பது ஒரு **பட்டமாகும்.** "அபிஷேகம் பண்ணப்பட்டவர்" என்பது இதன் அர்த்தமாகும். இயேசுவே அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்று புதிய ஏற்பாடு முழுவதிலும் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது (யோவான் 1:41; 4:25, 26).

யூதர்கள் மேசியாவுக்காக (எபிரெய மொழியில் "அபிஷேகம் பண்ணப்பட்டவர்") காத்திருந்தார்கள். தாவீதின் ராஜ வம்சாவளியில் வரும் இவர் சாலொமோன் நாட்களில் இருந்ததுபோல இஸ்ரவேல் நாட்டை அதன் ஆதி மகிமைக்குக் கொண்டுவருவார் என்று எதிர்பார்த்தார்கள். இதன் காரணமாகப் பல யூதர்கள் இயேசுவைப் புறக்கணித்தார்கள். வாக்குப்பண்ணப்பட்ட மேசியாவைக் குறித்த அவர்களுடைய தவறான எதிர்பார்ப்புக்களுக்கு அவர் பொருந்தி வரவில்லை (மத். 11:1-19; யோவான் 6:26-29).

யூதர்கள் தங்களுக்கும் அப்பாற்பட்டு தேவன் ஒரு விரிவான திட்டத்தைக் கொண்டிருக்கிறார் என்பதைக் காணவில்லை (ஏசாயா 42:5-9; 49:5-6, அப்போஸ்தலர் 4:8-12; 13:44-49). தேவன் அவர்களுக்கு (நமக்கும்கூட) ஒரு தாற்காலிகமான உலகப்பிரகாரமான ராஜாவை விட மிகவும் மேலானவரைக் கொடுத்தார். அவர் நித்தியத்துக்குமாக உலகத்துக்கு ராஜாதிராஜாவை, மெய்யான இரட்சகரைக் கொடுத்தார். மேசியாவாகிய இயேசுவின் நாமம் மகிமைப்படுவதாக!

### தொகுப்பு

பழைய ஏற்பாட்டில் அபிஷேகம் செய்தல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சடங்காக இருந்தது. பொருட்கள், ஆசாரியர்கள், தீர்க்கதரிசிகள், ராஜாக்கள் அபிஷேகம்பண்ணப்பட்டபோது, தேவனுடைய நோக்கத்துக்காக அவர்கள் பரிசுத்தப்படுத்தப்பட்டார்கள். என்றாலும் இந்த அபிஷேகம் செய்தல் தேவன் புதிய உடன்படிக்கையின் மூலமாக நிறைவேற்றப் போவதற்கு ஒரு *மாதிரியாகவும், அடையாள மாகவுமே* இருந்தது என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

புதிய உடன்படிக்கையின்கீழாக தேவனோடும் மனிதனோடும் உறவுகொள்ளுவதற்கு ஒரு புதிதானதும், ஜீவனுள்ளதுமான வழி கொடுக்கப்பட்டது. இதற்கு முதல் அடையாளமாக, தேவனுடைய நோக்கத்தையும், பொறுப்பையும் நிறைவேற்றும்படியாக (யோவான் 3:14-17), அபிஷேகம் பண்ணப்பட்டவராகிய, தேவனுடைய குமாரனாகிய இயேசு (யோவான் 7:28-29) அனுப்பப்பட்டார். நமது பாவங்களுக்காகச் சிலுவையில் மரித்ததின் மூலம் இயேசு இதை நிறைவேற்றினார். இப்படியாகத் தம்மில் விசுவாசம் வைக்கும் எல்லோருக்கும் இரட்சிப்பின் வழியைத் திறந்துகொடுத்தார் (ரோமர் 10:9-13; எபே. 2:1-10; எபி. 7:11-15). மனுக்குலத்தின் இரட்சிப்புக்கான தேவனுடைய திட்டத்தின் ஒரு பகுதி, தமது குமாரனை விசுவாசிக்கிறவர்களுக்குத் தெய்வீக உதவியை அளிப்பதாகும். விசுவாசிகள் தங்களுக்கான தேவனுடைய திட்டத்தை நிறைவேற்றும்படியாக எல்லா உதவியையும், வல்லமையையும் பெற முடியும்.

இப்படியாக, இயேசு தேவனால் பூமியில் தமக்குக் கொடுக்கப்பட்ட கிரியையை முடித்தபோது (யோவான் 17:4, 19:30) **"தேற்றரவாளனை"** அனுப்புவதாக அவர் வாக்குத்தத்தம் செய்தார் (யோவான் 7:37-39; 15:26; 16:5-15). அந்தத் *தேற்றரவாளன்* **பரிசுத்த ஆவியானவரே**. பழைய ஏற்பாட்டில் எண்ணெய் பூசுதல் அல்லது தடவுதலின் (அபிஷேகம்) நிழலாகக் காட்டப்பட்டது, இப்போது புதிய ஏற்பாட்டில் (உடன்படிக்கையில்) இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களுக்கு முழுமையான நிஜமாகியது. பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியாகிய தேவன் ஊற்றப்பட்டதிலிருந்து இது துவங்கியது (யோவேல் 2:28-32; லூக்கா 24:49; அப்போஸ்தலர் 2:1-39).





## பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம்

பகுதி II

# அபிஷேகத்தின் இயல்பு, நோக்கம் மற்றும் செயல்பாடு

### A. அபிஷேகத்தின் இயல்பு

அபிஷேகத்தைப் பற்றி அதிகக் குழப்பமான நிலை காணப்படுகிறது. உறுதியான வேதாகமப் போதனையும், இதைக் குறித்த ஆய்வும் குறைவுபடுவதே இதற்குக் காரணமாகும். இந்தப் பகுதியில் வேதவசனங்களின் அடிப்படையில் அபிஷேகம் பற்றி தெளிவாகப் பார்ப்போம். இதன் பின்பகுதியில் அபிஷேகம் என்றால் மெய்யாகவே *எது* என்பதை வரையறை செய்வோம். இப்போது எது அபிஷேகம் *இல்லை* என்பதைத் தெளிவுபடுத்துவோம்.

1. **அபிஷேகம் எதுவல்ல**

**a. அபிஷேகம் என்பது தனித்தன்மையில்லாத விசையோ அல்லது புதிரான வல்லமையோ இல்லை.** அபிஷேகம் என்பது மின்சாரத்தைப் (உயிரில்லாத விசை) போன்றதும் அல்ல, அல்லது அது ஒருவகைப்பட்ட மந்திர சக்தியும் இல்லை. மந்திரவாதியாகிய சீமோனிடம் (அப். 8:9-25) ஒரு வகைப்பட்ட மந்திர சக்தி (பிசாசின் சக்தி) இருந்தது. ஆனால் அப்போஸ்தலர்களிடம் வாசம்பண்ணும் வல்லமையோடு ஒப்பிடும்போது தன்னுடைய சக்தி ஒன்றுமில்லை என்பதை உணர்ந்தான். தேவனுடைய அபிஷேகம் இயல்புக்கு அப்பாற்பட்டதாகவும், ஆவிக்குரியதாகவும் இருக்கிறது.

**b. வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அபிஷேகம் வெறும் உணர்வுகளின் வெளிப்பாடோ, ஒரு வலுவான ஆளுமையின் வெளிப்பாடோ அல்லது ஒரு குறிப்பிட்ட நடையிலான பிரசங்கத்திலோ இல்லை.** நாம் தேவனுடைய அபிஷேகத்தின் வல்லமையில் செயல்படும்போது அவர் பெரும்பாலும் நமது உணர்வுகளைத் தொடுகிறார். ஆனால் வலுவான உணர்வுகள் இருப்பதால் மட்டுமே தேவனுடைய அபிஷேகம் இருக்கிறது என்று அர்த்தமாகிவிடாது. கேளிக்கை நிகழ்ச்சிகளை நடத்தும்போதும், விளையாடும்போதும்கூட மக்கள் அதிகமான உணர்வுகளை வெளிப்படுத்துகிறார்கள். ஆனால் அப்போது தேவனுடைய அபிஷேகம் இருக்கிறது என்று அர்த்தமாகிவிடாது! ஒரு பிரசங்கியார் உரத்த குரலில் பேசும்போதோ அல்லது கிளர்ச்சியடையும் போதோ அல்லது குதிக்கும்போதோ அவர் அபிஷேகம் பெற்றிருக்கிறார் என்று சிலர் நினைக்கிறார்கள். ஆனால் தேவனிடமிருந்து வரும் மெய்யான அபிஷேகம் வெளிப்படையான சரீரப்பிரகாரமான செயல்களில் வெளிப்படலாம், வெளிப்படாமலுமிருக்கலாம்.

இதைப்போலவே, தேவனுடைய அபிஷேகத்தின் பிரசன்னத்தை "சம்பாதித்துக்கொள்ள" முடியாது அல்லது கல்வியினாலோ, அறிவினாலோ அல்லது அமைப்பினாலோ பெற்றுக்கொள்ளவும் முடியாது. அதிகமான இயற்கைத் தாலந்துகளும், திறமைகளும் தேவனுடைய அபிஷேகத்துக்கு அடையாளங்கள் கிடையாது. நம் தாலந்துகள் நாம் தேவனிடமிருந்து பெறும் ஈவுகளாக இருந்தாலும் இரட்சிக்கப்படாத நபர்கூடத் தாலந்துகளைப் பெற்று அவைகளைப் பயன்படுத்த முடியும். தாலந்துகளையும், திறமைகளையும் பெற்றிருப்பதை அபிஷேகத்தோடு குழப்பிக்கொள்ளக் கூடாது.

தேவன் சாலொமோனுக்கு செய்ததுபோல (1 இரா. 4:29-34) அபிஷேகத்தின்மூலமாக நமது சொந்த சக்தியினால் செய்யக்கூடியதற்கும் அப்பால் செய்யும்படி, வல்லமையளிக்கலாம். ஆனால் நமது தாலந்தும், திறமையும் தேவனுடைய வல்லமைக்காக அவரைச் சார்ந்திருப்பதற்கு *ஒருபோதும்* மாற்றாக (replace) இருக்க முடியாது. தேவனிடமிருந்து வரும் அபிஷேகம் தெய்வீகமானது, இயல்புக்கு அப்பாற்பட்டது. அது *அவருடைய* **வல்லமையையும் திறன்களையும் ஈடுபடுத்துவதாகும்!**



**c. அபிஷேகம் என்பது இரட்சிப்பு அல்ல.** தங்கள் பாவங்களை விட்டு மனந்திரும்பி, இரட்சிப்புக்காகக் கிறிஸ்துவை நோக்கித் திரும்பியிருக்கும் எல்லோரும் **பரிசுத்த ஆவியானவரைப் பெற்றிருக்கிறார்கள்.** ஆனால் பரிசுத்த ஆவியானவரின் *அபிஷேகத்தைப்* பெறுவதும் இதுவும் ஒன்றல்ல!

இரட்சிப்பின்போது பரிசுத்த ஆவியானவரின் கிரியையை நாம் பார்ப்போம்:

- பரிசுத்த ஆவியானவரின் கிரியை மற்றும் வல்லமையினால் மட்டுமே ஒருவர் மறுபடியும் பிறக்க முடியும் (யோவான் 3:3-8; ரோமர் 8:9, 16).
- இரட்சிப்பின்போது ஒருவர் இயல்புக்கு அப்பாற்பட்ட வகையில் கிறிஸ்துவின் உலகளாவிய சரீரத்தோடு இணைக்கப்படுகிறார். இரட்சிப்புக்காகக் கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கும் எல்லோரும் அவருடைய சரீரத்தில் அங்கமாக இருக்கிறார்கள் (1 கொரி. 12:13)
- இரட்சிப்பின்போது ஒருவர் பரிசுத்த ஆவியானவரால் ''முத்திரிக்கப்படுகிறார்'' (2 கொரி. 1:22; 5:5; எபே. 1:13, 14). "முத்திரிக்கப்படுவது" என்பதற்கான கிரேக்கச் சொல் *அர்ரபான்* (arrabon) என்பதாகும். இது உத்திரவாதத் தொகை அல்லது அச்சாரம் என்று பொருள்படுகிறது. ஆனால் இந்த எளிய வரையறைக்கும் அப்பால் ஆழமான அர்த்தம் இருக்கிறது. முதலாவதாக, ''முத்திரிக்கப்படுவது'' என்றால் தேவனுக்குச் சொந்தமானவர் என்று அடையாளம் இடப்படுவதாகும். நமக்காகச் செலுத்தப்பட்ட கிரயத்தைத் தேவன் ஏற்றுக்கொண்டிருக்கிறார் என்பதற்கு அது ஜீவனுள்ள அடையாளமாகும். நமது பாவங்களுக்காகத் தேவனுடைய குமாரன் செலுத்திய இரத்தபலியே அந்தக் கிரயமாகும் (எபே. 1:7). இரண்டாவதாக, நாம் இரட்சிப்புக்காகக் கிறிஸ்தவ விசுவாசத்துக்குள்ளாக வரும்போது (ரோமர் 10:9, 10) தேவன் நம்மீது முதலீடு செய்வதற்கான "வைப்பு நிதியாகவோ'' அல்லது ''முதல் தவணையாகவோ'' பரிசுத்த ஆவியானவர் நமக்குக் கொடுக்கப்படுகிறார். தேவன் நம்மை முழுவதுமாகத் தம்மோடு பரலோகத்தில் சேர்த்துக்கொள்ளும் நாள் வரையில் நாம் ஜீவனிலும், சந்தோஷத்திலும், ஆசீர்வாதத்திலும்,

பரிசுத்த ஆவியானவரின் வல்லமையிலும் நாள்தோறும் வளர்ந்துவருவோம் என்பதற்கு இது தேவனுடைய உத்தரவாதத்தின் முதலீடாக (அல்லது வாக்குத்தத்தமாக) இருக்கிறது (பிலி. 1:6; 2 பேதுரு 1:5-11).

இரட்சிப்பின்போது பரிசுத்த ஆவியானவரின் ஊழியம் *நம்மிலும் நம்மூலமாகவும்* துவங்குகிறது. முதலில் நாம் இரட்சிக்கப்படும்போது பெற்றுக்கொள்ளுவது, நமது முதிர்ச்சியடையும் செயல்முறையில் முதல் படியாக இருக்கிறது. எல்லோரும் தமது குமாரர்களாகவும், குமாரத்திகளாகவும் முதிர்ச்சியடைந்த சீஷர்களாக ஆக வேண்டும் என்பதே **எல்லா** விசுவாசிகளையும் குறித்த தேவனுடைய சித்தமாகும். இதற்காக நாம் தனிப்பட்ட வளர்ச்சியிலும் மறு ரூபமாகுதலிலும் தொடர்ந்து ஒப்படைப்புக் கொண்டிருக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் நாம் நமது வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவரின் கிரியைக்கு நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும். அவர் நமக்கு உணர்த்துகிறார், சிட்சிக்கிறார், ஊக்குவிக்கிறார் மற்றும் வல்லமையளிக்கிறார்!




**போதகரிடமிருந்து போதகருக்கு:** ஒரு போதகராகவும் சபையின் தலைவராகவும் நீங்கள் தேவனுக்கடுத்த காரியங்களில் எப்போதும் வளர்ச்சிபெறும்படியான ஒப்படைப்பில், மந்தையில் எஞ்சியவர்களுக்கு **முன்மாதிரியாக இருக்கும்படி தேவனால் அழைக்கப்பட்டிருக்கிறீர்கள்!** தலைவர்களான நாம் இனிமேலும் நாம் கிறிஸ்துவில் தனிப்பட்ட வளர்ச்சிபெறுவதற்கு முன்னுரிமை கொடுக்கவேண்டியதில்லை என்று நினைக்கலாம். ஆனால் இதற்கு எதிர்மாறானதே உண்மையாகும்! (பார்க்க 1 பேதுரு 5:2, 3)



**நாம் தலைவர்களாக இருக்கிறபடியால்,** நாம் எல்லோரும் இயேசுவானவரின் வார்த்தைகளுக்கு முன்மாதிரிகளாக இருக்க வேண்டும்: “ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்” (லூக்கா 9:23). ஒவ்வொரு விசுவாசிக்கும் இரட்சிப்பின்போது பரிசுத்த ஆவியானவர் கொடுக்கப்படுகிறார்; ஒவ்வொரு நாளும் நம்முடைய வாழ்க்கையில் அவருடைய கிரியைக்கும் தாக்கத்துக்கும் நம்மை ஒப்புக்கொடுப்போமாக!

**d. அபிஷேகம் என்பது பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் அல்ல.** இந்த *ஞானஸ்நானம்* ஒரு வேறுபட்ட அனுபவமாகும். இது கிறிஸ்துவில் எல்லா விசுவாசிகளுக்கும் கிடைக்கக் கூடியதாகும் (மத். 3:11). பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் என்பது இரட்சிப்பின்போது பரிசுத்த ஆவியானவர் விசுவாசிக்குள் வந்து வாசம்பண்ணுவது அல்ல.

பெந்தெகொஸ்தே நாளன்று, பரிசுத்த ஆவியானவரின் ஈவு ஊற்றப்படுவதற்கு எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பே தீர்க்கதரிசியாகிய யோவேல் அதைப்பற்றி முன்னறிவித்திருக்கிறார் (பார்க்க, யோவேல் 2:28-32 மற்றும் அப். 2:1-39).

கிறிஸ்துவைப் பின்பற்றும் ஒவ்வொருவரும் தங்கள் எசமானரின் பணிக்காக இன்னுமதிகமாகப் பயன்தரத்தக்க வகையில் வல்லமையினால் நிரப்பப்பட்டு, ஆயத்தப்படுத்தப்படுகிறார்கள். அது கிறிஸ்துவை விசுவாசிப்பவர்களை இவ்வாறு வழிநடத்தும்:

- ஆத்துமாக்களுக்காக இன்னும் ஆழமான வாஞ்சை
- ஜெபத்தில் அதிகமான வல்லமை மற்றும் வாஞ்சை
- கிறிஸ்துவின்மீதும் அவருடைய சரீரமாகிய சபையின் மீதும் ஆழமான வாஞ்சை
- ஆவிக்குரிய யுத்தத்துக்காக ஆயத்தப்படுதல்
- தேவனுடைய வார்த்தையைப்பற்றி அதிகமான உள்ளறிவு.

கிறிஸ்துவை விசுவாசிக்கும் எல்லா விசுவாசிகளும் இரட்சிப்பின்போது *உள்ளே வாசம்பண்ணும்* ஈவாகிய பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள். (யோவான் 3:5, 6; ரோமர் 8:15, 16). **பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம்** என்பது தேவ ஆவியானவரால் *நிரப்பப்பட்டு, வழிந்தோடுவதாகும்.* இந்த ஞானஸ்நானம் உங்களை இன்னுமதிகமாக இரட்சிக்கப்பட்டவராகவோ அல்லது தேவனால் நேசிக்கப்படுகிறவராகவோ **ஆக்குவதில்லை.** ஆனால் கிறிஸ்துவில் இன்னுமதிகமாக ஆற்றலுள்ள ஜெயங்கொண்ட வாழ்க்கை வாழும்படி உங்களை ஆயத்தப்படுத்துகிறது! நீங்கள் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெற்றிருப்பீர்களானால், இது *சென்றடைய* வேண்டிய ஒரே ஒருமுறை நடைபெறும் *அனுபவம்* அல்ல என்பதை **நினைவில் வைத்திருங்கள்.** மாறாக, அது *தொடர்ந்து காத்துக் கொள்ள வேண்டிய வாழ்க்கை முறையாகும்.* நாம் தொடர்ந்து நிரப்பப்பட்டவர்களாக இருக்க வேண்டும் (இதைப் பற்றி மேலும் அறிய, பார்க்க, பகுதி III C. 1. "நிரப்பப்படுங்கள்!"

**போதகரிடமிருந்து போதகருக்கு:** பரிசுத்த ஆவியானவரைப் பற்றி ஆய்வு செய்யும்போது, இந்த உலகத்தில் வேறு பல ஆவிகளும் இருக்கின்றன எந்பதைக் குறிப்பிட வேண்டும். இன்றைய நாட்களில் மூன்று வகைப்பட்ட ஆவிகள் உலகத்தில் செயல்பட்டு வருகின்றன.

**1) பிசாசின் ஆவிகள்**

இன்று உலகத்தில் பிசாசின் ஆவிகள் காணப்படுகின்றன. மனிதர்களைத் தவறான பாதையில் வழிநடத்தி (வெளி. 12:7-9). இயேசு யார் என்ற சத்தியத்தை அவர்கள் அறியாமல் குருடாக்குவதே (2 கொரி. 4:4; 1 யோவான் 2:22; 4:1-3) இவை தாமாகவே எடுத்துக் கொண்ட வேலையாகும். பிசாசின் ஆளுகை அடிப்படையில் பொய்யான மதங்களின் மூலமாகவே நடக்கிறது. இவை *வஞ்சிப் பதைத்* தங்கள் மிகவும் சக்திவாய்ந்த கருவியாகப் பயன்படுத்து கின்றன. *"பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிற"* பிசாசானவ னோடு சேர்ந்து இவை செயல்படுகின்றன (யோவான் 8:44).

பிசாசின் ஆவிகள் அவிசுவாசிகளின் மீது வலுவான தாக்கத்தைக் கொண்டிருக்கின்றன (2 கொரி. 4:3, 4). ஆனால் சுவிசேஷத்தின் மகிமையான ஒளியைப் பிரசங்கிக்கும் மெய்யான



விசுவாசிகளுக்கு எதிராக அவை தாக்குதல் செய்கின்றன (எபே. 6:10-12; 2 கொரி. 10:3-5; 11:3). ஒரு கிறிஸ்தவன் வேண்டுமென்றே அவைகளின் சதிகளோடு அல்லது சோதனைகளில் ஒத்துழைக்கும்படி ***தெரிந்துகொண்டாலொழிய,*** பாவத்தைப் போலப் பிசாசின் ஆளுகை கிறிஸ்தவர்களின் மீது சக்தியற்றதாக இருக்கிறது.

சாத்தான் மக்களை வழிவிலகச் செய்யும்படி மானிடப் பாத்திரங்களை (கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைத்துக் கொள்ளுகிறவர்களைக்கூட) பயன்படுத்துகிறான் (மத். 24:24; 2 கொரி. 11:13-15; 2 பேதுரு அதிகாரம் 2). பிசாசுகள் இடையிடையே **அரைகுறைச் சத்தியத்தைப்** பேசுவதுண்டு (மத். 4:1-11; மாற்கு 5:1-8; அப். 16:16-19). ஆனால் ஒருபோதும் தேவனை மகிமைப்படுத்தவோ அல்லது அவருடைய சித்தத்தை நிறைவேற்றவோ அப்படிச் செய்வதில்லை. பிசாசின் ஆவிகள் தேவன் இருக்கிறார், அவர் உண்மையானவர் என்பதை அறியும்.

*"தேவன் ஒருவர் உண்டென்று விசுவாசிக்கிறாய், அப்படிச் செய்கிறது நல்லதுதான்; பிசாசுகளும் விசுவாசித்து, நடுங்குகின்றன"* (யாக். 2:19). ஆனால் பிசாசுகள் மனந்திரும்புவதில்லை. அவை மனுக்குலத்தை வஞ்சிக்கும்படி கடுமையாக உழைக்கின்றன. ஏனென்றால் தங்கள்மீது நியாயத்தீர்ப்பு வரப்போவதை அவை அறிந்திருக்கின்றன (வெளி. 12:12).

**2) மானிட ஆவிகள்**

கர்ப்பந்தரிக்கப்படும் ஒவ்வொரு மனிதனுக்கும் ஆவி உண்டு. மனிதனில் மூன்று பகுதிகள் இருக்கின்றன: சரீரம், ஆத்துமா, மற்றும் ஆவி (1 தெச. 5:23; எபி. 4:12). என்றாலும், நாம் கிறிஸ்துவில் விசுவாசத்தின்மூலமாக ஆவிக்குரிய பிரகாரமாகப் பிழைத்திருக்கும் வரையில் நமது ஆவிகள் நமக்குள் மரித்தவையாக இருக்கின்றன (எபே. 2:1-8).

ஒரு மனிதன் சரீரப்பிரகாரமாக மரிக்கும்போது, அவனுடைய ஆவி அவனுடைய சரீரத்தைவிட்டு விலகுகிறது என்று வேதாகமம் போதிக்கிறது. கிறிஸ்துவுக்குள் இருப்பவர்கள் மட்டுமே ஆண்டவரிடம் கொண்டுசெல்லப்படுகிறார்கள் (2 கொரி 5:6, 8). கிறிஸ்துவில்லாமல்

மரிப்பவர்கள் நியாயத்தீர்ப்பு நாள் வரையில் சிறைப்பட்டிருக்கிறார்கள் (எபி. 9:27; வெளி. 20:11-15). மரித்த மனிதர்களின் ஆவி உலகத்தில் அலைந்து திரிய **அனுமதிக்கப்படவில்லை!** அவை மற்றொரு மனிதனாகவோ அல்லது மற்றொரு வடிவமாகவோ மறுபிறவி எடுப்பதுமில்லை. எல்லோருக்கும் ஒரேயொரு வாழ்க்கையும் பிறகு நியாயத்தீர்ப்பும் கொடுக்கப்பட்டிருக்கிறது (எபி. 9:27).

பல மதங்கள் பல வகைப்பட்ட ஆவிகளை ஆராதித்து வருகின்றன. சிலர் தங்கள் முன்னோர்கள் அல்லது மரித்துப்போன தனிப்பட்டவர்களின் ஆவியோடு தொடர்புகொள்ள முடியும் என்று நம்புகிறார்கள். ஆனால் இவர்கள் மரித்துப்போன மானிட ஆவிகளோடு தொடர்பு கொள்ளுவதில்லை. உண்மையில் மானிட ஆவிகளைப்போல மாறுவேடத்தில் வரும் பிசாசின் ஆவிகளோடுதான் இவர்கள் தொடர்பு கொள்ளுகிறார்கள்.

இந்தப் போலிகளால் ஏமாற்றப்படாதிருங்கள்! சாத்தானும் அவனுடைய தூதர்களும் *'ஒளியின் தூதனுடைய'* வேஷத்தைத் தரித்துக்கொண்டு, தேவனுக்கடுத்த காரியத்தைச் செய்வதுபோலப் பாவனை செய்வார்கள் என்று வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது (2 கொரி. 11:14). இதையே அவைகளால் செய்யக்கூடும் என்கிற படியால், மரித்த மனிதனுடைய குரலில் பேசுவதோ அல்லது அவனுடைய வரலாற்றை அறிந்திருப்பதோ அவைகளுக்குக் கடினமாக இருக்காது. ஒருபோதும் மரித்தவர்களோடு தொடர்பு கொள்ள முயலாதீர்கள் அல்லது மூதாதையரையோ அல்லது மரித்த ஒருவரையோ ஆராதிக்க முயலும் அல்லது அவர்களை நோக்கி ஜெபிக்க முயலும் சடங்குகளிலோ அல்லது கொண்டாட்டங்களிலோ பங்குகொள்ளாதிருங்கள். அப்படிச் செய்தால் பிசாசின் இடைபாடுகளை நீங்களே வரவழைத்துக் கொள்ளுவீர்கள்!

**3) பரிசுத்த ஆவியானவர்**

பரிசுத்த ஆவியானவர் தேவ ஆவியானவராவார். இவர் மட்டுமே பரிசுத்தமானவர் என்று அழைக்கப்படத் தகுதியுள்ள ஒரே ஆவியாகும் (ரோமர் 1:4). பிதாவாகிய தேவனையும், இயேசுவாகிய தேவனையும் போலவே **பரிசுத்த ஆவியானவர் முழுமையாகத் தேவனாக இருக்கிறார்.** (மத். 28:19; 2 கொரி. 13:14)



வேதவசனங்களில் பரிசுத்த ஆவியானவர் தெய்வீக இயல்புகளைக் கொண்டிருப்பது சித்தரிக்கப்பட்டிருக்கிறது:

- அவர் தேவன் என்று அழைக்கப்படுகிறார் (யோவான் 4:24; அப். 5:3, 4; 1 கொரி. 3:16; 2 கொரி. 3:17)
- அவர் நித்தியராக இருக்கிறார் (எபி. 9:14)
- அவர் சர்வ ஞானியாக, சகலத்தையும் அறிந்தவராக இருக்கிறார் (யோவான் 14:26; 1 கொரி. 2:10).
- அவர் எங்கும் வியாபித்திருக்கிறார் (சங். 139:7).
- அவர் சர்வ வல்லவராக இருக்கிறார் (லூக்கா 1:35; சிருஷ்டிப்பில், ஆதி. 1:2)
- அவர் எல்லாவற்றையும் முன்னரே அறிந்திருக்கிறார் (அப். 1:16; 11:27, 28).
- அவர் அன்பானவர் (ரோமர் 15:30)
- அவர் வேதவசனங்கள் எழுதப்படும்படி தூண்டுதலளித்தார் (2 பேதுரு 1:21; 2 தீமோ. 3:16)
- அவர் தெய்வீக வழிநடத்துதலில் முகவராக இருக்கிறார் (மத். 13:11; ரோமர் 8:14).
- இயேசுவையும், பிதாவையும் போல அவர் ஒரு நபராக இருக்கிறார் (யோவான் 14:16, 17, 26); அவரை துக்கப்படுத்த முடியும் (எபே. 4:30).

இங்கே குறிப்பிட முடியாத அளவுக்குப் பரிசுத்த ஆவியானவரின் ஆள்தத்துவத்தைப் பற்றிய ஆய்வு மிகவும் விரிவானதாகும். என்றாலும் பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் இரண்டுமே பரிசுத்த ஆவியானவர் இருக்கிறார் என்பதையும், அவர் தேவன் என்பதையும் வெளிப்படுத்துகின்றன. அவர் பிதா மற்றும் குமாரனோடுகூட நித்தியமாக இருக்கிறார். அவர் திரித்துவத்தின் மூன்றாவது நபராக இருக்கிறார்.

**e. அபிஷேகம் என்பது பரிசுத்தமாக்கப்படுதல் அல்ல.** இந்த முக்கியமான வேதாகமச் செயல்முறையைக் குறித்து அதிக மாக அறியும்படி நாம் *பரிசுத்தமாக்கப்படுதல்* பற்றி, அதை ஆய்வு செய்வோம்.

### பரிசுத்தமாக்கப்படுதலுக்கான விளக்கம்

பரிசுத்தமாக்கப்படுதலுக்கு இரண்டு முக்கியமான அர்த்தங்கள் இருக்கின்றன. முதலாவதாக, *பிரதிஷ்டை செய்வது* என்பது ஒரு பொருளை அல்லது ஒரு நபரைக் குறிப்பிட்ட அல்லது பரிசுத்த பயன்படுத்துதலுக்காகப் பிரித்து எடுப்பதாகும்.

பழைய ஏற்பாட்டில் இது வீடு (லேவி. 27:14), நிலம் (லேவி. 27:16), ஆலயத்தில் பயன்படுத்தப்படும் பாண்டங்கள் (2 நாளா. 29:18, 19) இவைகளைக் குறித்ததாகும். இவை எல்லாமே *பரிசுத்தமாக்கப்பட்டு*, பரிசுத்த பயன்படுத்துதலுக்காகப் பிரித்து வைக்கப்பட்டன.

மக்களும்கூடச் சில குறிப்பிட்ட நோக்கங்களுக்காகப் பிரித்து எடுக்கப்பட்டார்கள்: முதலில் பிறந்தவர் (யாத். 13:2); ஆசாரியர்கள் (2 நாளா. 29:4, 5, 15); தீர்க்கதரிசியாகிய எரேமியா (எரே. 1:5). தேவனுடைய பாவமில்லாத குமாரனாகிய இயேசு (யோவான் 10:36; 17:19).

பரிசுத்தமாக்கப்படுதலுக்கு இரண்டாவது அர்த்தம் *சுத்திகரிக்கப் படுதல்* என்பதாகும் - நல்லொழுக்கரீதியற்ற நிலையிலிருந்து எடுத்து சுத்திகரித்து, தூய்மைப்படுத்தப்படுவதாகும். எடுத்துக்காட்டாக, பவுல்



**பரிசுத்தமாக்கப்படுதல்: பரிசுத்த பயன்படுத்துதலுக்காகப் பிரித்தெடுக்கப்படுதல்**



விசுவாசியின் முழு வாழ்க்கையின் நிலையைக் குறித்துக் கூறும்போது (1 தெச. 5:23); விசுவாசியின் மனச்சாட்சி பற்றி கூறியது (எபி. 9:13, 14 போன்றவை).

**போதகரிடமிருந்து போதகருக்கு:** பரிசுத்தமாக்கப்படுதல் குறித்த இந்த இரண்டு வரையறைகளும், பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் பரிசுத்தமாக்கப்படுதல் குறித்த கருத்தில் உள்ள வேறுபாட்டை எடுத்துக்காட்டுகின்றன. பழைய ஏற்பாட்டில் பொதுவாகக் காணப்படும் ஒன்று, தேவனுக்காகவோ அல்லது ஊழியத்துக்காகவோ பயன்படுத்தப்படும்படி தனித்து எடுக்கப் படும்போது, அது பரிசுத்தமானதாகவும், பரிசுத்தமாக்கப்பட்டதாகவும் கருதப்பட்டது. புதிய ஏற்பாட்டில் பொதுவாக இருப்பது தேவனுடைய பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டு, எஜமானரால் பயன்படுத்தப்படக்கூடிய ஒரு பாத்திரமாக மாற்றப்படுகிறது (2 தீமோ. 2:19-21). கிறிஸ்துவின் சரீரத்தில் தலைவர்களாக இருக்கும் நாம், பரிசுத்த அழைப்பினால் அழைக்கப்பட்டிருக்கிறோம் (2 தீமோ. 1:9). இந்த அழைப்பு கிறிஸ்துவின் ஊழியத்துக்காக நம்மைப் பிரித்தெடுக்கிறது. என்றாலும் தேவன் இதோடு நிறுத்திவிடுவதில்லை. அவர் நமக்குள்ளாகப் "பரிசுத்தமாக்கும்" கிரியையைத் துவங்கி, தமது ஆவியானவராலும், தமது வார்த்தையினாலும் நம்மை மாற்றுகிறார். தனது அன்றாட வாழ்க்கையில் தனக்குள்ளேயிருக்கும் ஆண்டவரைப் பிரதிபலிக்கும்படியான சிந்தனைகளையும், வார்த்தைகளையும், செயல்களையும் கொண்ட ஒருவராக அவர் நம்மை மாற்றுகிறார்.

### 2. பரிசுத்தமாக்கப்படுதலின் மூன்று அம்சங்கள்

**a. இருக்கும் நிலை சார்ந்த பரிசுத்தமாக்கப்படுதல் - நிறைவேற்றி முடிக்கப்பட்ட கிரியை.** இயேசுவானவர் இந்த உலகத்தில் வாழ்ந்தபோது நல்லொழுக்கத்தில் பரிபூரணமானவராகவும், பாவமில்லாதவராகவும் இருந்தார். நமது விழுந்து போன உலகத்தில் வந்து, நமது பாவங்களுக்கான தண்டனையைத் தாமே சுமக்கும் நோக்கத்தோடு அவர் இந்த உலகத்திற்குப் பிதாவானவரால் அனுப்பப்பட்டார். அவர் மூலமாக மட்டுமே நாம் மன்னிக்கப்பட்டு, இரட்சிக்கப்பட்டு, தேவனைச்சேர முடியும்.

ஒருவர் கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து, கிறிஸ்துவின் ஆளுகைக்குத் தன்னை ஒப்புக்கொடுக்கும்போது, அவர் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் தெய்வாதீனமாகச் சேர்த்துக் கொள்ளப்படுகிறார் (1 கொரி. 12:13). "சபை" என்பதற்கான கிரேக்கச் சொல் *எக்ளீசியா* என்பதாகும். "அழைக்கப்பட்டவர்கள்" என்பது இதற்கு அர்த்தமாகும். கிறிஸ்துவில் *ஒவ்வொரு விசுவாசியும்* எப்படித் தேவனுடைய பயன்படுத்தலுக்காகப் **பிரித்தெடுக்கப்பட்டிருக்கிறார்** என்பதைப் புரிந்துகொள்ள இந்த வரையறை உதவியாக இருக்கும்.

ஒரு பரிசுத்த நோக்கத்துக்காகப் பிரித்தெடுக்கப்படும் இப்படிப்பட்ட பரிசுத்தமாக்கப்படுதல் ***இருக்கும் நிலை சார்ந்த பரிசுத்தமாக்கப்படுதல்*** என்று அழைக்கப்படுகிறது (பார்க்க, 1 கொரிந்தியர் 1:30; 6:12; 2 தெசலோனிக்கேயர் 2:13). இந்த *இருக்கும் நிலை சார்ந்த பரிசுத்தமாக்கப்படுதல்* தேவனால் செய்து முடிக்கப்பட்ட கிரியையாகும். இது இரட்சிப்பின்போது தனிப்பட்ட ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்படுகிறது (அப். 26:18; ரோமர் 15:16; 1 கொரி. 6:11).

கிறிஸ்து நமது பாவங்களுக்காகத் தமது சொந்த இரத்தத்தைச் சிந்தி, தமது ஜீவனைக் கொடுத்தார். இதன் மூலம் அவர் செய்து முடித்த கிரியைகளில் ஒன்று அவரை விசுவாசிப்பவர்களின் *பரிசுத்தமாக்கப் படுதலாகும். "இயேசுகிறிஸ்துவினுடைய சரீரம் ஒரேதரம் பலியிடப்பட்ட தினாலே, அந்தச் சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்"* (எபி. 10:10). *"அந்தப்படி நீங்கள் அவராலே கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டி ருக்கிறீர்கள்.... அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும்* ***பரிசுத்தமும்*** *மீட்புமானார்"* (1 கொரி. 1:30, 31).

"பரிசுத்தமாக்கப்பட்டவர்களாக" இருந்தபடியினால்தான் புதிய ஏற்பாட்டு விசுவாசிகள் "பரிசுத்தவான்கள்" என்று அழைக்கப்பட்டார்கள் (1 கொரி. 1:2; எபே. 1:1).

இந்தப் பரிசுத்தமாக்கப்படுதல் சிலுவையில் கிறிஸ்து செய்து முடித்த கிரியையின் காரணமாக நமக்கு இலவசமாகக் கொடுக்கப்படுகிறது. இதைச் சம்பாதிக்கும்படியாக நாம் ஒருபோதும் போதிய நற்கிரியைகளைச் செய்யவும் முடியாது. சமயப்பிரமாணமான முயற்சிகளைச் செய்யவும் முடியாது. தேவனால் ஏற்றுக்கொள்ளப்படும் வகையிலோ அல்லது நாமாகவே இரட்சிப்பைச் சம்பாதித்துக்கொள்ளும் வகையிலோ நாம் ஒருபோதும் "போதுமான வகையில் நல்லவர்களாக" இருக்க முடியாது.



நமது பாவமில்லாத, பரிபூரணரான தேவன் நம்மை நோக்கிப் பார்க்கும்போது, அவர் பூரணமில்லாத ஒவ்வொரு நிலையையும், தோல்வியையும் காண்கிறார். என்றாலும், அவர் தமது குமாரனாகிய இயேசுவின் இரத்தத்தின் (பரிசுத்தமாக்கும்) மூடுதலின் வழியாக அவர் நம்மைக் காண்கிறார். நமது பாவங்களை மூடும் இந்த ஒரே வழியின் மூலமாக மட்டுமே நாம் பரிசுத்தரும் நீதியுள்ளவருமாகிய தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட முடியும் (எபே. 1:6, 7). இது மெய்யாகவே ஒரு நற்செய்தியாகும்!

பாவமில்லாத ஆட்டுக்குட்டியானவரின் நித்திய இரத்தத்தின் மூலமாக, விசுவாசிகள் பரிசுத்தமாக்கப்படுகிறார்கள் (எபி. 10:11-14; 13:12). கிறிஸ்து தமது இரத்தத்தைச் சிந்தித் தம்மைப் பலியாக ஒப்புக்கொடுத்தது பரிசுத்தமாக்குதலின் ஒரே முற்றிலும் முடிந்த கிரியையாக இருக்கிறது (எபி. 9:28; 10:12). கிறிஸ்துவிலும் நமது பாவங்களுக்காக அவர் செய்த அவருடைய பலியிலும் நாம் நம்பிக்கை வைக்கும் அதே கணத்திலேயே (ரோமர் 10:9, 10). தேவன் கிறிஸ்துவின் பரிசுத்தத்தை நமது கணக்கில் எடுத்துக்கொள்ளுகிறார். நாம் "பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்" என்று அறிவிக்கிறார் (1 கொரி. 1:30).

**b. முன்னேறிச் செல்லுகிற பரிசுத்தமாக்கப்படுதல் - ஒரு செயல்பூர்வமான செயல்முறை.** பரிசுத்தமாக்கப்படுதலின் முப்பட்டை அர்த்தத்தின் இரண்டாவது பகுதி ஒரு விசுவாசியின் வாழ்நாள் முழுவதிலும் தொடர்ந்து நடக்கும் பரிசுத்தமாக்கப்படுதலின் **செயல்முறையாகும்.** இது பெரும்பாலும் ***முன்னேறிச் செல்லுகிற பரிசுத்தமாக்கப்படுதல்*** என்று அழைக்கப்படுகிறது.

*இருக்கும் நிலை சார்ந்த* பரிசுத்தமாக்கப்படுதல் தேவனுடைய தெய்வீகமான கிரியை என்றும், அது கிறிஸ்துவின் பலியினால் மட்டுமே கிடைக்கக்கூடிய பரிசுத்தத்தை நமக்குக் கொடுக்கிறது என்றும் நாம் ஏற்கெனவே பார்த்தோம். மனுக்குலம் முழுவதுமே பாவத்தின்கீழாக நம்பிக்கையை இழந்துபோன நிலையில் இருக்கிறபடியால், மானிட முயற்சியினால் நாம் இதைச் சம்பாதித்துக்கொள்ள முடியாது (ரோமர் 3:9-26).

ஆனால் ஒருவர் இரட்சிப்புக்காகக் கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கும்போது, தேவனுடைய அடுத்த பெரிய கிரியை

*“ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே* (கிறிஸ்துவின் சாயல்) *மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுத்துவதாகும்”* (2 கொரி. 3:18). ஏனெனில் தேவன் *“தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும்பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்”* (ரோமர் 8:29)

**பரிசுத்தமாக்கப்படுதலின் செயல்முறை (அல்லது வளர்ச்சிமுறை** (Progressive)) **பரிசுத்தமாக்கப்படுதலின் இருக்கும் நிலைக்கு** (Positional)வேறுபட்டதாகும். *இருக்கும் நிலை சார்ந்த* பரிசுத்தமாக்கப் படுதல் தேவனால் செய்யப்படும். நாம் கிறிஸ்துவின் இரட்சிக்கும் கிரியையை ஏற்றுக் கொள்ளும்போ ஒரே தெய்வீகமான கிரியையாகும். . ஆனால் *முன்னேறிச் செல்லும்* பரிசுத்தமாக்கப்படுதல் ஒரு திட்டமான வகையில் நமது சித்தத்தையும், வாஞ்சையையும், முயற்சியையும் உள்ளடக்கியிருக்கிறது.

“மறுரூபமாக்கப்பட்டு இருப்பது” பற்றிய இந்தச் செயலும் வாழ்நாள் முழுவதுக்குமான ஒப்படைப்பும் ஒரு தெய்வீக / மானிடப் பங்காண்மையாக இருக்கிறது. விசுவாசிகள் தேவனோடுகூடப் பங்காளிகளாகச் சேர்ந்து, தங்களுடைய வாழ்க்கையில் மறுரூபமாக்கும் தேவனுடைய கிரியைக்கு ஒத்துழைக்க வேண்டும்.

கிறிஸ்துவைப் பின்பற்றும் எல்லோரும் பரிசுத்தமானதும் தூய்மையானதுமான வாழ்க்கை வாழ்ந்து, இன்னுமதிகமாகக் கிறிஸ்துவைப் போலாகுவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று வேதாகமம் தெளிவாகச் சொல்லுகிறது. *“இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டாயிருக்கிறபடியினால், பிரியமான வர்களே, மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக் கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்”* (2 கொரி. 7:1).

*“அந்தப்படி, முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யாந நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்”* என்று



சொல்லப்பட்டிருக்கிறது (எபே. 4:22-24). இப்போதே, இதைக் குறித்துப் போதிக்கும் கீழ்க்கண்ட வேதவசனங்களை வாசிக்க நேரம் செலவழியுங்கள்: ரோமர் 6:11-13, 12:1, 2; 13:14; 2 தீமோத்தேயு 2:20, 21; 1 பேதுரு 1:13, 19; 1 யோவான் 3:3.

இது நமது கிறிஸ்தவ விசுவாசத்தின் மிக முக்கியமான அம்சமாகும். என்றாலும், இதில்தான் விசுவாசிகள் தேவன் அவர்களுக்காக கொண்ட நோக்கத்தில் தோற்றுப்போகிறார்கள். தேவன் அவர்களைக் கோபம், பாவம், கட்டப்பட்டிருத்தல் அல்லது பயத்திலிருந்து விடுவிப்பதற்கு விடாமல், இவைகளுக்குக் கட்டுப்பட்டவர்களாகவே இருக்கி றார்கள். பயபக்தியற்ற செயல்களையோ அல்லது பழக்கங்களையோ மாற்றும்படி அவர்கள் சொந்த பயத்தில் முயன்றாலும், முற்றிலுமாக விடுதலை பெறுவதற்குத் தேவனுடைய உதவி தங்களுக்குத் தேவை என்பதை அவர்கள் உணராதிருக்கிறார்கள்.

தேவனுடைய வல்லமையின் உதவியில்லாமல் பரிசுத்தமாகுவதோ அல்லது நல்லொழுக்கரீதியாகத் தூய்மையாக இருப்பதோ *இயலாத காரியம்* என்பது வேதவசனங்களிலிருந்து தெளிவாகத் தெரிகிறது (எரே. 13:23; 17:9, 10; ரோமர் 3:20, 23; 7:18). ஆம், கிறிஸ்துவின் இரத்தம் நமது துவக்கப் பரிசுத்தமாக்கப்படுதலுக்கான அடிப்படையைக் கொடுக்கிறது (எபி. 10:29). ஆனால் பரிசுத்த ஆவியானவரும் தேவனுடைய நித்திய வார்த்தையும் (எபே. 5:26) தொடர்ந்து கிரியைசெய்யும்போது மட்டுமே நாம் இன்னுமதிகமாகக் கிறிஸ்துவின் சாயலுக்கு மாற்றப்படுகிறோம் (ரோமர் 8:29, 30; 2 கொரி. 3:18; பிலி. 1:6; 1 பேதுரு 5:10). இந்தச் செயல் வாழ்நாள் முழுவதும் நடக்கும் ஒரு கிரியையாகும். நாம் அவரை *“முகமுகமாகக்”* காணும் வரையில் இது தொடர்ந்து நடக்கும் (1 கொரி. 13:12; 1 யோவான் 3:2). நம்மை வடிவமைக்கும்படி தேவன் தொடர்ந்து நம்மில் கிரியைசெய்ய விரும்புகிறார். என்றாலும் அவருக்கு பரிசுத்த ஆவியானவர் மற்றும் தேவனுடைய வார்த்தையின் உதவியோடுகூட நமது **முழுமையான ஒத்துழைப்பும், முயற்சியும்** தேவைப் படுகின்றன.

இந்த *முன்னேறிச் செல்லும் பரிசுத்தமாக்கப்படுதல்* வாழ்நாள் முழுவதும் மறுரூபமாகுதலாகும். இந்த வாழ்க்கையில் நாம் ஒருபோதும் பூரணராகவும், பாவமில்லாதவராகவும் இருக்கமாட்டோம் (1 யோவான்

1:8). ஆனால் நாம் தொடர்ந்து ஆவிக்குரிய முதிரிச்சியில் வளர்ந்துகொண்டிருக்க வேண்டும்.

**c. முழுமையான அல்லது இறுதிப் பரிசுத்தமாக்கப்படுதல்.** நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து திரும்பி வரும்போது அல்லது நமது மரணத்தில் நாம் இந்த வாழ்க்கையிலிருந்து ஆண்டவருடைய பிரசன்னத்துக்குக் கொண்டுபோகப்படும்போது தான் பாவமில்லாத பரிபூரண நிலையை எட்ட முடியும். அப்போது நாம் இந்த அழிவுக்குள்ளாக்கும் மாம்சத்தின் சரீரத்திலிருந்து விடுபடுவோம். *"கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம்"* (1 கொரி. 15:51). அப்போது நாம் அழிக்கப்பட முடியாத நித்திய ஜீவிகளாக மாறுவோம் (1 கொரி. 15:45-47; மேலும் பார்க்க, பிலிப்பியர் 3:20, 21; 1 யோவான் 3:2).

சிலுவையில் கிறிஸ்து நமது பாவங்களுக்காக மரித்தபோது, நாம் பாவத்தின் **தண்டனையிலிருந்து** இரட்சிக்கப் பட்டோம். விசுவாசத்திலும் பரிசுத்தத்திலும் நாம் வளரும்போது இன்னுமதிகமாக பாவத்தின் **சக்தியிலிருந்து** விடுவிக்கப்படுகிறோம். கிறிஸ்து திரும்பி வரும்போது (அல்லது நாம் ஆண்டவருக்குள் மரிக்கும்போது) பாவத்தின் **பிரசன்னத்திலிருந்து** இரட்சிக்கப்படுவோம்!

பரிசுத்தமாக்கப்படுதல் என்பது அபிஷேகம் செய்தல் அல்ல. என்றாலும் அபிஷேகம், முக்கியமாக முன்னேறிச்செல்லும் பரிசுத்தமாக்கப் படுதல் அத்தியாவசியமானதாகும். பரிசுத்தமானதும் ஒப்படைக்கப் பட்டதுமான வாழ்க்கை வாழுவது நமது வாழ்க்கை மற்றும் ஊழிய ங்களின் மூலமாகப் பாய்ந்தோடுவதில் நேரடியான தாக்கத்தை விளைவிக்கிறது.

### 3. வளர்ச்சிக்கான பாதை

கிறிஸ்தவர்கள் தொடர்ந்து வளர்ச்சிபெற வேண்டும். *"நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள்"* என்று வேதாகமம் நமக்குப் புத்திசொல்லுகிறது (2 பேதுரு 3:18; மேலும் பார்க்க, 2 பேதுரு 1:5-11).

*முன்னேறிச் செல்லும் பரிசுத்தமாக்கப்படுதல்* தொடர்ந்து தேவனுக்கும் தனிப்பட்ட ஒவ்வொருவருக்கும் இடையிலான



பாங்காண்மையை எதிர்பார்க்கிறது (பிலி. 2:12, 13). நாம் குணாதிசயத்தில் கிறிஸ்துவைப்போலாவதற்குத் தேவனுடைய உதவி தேவைப்படுகிறபடியால் தேவன் நமது சார்பில் செயல்படுகிறார். ஆனால் இந்தச் செயல்முறையில் நமது பங்கு என்ன? நாம் இவைகளைச் செய்ய வேண்டும்:

**a. கிறிஸ்துவின்மீது விசுவாசம் கொண்டிருக்க வேண்டும்.** விசுவாசம் இல்லாமல் நம்மால் இரட்சிப்பின் ஈவைப் பெற முடியாது, கிறிஸ்துவின் இருக்கும் நிலை சார்ந்த பரிசுத்தமாக்கப்படுதலைப் பெறவும் முடியாது. இரட்சிப்பின்போது கிறிஸ்து நமது பரிசுத்தமாகிறார் (1 கொரி. 1:30). அவரில் விசுவாசம் வைப்பதின் மூலம் இந்த ஈவை நாம் அவரிடமிருந்து பெற்றுக்கொள்ளுகிறோம் (அப். 26:18).

**b. நமது வாழ்க்கையைத் தேவனுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும்.** ஒரு கிறிஸ்தவனாக இப்படித்தான் நாம் நமது வாழ்க்கையைத் துவங்குகிறோம். நாம் ஒவ்வொரு நாளும் இப்படித்தான் வாழ வேண்டும். தொடர்ந்து தேவனுக்கு ஒப்புக் கொடுப்பது அல்லது அர்ப்பணிப்பது அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அவரே நம்மை இன்னுமதிகமாக இயேசுவின் சாயலில் வடிவமைப்பதற்கு என்ன தேவை என்பதை அறிந்திருக்கிறார் (பார்க்க, ரோமர் 6:13, 19-21; 12:1, 2; 2 தீமோத்தேயு 2:21). நாம் தேவனைச் சார்ந்து, அவர்மீது நம்பிக்கை வைப்பதைத் தெரிந்துகொள்ளும்போது (எபி. 11:6) நமது விசுவாசம் வளர்ந்து பலப்படுவதற்கு ஒவ்வொரு நாளும் நாம் தேவனுக்கு நம்மை ஒப்புக்கொடுப்பது அவசியமாகும்.

**c. தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிய வேண்டும்.** விசுவாசத்துக்கும், நடத்தைக்கும் பரிசுத்த வேதவசனங்களே நமது இறுதியான தகுதிநிலைகளாக இருக்கின்றன. *"வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம் பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக்கொள்ளுவதினால்தானே'* (சங். 119:9). நம்மோடு பேசி, நமது குணாதிசயத்தை வடிவமைக்கப் பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய வார்த்தையைப் பயன்படுத்துவார் (யோவான் 14:26). தேவனுடைய வார்த்தை நம்மை ஆயத்தப்படுத்தி, தேவனுடைய மகிமைக்காக நம்மைப் பயனுள்ள கருவிகளாக ஆக்கும் (2 தீமோ. 3:16, 17). தேவனுடைய வார்த்தை நம்மைச் சுத்திகரிக்கும் (எபே. 5:26). வேதாகமம்

நமது உள்ளான செயல்நோக்கங்களையும் சிந்தனைகளையும் வெளிப்படுத்துகிறது (எபி. 4:12). நாம் ஒவ்வொரு நாளும் வேதாகமத்தை வாசித்து, அதற்குக் **கீழ்ப்படிய** வேண்டும் (யாக். 1:22). தேவபக்தியில் நாம் வாழ்ந்து, வளருவதற்குத் தேவையான எல்லாவற்றையும் தேவன் நமக்குக் கொடுக்கிறார் (2 பேதுரு 1:3, 4). ஆனால் நாம் இதற்கு ஒத்துழைத்து, கீழ்ப்படிய வேண்டும்!

**d. பரிசுத்தத்தை நாடும்படியான தனிப்பட்ட ஒப்படைப்பைக் கொண்டிருக்க வேண்டும்.** *''யாவரோடும் சமாதானமாயிருக்கவும்,* ***பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும்*** *நாடுங்கள்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே''* (எபி. 12:4; மேலும் பார்க்க, மத்தேயு 5:8).

விசுவாசிகள் தெளிந்த புத்தியுள்ளவர்களாக, தேவனுடைய கிருபையில் முழுமையான நம்பிக்கை வைக்க வேண்டும் என்று பேதுரு புத்திசொல்லுகிறார். முன்பு நம்மைக் கட்டுப்படுத்திய இச்சைகளுக்கு நாம் இடம்கொடுக்காமல் தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும். தேவன் தமது பண்பில் பரிசுத்தராகவும், தமது எல்லா நியாயத்தீர்ப்புகளிலும் நீதியுள்ளவராகவும் இருக்கிறபடியால், நாமும் பரிசுத்தமாக இருக்க வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார் (1 பேதுரு 1:13-21). நமது வாழ்க்கை சந்தோஷமானதும், இலகுவானதுமான வாழ்க்கை அல்ல, அது ***பரிசுத்தமாக*** இருக்க வேண்டும் என்பதே கருத்தாகும். நமது செயல்களிலும், சிந்தனைகளிலும், உறவுகளிலும், வார்த்தைகளிலும் பரிசுத்தமான வாழ்க்கை முறையைப் பின்பற்ற வேண்டும் என்பது கிறிஸ்துவை விசுவாசிப்பவர்களுக்கு **விரும்பினால் தெரிந்து கொள்ளக்கூடிய ஒன்றல்ல.** பரிசுத்த தேவனோடு ஒத்துப்போகாத எதையும் நாம் ஒருபோதும் சகித்துக்கொள்ளக் கூடாது! கிறிஸ்தவர்களோ அல்லது மற்றவர்களோ செய்வதை நாம் முன்மாதிரியாகக் கொள்ளக்கூடாது; மற்ற தலைவர்கள் நடத்தையில் விட்டுக் கொடுப்பதை நாம் கண்டாலும் அதைப் பின்பற்றக் கூடாது. நமது கலாச்சாரமோ, கோத்திரமோ அல்லது குடும்பமோ, வாழ்க்கைக்கான நமது இறுதி வழிகாட்டி கிடையாது. கிறிஸ்துவின் ராஜ்யத்தின் குடிமக்களாக இருக்கும் நாம் (பிலி. 3:17-20) தேவன் பரிசுத்த ஆவியானவரால் தமது வார்த்தையின்மூலம் வெளிப்படுத்தி யிருக்கிறவைகளை முதலாவதாகவும், முக்கியமாகவும் பின்பற்ற



வேண்டும். இவைகளுக்கே நாம் கீழ்ப்படிய முயல வேண்டும். (லூக்கா 9:23-26).

தேவனுடைய வெளிப்படுத்தப்பட்ட குணாதிசயம் மற்றும் அவருடைய வார்த்தையின் தகுதிநிலையின்படி நாம் வாழுவோம் என்றால், பரிசுத்தமாக்கப்படுதலில் வளர்ச்சி பெறுவோம் என்ற உத்திரவாதம் நமக்கு உண்டு. பரிசுத்தமாக்கப்படுதலில் நாம் வளர்ச்சி பெறும்போது, *''பரிசுத்தமாக்கப்பட்டதும், எஜமானுக்கு உபயோகமானதும், எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப்பட்டதுமான கனத்துக்குரிய பாத்திரமாயிருப்போம்''* (2 தீமோ. 2:21)

## B. அபிஷேகத்தின் நோக்கம்

அபிஷேகத்தைக் குறித்துக் குழப்பம் காணப்படுகிறபடியால், நாம் முந்தைய பகுதியில் அபிஷேகம் என்றால் எது **அல்ல** என்பதைப் பார்த்தோம். நாம் கற்றுக்கொண்டதைச் சுருக்கமாக மறுஆய்வு செய்வோம்:

- அபிஷேகம் என்பது புதிரானதும் தனித்தன்மையில்லாததுமான விசை அல்ல.
- அபிஷேகம் என்பது வரமோ, திறமையோ, தாலந்தோ, உணர்ச்சிமயமாக்குதலோ அல்லது கவர்ந்திழுக்கும் ஆளுமையோ அல்ல.
- அபிஷேகம் என்பது இரட்சிப்பு அல்ல.
- அபிஷேகம் என்பது பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் அல்ல.
- அபிஷேகம் என்பது விசுவாசியின் பரிசுத்தமாக்கப்படுதல் அல்ல.

### 1. அபிஷேகத்தின் விளக்கம்

அப்படியானால் அபிஷேகம் என்றால் என்ன?

அபிஷேகத்துக்கு இந்த வகையில் சிறப்பாக விளக்கம் கொடுக்கலாம்:

*அபிஷேகம் என்பது பரிசுத்த* ***ஆவியானவரின் ஆள்தத்துவமும் பிரசன்னமுமேயாகும்.*** *அவர் ஊழியத்தின் ஒரு குறிப்பிட்ட வேலையில் அல்லது குறிப்பிட்ட செயல் பொறுப்பில் பிதாவின் சித்தத்தை*

*நிறைவேற்றுவதற்குத் தேவையான வல்லமையையும், அதிகாரத்தையும், வரங்களையும் தம்மோடுகூடக் கொண்டு வருகிறார்.* மேலே பட்டியலிடப்பட்டுள்ள ஐந்து காரியங்கள் ஒவ்வொன்றிலும் பரிசுத்த ஆவியானவர் நேரடியாக ஈடுபாடு கொள்ளுகிறார் என்று நாம் சொல்லலாம்.

பரிசுத்த ஆவியாகிய தேவனுடைய பிரசன்னமும் செயலும் இல்லாவிட்டால், ஒவ்வொரு விசுவாசியின் வாழ்க்கையிலும் மிக முக்கியமாகக் காணப்படும் அந்த ஐந்து நிகழ்வுகளும் நடக்கமாட்டார்.

என்றாலும், **அபிஷேகம்** என்று அழைக்கப்படும் பரிசுத்த ஆவியானவரின் இந்தக் கிரியை ஒரு தனிச்சிறப்பானதும் திட்டவட்டமானதுமான நோக்கத்தைக் கொண்டிருக்கிறது.

### 2. ஒரு நோக்கத்தோடுகூடிய வல்லமை

**a. தேவனால் பலப்படுத்தப்படுதல். விசுவாசிக்கு இயல்புக்கு அப்பாற்பட்ட பலத்தைக் கொடுப்பதே** பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தின் அடிப்படை நோக்கமாகும்.

தேவன் விரும்பும் எவருக்கும் இந்தப் பலப்படுத்துதல் கொடுக்கப்படுகிறது. தேவன் எதைச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறாரோ அதை அவர்கள் செய்யும்படி உதவுவதற்காக இது கொடுக்கப்படுகிறது. அது பேசுவதாகவோ அல்லது பிரசங்கம் செய்வதாகவோ, ஒரு செயலைச் செய்வதாகவோ, பாடுவதாகவோ அல்லது ஒரு இசைக்கருவியை இசைப்பதாகவோ இருக்கலாம். அது குணமாகுதலுக்காக நோய்வாய்ப்பட்டவர்களின் மீது கைகளை வைத்து ஜெபிப்பதாகவோ அல்லது தேவன் மற்ற அற்புதங்களைச் செய்வதாகவோ இருக்கலாம். அது ஒருவரை நன்றாக ஜெபிக்கவும், பரிந்துரை ஜெபம் செய்யவும் உதவும்.

முக்கியமாக மனதில் கொள்ள வேண்டியது என்னவெனில், ஒரு தனி மனிதன் தன் தலைமைத்துவத்திலோ, வியாபாரத்திறமையாலோ நன்கு விளங்கும்படி, பரிசுத்த ஆவியானவர் அவரை அபிஷேகம் செய்ய முடியும் (யாத். 31:3).

சபைக்கு உள்ளேயும் வெளியேயும் மக்களுக்கு ஊழியம் செய்ய வாய்ப்புகள் அளிக்க வேண்டும் என்பதே தேவனுடைய






ஆவலாயிருக்கிறது - எனினும் அது அவருடைய நோக்கங்களுக்கும் மகிமைக்காகவுமேயன்றி நம்முடையவைகளுக்காக அல்ல என்பதை ஞாபகத்தில் வைத்திருங்கள்.

அபிஷேகம் செய்யப்படுவது என்பது: *தேவன் தம்மால் தெரிந்து கொள்ளப்பட்ட ஒரு மனிதபாத்திரத்தின் மூலமாக, அந்த நேரத்தில், ஊழியத்தில் அல்லது கொடுக்கப்பட்ட வேலையில் பிதாவின் சித்தத்தை நிறைவேற்ற தேவையான வல்லமை, அதிகாரம் மற்றும் ஈவுகளை தம்முடைய ஆவியானவர்மூலம் கொடுப்பதாகும்.*

**அபிஷேகம் என்பது பரிசுத்த ஆவியானவரின் ஒரு நபர்** என்பதைத் தெரிந்துகொள்ளுவது முக்கியமாகும். தேவனுடைய வல்லமை ஆவியானவரின் ஆளத்துவத்திலும் பிரசன்னத்திலுமிருந்து வேறுபட்ட**தல்ல**. ஒருவர் அபிஷேகம் பண்ணப்பட்டார் என்று நாம் சொல்லும்போது, அவர்கள் மூலமாக பரிசுத்த ஆவி என்ற நபர் அவர்களுடைய வாழ்வில் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றினார் என்று நாம் அர்த்தப்படுத்துகிறோம்.

**b) அபிஷேகத்தை யாரால் பெற முடியும்?** பழைய ஏற்பாட்டை நீங்கள் வாசிக்கும்பொழுது, பரிசுத்த ஆவியானவர் ஒரு தீர்க்கதரிசி, நீதிபதி, ராஜா, மதத்தலைவர் ஆகியோர் மீது வந்ததை நீங்கள் எளிதில் அடையாளங்கண்டுகொள்ள முடியும்.

எனினும் பழைய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியானவரின் தாக்கம், புதிய ஏற்பாட்டின் தாக்கத்திலிருந்து வேறுபட்டிருக்கிறது. அப்போஸ்தலர் யோவான், *“தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக்குறித்து இப்படிச் சொன்னானர். இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால் பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை”* (யோவான் 7:39) என்று எழுதுகிறார்.

முற்றிலும் தேவனான பரிசுத்த ஆவியானவர் நித்திய காலம் முழுவதிலும் இருக்கிறார். அவர் சிருஷ்டிப்பில் பழைய ஏற்பாடு

முழுவதிலும் கவனம் செலுத்தினார் (ஆதியாகமம் 1:2). ஆனால் பிதாவாகிய தேவன், குமாரனாகிய தேவன் நம் இரட்சிப்புக்காக மரணத்தின்மூலம் தம்மை பலியாக்கும் வரை பரிசுத்த ஆவியானவரை முற்றிலுமாக அருளவில்லை. (யோவான் 14:16,17;16:7).

**போதகரிலிருந்து போதகருக்கு:** வேதாகமத்தை விசுவாசிக்கும் கிறிஸ்தவர்களாக நாம் மூன்று தேவர்களை விசுவாசிக்கவில்லை. மாறாக நாம், மூன்று நபர்களாகத் தம்மை வெளிப்படுத்தும் ஒரே தேவனை ஆராதிக்கிறோம். தேவனுக்குள்ளாக, மூன்று தேவர்களோ அல்லது மூன்று பகுதிகளோ அல்லாத மூன்று நபர்கள் இருக்கின்றனர். இந்த மூன்று பகுதிகளும் ஒருவரேயாகும், இவர்கள் ஒவ்வொருவரும் தேவனோடு சமமாக இணைக்கப்பட்டு நித்தியமாய் சேர்க்கப்படுவர் - இவர்கள் ஒவ்வொருவரும் தேவனுடைய மூன்றில் ஒருவர் என்ற இயல்பை கிரகித்துக்கொள்ள மிகுந்த கஷ்டப்படுகிறது. ஆனால் வேதவாக்கியங்கள் அவரைப்பற்றிய இந்த சத்தியத்தை வெளிப்படுத்துகின்றன.

பரிசுத்தாவியானவரைப் பகிர்ந்தளிப்பதைப் பற்றி பழைய புதிய ஏற்பாடுகளுக்கிடையே ஒரு அடிப்படை வித்தியாசம் காணப்படுகிறது. பழைய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியானவர், தெரிந்துகொள்ளப்பட்ட ஒரு மனித பாத்திரத்தின்மேல் தாற்காலிகமாக வந்தார். அந்த நேரத்தில் அந்த தனிநபர் (தீர்க்கதரிசி, ஆசாரியன், நீதிபதி போன்றவர்கள்) தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற பரிசுத்த ஆவியானவர் திறனளிப்பார். பின்னர் பரிசுத்த ஆவியானவர் அடுத்த ஊழிய வேலை மட்டும் அவர்களிடமிருந்து சென்று விடுவார்.

எனினும், புதிய ஏற்பாட்டில், பரிசுத்த ஆவியானவன் அவர்களோடு நீங்காத உறவில் வாசம் செய்வதற்கு மனித இருதயங்களில் இடங்கொடுக்கப்பட்டிருக்கிறது. பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் பற்றிய ஒரிரு எடுத்துக்காட்டுகளை நாம் பாப்போம்.

### இயேசு

புதிய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியானவரால் முதலாவது அபிஷேகம் பண்ணப்பட்டவர் - இயேசு! இயேசு தம்முடைய ஜலஞான ஸ்நானத்தின்போது பரிசுத்த ஆவியானவரின் வல்லமையளிக்கும்



அபிஷேகத்தைப் பெற்றார் (மத்தேயு 3:16). அவருடைய பொது ஊழியத்தின் முதல் நடவடிக்கை ஏசாயா 61:1,2 வசனங்களை தேவாலயத்தில் வாசிப்பதாயிருந்தது. மேசியா வைப்பற்றிய வேதவாக்கி யங்கள் இப்பொழுது நிறை வேறியது என்று இப்பொழுது அவர் வெளிப்படுத்தினார் (லூக்கா. 4:14-21).



**அபிஷேகம் நம் வாழ்க்கையை மாற்றியமைக்கும்**

ஏசாயா 61:1,2ல் கூறப்பட்ட பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம், இயேசுவின் பூலோக ஊழியத்தின் மூலமாக பிதாவின் சித்தத்தை நிறைவேற்று வதற்கு திறனளிப்பதாக இருந்தது என்பதை நீங்கள் கண்டுகொள்ள முடியும்.

இயேசு இந்தப் பூமியில் தம்முடைய பூத உடலில் வாழ்ந்தபோது அவர் முற்றிலும் தேவனாகவும் முற்றிலும் மனிதனாகவும் இருந்தார் (பிலிப்பியர் 2:5-8). எனினும் தம்முடைய பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதற்கு பரிசுத்த ஆவியானவரின் வல்லமை அவருக்கு அவசியமாயிருந்தது. தேவனுடைய குமாரனாகிய இயேசுவுக்கே பரிசுத்தஆவியானவர் அவசியப்பட்டால், உங்களுக்கும் எனக்கும் எவ்வளவு அதிகமாக அவர் தேவைப்படுகிறார்! (அப்போஸ்தலர் 10:38 பார்க்கவும்).

### துவக்ககால சபை

### *துவக்க சபையின் தலைவர்கள்*

பெந்தெகொஸ்தே நாளில் (அப்போஸ்தலர் 1:12-2:4), துவக்க சபைத்தலைவர்களும், மீதியிருந்த சீடர்களும் மேல் வீட்டில் ஜெபித்துக்கொண்டிருந்தனர். அங்கே முதல் 11 அப்போஸ்தலர்களும் (யூதாஸ் மரித்துப்போனான்), யூதாசின் இடத்தில் ஒருவரை சீட்டுப்போட்டு தெரிந்துகொள்ளப்பட்ட புதிய

அப்போஸ்தலனும், இன்னும் ஒரு சிறிய குழுவான மற்ற சீடர்களுமாக ஏறக்குறைய 120 பேர் இருந்தார்கள். திடீரென்று பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் அவர்கள்மேல் பொழிந்தது (யோவேல் 2:28-32; அப். 2;2-4).

பவுல் அப்போஸ்தலர் பின்பு இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டார். அவரும் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொண்டு தம் சுவிசேஷ ஊழியத்தில் ஊக்கத்தோடு ஈடுபட்டார் (சங். 9:1-22).

பிலிப்பு போன்ற சுவிசேஷர்களும் பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்பட்டதை (அப். 8:29). வேதாகமத்தில் காண்கிறோம். அப்பொல்லோவினால் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றிருக்கா விட்டால் அவ்வளவு சிறப்பாக போதித்திருக்க முடியாது (அப். 18:24-28; 1 கொரி. 3:5-7). தேவனால் அழைக்கப்பட்டவர்கள் பரிசுத்த ஆவியினால் நிறைந்து ஊழியம் செய்தனர். ஸ்தேவானைப் பற்றி நாம் அறிவோம் (அப். 6:1-10 இன்னும் கூட புதிய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியான வரைப்பற்றி பல இடங்களில் காண்கிறோம் (அப். 4:13, 33; 11:27,28;21:10,11).

### துவக்ககால சபையின் சீடர்கள்

பெந்தெகொஸ்தே நாளில் விசுவாசிகள் பலருக்கும் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படுதல் ஆரம்பித்தது (அப். 4:31, 5:32).

### சுவிசேஷத்தின் வல்லமை

சுவிசேஷம் விரைவாகப் பரவ ஆரம்பித்தது. பரிசுத்த ஆவியும் பெரிய அளவில் பொழிய ஆரம்பித்தது. இயேசு கூறிய வார்த்தைகள் நிறைவேறின. *“பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனைடந்து, எருசலேமிலும், யுதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்.”*

சீக்கிரமாகவே சுவிசேஷக ஊழியர்கள் துன்புறுத்தப்பட்டார்கள். இந்தத்துன்புறுத்தலினால் தேவன் ஒரு நல்ல நோக்கத்துக்கு வழிவகுத்தார். அவரது சபையினர் எருசலேமிலிருந்து வெளியேறி மற்ற இடங்களிலும் சுவிசேஷத்தைப் பரப்ப வாய்ப்பளிக்கப்பட்டது.

### சுவிசேஷம் பிற இடங்களில் பரப்பப்பட்டது

சுவசேஷத்தை ஏற்றுக்கொண்டவர்கள் மீது பரிசுத்த ஆவியானவர்



பிரசன்னமானார். (அப். 8:16,17). சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டபின் அற்புதங்களும் அடையாளங்களும் நடைபெற்றன (8:6,13).

ஆனால் அவற்றைவிட ஒரு முக்கியமான காரியத்தைச் செய்யும்படி துவக்ககால சபை ஏவப்பட்டது. இயேசு அவர்களை நோக்கி: *“நீங்கள் உலகமெங்கும் போய், சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்”* என்று கூறினார் (மாற்கு 16:15; அப். 1:8).

சுவிசேஷத்தின் இந்தப் பரப்புதல், பிலிப்பு, எத்தியோப்பிய தலைவனை இரதத்தில் சந்தித்தபோது ஏற்பட்டது (அப். 8:26-40). அதே எத்தியோப்பியன் தான் முதலாவதாக சுவிசேஷத்தை ஆப்பிரிக்கா கண்டத்திற்குக் கொண்டு சென்றான் என்பது கூறப்படுகிறது.

அதன்பின் சவுல் என்பவனைப் பற்றி வாசிக்கிறோம். கிறிஸ்தவரைத் துன்புறுத்திய அவன் கிறிஸ்துவை சந்திக்க நேர்ந்தது (அப். 9:15) அவன் புறஜாதிகளிடத்தில் நற்செய்தி கூறத் தேர்வு செய்யப்பட்டான. எனினும் யூதர்களைச் சுற்றியே அவன் பிரசங்கம் இருந்தது. தேவன் தம்முடைய புதிய வழியின்மூலம் இந்த சூழ்நிலையை மாற்றினார்.

### தேவனுடைய திட்டம் வெளிப்படுத்தப்பட்டது

மனிதன் பாவம் செய்தபின்னும் தேவன் அவனை ரட்சிக்க ஒரு திட்டம் வகுத்தார். அந்தத் திட்டத்தின்படி தேவன் தம் ஒரே பேறான குமாரனை இவ்வுலகுக்கு அனுப்பி, மனிதரின் பாவங்களுக்கான தண்டனையை அவர்மேல் சுமத்தினார். கிறிஸ்துவும் மனிதருடைய பாவங்களுக்காகத் தம்மையே மரிப்பதற்கு ஒப்புக்கொடுத்தார். அதன்பின் அவர் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டார். இதைப்பற்றி நாம் எல்லா சுவிசேஷங்களிலும் வாசிக்கலாம்.

ஆனால் தேவனுடைய நோக்கம் இந்தப் புதிய விசுவாசத்துக்கும், மீட்டுக்கொண்ட உறவுக்கும் மேலான ஒன்றாய் இருந்தது. அதாவது தேவன் நமக்குள் வாசம் செய்ய விரும்பினார். அவருடைய பிரசன்னத்தின் நிச்சயத்தையும், வல்லமையையும் கொடுத்து நாம் வெற்றிசிறந்த வாழ்க்கை வாழ்ந்து தம் சித்தத்தை நம் வாழ்வில் நிறைவேற்ற விரும்பினார்.

அதனால் அவர் தம்முடைய மிகுந்த ஞானத்தினாலும், அன்பினாலும் தம் ஆவியை ஒவ்வொரு விசுவாசியின் மேலும்

பொழியப்பண்ணினார். அவர்கள் மனதில் வாசம் செய்வதைத் தெரிந்து கொண்டார். (யோவேல் 2:28,29). இயேசுகிறிஸ்து நமக்கு ஒரு புதிய மதத்தையோ, இறையியலையோ கொடுப்பதற்காக வரவில்லை. அவர் இவ்வுலகுக்கு வந்தது தம் தந்தையின் வாக்குத்தத்தத்தை நிறைவேற்றவே - அதாவது மனிதருக்கு இரட்சிப்பளிக்க.

ஆம், கிறிஸ்துவின் தியாக மரணத்தினால் நாம் தேவனோடு ஒப்புரவாக முடிந்தது. அதோடு முடியவில்லை. அந்த வல்லமையான தேவன் பரிசுத்த ஆவியானவர் என்ற ஆளதத்துவமாக நம் **இருதயத்தில் வாசம் செய்ய** நினைத்தார். இந்த வல்லமையை உலகம் கவனிக்காமல் விட்டுவிட முடியாது (அப். 2:5;13). அவர்கள் பவுல் காலத்தில் செய்தது போல் பரிசுத்த ஆவியானவரை கேலி செய்து, திட்டலாம். ஆனால் பரிசுத்த ஆவியானவரின் வேலையையும் வல்லமையையும் தடைசெய்ய முடியாது (யோவேல் 2; அப். 2:33,38,39).

### எல்லா விசுவாசிகளும் எப்போதும் கிறிஸ்துவுடன்

ஆவியினால் ஏவப்பட்ட பேதுரு, அவர்கள் மனந்திரும்பி பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும் போது ஆவியின் வார்த்தைப் பெறுவார்கள் என்றும் "வாக்குத்தத்தமானது உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும்... தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது" என்று கூறினார் (அப் 2:33,38,39).






*"தூரத்திலுள்ள யாவருக்கும்"* என்பது வரப்போகிற சந்ததியை மாத்திரம் குறிக்கவில்லை. எல்லா புறஜாதிகளையும், இந்த உலகத்திலுள்ள பிற ஜாதி ஜனங்கள், வேறு மொழிகள் பேசுபவர்களையும் குறிக்கிறது. (எபேசியர் 2:11-19; கலாத்தியர் 3:28; கொலோசெயர் 3:11)

### வாழ்க்கை முழுவதும் தொடரும் உறவு

கிறிஸ்துவைப் பின் பற்றுகிற ஒவ்வொருவருடைய இருதயத்திலும் பரிசுத்தாவியானவருடைய அபிஷேகிக்கும் வரம் இருக்கிறது. ஒவ்வொரு விசுவாசியும் இரட்சிக்கப்படும்போது இந்த அபிஷேகத்தைப் பொதுவாகப் பெறுவான்.

அப்போஸ்தலனாகிய யோவான் இத்தகைய அபிஷேகத்தைக் குறித்து தனது முதல் நிருபத்தில் எழுதுகிறார். முன்னாளில் உள்ள கிறிஸ்துவின் அடியார்களுக்கு யோவான் *"நீங்கள் பரிசுத்தராலே அபிஷேகம் பெற்று சகலத்தையும் அறிந்திருக்கிறீர்கள்'* (1 யோவான் 2:20) என்ற முக்கியமான சத்தியத்தை ஞாபகப்படுத்துகிறார். இதில் பரிசுத்தராலே என்பது தேவனுடைய குமாரனான இயேசு கிறிஸ்துவினாலே அபிஷேகம் பெற்றதைக் குறிக்கிறது என்பது தெளிவாகிறது. (யோவான் 6:69; அப்போஸ்தலர் 3:14; 4:27)

வேறு வார்த்தையில் சொல்லப்போனால் "அபிஷேக நாதர்" (இயேசு கிறிஸ்து) தம்முடைய சீஷர்களுக்கு தம்மிடமிருந்து ஒரு வரத்தைக் கொடுத்தார். அந்த வரமாவது பரிசுத்தாவியானவர் நமக்குள் வாசம் பண்ணி நம்மை விட்டு நீங்காதிருப்பார் என்பது. (மத்தேயு 3:11, அப்போஸ்தலர் 1:5; யோவான் 14:16, 17; 16:7) கிருபையினாலே இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்படும் ஒவ்வொரு விசுவாசிக்கும் இந்த *அபிஷேகம்* உண்டு.

மேலும் யோவான் பரிசுத்தாவியில் நிறைந்தவராகி *"நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது, ஒருவரும் உங்களுக்குப் போதிக்க வேண்டுவதில்லை; அந்த அபிஷேகம் சகலத்தையும் குறித்து உங்களுக்குப் போதிக்கிறது; அது சத்தியமாயிருக்கிறது, பொய்யல்ல, அது உங்களுக்குப் போதித்தபடியே அவரில் நிலைத்திருப்பீர்களாக"* என்றார் (1 யோவான் 2:27).

இந்த அபிஷேகம் ஒரு தடவை கிடைக்கும் அனுபவம் அல்ல. பரிசுத்தாவியானவருடன் வாழ்க்கை முழுவதும் வளரும் அனுபவமாகும்.

இந்த பரிசுத்த ஆவியானவர் சகல சத்தியத்திற்குள்ளும் நம்மை நடத்துவார். எல்லாவற்றையும் நமக்குப் போதிப்பார். இயேசு சொன்ன எல்லாவற்றையும் நமக்கு நனைப்பூட்டுவார். (1 யோவான் 14:26). பரிசுத்த ஆவியானவர் சத்தியத்தை நாம் புரிந்துகொள்ளவும் இயேசுவுக்கு மகிமை செலுத்தவும் நமக்கு உதவி செய்வார் (யோவான் 16:13, 14)

யோவான் போதிக்கும் ஊழியம் **தேவையில்லை** என்று சொல்லவில்லை என்பது தெளிவாகிறது. (தேவன் நமக்கும் போதகர்களைக் கொடுத்திருக்கிறார், ரோமர் 12:7; எபேசியர் 4:11 பார்க்க) தங்கள் வாழ்க்கையில் தேவனுடைய அழைப்புக்குக் கீழ்ப்படிகிற ஒவ்வொருவருக்கும் பரிசுத்த ஆவியானவர் வெளிப்பாடுகளையும் புரிந்து கொள்ளும் மனதையும் தருகிறார் என்று யோவான் கூறுகிறார் (1 கொரிந்தியர் 2:10-16; எபேசியர் 1:17, 18)

கிறிஸ்துவைப் பின்பற்றுகிற ஒவ்வொருவரும் இரட்சிக்கப்படும் பொழுது அபிஷேகம் பெறுகிறார்கள் என்று தேவனுடைய வார்த்தையின் மூலம் அறிகிறோம்.

**போதகரிடமிருந்து போதகருக்கு:** பரிசுத்த ஆவியானவர் சத்தியத்தைக் குறித்து வெளிப்படுத்தினவைகள் **எப்பொழுதும்** தேவனுடைய வார்த்தையாகிய வேத வசனத்தை ஒத்தே வரும். (யோவான் 16:13, 14) வேதத்தில் ஒன்றைக் கூட்டவோ அல்லது மறுக்கவோ கூடிய ஒரு புதிய வெளிப்பாடும் **இல்லை.**

## C. அபிஷேகத்தின் செயல்பாடு

பரிசுத்த ஆவியின் அசைவாடுதலையும் கிரியையையும் ஆராயும்போது சில மர்மங்கள் (இரகசியங்கள்) இருக்கிறதை நாம் ஒத்துக்கொள்ள வேண்டும். அபிஷேகம் என்ற பொருளில் தேவனுடைய ஆளுகை இருக்கிறது என்பது நமது புத்திக்கு எட்டாத காரியமாகும். (யோவான் 3:8) தேவனுடைய ஆளுகையை நாம் முழு மனதோடு ஏற்றுக்கொண்டு அவருடைய கர்த்தத்துவத்துக்கும் சித்தத்துக்கும் நம்மை ஒப்படைக்க வேண்டுவது தான் நாம் செய்ய வேண்டியது.

தேவன் தமது மிகுந்த ஞானத்தினால் தம்முடைய வழிகளில் சிறிது ரகசியம் வைத்திருக்கிறார். ஏனென்றால் நாம் அவரை விசுவாசித்து வாழ்வதை விரும்புகிறார். (2 கொரிந்தியர் 5:7; எபிரெயர் 11:6). இந்த



வாழ்க்கையில் அறிய வேண்டியது அதிகம். ஆனால் நாம் குறைந்த அறிவுள்ளவர்கள். (1 கொரிந்தியர் 13:12). நாம் எப்பொழுதும் அவர் வார்த்தையை நம்பி, கீழ்ப்படிந்து அடங்கி நடக்க வேண்டும்.

### அபிஷேகத்தின் நடைமுறைக் கொள்கைகள்

நாம் தொடர்ந்து அபிஷேகம் என்றால் என்ன என்று பார்க்கும்பொழுது இன்னும் ஒருமுறை மீண்டும் ஆய்வு செய்வது நல்லது.

*அபிஷேகம் என்பது பரிசுத்த ஆவியானவரும் அவர் பிரசன்னமும் ஒருவருடைய ஊழியத்தில் அல்லது அவருக்குக் கொடுக்கப்பட்ட வேலையில் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற தேவைப்பட்ட வல்லமை, வரங்கள், அதிகாரங்கள் கொடுப்பது.*

இதை மனதில் வைத்துக் கொண்டு பரிசுத்த ஆவியின் அபிஷேகம் எப்படி சில கொள்கைகளுடன் கிரியை செய்கிறது என்பதைப் பார்ப்போம்.

#### 1. அழைப்போடு தொடர்புடைய அபிஷேகம்

தேவனுடைய ஊழியத்தைச் செய்ய ஒரு தனிமனிதன் பெற்ற அழைப்புக்கும் அபிஷேகத்துக்கும் நேரடித் தொடர்பு இருக்கிறது.

வேறு வார்த்தையில் சொல்லப் போனால் தேவன் ஒரு மனிதனுக்கு ஊழியஞ் செய்ய அழைப்பு கொடுத்தால் அதை அவர் திறமையாக நிறைவேற்றுவதற்குத் தேவையான வல்லமை, அதிகாரம், வரங்கள், வெளிப்பாடு, உள்நோக்கம் ஆகிய ஊழியத்துக்குத் தேவையான வற்றைத் தருவார். அல்லேலூயா!

தேவன் அவரது சித்தத்தை நிறைவேற்றக் கட்டளையிடும்பொழுது அல்லது வழிநடத்தும்போது பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தால் உனக்குத் தேவையான வல்லமையைப் பெற்று நீ திறமையாக ஊழியத்தைச் செய்ய முடிகிறது. தேவன் ஒரு மனிதனுக்கு தாம் கட்டளையிடுவதைச் செய்வதற்கேற்ற திறமையைத் தருகிறார்!

நாம் நம் திறமையை வளர்த்துக் கொள்வதற்கு வரங்கள், வசனத்தைக் குறித்த அறிவு பெற முழு முயற்சியில் ஈடுபடும் பொழுது தேவன் இன்னும் மேலானவைகளைத் தருவார் என்பது (லூக்கா

16:10; 19:17) தேவனுடைய அபிஷேகத்தில் வளர்வதற்குரிய முக்கியமான கொள்கையாகும்.

### அபிஷேகம் பெற்று ஆற்றும் பணி

தேவனுடைய சித்தத்தையும் அழைப்பையும் நிறைவேற்ற அவர் நம்மை அபிஷேகிக்க விரும்புகிறார். பவுல் விசுவாசத்தைப் பற்றி அறிக்கை வெளியிடும்பொழுது இதே கொள்கையைக் கடைபிடிக் கிறதைப் பார்க்கிறோம்.

ரோமர் 12:3ல் "அவனவனுக்கு தேவன் **பகிர்ந்த விசுவாச அளவின்படியே**" இந்த விசுவாசத்தின் அளவு (அபிஷேகத்தைப் போல) தேவன் நமக்குக் கொடுத்த வரங்களின் அளவுக்குச் சரியாகக் கொடுக்கப்பட்ட மகிமையான செயலாகும்.

*நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களானபடியினாலே, நம்மில் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிற வரத்தையுடையவன் விசுவாசப் பிரமாணத்துக்கேற்றதாகச் சொல்லக்கடவன். ஊழியஞ்செய்கிறவன் ஊழியத்திலும் போதிக்கிறவன் போதிக்கிறதிலும்...* (ரோமர் 12:6-7) பவுல் இதே கொள்கையைச் சிறிது வித்தியாசமாக எபேசியருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடுகிறார். *"கிறிஸ்துவின் ஈவின் அளவுக்குத் தக்கதாக நம்மில் அவனவனுக்குக் கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது."* (எபேசியர் 4:7)

வேறுவகையாகச் சொல்லப்போனால் அளவாகக் கொடுக்கப்படும் மகிமையாகச் செயலாற்றும் வரங்களுக்கும், ஒரு நபர் தேவனுடைய ஊழியத்தைச் செய்ய அழைக்கப்பட்டபொழுது உபயோகிக்கும் வரங்களுக்கும் நேரடித் தொடர்பு உண்டு.

**போதகரிடமிருந்து போதகருக்கு:** எபேசியர் 4:7ல் கூறப்பட்டவை எபேசியர் 4:11ல் கூறப்பட்ட ஆவிக்குரிய வரங்களோடு நேரடி தொடர்பு உள்ளது.

சிலர் தவறாகப் போதிக்கிறது போல (எபேசியர் 4:7ல்) கிறிஸ்துவின் ஈவின் அளவுக்குத் தக்கதாக கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது என்பது **இரட்சிப்பைக்** குறித்தது அல்ல. தேவனுடைய கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்படுவது எல்லா ஜனங்களுக்கும் ஒரே அளவில் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏனென்றால் ஒருவராகிலும்



கெட்டுப்போவது அவரது விருப்பமல்ல. எல்லாரும் இரட்சிக்கப்படவே விரும்புகிறார். (அப்போஸ்தலர் 2:21, 17:30, 31; ரோமர் 3:22, 23, 11:32; 1 தீமோத்தேயு 2:4; 4:10; தீத்து 2:11, 11 பேதுரு 3:9). தேவன் தாம் இலவசமாகக் கொடுக்கும் இரட்சிப்பை கிறிஸ்துவின் மேல் வைக்கும் விசுவாசத்தைக் கொண்டு எல்லாரும் பெற விரும்புகிறார் (எபேசியர் 2:8). ஆனால் வருந்தத்தக்கது என்னவென்றால் இந்த ஈவைப் புறக்கணித்தார்கள்; இன்னமும் புறக்கணிப்பார்கள். அதைக் காட்டிலும் கேடானது இலட்சக்கணக்கான மக்கள் இன்றைக்கு இயேசுகிறிஸ்து மூலமாய் வரும் இரட்சிப்பைப் பற்றிய சுவிசேஷத்தைக் **கேட்டதேயில்லை.**

ஆவிக்குரிய வரங்களைப் பற்றி முழு ஆய்வு செய்ய இது சமயமல்ல. ஆனாலும் ஆவிக்குரிய வரங்களைப் பற்றி ஒரு முக்கியமான கொள்கையை உங்களுக்குச் சொல்லுகிறேன்.

எல்லா ஆவிக்குரிய வரங்களும் -- வெளிப்படையாகக் காணக்கூடிய வரங்கள் (1 கொரிந்தியர் 12:1-11) ஊக்கப்படுத்தக்கூடிய வரங்கள் (ரோமர் 12:3-8) அல்லது சுவிசேஷ ஊழியம் ஆகிய வரங்கள் (எபேசியர் 4:11) — தேவனால் கொடுக்கப்பட்டவை. எந்த வரத்தை நாம் விரும்புகிறோமோ அல்லது எந்த வரம் அதிகம் தேவைப்படுமோ என்று நாம் நம் விருப்பப்படி தேர்ந்தெடுக்க முடியாது. தேவன் தமது அளவிடமுடியாத ஞானத்தினாலும் பரிபூரண பரிசுத்தத்தினாலும் இந்த வரங்களை அவனவனுக்குப் பகர்ந்து கொடுக்கிறார் (பார்க்க 1 கொரிந்தியர் 12:11). ஒவ்வொரு விசுவாசியும் கிறிஸ்துவின் சரீரமாக இருப்பதால் ஊழியஞ்செய்ய வேண்டும் என்ற எண்ணம் வரும். நாம் வசிக்கும் இந்த உலகில் நமக்குப் பல் வேறுபட்ட அழைப்புகளும் வரங்களும் இருக்கிறது. ஒவ்வொன்றிலும் நமக்குத் தேவையான தெய்வீக வல்லமையும் விசுவாசத்தையும் கிருபை யையும் அவருடைய சித்தத்தையும் நோக்கத்தையும் நிறைவேற்ற அபிஷேகத்தையும் தேவன் தருகிறார்.

நாம் பரிசுத்தாவியின் அபிஷேகத்தை அடக்கவோ, நம் இஷ்டப்படி செய்யவோ ஒரு நாளும் முயற்சி செய்யக் கூடாது. ஆனால் அபிஷேகத்தில் **வளரவேண்டும்.** நாம் தேவன் நமக்குக்

கொடுப்பதில் உண்மையுள்ளவர்களாயிருந்தால் நமக்கு அதிகமாகக் கொடுப்பார். (மத்தேயு 25:21) தேவனுடைய சித்தத்துக்கு இணங்க நம் ஊழியத்தில் அதிகக் கனிகளைக் கொடுக்க, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்துடன் திறமையாகச் செயல்பட நாம் பயிற்சி செய்ய வேண்டும். [பகுதி III பிரிவு B-இல் அபிஷேகமும் வளர்ச்சியும் என்ற தலைப்பில் இதைக் குறித்து மேலும் படிக்கலாம்.] ■

## அபிஷேகத்தைப் "பிறருக்கு மாற்றுவது" (Transferring the Anointing)

வல்லமையான சுவிசேஷ ஊழியத்தைச் செய்கிற அபிஷேகம் பண்ணப்பட்ட ஒருவர், வேறு ஒரு மனிதன் மேல் தம் கைகளை வைக்க, தம்மிடம் உள்ள அபிஷேகத்தில் ஒரு பங்கு அல்லது இரண்டு மடங்கு அபிஷேகம் கூட கொடுக்க முடியும் என்று ஒரு போதனை வெளிவருகிறது. இப்படி அபிஷேகத்தை இடம் மாற்றுவது என்று கூறி இதற்குச் சான்றாக வேதாகமத்தில் வரும் எலியா, எலிசா வாழ்க்கையில் நடந்தவற்றைக் கூறுகிறார்கள். (1 இராஜாக்கள் 19:16, 19; 2 இராஜாக்கள் 2:1-13)

ஆனால் இந்த வேதபகுதி இந்த உபதேசத்தை ஏற்றுக்கொள்ள வில்லை. எலியா தனது **சால்வையை** எலிசாவின் மேல் போட்டான். (1 இராஜாக்கள் 19:19) எலிசா எலியாவிற்குப் பின் தெய்வீக அழைப்புப் பெற்று வருபவராக கர்த்தர் ஏற்கெனவே சொன்னது ஒரு அடையாளத்தால் உறுதிப்படுத்தப்பட்டது (Symbolic Confirmation). அவ்வளவே (1 இராஜாக்கள் 19:16). இந்த சம்பவத்தில் எலியா எலிசாவிற்கு அழைப்பு கொடுக்கவில்லை. அதை நிறைவேற்ற அபிஷேகமும் கொடுக்கவில்லை. இது தேவனால் உண்டானது. எலியா தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தான். மேலும் எலிசாவிடம் என்ன சொல்ல வேண்டும் என்று தேவன் சொன்னாரோ அதையே சொன்னான் (1 இராஜாக்கள் 19:19)

தேவ அழைப்பிற்கு பிறகு எலியா தீர்க்கதரிசியின் ஊழியத்தைப் பெற்ற எலிசா தனக்கு அதற்குரிய தகுதி இல்லை என்று தெளிவாக உணர்ந்தான். எலிசா தனக்கு தேவ வல்லமை (அபிஷேகம்) தேவை என்பதை உணர்ந்தான். இது மறைமுகமாக எலியாவின் ஆவி என்று



வேதத்தில் வருகிறது. (2 இராஜாக்கள் 2:9, 15) ஆகவே எலிசா எலியாவிடம் அவரிடத்திலுள்ள ஆவியின் வரம் தனக்கு இரட்டிப்பாய் கிடைக்கும்படி வேண்டினான் (2 இராஜாக்கள் 2:10)

ஆனால் தேவனால் அபிஷேகிக்கப்பட்ட தீர்க்கதரிசியாகிய எலியா, எலிசா இரட்டிப்பான ஆவியின் வரம் கேட்டதற்கு: *"அரிதான காரியத்தைக் கேட்டாய்; உன்னை விட்டு நான் எடுத்துக் கொள்ளப்படுகையில் என்னை நீ கண்டால் உனக்குக் கிடைக்கும் இல்லாவிட்டால் கிடையாது என்றான்."*

இந்த வேதபகுதியை நாம் வாசிக்கும்போது எலியா எலிசாவுக்கு ஆவிக்குரிய ஒன்றையும் கொடுக்க முடியாது என்பது தெளிவாகப் புரிகிறது. எலிசாவுக்கு வந்த தேவனுடைய அழைப்பை நிறைவேற்ற அவனை அபிஷேகிக்க முடியாது.

தேவன் தம்முடைய சித்தத்தின்படி எலியா பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுவதைப் பார்க்க அனுமதித்தார். தீர்க்கதரிசனத்தின் படியும் தேவனுடைய சித்தத்தினாலும் எலிசா எலியாவின் சால்வையை எடுத்துக் கொண்டான். அந்த நேரத்திலிருந்து எலிசாவின் ஊழியத்தில் தேவனுடைய அபிஷேகம் இருந்தது தெளிவாகிறது. (2 இராஜாக்கள் 2:15)

அழைப்பு, வரங்கள், அபிஷேகம் இவற்றைத் தருவது தேவனே. தேவன் மாத்திரம் தான் பரிசுத்தாவியைத் தர முடியும். தேவனையோ பரிசுத்தாவியையோ நாம் ஆதிக்கம் செலுத்த முடியாது. நாம் யாரை அபிஷேகிக்க வேண்டும். எவ்வளவு அபிஷேகத்தை அவர்களுக்குக் கொடுப்பது என்று நாம் தீர்மானிக்க முடியாது. மேலும் தேவனுடைய அழைப்பு வரங்கள் இவை. நம் பொறுப்பில் இல்லை. தேவன் ஊழியத்துக்காக நம்மை அபிஷேகித்திருந்தால் நாம் அதே அபிஷேகத்தை மற்றொருவருக்குக் கொடுக்க முடியாது.

### தேவன் அழைக்கிறார் - நாம் ஒப்புக் கொள்வோம்

தேவனுடைய ஊழியக்காரர்களிலே மிகவும் சிறந்தவரான மோசே தேவன் தனக்குக் கொடுத்த அபிஷேகத்தைப் பிறருக்குக் கொடுக்க முடியவில்லை. என்றாலும் **கர்த்தரே** மோசே மேல் வைத்த அபிஷேகத்தை எடுத்து மூப்பர்கள் மேல் வைத்தார். (எண்ணாகமம் 11:16-17)

மோசே தன் *கனத்திலும் அதிகாரத்திலும்* கொஞ்சம் யோசுவாவுக்குக் கொடுக்கும்படி தேவன் மோசேக்குக் கட்டளையிட்டார். (எண்ணாகமம் 27:20, 23) இதெல்லாம் தேவன் யோசுவாவை மோசேக்குப் பின் தலைவனாக ஏற்கெனவே தேர்ந்தெடுத்தபின் நடந்தது (27:18) கர்த்தர் மூப்பர்களை அபிஷேகிக்கும் போது யோசுவாவும் இருந்தான். (11:16, 17, 28) அதனால் தான் யோசுவாவை ஆவியைப் பெற்றிருக்கிற புருஷனாகிய யோசுவா என்று சொல்லி இஸ்ரவேலருக்குத் தலைவன் ஆக்கினார் (27:18)

கர்த்தர் தான் யோசுவாவுக்கு அழைப்பு கொடுத்து அபிஷேகித்தார். மோசே யோசுவாவின் அழைப்பை அங்கீகரித்து தான் போன பிறகு அவனிடம் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும்படி ஒப்படைத்தார்.

பரிசுத்த ஆவியானவர் தீர்க்கதரிசன வரத்தையும் அபிஷேகத்தையும் எலியாவுக்குக் கொடுத்தார். பின்பு எலிசாவிடமும் கொடுத்து அதனோடு கூட அடையாளங்களும் அற்புதங்களும் செய்யக் கூடிய வரமும் கொடுத்தார்.

பார்க்க: எண்ணாகமம் 11:25-29; 1 சாமுவேல் 10:6, 10; 1 இராஜாக்கள் 18:46).

**போதகரிடமிருந்து போதகருக்கு:** தேவனிடம் இரட்டிப்பான அபிஷேகம் கேட்பதில் தவறில்லை. ஊழியஞ் செய்வதற்கு ஒரு குறிப்பிட்ட வரம் கேட்பதிலும் தவறில்லை. நாம் கேட்க வேண்டும். பின்பு எதைத்தருவார் எப்பொழுது தருவார் என்பதற்கு அவரை நம்ப வேண்டும்.

எலிசா தேவனுடைய அழைப்புக்குக் கீழ்ப்படிந்து அவர் சொன்ன எல்லாவற்றையும் நிறைவேற்றினான். முதல் அழைப்புக்கும் தேவனுடைய அபிஷேகத்தைப் பெற எடுத்த முயற்சிகளிலும் தேவனுக்குக் கீழ்ப்படிந்தான். (1 இராஜாக்கள் 19:20, 21, 2 இராஜாக்கள் 2:1-11) தேவனுடைய அழைப்பும் அபிஷேகமும் நம் வாழ்க்கையில் **தன்னாலே** நிறைவேறாது. ஊழியத்தை நிறைவேற்றுவதற்கும் அதற்காக எடுக்கும் முயற்சியிலும் ஒவ்வொரு அடியிலும் நம் கீழ்ப்படிதல், அடங்கி நடத்தல், பிறரோடு சேர்ந்து உழைத்தல், தேவைப்படுகிறது.



### மற்றவருக்குக் கொடுத்தல் (Inpartation)

ஒரு நபர் மற்றொருவருக்குத் தனது அபிஷேகத்தை மாற்றுவது (transfering) என்ற கருத்து சரியல்ல. ஆனாலும் ஒருவரிடமிருந்து மற்றவருக்கு அபிஷேகம் கொடுக்கப்பட்டதற்கு (Impartation) அநேக உதாரணங்கள் இருக்கின்றன. பரிசுத்த ஆவியின் வழி நடத்துதலின்படி (பார்க்க அப்போஸ்தலர் 13:1-3; 1 தீமோத்தேயு 4:14; 2 தீமோத்தேயு 1:6) ஜெபித்து கைகளை வைத்தல் என்பதோடு தொடர்புள்ளது. (எபிரெயர் 6:2)

தேவனுக்கு வல்லமையாய் ஊழியஞ் செய்கிற ஆண்களும் பெண்களும் பிறர் பரிசுத்த ஆவியைப் பெறுவதற்காக ஜெபிப்பது எனக்குத் தெரியும். அவர்கள் தங்களிடம் உள்ள வரத்தையும் அபிஷேகத்தையும் **பிறருக்குக் கொடுக்க** முடியாது என்று நாம் ஏற்கெனவே படித்திருக்கிறோம். ஆனாலும் ஊழியம் நடக்கும்போது அல்லது விசேஷ கூட்டங்களில் தேவனுடைய பிரசன்னம் வெளிப்படையாகவும் வல்லமையாகவும் இருக்கும்போது தேவச் செயல் மூலமாக பரிசுத்த ஆவியினால் உள்ளத்தில் ஒரு கிளர்ச்சி உண்டாவது மாத்திரம் அல்ல. பிறருக்கும் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் கொடுக்கப்படுகிறது. சில சமயங்களில் இத்தகைய கூட்டங்களில் யாருக்கெல்லாம் ஜெபித்தார்களோ அவர்களுக்குப் பரிசுத்த ஆவியின் வல்லமையும் அதிகாரமும் அதிகமாகக் கிடைக்கிறது.

எனக்கும் என்மேல் கைகளை வைத்ததினால் வல்லமையான அபிஷேகம் கிடைத்தது. இந்த நிகழ்ச்சி என்னுடைய வாழ்க்கையை பிறர் மாற்றினதுமல்லாமல் எனக்காக பிறர் ஜெபித்ததினால் என் ஊழியத்திலும் மாறுதல் கிடைத்தது. ஆனால் இது மனிதருடைய செயல் அல்ல. பரிசுத்த ஆவியின் புதிய அபிஷேகம் கிடைத்தது தேவனுடைய செயல் ஆகும்.

### கைகளை வைத்தல் - ஏற்றுக் கொள்ளக் கூடியது

தீமோத்தேயுவின் வளருகின்ற ஊழியத்தில் காணப்படுகிற இந்த மாதிரியாக கைகளை வைப்பது வேதாகமத்தில் தெளிவாக காணப்படும் உதாரணமாகும்.

தீமோத்தேயுவின் ஊழியத்தின் துவக்கத்தில் பவுலும் இக்கோனியாவிலும் லீஸ்திராவிலும் உள்ள சபைகளின் மூப்பர்களும் தீமோத்தேயுவின்மேல் கைகளை வைத்து ஜெபித்தார்கள்.

*“மூப்பராகிய சங்கத்தார் உன்மேல் கைகளை வைத்தபோது தீர்க்கதரிசனத்தால் உனக்கு அளிக்கப்பட்ட வரத்தைப் பற்றி அசதியாயிராதே”* (1 தீமோத்தேயு 4:14)

இதே நிகழ்ச்சி பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதின இரண்டாவது நிருபத்திலும் காணப்படுகிறது.

*“இதினிமித்தமாக, நான் உன் மேல் என் கைகளை வைத்ததினால் உனக்கு உண்டான தேவவரத்தை நீ அனல் மூட்டி எழுப்பிவிடும்படி உனக்கு நினைவப்பூட்டுகிறேன். தேவன் நமக்கு பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்.”* (2 தீமோத்தேயு 1:6, 7) (இதையும் பார்க்க 1 தீமோத்தேயு 1:18)

இந்தப் பகுதியில் உபயோகிக்கப்பட்ட ‘வரம்’ என்பது மூலபாஷையில் வெளிப்படையாகத் தோன்றும் அபிஷேகம் என்று காணப்படுகிறது. பவுலும் மூப்பர்களும் தீமோத்தேயுவுக்காக ஜெபித்தபோது வெளிப்படையான அடையாளங்களினால் பரிசுத்த ஆவியானவர் தீமோத்தேயுவை அபிஷேகித்தது விளங்குகிறது.

தீமோத்தேயுவின் வரங்களும் அழைப்பும் பவுலினால் உண்டானதல்லை. பவுலும் மூப்பர்களும் தங்கள் கைகளைத் தீமோத்தேயுவின் மேல் வைத்து ஜெபித்தவுடன் பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய சித்தத்தை அவர்கள் மூலம் வெளிப்படுத்தி தீர்க்கதரிசனமாக தீமோத்தேயுவின் வாழ்க்கைக்கு தேவனுடைய அழைப்பையும் விருப்பத்தையும்



**தேவனுடைய ஊழியத்துக்காக நியமிக்கப்பட்டவர்**



கூறி உறுதிப்படுத்தினார். அவர்கள் தீமோத்தேயுவை கர்த்தருடைய ஊழிய த்துக்கு ஒப்புக் கொடுத்தவுடன் பரிசுத்த ஆவியானவர் தாம் தேவனுடைய அழைப்பை நிறைவேற்ற அவனை அபிஷேகித்தார்.

**போதகரிடமிருந்து போதகருக்கு:** கைகளை வைத்து ஜெபிக்கும்போது பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய சித்தத்தையும் நோக்கத்தையும் அடிக்கடி வெளிப்படுத்துவார். அவருடைய சித்தம் மனதிலே படம் போல வரும், ஒரு தீர்க்கதரிசன வார்த்தை, வேத வசனம் மூலம் அல்லது பரிசுத்த ஆவியானவர் விரும்புகிறது உள்ளத்தில் தோன்றும் எண்ணமாக வெளிப்படும், இவ்வாறாக, ஒருவருக்கு அல்லது அவருடைய கீழ்நிலைக்கு வேண்டியதை வெளிப்படுத்துவார்.

இச்சமயங்களில் நாம் கர்த்தரிடத்தில் பொறுமையோடு காத்திருந்து கவனிக்க வேண்டும். கர்த்தர் திட்டவட்டமாக நம்மோடு பேசாவிட்டால் நாம் பேசக் **கூடாது.**

நாம் சிறந்த போதகராக இருக்க வேண்டுமென்றால் நாம் தேவனுக்கும் அவர் வார்த்தைக்கும் கீழ்ப்படிந்து உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும். நாம் பிறரைப் பிரியப்படுத்த ஆசைப்படலாம் அல்லது மக்கள் விரும்புவதைக் கூறும் ஆவிக்குரிய தலைவராக இருக்கக் கட்டாயப்படுத்தப்படலாம். இதைத்தான் வேதம் ‘மனிதனுக்குப் பயப்படும்பயம்’ என்று கூறுகிறது. இது ஒரு கண்ணியாக மாம்சத்தின் சிந்தையுடையவர்களை தவறான பாதையில் கொண்டுபோய்விடும். (நீதிமொழிகள் 29:25)

நாம் தேவனுக்கும் அவர் வார்த்தைக்கும் பரிசுத்த ஆவியானவரின் நடத்தலுக்கும் உண்மையுள்ளவர்களாயிருக்க அழைக்கப்பட்டிருக்கிறோம். நீங்கள் ஒருவருக்காக ஜெபம் செய்கிறீர்கள். அவர்களைக் குறித்து கர்த்தர் உங்களுடன் பேசவில்லை. அது மிகவும் நல்லது. கர்த்தர் வேறு சமயத்தில் வேறுவகையாக அவர்களுடன் நேரடியாகப் பேச விரும்பலாம். தேவன் அமைதலாயிருந்தால் நாமும் அமைதலாய் இருக்க வேண்டும். ஒருவரைக் குறித்து தேவன் பேசினால் அவர் என்ன சொல்லுகிறாரோ அல்லது வெளிப்படுத்துகிறாரோ அதைக்

கூட்டவோ குறைக்கவோ இல்லாமல் அவர் சொன்னதை மாத்திரம் பத்திரமாக உண்மையாகச் சொல்ல வேண்டும்.

ஒருவரிடம் என்ன செய்ய வேண்டும் எங்கே போக வேண்டும் என்று சொல்வது நமது காரியமல்ல. பரிசுத்த ஆவியானவர் உணர்த்துவதை மாத்திரம் அந்த நபரிடம் சொல்ல வேண்டும். அநேகமாக நாம் சொன்னதைக் கர்த்தர் அவர்களின் இருதயத்தில் ஏற்கெனவே சொல்லியிருப்பார். ஆகவே நாம் சொன்னது உறுதிப்படுத்தப்படுகிறது. அந்தக் காரியம் அவர்களுக்கும் தேவனுக்கும் உரியது. அவரால் நிறைவேற்றப்பட வேண்டியது.

கடைசியாக ஒரு முக்கியமான கருத்து: கர்த்தரிடத்திலிருந்து வந்த தீர்க்கதரிசன வார்த்தை, தேவன் ஏற்கெனவே அவரால் எழுதப்பட்ட பரிசுத்த வேதத்தில் வெளிப்படுத்தியதோடு **எப்பொழுதும்** ஒத்துப்போகிறது. நாம் தம் வாழ்க்கையில் செய்வதெல்லாம் வேதவசனங்களுக்கும் அதில் வெளியாக்கப்பட்ட கொள்கைகளுக்கும் ஒத்ததாக இருக்க வேண்டும்.

### பரிசுத்த ஆவியின் நடத்துதலைப் பின்பற்றுதல்

கைகளை வைப்பதைப் பற்றிய பிற உதாரணங்கள் அப்போஸ்தலர் 6:1-7; 13:1-3 வசனங்களில் காணலாம். ஆதி சபைகளில் காணலாம். ஆதி சபைகளில் இந்த நிகழ்ச்சிகள் சாதாரண அடையாளங்கள் அடங்கிய சடங்குகள் **அல்ல.** இந்த சம்பவங்களில் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் உள்ள தலைவர்கள் பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலை நாடி அதன் படி நடந்தார்கள். வழிநடத்துதலுக்குக் கீழ்ப்படிந்து நம்பிக்கையோடு ஜெபித்தார்கள். தேவன் ஜெபத்தைக் கேட்டு, யாருக்காக ஜெபித்தார்களோ, அவர்களுக்கு நியமிக்கப்பட்ட ஊழியத்தை நிறைவேற்ற அவர்களை ஆசீர்வதித்து அபிஷேகித்தார்.

முக்கியமான தேவனுடைய நோக்கத்தையும் சித்தத்தையும் வெளிப்படுத்தவே. பரிசுத்த ஆவி நம்மை வழி நடத்துகிறார். பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை இயேசு நிறைவேற்றினதினால் தான் இந்த உலகத்தில் அவர் செய்த ஊழியத்தை நிறைவேற்ற முடிந்தது என்று இயேசு தாமே சொன்னார் (யோவான் 5:19, 30; 6:38; 8:29) நாமும் அவ்வாறே செய்யவேண்டும்.



நாம் தேவனாகிய பரிசுத்த ஆவியானவரின் வழி நடத்துதலைப் பின்பற்றும்போது அவருடைய சித்தத்தை நிறைவேற்ற நம்மை உபயோகிப்பார். அதில் ஒரு பகுதியைப் பிறருக்கு தேவன் கொடுத்த அழைப்பை உறுதிப்படுத்தவும், அவருடைய சரீரமாகிய சபையின் பக்தி விருத்திக்கேதுவாகவும், அவர் மகிமைக்காகவும் அவர்கள் அபிஷேகம் பெற்று தேவன் நியமித்திருக்கிற காரியங்களை நிறைவேற்ற வரங்கள் பெறவும், ஜெபிப்பதாக இருக்க வேண்டும். (எபேசியர் 4:12-16)

### பெரிய விடுதலை

அநேக உலக மேப் (World MAP) போதகர்களின் கருத்தரங்கில் நான் அபிஷேகம் அல்லது பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறுவது என்ற பொருளில் போதித்திருக்கிறேன். இந்தக் கூட்டங்களில் அநேக போதகர்கள் பரிசுத்த ஆவியினால் புதிய அபிஷேகம் பெற்றார்கள். பிறர் முதல் தடவையாக பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றார்கள். நான் ஒன்றும் அவர்களுக்குக் கொடுக்கவில்லை. ஆனால் இந்தப் பொருளில் வேதத்திலிருந்து போதித்தேன். நான் அவர்களுக்காக ஜெபித்திருப்பேன். ஆனால் பரிசுத்த ஆவியானவர் தாம் அவர்களைத் தொட்டு நிரப்பினார். (லூக்கா 3:16; யோவான் 16:7) *ஏனென்றால் அவரை இன்னும் அதிகமாய் அனுபவிக்க தாகமாயிருந்தார்கள்.*

இதே போதகர்கள் தங்களுடைய ஊழியத்தில் வியக்கத்தக்க மாறுதல்கள் இருக்கின்றன என்று கூறும் செய்தி எங்களுக்கு வந்து கொண்டே இருக்கிறது. அவர்கள் நடத்தும் கூட்டங்களில் கூடுதலான அடையாளங்கள் அற்புதங்கள், பலத்த செய்கைகளைக் காணுகிறார்கள். அவர்கள் ஊழியங்கள் செய்வதில் அதிக ஆர்வம் பெற்று அநேகரை இரட்சிப்புக்குள் வழிநடத்தி பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற வழிநடத்தினார்கள். என்ன நடந்தது?

ஒன்று தேவனுடைய வேதவசனத்தின் மூலம் உபதேசம் கிடைத்ததால் ஒரு குறிப்பிட்ட பொருளில் ஞானோதயம் பெற்றார்கள். அந்த போதனையைக் கேட்ட மக்கள் அவர்கள் கற்றுக் கொண்டதின்படி விசுவாசத்தோடு நடக்கத் தீர்மானித்தார்கள்.

ஆனால் இங்கு அதிகமாகக் கிரியை நடந்திருக்கிறது. பரிசுத்த ஆவியானவர் இணையற்ற வகையாகப் பிரசன்னமாகி அப்பொழுது

கொடுக்கப்பட்ட தேவனுடைய வார்த்தையிலுள்ள சத்தியத்திற்குச் சாட்சியாக இருக்கிறார். ஆகவே மக்கள் திறந்த மனதோடு, விசுவாசத்தோடு, **தேவன்மேல் அடங்காத தாகத்தோடு அவர் நியமித்திருக்கிற நன்மைகளைக் கேட்கும்போது அவர்களுக்கு ஊழியத்துக்கு வேண்டிய தேவனுடைய அபிஷேகம் கொடுக்கப் படுகிறது.** ஆம், அவர்கள் பெற்றுக் கொள்ளுகிறார்கள்! (மத்தேயு 5:6) யோவான் 6:35)

ஒரு குறிப்பிட்ட இடத்தில் அல்லது நிகழ்ச்சியில் மாத்திரம் தேவனுடைய வல்லமை விளங்கும் என்று நினைக்க வேண்டாம். தேவனாகிய பரிசுத்த ஆவியானவர் எங்கும் இருக்கிறார். அவரை முழு இருதயத்தோடும் தேடினால் அவர் பதில் அளிப்பார். (எரேமியா 29:12, 13)

நீ அவரை முழு இருதயத்தோடு தேடினால் நீ எங்கிருந்தாலும் உன்னை சந்திப்பார். அல்லேலூயா!

மறுபடியுமாக நான் சொல்லுகிறேன். தேவனாகிய பரிசுத்த ஆவியானவர் எவ்வாறு கிரியை செய்கிறார், செய்யக்கூடும் என்பதை **ஒருவராலும் முழுவதுமாகப் புரிந்து கொள்ள முடியாது.** தேவனாகிய பரிசுத்த ஆவியானவர் நாம் தாகத்தோடு அவரைத் தேடினால் பதில் அளிப்பார் என்பது நமக்குத் தெரியும்.

மக்கள் ஜெபிக்கும்போது பரிசுத்த ஆவியானவர் புதிதாக அவர்களை நிரப்புவார். (லூக்கா 11:9-13) அவர்கள் விசுவாசம் தொடப்படும்போது, மறுபடியும் கேட்கிறார்கள். கேட்கும்போது பெற்றுக் கொள்ளுகிறார்கள் (எபிரெயர் 11:6)

### மிகவும் சிறந்த வேண்டுதல்கள்

அப்போஸ்தலர்கள் உடன் ஊழியர்கள் மேலும், ஒருவருக்கொருவர் மேலும் கைகளை வைத்து, ஜெபித்து, அவர்களை ஊழியத்துக்கு அனுப்பினார்கள். (அப்போஸ்தலர் 13:2, 3; 6:1-6) என்று நாம் படித்திருக்கிறோம். தேவன் இவ்வாறு செய்யும்படிக் கூறினார். அதனால் தேவையானதும் ஆற்றல் மிகுந்ததுமான காரியங்கள் நடைபெற்றது.

பரிசுத்த ஆவியின் வழிநடத்துதல் எல்லாவற்றையும் நாம் புரிந்து கொள்ள முடியாது. நாம் மற்ற ஊழியக்காரரான ஆண்களையும் பெண்களையும் நமக்காக ஜெபிக்க அனுமதிப்பது போல, பரிசுத்த ஆவியானவர் பிறருக்காக ஜெபிக்க நம்மை வழிநடத்தும்போது



தேவனுடைய அபிஷேகம், வரங்கள், ஞானம் இன்னும் மேலானவைகள் கொடுக்கப்படுகின்றன.

தேவனுடைய வரங்கள், அபிஷேகம் யாருக்கு அளிக்கப்பட வேண்டும் என்று நாம் தீர்மானிக்க முடியாவிட்டாலும், பரிசுத்த ஆவியின் வல்லமையினாலே தேவனுடைய ஊழியங்களைத் திறமையாக நடத்த அவர்கள் கருவியாக இருக்க அவர்களுக்காக ஜெபிக்க முடியும். (2 தீமோத்தேயு 1:6, 7)

நாம் எப்பொழுதும் நம் வாழ்க்கையில் இந்தக் காரியங்களை தேவனுடைய சித்தத்துக்கு ஒப்புக் கொடுத்து அதை ஏற்றுக் கொள்ள வேண்டும். நாம் தேவனிடம் கேட்க வேண்டிய சிறந்த கேள்விகளாவன: நீர் எனக்காக வைத்திருக்கும் ஊழியங்களும் அதற்கான வரங்களும் என்ன? என்னை அழைத்து அவற்றை எவ்வாறு உபயோகிக்கச் சொல்லுகிறீர்? உமது சித்தத்தை நான் நிறைவேற்ற நீர் எனக்கு என்ன தர விரும்புகிறீர்?

ஒவ்வொரு ஆணுக்கும் பெண்ணுக்கும் தேவன் திட்டவட்டமான வேலைகளும் அழைப்புகளும் ஊழியங்களும் வைத்திருக்கிறார்.

அதோடுகூட *''நாம் வேண்டிக் கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள் (பரிசுத்த ஆவி) கிரியை செய்கிற வல்லமையின்படியே நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு.''* (எபேசியர் 3:20) நாம் நம் வாழ்க்கையையும் விருப்பத்தையும் முழுவதுமாக ஒப்புக் கொடுத்து அவருடைய சித்தத்தை நிறைவேற்ற வேண்டும்.

**2. அபிஷேகம் கட்டுப்படுத்தப்பட்டவோ உடைமையாக்கிக் கொள்வதற்கோ நமக்குள்ளே வைத்துக் கொள்வதற்கோ உண்டாக்கப்படவில்லை.**

அபிஷேகத்தின் அடிப்படை நோக்கம் நமக்குக் கொடுக்கப்பட்ட ஊழியத்தையும் வேலையையும் திறமையாகச் செய்ய வேண்டும் என்பது தான். பரிசுத்த ஆவியானவர் இலவசமாய் நமக்குக் கொடுத்ததை நாம் இலவசமாய் பிறருக்குக் கொடுக்க வேண்டும்.

இயேசு தாமே தம்முடைய ஊழியத்தின் துவக்கத்தில் *"கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்... என்னை அபிஷேகம் பண்ணினார்* (லூக்கா 4:16-21) என்று கூறினார்.

இந்தப் பகுதியை நீங்கள் வாசிக்கும்போது, இயேசு **மற்றவர்களுக்காக** அநேகக் காரியங்களைச் செய்வதற்காக விசேஷமாக அபிஷேகம் பண்ணப்பட்டதை நாம் பார்க்கலாம்.

அபிஷேகம் ஒரு பரிசுத்தமான சலுகையாகும். பிறரைக் காட்டிலும் தான் அதிக பக்தியுள்ளவன், நல்லவன் என்பதைப் பிறர் காணவேண்டும் என்பதற்காக அபிஷேகத்தை நாம் விரும்பக் கூடாது. நாம் ஊழியத்திலும் அழைப்பிலும் அதிகக் கனிகளைக் கொடுக்க, திறமையாக ஊழியஞ்செய்ய பரிசுத்த ஆவியானவரால் அபிஷேகம் கொடுக்கப்படுகிறது. இதன் பொருள் என்னவென்றால் நாம் பிறருக்கு நல்ல ***சேவகராகப்*** பணி செய்யவேண்டும் என்பதே (யோவான் 13:12-17). நம் வாழ்க்கை முறையே எல்லா நிலையிலும் கொடுக்கும் தன்மையுடையதாய் இருக்க வேண்டும் என்பதே ஒவ்வொரு விசுவாசிக்கும் வேதத்தின் கட்டளையாகும். (மத்தேயு 10:8; லூக்கா 6:38; அப்போஸ்தலர் 20:35)

அவருடைய ஜனங்கள் தங்களுடைய பொருளினாலும் செய்கையினாலும் பிறருக்குப் பிரயோஜனமாயிருப்பதை தேவன் விரும்புகிறார். கொடுக்கும் வாழ்க்கை முறை இல்லாவிட்டால் ஆவிக்குரிய வாழ்க்கையில் ஆரோக்கியம் இருக்க முடியாது. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையிலும் குறைவு ஏற்படும். இஸ்ரவேலரின் சரித்திரத்தில் இந்தக் கொள்கையை வலியுறுத்தி அநேக உதாரணங்கள் தேவன் தருகிறார்.

### ஜீவனா மரணமா

இஸ்ரவேல் நாட்டில் இரண்டு பெரிய நீர் நிலைகள் இருக்கின்றன. அவை: கலிலேயாக் கடல், சவக்கடல். கலிலேயாக்கடல் அழகானது, நல்ல நீர் உடையது. உயிரினங்கள் நிறைந்தது. சவக்கடல் அதன் பெயருக்கேற்ற மாதிரி உள்ளது. அது உப்பும் தாதுப் பொருட்களும் நிரம்பியது. உயிரினங்கள் வாழத் தகாதது. குடிநீர் அல்ல. அது நம் உடலில் வெகு நேரம் இருக்குமானால் நம் தோல் கருகி விடும், கண் குருடாகி விடும், மரணம் கூட நேரிடலாம்.

கலிலேயாக் கடலில் நீரோடைகளும் ஆறுகளும் வந்து விழுவதால் நல்ல தண்ணீர் உள்ள கடலாக இருக்கிறது. தாழ்வான மறுகரையிலிருந்து இந்த நல்ல தண்ணீர் யோர்தான் நதியில் பாய்கிறது. அதன்பின்பு சவக்கடலில் போய்விழுகிறது. கலிலேயாக் கடலில் உள்ள



ஜீவராசிகளுக்கு உயிர் கொடுக்கும் நல்ல தண்ணீர் சவக்கடலில் விழுந்த பின் நஞ்சாக மாறி ஜீவராசிகள் இல்லாமல் இருப்பது எவ்வாறு சாத்தியமாகும்?

இந்த இரண்டு கடல்களுக்கும் ஒரு முக்கியமான வித்தியாசம் இருக்கிறது. இரண்டு கடலிலும் நல்ல ஆரோக்கியமான தண்ணீர் விழுகிறது. ஆனால் கலிலேயாக் கடலிலிருந்து மாத்திரம் தண்ணீர் வெளியே பாய்கிறது. சவக்கடலிலிருந்து போவதற்கு வழியில்லை. சவக் கடலில் உள்ள தண்ணீர் அதே இடத்தில் இருந்து அதிகமான உப்பையும் தாதுப் பொருட்களையும் விட்டு விட்டு ஆவியாகி மறைகிறதால் அந்த தண்ணீர் நஞ்சாக மாறி ஜீவராசிகள் வாழத் தகுதி இல்லாமல் போய் விடுகிறது.

இதே மாதிரிதான் ஒரு ஊழியக்காரன் வாழ்க்கையில் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் ஊற்றப்படுவதற்குக் காரணம் மற்றவர்கள் இயேசுவைப் போல் மாற இவர்கள் காரணமாக இருக்க வேண்டும் என்பதே. நம்மில் தேவனுடைய பிரசன்னம் அதிகரிக்க அதிகரிக்க அது நம் வழியாக மற்றவர்களுக்குப் பாய வேண்டும். நமது வல்லமை வாய்ந்த ஜீவனைத் தரும் ஊழியத்திலும் சேவையிலும் நாம் மற்றவர்களுக்கு எப்பொழுதும் கொடுக்கிறவர்களாக இருக்க வேண்டும்.

பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தில் நிறைந்தவர்களாய் நாம் பிறருக்காக ஜெபிக்கும்போதும், தேவனுடைய வார்த்தையைப் போதிக்கும்போதும், பிறரைப் பரிசுத்தமாக்குவதற்கான வார்த்தைகளைப் பகிர்ந்து கொடுக்கும்போதும் நாம் ஜீவனைத் தரும் ஊழியக்காரர்களாக பிறரை ஆசீர்வாதிக்கிறோம், பரிசுத்தப்படுத்துகிறோம். நாம் நம் நேரத்திலும் முயற்சியிலும் தன்னயம் மிகுந்தவர்களாக இருந்து நம் ஊழியத்திலும் சேவையிலும் இருக்கிற பரிசுத்த ஆவியைப் பிறருக்காக உபயோகிக்காமல் இருப்போமானால், பரிசுத்த ஆவியானவர் நம்மிலே செயலற்று தேங்கி நின்று விடுவார். நாம் எப்பொழுதும் புதிது புதிதாக பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொண்டே இருக்க வேண்டும் (எபேசியர் 5:18, 19). பின்பு நமது ஊழியத்திலும் சேவையிலும் பெறும் ஜீவத் தண்ணீரைப் பிறருக்குக் கொடுக்க வேண்டும். (யோவான் 7:37-39).

இந்தக் கொள்கையை நீங்கள் மத்தேயு 25:14-30 வசனங்களில் வாசிக்கலாம், தேவன் கொடுத்த வரங்களையும் அபிஷேகத்தையும்

பெற்று ஒன்றும் செய்யாமல் இருந்த வேலைக்காரனுக்கு நடந்தது என்ன?

**3. அபிஷேகத்தைக் கட்டுப்படுத்த முடியும் அல்லது நிறுத்த முடியும்.**

அபிஷேகம் என்பது தேவனாகிய ஆவியானவர் அவரது பிரசன்னமும் நபருமாக நமக்குள் இருப்பது என்பதைப் படித்திருக்கிறோம். பரிசுத்த ஆவி உருவமில்லாத ஆள்தத்துவமில்லாத சக்தி அல்ல, பரிசுத்த ஆவியானவர் தேவனாகிய ஆள்தத்துவம்.

பரிசுத்த ஆவியானவரைத் துக்கப்படுத்தப்படக் கூடும் என்று வேதம் கூறுகிறது. (எபேசியர் 4:30). இதன் அர்த்தம் என்னவென்றால் துக்கமும் காயமும் துன்பமும் ஏற்படமுடியும். பரிசுத்த ஆவியை அவித்துப் போட முடியும் (1 தெசலோனிக்கேயர் 5:19). அதாவது, எரிகிற நெருப்பை தண்ணீர் ஊற்றி அவிப்பது போல பரிசுத்த ஆவியை அடக்கவும் அவிக்கவும் முடியும்.

**a. பரிசுத்த ஆவியை அவிப்பது**

நாம் எவ்வாறு பரிசுத்த ஆவியை *அவிக்கிறோம்*? பரிசுத்தாவியின் அசைவாடுதலையும் கிரியையையும் எதிர்த்தாலும் கண்டுகொள்ளா விட்டாலும் பெரும்பாலும் ஆவியை அவித்துப்போட முடியும். பரிசுத்த ஆவி மக்கள் மத்தியில் கிரியை செய்ய விரும்பும்போது அவர்கள் அதை விரும்பாமல் புறக்கணித்தால் அவர்கள் பரிசுத்த ஆவியானவரின் கிரியைகளை அவர்கள் மத்தியிலிருந்து அவித்துப் போட முடியும்.

பரிசுத்த ஆவியின் கிரியைகளை விட்டு விட்டு நம் சொந்த முயற்சியையும் ஆர்வத்தையும் உடையவர்களாயிருப்போமானால் பரிசுத்த ஆவியை அவித்துப்போட முடியும். அநேக சபைகளின் தங்களது ஆராதனையில் பரிசுத்த ஆவியின் புதிய கிரியைகளுக்கு இடங்கொடாமல் ஒவ்வொரு வாரமும் நடக்கும் ஆராதனையில் அவர்கள் விதித்த வழிபாட்டு முறைகளையும் சடங்காச்சாரங்களையும் பின்பற்றுகிறார்கள். இவ்வாறு நடக்கும்போது பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்யவும் அசைவாடவும் முடியாது.

இன்னும் சில இடங்களில் பரிசுத்த ஆவியானவர் இருப்பது போல பாவனை செய்து குதிப்பதும் கத்துவதும் ஆடுவதுமாக பாவனை செய்வார்கள். பரிசுத்த ஆவியானவர் வந்து கிரியை செய்யும்போது



அவரது வல்லமை சில சமயம் உடல்ரீதியாக வெளிப்பாடாகச் செயல்படுவது உண்மைதான்.

ஆனால் இது உண்மையான பரிசுத்த ஆவியின் கிரியையா யில்லாமல் வெறும் ஒரு ஒழுங்கின் அடிப்படையில் இருக்குமானால் இந்த செயல் அந்த நேரத்தில் பரிசுத்த ஆவியானவர் செய்ய விரும்பும் கிரியைகளை அவித்துப் போட முடியும்.

எந்த சமயத்திலும் பரிசுத்த ஆவியானவரின் உண்மையான பிரசன்னத்தையும் கிரியைகளையும் விட்டு விட்டு ஒரு சடங்கோடு கூடிய ஒழுங்கை கடைபிடிப்பார்களானால் அவர் விரும்புவது போல கிரியை செய்ய முடியாது. அவ்வாறு அவரை அவித்துப்போட முடியும்.

இந்த எல்லா உதாரணங்களுக்கும் பொதுவாக வருவது எது? இவையெல்லாம் மனிதன் தேவனுடைய கிரியை போல தானும் செய்ய முயல்வதையோ, அல்லது கட்டுப்படுத்த முயல்வதையோ வெளிப்படுத்துகிறது. மக்கள் குறிப்பிட்ட அமைப்பையோ நடையையோ தாங்கள் ஏற்றுக் கொண்டால் மனநிறைவோடு இருக்கலாம் என்று தீர்மானிக்கலாம். ஒவ்வொரு வாரமும் இதே ஒழுங்கில் அல்லது அமைப்பில் அவர்களுடைய ஆராதனை இருக்கும்.

துரதிர்ஷ்டவசமாக இது அவர்களுடைய ஆராதனையில் தேவ வல்லமையளிப்பது, சுகமளிப்பது, அபிஷேகிப்பது போன்றவற்றை செய்ய முடியாமல் பரிசுத்த ஆவியைத் தடை செய்ய முடியும். பரிசுத்த ஆவியானவர் வந்து கிரியை செய்ய இடமோ அழைப்போ இல்லை. இந்த சம்பவங்களில் பரிசுத்த ஆவியானவரின் விருப்பத்துக்கு எதிராக மனிதனுடைய சித்தம் கிரியை செய்கிறதால் பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்ய முடிவதில்லை. ஆவி அவித்துப் போடப்படுகிறது.

வேதம், பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னத்துக்கும் வல்லமைக்கும் எதிராக வருகிற மனிதனுடைய முயற்சியைக் குறித்து *“பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல. என்னுடைய ஆவியினாலே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்”* என்று கூறுகிறது (சகரியா 4:6)

**போதகரிடமிருந்து போதகருக்கு:** சபைத்தலைவரே, உங்களுடைய சொந்த நடையோ அமைப்போ பரிசுத்த ஆவியின் கிரியைகளை மட்டுப்படுத்தக் கூடும். சபையிலுள்ள விசுவாசிகள்

ஒவ்வொரு முறை கூடும்பொழுதும் பரிசுத்த ஆவியானவர் என்ன செய்ய விரும்புகிறார் என்பதில் நோக்கமாயிருக்க வேண்டும்.

அவர் சாந்தமான அமைதலான முறையில் சுகமளிக்கும் கிரியையை நடப்பிக்கலாம். பரிசுத்த ஆவியானவர் வல்லமையோடு இறங்கி சிறைப்பட்டவர்களை விடுதலையாக்க முடியும்! ஆராதனையின்போது விசுவாசிகள் ஆவலாய் எதிர்பார்த்தலையும் நம்பிக்கையையும் அளிக்க வெற்றிகரமாக ஆரவாரத்தோடு இறங்குவார். அல்லது தேவனுக்கு முன்பாக இருதயத்தில் குத்துண்டு மக்கள் தாங்கள் செய்த தவறுக்கு வருந்தி மனந்திரும்ப விருப்பத்தைக் கொண்டு வருவார்.

ஒவ்வொரு ஆராதனையிலும் பரிசுத்த ஆவியை அழைத்து, அவர் கிரியை செய்ய நேரத்தை ஒதுக்க வேண்டும். அப்பொழுது நாம் ஜெபத்தில் தரித்திருந்து ஆராதனையில் வரும் தீர்க்கதரிசன வார்த்தைகளைக் கேட்டு அதற்குக் கீழ்ப்படிய வேண்டும். பின்பு நம் நடையும் போதனையும் அந்த நேரத்தில் பரிசுத்த ஆவியானவர் விரும்புகிறதற்கேற்றபடி இருக்க வேண்டும். உதாரணமாக, பரிசுத்த ஆவியானவர் அமைதலாக அமர்ந்து ஊழியம் செய்ய விரும்பும்போது உற்சாகத்தோடு கூச்சலிட்டால் (சங்கீதம் 46:10). நாம் அந்நேரத்தில் பரிசுத்த ஆவியை அவித்துப் போடுவோம். உற்சாகத்தோடும் ஆரவாரத்தோடும் ஆராதனை செய்யும்போது நாம் வேண்டாம் என்று ஒதுக்கினால் நாம் மக்கள் மத்தியில் எழும்புகிற உற்சாகமான எழுப்புதலைத் தடை செய்கிறவர்களாக இருப்போம். ஆராதனை நேரத்தில் மக்கள் கர்த்தருடைய பாதத்தில் அமர்ந்து அவர் பேசுவதை நேரில் கேட்க சிறிது நேரம் ஒதுக்க வேண்டும்.

**பரிசுத்த ஆவியோடு நடப்பது**

சபையின் தலைவராக பரிசுத்த ஆவியின் பிரசன்னத்தை உணர்ந்து தெளிவாகப் புரிந்து கொள்ளும் அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பது மிகவும் முக்கியமாகும். விசுவாசிகள் கூடுவதற்கு முன் தினம் அதிக நேரம் ஜெபத்தில் தரித்திருக்க வேண்டும். நீங்கள் ஏற்கெனவே தீர்மானம் பண்ணினதை தேவன் ஆசீர்வதிக்க வேண்டும் என்பது அந்த ஜெப நேரத்தில் இருக்கக் கூடாது. உங்கள் இருதயத்தையும் உங்கள் திட்டங்களையும்



தேவனிடத்தில் ஒப்படைத்து அவர் பாதத்தில் காத்திருந்து அவர் விரும்பினதை அறிவதற்கு இது ஏற்ற தருணமாகும். அந்தக் கூட்டத்தில் காத்திருந்து அவர் கூறுவதைக் கேட்டுத் தெளிவாய்ப் புரிந்து கொள்ள நேரம் எடுக்க வேண்டும்.

தேவன் விரும்புகிறது எதுவோ அதைச் செய்ய ஒப்புக்கொடுக்கும் மனிதனாக இருக்கத் தீர்மானி. இது அவருடைய சபை; இவர்கள் அவருடைய மக்கள் என்பதை மனதில் இருத்திக் கொள்ளுங்கள். நீங்கள் அங்கு அவர்களை விசாரித்து ஆதரித்து நல்ல சீடராக்க வேண்டும். மிகவும் முக்கியமான வேலை என்னவென்றால் மக்களை தேவனுக்கு நேராக நடத்த வேண்டும். எல்லாவற்றிலும் பரிசுத்த ஆவியானவருக்கு எவ்வாறு கீழ்ப்படிய வேண்டும் என்பதை மக்களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும். ஆராதனை நடக்கும்போது பரிசுத்த ஆவியானவர் விடுதலை தரும் கிரியை யையும் ஒரு மனிதனுக்கு வளர்ச்சியையும் ஆரோக்கியத்தையும் மிகவும் சீக்கிரத்தில் அளிக்கிறார். அந்த சமயத்தில் பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்யாவிட்டால் இப்படிப்பட்ட வேலை மாதக் கணக்கில் பிடிக்கலாம். அல்லது நடக்காமலே இருக்கலாம். அதனால் ஒவ்வொரு முறையும் சபை கூடி வரும்போது நாம் பரிசுத்த ஆவியானவரோடு இணைந்து செயலாற்ற வேண்டும்.

**b. பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்துதல்**

வேதாகமம் பரிசுத்த ஆவியைத் *துக்கப்படுத்துகிறதைப்* பற்றியும் கூறுகிறது. (எபேசியர் 4:30). துக்கப்படுத்துதல் என்றால் வருத்தப் படுத்துவது, வேதனைப்படுத்துவது என்று பொருள்படுகிறது. இயேசுவைப் போலல்லாமல் அவருக்குப் பிரியமில்லாத எந்த ஒரு காரியத்தை மனதில் வைத்திருந்தாலும் பரிசுத்தாவியைத் துக்கப்படுத்தக் கூடும்.

நம் மனப்பான்மை, பழக்க வழக்கம், சிந்தனை, வார்த்தைகள், செயல்கள் எதுவும் கிறிஸ்துவைப் போல் அல்லாவிட்டால் பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தக் கூடும்.

*“அன்றியும் நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள். சகல*

**நாம் தேவனுடைய வார்த்தையின்படி நம்மை ஆயத்தப்படுத்தும் போது தேவனுடைய சத்திய வார்த்தைகளைப் பிரசங்கிக்கக்கூடிய வல்லமையை பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால் பெற்றுக் கொள்ளலாம் என்று நாம் முழுவதும் எதிர்பார்க்க முடியும். அந்த சமயத்திலிருந்து பரிசுத்த ஆவியானவர் நம்மை அவருடைய ஊழியம் செய்ய ஒரு கருவியாக உபயோகிப்பார் என்றும், அற்புதங்களும் அடையாளங்களும் வல்லமையோடு நடக்கும் என்பதையும் எதிர்பார்க்கலாம்.**

*விதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும் மற்ற எந்த துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக்கடவது. ஒருவருக்கொருவர் தயவாயும் மன உருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்தது போல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்.''* (எபேசியர் 4:30-32)

தேவனுடைய ஆவி நம்மில் வாசம் செய்வதால் நாம் அவரோடு நெருங்கிய தொடர்பு கொள்ள முடியும். பரிசுத்த ஆவியானவர் நம்மை நேசிப்பதால் துக்கப்படக்கூடும். (ரோமர் 5:5) நம்மில் வாசம் பண்ணுகிற தேவனுடைய ஆவியைத்துக்கப்படுத்தக் கூடியதும் வருத்தப்படுத்தக் கூடியதுமான சிந்தனையையோ செயலையோ நம்மை விட்டு நீக்குவோமாக.

## ஆவியும் வார்த்தையும்

சில தலைவர்கள் பரிசுத்த ஆவியின் கிரியைகளைத் தங்கள் நடுவில் வரவேற்பதாகச் சொல்லுவார்கள். ஆனால் தேவனுடைய வார்த்தையை ஊக்கத்தோடு படிப்பதில் கவனம் செலுத்த மாட்டார்கள். சபையின் மக்களுக்குப் போதிக்க அதிகக் கவனம் செலுத்தி தயார் செய்து, மக்கள் கர்த்தருக்கேற்ற வழியில் நடக்க போதிப்பதில்லை. அவர்கள் பரிசுத்த ஆவியானவர் அந்த வேலையைச் செய்யட்டும் என்று விட்டு விடுவார்கள். இந்த மனப்பான்மை தவறு. அது தலைவரின் வாழ்க்கையிலும் சபையிலும் அதிகப் பிரச்சனைகளை உண்டு பண்ணும். இது சோம்பேறித்தனமும் ஒழுங்குமற்ற நிலை சபையில் தோன்றக் காரணமாயிருக்கும். தேவன் அதை ஆசீர்வதிக்க மாட்டார்.

வேதம் இதைக்குறித்து தலைவர்களிடம் மிகவும் தெளிவாகக் கூறுகிறது. *நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவரையும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு. சீர்கேடான வீண்பேச்சுகளுக்கு விலகியிரு. அவைகளால்* (கள்ளப் போதகர்களான) *அவர்கள் அதிக அவபக்திக்குள்ளாவார்கள்.* (II தீமோத்தேயு 2:15, 16)

போதகர்களான நாம் நம் இருதயத்தை ஊற்றி அதிகமாக ஜெபிக்க வேண்டும். நம் உள்ளத்தை தேவனுடைய வசனங்களால் நிரப்ப வேண்டும். நாம் ஜாக்கிரதையோடு வேதத்தைப் படித்து நம்போதனையை வசனத்தைக் கொண்டு ஆயத்தம் செய்து மக்களை இயேசு கிறிஸ்துவின் முழு வளர்ச்சி அடைந்த சீடராக்க வழிநடத்த வேண்டும். தேவனுடைய வார்த்தையிலுள்ள சத்தியத்தை அதிகமாகப் புரிந்துகொள்ளாமல் ஊன்றிப் படிக்காததால் நாம் ஒருநாளும் உலகப் பிரகாரமான எண்ணங்களையும் தப்பான கோட்பாடுகளையும் தப்பானவற்றையும் போதிக்கக் கூடாது. நாம் மற்றவர்களுக்குப் போதிக்கிறதைக் குறித்து நியாயந்தீர்க்கப்படுவோம் (யாக்கோபு 3:11).

நாம் தேவனுடைய வசனத்தின் அடிப்படையில் ஆயத்தப் படும்போது, தேவனுடைய சத்திய வார்த்தையைப் போதிப்பதற்கு ஏற்ற வல்லமையைத் தருவதற்குப் பரிசுத்த ஆவியானவர் அந்த நிமிஷத்திலிருந்து நம்மை ஒரு கருவியாக அவருடைய ஊழியத்தில் உபயோகப்படுத்துவதையும், நம் மூலமாக அடையாளங்களும் அற்புதங்களும் செய்வதையும் எதிர்பார்க்கலாம். நாம் தளரா ஊக்கத்தோடு வேதத்தை வாசிக்காமலும் ஜெபிக்காமலும் ஊழியஞ் செய்தால் அதில் நம் சொந்த எண்ணங்களும் உலகப் பிரகாரமான கருத்துகளும் தான் இருக்கும். நாம் தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிக்காமல், நம் வாழ்க்கையிலும் ஊழியத்திலும் கிறிஸ்துவைப்

பிரதிபலிக்காவிட்டால் எப்படி பரிசுத்த ஆவியானவர் நம்மை அபிஷேகிக்க முடியும்?

### தாமாகவே அபிஷேகிப்பது

சில நேரங்களில் பரிசுத்த ஆவியானவர் நம் வாயில் சரியான வார்த்தைகளைப் போடுவார் என்று வேதம் போதிக்கிறது.

*"அவர்கள் உங்களை ஒப்புக்கொடுக்கும்போது: எப்படிப் பேசுவோம் என்றும், என்னத்தைப் பேசுவோம் என்றும் கவலைப்படாதிருங்கள்; நீங்கள் பேச வேண்டுவது அந்நேரத்தில் உங்களுக்கு அருளப்படும்."* (மத்தேயு 10:19) (இவற்றையும் பார்க்க மாற்கு 13:11; லூக்கா 12:11, 12) இந்த வசனங்கள் உபத்திரவ காலங்களிலும் அல்லது இக்கட்டான சூழ்நிலைகளிலுமே தவிர ஒவ்வொரு வாரமும் நடத்தப்படும் ஆராதனையில் அல்ல. நாம் தேவனுடைய வார்த்தைகளை ஆழ்ந்து படிப்பதும் நல்ல போதனைக்குரிய பிரசங்கங்களை தயாரிப்பதும் தேவையில்லை என்று இந்த வேதவசனங்களை ஆதாரமாகக் கொள்ளக்கூடாது.

சில சமயம் அந்த நேரத்தில் தானே பிரசங்கம் செய்யவும் ஜெபிக்கவும் ஊழியஞ்செய்யவும் நாம் அழைக்கப்படலாம். அந்த சமயத்தில் பரிசுத்த ஆவியானவர் தாமாகவே அபிஷேகித்து உதவி செய்வார் என்று நம்புகிறேன். அவர், இயேசுவை மக்கள் அறிய வேண்டும் என்றும் அவரே கிறிஸ்துவின் மூலம் நம்மை இரட்சிப்புக்குள் வழிநடத்தவும் விரும்புகிறார். அவர் எந்த சூழ்நிலையிலும் நாம் அவ்வாறு செய்ய நம்மை உபயோகிக்கிறார். வேத வசனங்களினாலும் ஜெபத்தினாலும் நம்மை எவ்வளவு ஆயத்தம் பண்ணுகிறோமோ, அவ்வளவாய் தேவன் நம்மை சிறப்பாக உபயோகிப்பார்.

தேவன் தமது ஊழியக்காரர் அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து உண்மையுள்ளவர்களாக இருக்க விரும்புகிறார். இது அவர்கள் சொந்த நலனுக்காகவும், யாரை வழிநடத்துகிறார்களோ அவர்களுடைய நலனுக்காகவும் தேவைப்படுகிறது. தினமும் வேதத்தைப் படித்து தியானம் செய்து ஜெபத்தில் தரித்திருக்கும்போது அது நம்மை ஒரு நீர்த்தேக்கம் போல் உருவாக்குகிறது. அதில் உள்ளதை பரிசுத்த ஆவியானவர் எடுத்து உபயோகிக்க முடியும். பரிசுத்த ஆவியானவர் பின்பு நமக்குப் போதிப்பதற்கு அவருடைய வல்லமை, ஞானம், தெய்வீக



அறிவு இவற்றைக் கூட்டித் தருகிறார். இதனால் கேட்கிறவர்களின் வாழ்க்கை மாறும்.

பரிசுத்த ஆவியானவர் நம்மை எந்த சூழ்நிலையிலும் உபயோகிக்க நாம் எப்பொழுதுதம் ஆயத்தமாயிருக்க வேண்டும் என்று தேவனுடைய வார்த்தை வலியுறுத்துகிறது. (2 தீமோத்தேயு 4:2; 1 பேதுரு 3:15). தேவனுடைய வார்த்தையை ஆழ்ந்து படிப்பதினாலும் ஜெபிப்பதினாலும் மாத்திரம் இது சாத்தியமாகிறது!

**4. அபிஷேகத்தைத் தவறாகப் பயன்படுத்த முடியும்.**

பரிசுத்த ஆவியின் வல்லமையைத் தவறாகப் பயன்படுத்தின ஆண்களையும் பெண்களையும் பற்றி வேதத்தில் அநேக உதாரணங்கள் உண்டு. அவ்வாறு அவர்கள் செய்தபோது அவர்களது தவறான நடக்கையினால் தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கும் கண்டனத்துக்கும் ஆளானார்கள்.

**a. நியாயாதிபதிகள் 13 - 16 அதிகாரங்கள் - சிம்சோன்.** சிம்சோனை மிகுந்த பராக்கிரமசாலியாக்கினது தேவன் அவனுக்குக் கொடுத்த வரம். பரிசுத்த ஆவியானவர் சிம்சோன் மேல் வந்து இறங்கினபொழுது (நியாயாதிபதிகள் 13:24, 25; 14:6, 19; 15:14) இஸ்ரவேலரைக் கொடுமைப்படுத்தின பெலிஸ்தலருக்கு எதிராக பலத்த செய்கைகள் புரிந்தான். சிம்சோனுக்கு மகா பெரிய வரம் இருந்தாலும் அவனுடைய ஒழுக்கம் கெட்ட வாழ்க்கை அவனுடைய அழிவுக்குக் காரணமாகி இஸ்ரவேலருக்குப் பணி செய்ய முடியாமல் அவன் வாழ்க்கை முடிந்தது. (பார்க்க : நியாயாதிபதிகள் 16ம் அதிகாரம்)

சிம்சோன் தான் விரும்பும் வண்ணமாக வாழ்க்கை நடத்தினாலும் தேவன் அபிஷேகிப்பார் என்று நினைத்தான். இது ஒரு முரட்டுத்தனமான துணிச்சலான எண்ணம். தேவனுடைய ஊழியக்காரனாயிராதபடி அவன் வாழ்க்கை தோல்வியில் முடிந்தது. அவன் பின்பு மனஸ்தாபப்பட்டான். தேவன் மறுபடியும் ஒருமுறை அவனை உபயோகித்தார். சிம்சோனுடைய வாழ்க்கையும் ஊழியமும் தேவன் தீர்மானித்ததில் மிகவும் குறைவாகவே நிறைவேறியது.

III பிரிவு B1-ல் குணமும் அபிஷேகமும் என்ற தலைப்பில் ஒரு சபையின் தலைவருடைய குணம் எவ்வாறு அவரது அபிஷேகத்துடன் நேரடி தொடர்புடையது என்பதை விரிவாகப் பார்க்கப் போகிறோம்.

**b. லேவியராகமம் 10:1-3**. நாதாப், அபியு, இருவரும் (பிரதான ஆசாரியரான) ஆரோனின் இரண்டு குமாரர், இஸ்ரவேல் ஜனங்களுக்கு ஆசாரியராகப் பணியாற்ற அபிஷேகிக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் *"கர்த்தர் தங்களுக்குக் கட்டளையிடாத அந்நிய அக்கினியை அவருடைய சந்நிதியில் கொண்டு வந்தார்கள்"* என்று வேதம் கூறுகிறது. (லேவியராகமம் 10:1) முன்பு கர்த்தர் கொடுத்த கட்டளைக்குப் புறம்பாக இதைச் செய்தார்கள் (யாத்திராகமம் 30:9).

தேவன் ஆசாரியர்கள், பலிகளையும் காணிக்கைகளையும் குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட முறைகளில் செலுத்த வேண்டும் என்று திட்டம் வைத்திருக்கிறார். கர்த்தருக்கும் அவர் வழிகளுக்கும் கீழ்ப்படிவதற்கு அதிகமாக முன்னுரிமை கொடுக்க வேண்டும். நாதாபும் அபியுவும் அபிஷேகிக்கப்பட்ட ஆசாரியர்களாயிருந்தாலும் அவர்கள் கீழ்ப்படியாமைக்கு மன்னிப்பில்லை. ஆரோனுடைய இரண்டு குமாரரும் தேவனுடைய ஊழியத்தைத் தங்கள் வழிகளிலே செய்தபடியால் தேவனுடைய நியாயத்தீர்ப்பு சடுதியாகவும் கடுமையாகவும் வந்தது (லேவியராகமம் 10:2).

சபையின் தலைவர்கள் தேவனுடைய வார்த்தையில் கூறப்பட்ட கட்டளைகளுக்கும் பரிசுத்த ஆவியின் வழி நடத்துதலுக்கும் எப்பொழுதும் கீழ்ப்படிய வேண்டும். எப்படி நாம் தேவனைப் பின்பற்றலாம் அவரது சபையில் எப்படி ஊழியம் செய்யலாம் என்பதை நாமே தேர்ந்தெடுக்கலாம் என்ற வலையில் விழுந்துவிடக்கூடாது. திறமையாக எவ்வாறு ஊழியம் செய்யலாம் என்று தேவனுடைய வார்த்தை கூறுவதை **எல்லாம்** அறிந்து நாம் முழுபலத்தோடு செய்ய வேண்டும்.

**போதகரிடமிருந்து போதகருக்கு:** தேவனால் அபிஷேகிக்கப்பட்ட சபைத் தலைவர்கள் விசேஷமாக தேவன் அவர்களை அதிக வல்லமையாக உபயோகிப்பதால் வேதத்திலுள்ள அடிப்படைக் கட்டளைகள் இனிமேல் தங்களுக்குத் தேவையில்லை என்று நினைப்பார்கள். அவர்கள் செய்கிறதெல்லாம் பரிசுத்த தேவனுடைய கண்களுக்கு முன்பாகவே நடக்கிறது என்பதை மறந்து போகிறார்கள் (லேவியராகமம் 10:3).

தேவன் வல்லமையாய் எடுத்து உபயோகிக்கிற ஆண்களும் பெண்களும் பின்பு ஒழுக்கம் கெட்டவர்களாக, பணத்தைக்



கையாடுபவர்களாக, மற்ற குற்றங்களையும் செய்பவர்களாக விழுந்து விடுகிறார்கள். ஒரே நேரத்தில் இந்தத் தவறுகளை அவர்கள் செய்வதில்லை. அவர்கள் சிறிய சிறிய தவறுகள் செய்வதில் ஆரம்பிப்பார்கள். அதற்குச் சமாதானம் சொல்லிக் கொள்வார்கள். அது தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாமையில் கொண்டு போய் முடியும். பின்பு முற்றிலும் தோல்வியில் முடியும். (யாக்கோபு 1:14, 15).

கர்த்தர் பரிசுத்தர். நாமும் பரிசுத்தர்களாக இருக்க அழைக்கிறார், என்பதை ஒருநாளும் மறக்கக்கூடாது. (லேவியராகமம் 11:44; 1 பேதுரு 1:16)

ஒவ்வொரு விசுவாசிக்கும், கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களுக்கும் விசேஷமாக அவரால் அழைக்கப்பட்டு அபிஷேகிக்கப்பட்ட தலைவர்களுக்கும் தேவனுடைய வார்த்தையும் அவருடைய கட்டளைகளும் உள்ளது.

**C. எண்ணாகமம் 11;16-30 - மூப்பர்கள்.** இஸ்ரவேலர் சுற்றித்திரியும்போது தேவன் தமது ஆவியை 70 மூப்பர்கள் மேல் வைத்தார். உடனே அவர்கள் தீர்க்கதரிசனம் உரைத்தார்கள் என்ற சம்பவம் வேதத்தில் எழுதப்பட்டுள்ளது (வசனம் 25) கர்த்தருடைய ஆசரிப்புக் கூடாரத்தில் கூடியிருந்த மற்றவர்களோடு இரண்டுபேர் இல்லை. அவர்கள் பாளையத்தில் இருந்துவிட்டார்கள். அந்த ஆவி அவர்கள் மேலும் வந்து தங்கின மாத்திரத்தில் தீர்க்கதரிசனம் சொன்னார்கள் (வசனம் 26)

யோசுவா அப்பொழுது மோசேயின் ஊழியக்காரனாயிருந்தான். அவன் அந்த இரண்டு பேரையும் தீர்க்கதரி



**கர்த்தருக்குக் கீழ்ப்படிவதற்கே முதலிடம் கொடுக்க வேண்டும்**

சனம் சொல்லாதபடி தடை பண்ணும் என்று கேட்கிறான் (வசனம் 28) மோசே யோசுவாவைக் கடிந்து கொண்டு, எல்லா கர்த்தரு டைய ஜனங்களும் தீர்க்க தரிசனம் சொல்ல த்தக்க தாக கர்த்தர் தம்மு டைய ஆவியை அவர்கள் மேல் இறங்கப்பண்ணினால் நலமாயிருக்கும் என்றான். (வசனம் 29, பார்க்க யோவேல் 2:28, 29; அப்போஸ்தலர் 2;14-21)

யோசுவா பாளையத்தில் இருந்த அந்த இரண்டுபேரும் மூப்பர்களோடு இல்லாததால் ஒழுங்குக்குப் புறம்பாக தீர்க்கதரிசனம் கூறுவார்கள் என்ற நல்ல எண்ணத்தோடுதான் சொன்னான். ஆனால் தேவன் யார் மூலமாக எப்பொழுது பேசுவார் என்று தீர்மானிப்பது அவன் பொறுப்பு என்று நினைத்தது தவறு.

**போதகரிடமிருந்து போதகருக்கு:** சபைத்தலைவர்கள் பரிசுத்தாவியானவரை கிரியை செய்யாதபடி தடை பண்ணினாலும் கட்டுப்படுத்த முயற்சி செய்தாலும் அவர்கள் தவறு செய்கிறார்கள். அடிக்கடி நமக்கு *'சகலமும் நல்லொழுக்கமாகவும் சிரமமாகவும் செய்ய* (1 கொரிந்தியர் 14:40) விருப்பம் உண்டு. ஆனால் நம் வழிகள் தேவனுடைய வழிகள் அல்ல (ஏசாயா 55:8, 9) நாம் மனித அளவின்படியும் எண்ணங்களின்படியும் மனநிறைவு கொள்ளுகிற காரியங்கள், தேவன் அந்த சமயத்தில் விரும்புகிறதற்கு மாறாக இருக்கக்கூடும்.

தேவன் எதிர்பாராத பொருட்கள் மூலம் வழக்கத்திற்கு மாறான முறைகளைக் கையாண்டு கிரியை செய்யக் கூடும். பிலேயாமின் கழுதையையும் (எண்ணாகமம் 22:24-40) இயேசுவானவர் குருடனைக்குணப்படுத்த புழுதியில் எச்சில் துப்பி உபயோகித்ததையும் நினைத்துப் பாருங்கள். (யோவான் 9:1-6).

நாம் கர்த்தரின் ஆவி பொழியும் பெரிய அறுவடையின் காலத்தில் இருக்கிறோம். இயற்கைக்குப் புறம்பான சம்பவங்கள், அற்புதங்கள் தீர்க்கதரிசனங்கள், மற்ற கர்த்தருடைய ஆவியானவர் வெளிப்படையாகச் செய்யும் அடையாளங்கள் உலகத்தில் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. நாம் கர்த்தருடைய நாமத்தினால் செய்கிறதெல்லாவற்றையும் அப்படியே நம்பி ஏற்றுக்கொள்ளக்கூடாது. நாம் தெளிந்த புத்தியுள்ளவர்களாக ஆராய்ந்து பார்க்க வேண்டும். (மத்தேயு 7:21-23). நாம் எந்த



நிலையிலும் பரிசுத்தாவியானவருக்குக் கீழ்ப்படிந்து அவரோடு ஒத்துழைக்கப் படிக்க வேண்டும்.

பரிசுத்த ஆவியானவர் மூலமாக எப்பொழுது எப்படி கிரியை செய்யலாம் என்று நாம் தீர்மானிக்கக் கூடாது. அவர் தெரிந்துகொண்ட பாத்திரம் நிச்சயமாக பூரணபுருஷனாக இருக்க மாட்டார்கள். நாம் ஒருவரும் உத்தமர்கள் அல்ல. ஆனாலும் நம் மூலமாகத் தான் தேவன் கிரியை செய்யத் தீர்மானிக்கிறார்.

ஆனாலும் இதை நாம் கவனிக்க வேண்டும். பாவத்தில் வாழ்கிறவர்களோடும் தவறானதைப் போதிக்கிறவர்களோடும் நமக்குத் தொடர்பு இருக்கக் கூடாதென்று வேதம் திட்டமாகக் கூறுகிறது. (1 தீமோத்தேயு 6:3-5; II தீமோத்தேயு 3:1-5) நாம் தீர்க்கதரிசனத்தைக் கவனமாய் நிதானித்து அறிய வேண்டும் (1 கொரிந்தியர் 14:29) நாம் ஒரு சகோதரனையாவது சகோதரியையாவது வெளிப்படையான தகுதியைப் பார்த்து எடைபோடக் கூடாது (2 கொரிந்தியர் 5:16, 17)

போதகர்களான நாம் சபையை வழிநடத்த வேண்டும் என்ற விருப்பத்தில் எல்லாவற்றையும் நம் ஆளுகைக்குள் கொண்டு வரக்கூடாது. அது நாம் பரிசுத்த ஆவியானவர் நம் மத்தியில் கிரியை செய்ய விடாமல் முற்றிலும் தடுத்தது போலாகும். (யோசுவா அநேகமாக இவ்வாறு செய்ய முயன்றான்)

நாம் சேவை செய்யும் மக்களை சீடர்களாக்கவும், அவர்கள் எப்பொழுது எவ்வாறு தீர்க்கதரிசனம் சொல்லலாம் என்பதைப் போதிக்கவும் நேரம் செலவழிக்கவேண்டும். அவர்கள் ஆவிக்குரிய வளர்ச்சி அடைய பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்ய நாம் விட்டுக்கொடுக்க வேண்டும். போதகர்களான நாம் மக்களை சீடர்களாக்க வழி நடத்த வேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அதாவது பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்ளவும், அவரது வழிநடத்துதலுக்கு விட்டுக் கொடுக்கவும். அவர்களுக்கு போதிக்க வேண்டும்.

**d. அப்போஸ்தலர் 5:1-11; 8:9-24. - அனனியாவும் சப்பீராளும் : சீமோன் என்ற மாய வித்தைக்காரன்.** அப்போஸ்தலர் நடபடிகள் என்ற புத்தகத்தில் ஆதி சபையில் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையைத்

தவறான வழியில் உபயோகித்த இரண்டு சம்பவங்களைப் பற்றி எழுதப்பட்டிருக்கிறது.

1) முதலில் கூறப்படுவது அனனியாவும் சப்பீராளும் பற்றியது (அப்போஸ்தலர் 5:1-11). அவர்கள் தங்கள் காணியாட்சியை விற்றதில் ஆதிச் சபைத் தலைவரை ஏமாற்ற முயற்சித்தார்கள். ஆனால் பேதுரு அவர்களைப் பார்த்து, பரிசுத்தாவியினிடம் பொய் சொன்னதாகக் குற்றஞ் சொல்லுகிறார். (வசனம் 3) இந்தப் பகுதியை வாசிக்கும்போது அவர்கள் கொடுத்த பணத்தைக் குறித்து அல்ல (வசனம் 4). ஆனால் அவர்கள் மாய்மாலம் பண்ணினதைக் குறித்தே நியாயந்தீர்க்கப் பட்டார்கள். கர்த்தர் சதுசேயர் பரிசேயருக்குள்ள மாய்மாலத்தையும் மதவைராக்கிய ஆவியையும் குறித்துக் கண்டிக்கிறார். (மத்தேயு 23:1-36; 6:1-6; மாற்கு 12:38-40)

கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களுடைய நீதி பரிசேயருடைய நீதியிலும் அதிகமாக இருக்க வேண்டும். (மத்தேயு 5:20) இது இருதயத்திலிருந்து உண்டான நீதியாக இருக்க வேண்டும். வெளிப்படையான தோற்றத்தின்படியான நீதியாக இருக்கக் கூடாது. ஒரு மனிதனுக்கு உள்ளான நீதி இருந்தால், அவன் வெளிப்படையாக யோக்கியமான நடையை உடையவனாய் இருப்பான். அதுவும் நீதிக்குட்பட்டதே. (மத்தேயு 23:25, 26)

அனனியாவும் சப்பீராளும் ஆதிச் சபையில் தங்கள் சொந்த ஆதாயத்துக்காக பரிசுத்த ஆவியினுடைய வழிநடத்துதலைத் தங்களுக்கு சாதகமாக்கிக் கொண்டார்கள். அவர்கள் அங்கு நடந்த ஊழியத்தில் அவர்களோடு ஒத்துழைப்பது போல தோற்றத்தைக் காட்டினார்கள். ஆனால் அவர்களில் தன்னயமும் மறைவான குற்றமும் இருந்தது. தேவனால் நியமிக்கப்பட்ட அப்போஸ்தலராகிய தலைவர்களின் அதிகாரத்தை அவர்கள் மதிக்கவில்லை என்பது அவர்களுடைய செய்கையால் தெரிகிறது. கடைசியாக அப்போஸ்தலருக்கு அதிகாரத்தை அளித்த பரிசுத்த ஆவியானவரை அவர்கள் மதிக்கவும் மகிமைப்படுத்தவும் இல்லை.

கர்த்தர் அனனியா சப்பீராளுடைய இருதயத்தைப் பார்த்தார். உடனே தீவிரமாகக் கடுமையான தீர்ப்பை அளித்தார். (அப்போஸ்தலர் 5:5, 9, 10)



கர்த்தர் கறைதிரை இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான சபையை விரும்புகிறார். இதற்காக சபையின் தேவனாகிய கர்த்தர் இடைவிடாமல் கிரியை செய்து சபையை பரிசுத்தமான மணவாட்டியாக ஆயத்தப்படுத்துகிறார் (எபேசியர் 5:26, 27). நம்மை அதிகமாக நேசிப்பதால் சிட்சித்து திருத்துகிறார். (1 பேதுரு 4:17; எபிரெயர் 12:3-11)

2) ஆதிச் சபையில் பரிசுத்தாவியானவரின் அபிஷேகத்தைத் தவறாக பயன்படுத்த முயன்ற சம்பவம் அப்போஸ்தலர் 8:9-24ல் காணலாம். இது இரண்டாவது சம்பவம், இங்கு நாம் புதிதாகக் கிறிஸ்துவுக்குள் இரட்சிக்கப்பட்ட சீமோன் என்ற மாய வித்தைக்காரனைக் காண்கிறோம் (வசனம் 13). சீமோன் பிலிப்புவைப் பின்தொடர்ந்து வரும்போது, பரிசுத்த ஆவியானவரின் பலத்தால் நடந்த பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் கண்டு பிரமித்தான்.

பரிசுத்த ஆவியானவரின் பலத்தால் அப்போஸ்தலர்கள் ஊழியஞ் செய்கிறதைக் கண்ட சீமோன் அந்த வல்லமையைத் தானும் பெற வேண்டும் என பேராசைப்பட்டான். அவன் வளர்ச்சி பெறாததாலும், உலகப்பிரகாரமான சிந்தை இன்னும் இருப்பதாலும் அவன் அப்போஸ்தலரிடம் பணத்தைக் கொடுத்து தனக்கு இந்த அதிகாரத்தைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டான். (வசனம் 18, 19)

பேதுரு பரிசுத்த ஆவியின் வல்லமையினால் சீமோனுடைய இருதயத்தில் உள்ள தவறான நோக்கத்தைத் தெரிந்து *"நீ கசப்பான பிச்சிலும் பாவக்கட்டிலும் அகப்பட்டிருக்கிறதைக் காண்கிறேன்"* (வசனம் 23) என்று சொன்னான். சீமோனுக்குத் தன்னயமான நோக்கம் இருந்தது என்றும், அவனுடைய இருதயம் பாவக்கட்டில் இருந்ததால் அவன் பரிசுத்த ஆவியை வாஞ்சித்தது பிறருக்கு ஊழியம் செய்யவும் தேவனை மகிமைப்படுத்தவும் இல்லை என்பதும் தெளிவாகத் தெரிகிறது.

இந்த இடத்தில் கசப்பு என்பது கசப்பான வைராக்கியத்தையும் விரோதத்தையும் போல் இருக்கிறது. (யாக்கோபு 3:14) மற்றவர்கள் தன்னை மதிக்க வேண்டும் தான் மாயவித்தைக்காரனாயிருந்தபோது மற்றவர்களைக் கவர்ந்ததுபோல தன்னைப் பெரியவனாக பிறர் மதிக்க வேண்டும் என்று ஒருவேளை சீமோன் நினைத்திருக்கலாம் (அப்போஸ்தலர் 8:9-11) தன் சொந்த உபயோகத்துக்காக தேவனுடைய வல்லமையைப் பெற விரும்பினான்.

**போதகரிடமிருந்து போதகருக்கு:** இன்றைய தினத்தில் கூட நாம் அநேக ஊழியர்கள், மதத்தலைவர்கள் உண்மையாகவே அதிக வரம் பெற்றவர்களாகவும் அபிஷேகம் பெற்றவர்களாகவும் தேவனால் வல்லமையாய் உபயோகிக்கப்பட்டவர்களாயிருக்கிறதைக் காண்கிறோம். ஆனால் வருந்தத்தக்கது என்னவென்றால் தங்களைப் பற்றி நினைப்பதற்கு மேலாக நினைக்க ஆரம்பிக்கிறார்கள். அவர்கள், இரக்கமுள்ள கர்த்தரிடமிருந்து இந்த வல்லமையைப் பெறாததுபோலவும் தங்களிடமிருந்து தான் வல்லமை தோன்றினது போலவும் நடந்து கொள்வார்கள் (2 கொரிந்தியர் 4:5-7) அவர்கள் ஊழியத்தின் பெயரிலே, தங்கள் பெயர் பிரஸ்தாபமடைய வேண்டும், அதன்மூலம் பணம் சம்பாதிக்கவும் பிறரைத் தங்களைப் பின்பற்ற அவர்களை ஊக்கப்படுத்தவும் செய்கிறார்கள்.

அநேக தலைவர்கள் சரியானபடி தங்கள் ஊழியத்தைத் தொடங்குவதில்லை. கர்த்தருடைய வல்லமையினால் மக்களுடைய வாழ்க்கை மாறும்போது நல்ல தலைவர்கள் தேவனுக்கே இந்த மகிமையைச் செலுத்துகிறார்கள். அவர்கள் தேவன் வழி நடத்துவதைக் காண அடங்கா ஆசையுடையவர்களாயிருக் கிறார்கள். ஆனால் நாம் எல்லாவகைக் காவலோடும் நம் இருதயத்தை ஜாக்கிரதையாக்க காக்காவிட்டால் (நீதிமொழிகள் 4:23) வழி தவறி செல்லக்கூடும்.

சாத்தானால் தேவனுடைய வல்லமையை மறுக்கவோ, அடக்கவோ, எதிர்க்கவோ, ஜெயிக்கவோ முடியாது. (யோவான் 1:5) அதற்குப் பதிலாக சாத்தான் சபைத்தலைவர்களை வஞ்சிக்கவும், இருதயத்தில் விஷத்தைக் கலக்கவும் முயலுவான் (2 கொரிந்தியர் 2;11; 11:13-15). அவன் தலைவர்களைக் கருவியாக உபயோகித்துத் தன்னை அவர்கள் வணங்கவும், தேவனையும் அவர் திட்டங்களையும் அவர்கள் இனி கைவிடப்படியும் செய்வான்.

### நம்பிக்கையில் உறுதியாயிருங்கள்

அனனியா சப்பீராள் வாழ்க்கை, சிமியோன் வாழ்க்கை இவற்றின் மூலம் நாம் ஜாக்கிரதையாயும் தெளிந்த புத்தியுள்ளவர்களாயும் இருக்க பாடங்கள் தரப்பட்டிருக்கிறது. **நாம் அனுமதித்தால்** சாத்தானுக்கு நம் எண்ணங்களையும் செயல்களையும் தூண்டக்கூடிய வல்லமை



இருக்கிறது (அப்போஸ்தலர் 5:3) நாம் அதற்கு இடங்கொடுக்கக் கூடாது (எபேசியர் 4:27).

ஆனாலும் தலைவர்கள் நீதியைப் புறக்கணித்து பாவத்தைத் தெரிந்து கொண்டு தவறு இழைத்தால் - இது ஒரு பெரிய பாவமாகும். முதலாவது கர்த்தர் பரிசுத்தராயிருக்கிறார். நமக்கும் கர்த்தருக்கும் உள்ள தொடர்பை பாவம் தடை பண்ணுகிறது. கிறிஸ்துவைப் பின்பற்றுகிற யாவரும் பரிசுத்தமாகவும் ஒழுக்கமுள்ள வாழ்க்கை வாழவும் வேண்டுமென கட்டளை தரப்பட்டிருக்கிறது. (1 பேதுரு 1:13-19)

இரண்டாவதாக, தலைவர்களாக அழைக்கப்பட்டவர்களாகிய நமது பாதுகாப்பில் கர்த்தருடைய ஜனங்கள் இருக்கிறார்கள். நாம் பாவத்தில் விழும்போது அவர்களுக்கு நம்மேல் இருக்கிற நம்பிக்கை தகர்ந்து விடும். நாமும் நம் ஜனங்களுக்கு ஒரு தவறான முன் மாதிரியாக இருப்போம். நாமும் நம் மந்தையின் ஆடுகளை பாதாளத்தின் தாக்குதலுக்குத் தங்களைக் காத்துக்கொள்ள முடியாத நிலைக்கு விட்டு விடுகிறோம். (1 பேதுரு 5:2-4; அப்போஸ்தலர் 20:28-30; எபிரெயர் 13:7, 17, யாக்கோபு 3:1) சாத்தான் சபைத்தலைவரைக் கெடுத்துவிட்டால் மந்தையின் ஆடுகள் சிதறடிக்கப்படும். தங்களைக் காத்துக்கொள்ள முடியாத நிலைக்குத் தள்ளப்படுவார்கள் (மாற்கு 14:27).

நமது வீழ்ச்சி நமது குடும்பத்தையும் நமது மதிப்பையும் பாதிக்கிறது. சபைத்தலைவர்களின் மதிப்பும் மரியாதையும் கெட்டுப்போகிறது. அவர்களை நம்பிக்கையில்லாமல் சந்தேகக் கண்களோடு பார்ப்பார்கள். (சபையின் மூப்பர்களைத் தேர்ந்தெடுப்பதைக் குறித்து பவுல் (1 தீமோத்தேயு 3:1-7 வசனங்களில் கூறியதை வாசித்துப் பார்) சாத்தான் சபைத் தலைவர்களைக் குறி வைத்து அவர்களை அழிப்பதையே தனது திட்டமாக வைத்திருக்கிறான். நீங்கள் அவன் சோதனையில் விழாமல் தப்பிக்கொண்டால், **அவன் உங்களைப் பாவத்தில் விழச் செய்ய முடியாது.** பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள். அவன் உங்களை விட்டு ஓடிப் போவான் (யாக்கோபு 4:7)

உங்கள் தலைமை பொறுப்பும் அபிஷேகமும் உங்களுக்குக் கொடுக்கப்பட்ட *தனிச்சலுகை.* அது மாத்திரமல்ல. அது நீங்கள் கவனிக்க வேண்டிய முக்கிய ***பொறுப்பாகும்.*** விசுவாசத்தைக் காத்துக் கொண்டு முடிவு பரியந்தம் நன்மையைச் செய்து நிலைத்து இருக்க

வேண்டும் என்று வேதம் வற்புறுத்திக் கூறுகிறது. (மத்தேயு 24:13; பிலிப்பியர் 3:17, 17; 2 தீமோத்தேயு 4:6-8)

நாம் முடிவு பரியந்தம் நமது விசுவாசத்தையும் நம்பிக்கையையும் கிறிஸ்துவுக்குள் காத்துக்கொண்டு தம் மந்தைக்கு மாதிரியாக இயேசுவுக்கு மகிமை உண்டாக்கும்படி நடக்கவேண்டும் (1 பேதுரு 5:23)

## D. அபிஷேகத்துக்குப் பழைய ஏற்பாட்டு முன் வடிவங்கள்

இந்தப் பாடத்தை தொடர்ந்து ஆராய்ச்சி செய்யும்போது பழைய ஏற்பாட்டிலுள்ள அபிஷேகங்களைக் குறித்துப் பார்க்கப் போகிறோம். முன்னால் கூறினபடி, பழைய ஏற்பாடு நமக்கு திருஷ்டாந்தங்களாகும் படியும் நமக்கு எச்சரிப்புண்டாகும்படியும் எழுதப்பட்டு இருக்கிறது. (ரோமர் 15:4; 1 கொரிந்தியர் 10:11). அபிஷேகம் நமக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம். புதிய ஏற்பாட்டில் சபைகள் தோன்றிய காலங்களின் தொடக்கத்தில் இந்த வாக்குத்தத்தம் நிறைவேறியது (அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்தைப் பார்க்க).

### 1. முன் வடிவங்களின்அடையாளங்கள் (Symbolic Foretypes)

பரிசுத்த ஆவியானவர் என்பது ஒரு நபர். அவரது கிரியைகளைப் பற்றி பழைய ஏற்பாட்டில் அநேக அடையாளங்கள், முன்வடிவங்களாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

a. **அக்கினி -** ஆசரிப்புக் கூடாரத்தில் தூபவர்க்கம் உள்ள பலிபீடத்தில் மேல் உள்ள சர்வாங்க தகன பலியில் தேவனிடத்திலிருந்து முதன் முதலாக வந்த அக்கினி அவியாமல் எரிந்துகொண்டே இருக்க வேண்டும் (லேவியராகமம் 9:24; 2 நாளாகமம் 7:1-3). இந்த அக்கினி எப்பொழுதும் எரிந்துகொண்டே இருக்க வேண்டும். (லேவியராகமம் 6:13)

இதே போல் புதிய ஏற்பாட்டில் ஜீவனுள்ள தேவனுடைய ஆவியின் பிரசன்னத்தை வெளிப்படுத்த அக்கினி போன்ற தோற்றம் காணப்பட்டது. (மத்தேயு 3:11; அப்போஸ்தலர் 2:3)

b. **தண்ணீர்** - பழைய ஏற்பாட்டில் தண்ணீரைப் பரிசுத்த ஆவியானவருக்கு அடையாளமாகக் கூறுகிறார்கள். தண்ணீரைப் போல பரிசுத்த ஆவியானவர் ஆவிக்குரிய புத்துணர்ச்சியையும் தேவனிடத்திலிருந்து ஆசீர்வாதத்தையும் பெற்றுத் தருகிறார். உலகத்தின் இந்தப் பகுதியில் தண்ணீர் அரிதாய் இருப்பதால் பரிசுத்த ஆவியானவருக்கு இந்த அடையாளத்தை உபயோகித்திருப்பது



தெளிவாக ஜனங்களுக்கு உணர்த்தப்பட்டிருக்கிறது. (சங்கீதம் 23:2, ஏசாயா 35:6, 7)

எசேக்கியேலுக்கு ஒரு தரிசனம் கிடைத்தது. அதில் ஒரு பெரிய ஆறு தேவனுடைய வாசஸ்தலமான ஆலயத்திலிருந்து புறப்பட்டு பாய்கிறதைக் கண்டான். (எசேக்கியேல் 47:1-12) இது தேவனுடைய ஆவி ஜனங்கள் மத்தியில் தடைபடாமல் பொழிவதைக் காட்டுகிறது.

எரேமியா கர்த்தருடைய பிரசன்னத்தைக் காட்ட *"ஜீவ தண்ணீர் ஊற்று"* என்று கூறுகிறார். இயேசுவுங்கூட ஜீவத்தண்ணீரைப் பற்றிப் பேசுகிறார். *"அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்"* தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப் போகிற ஆவியைக் குறித்து இப்படிச் சொன்னார் (யோவான் 7:37-39). இந்த இடத்தில் இயேசுவானவர் தீர்க்கதரிசனமாக வரப்போகிற பரிசுத்த ஆவியின் பொழிவைப்பற்றித் தெளிவாகக் கூறுகிறார். (யோவான் 14:16, 17; அப்போஸ்தலர் 2)

c. **இரத்தம் -** பழைய ஏற்பாட்டில் ஆசாரியர்கள் தனிப்பட்ட விதத்தில் அபிஷேகம் செய்யப்பட்டபோது அதில் இரத்தமும் அடங்கியிருந்தது (யாத். 29:19-12).

d. **எண்ணெய் -** பழைய ஏற்பாட்டில் எல்லா இடத்திலும் எண்ணெயின் உபயோகத்தைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. சமையல், விளக்கு, அழகு சாதனங்கள் செய்வது போன்ற சாதாரண உபயோ கத்துக்காகவும் உயர்ந்த ஆலயத்திலுள்ள விழாக்களிலும் எண்ணெய் பெரும்பங்கு வகித்திருக்கிறது.

எண்ணெய் பரிசுத்த ஆவியின் பிரசன்னத்துக்கும், பரிசுத்தப்படுத்தும் வல்லமைக்கும் அடையாளமாகக் கூறப்பட்டிருக்கிறது. இதை இராஜாக்களிலும் (1 சாமுவேல் 10:1) ஆசாரியர்களிலும் (யாத்திராகமம் 29:1-9) குஷ்டரோகிகளைச் சுத்திகரிப்பதிலும் (லேவியராகமம் 14:10-18) நாம் பார்க்கிறோம்.

எண்ணெய் மகிழ்ச்சிக்கு அடையாளமாகக் கூறப்பட்டிருக்கிறது. (ஏசாயா 61:3) எண்ணெய் அற்றுப் போவது துக்கத்துக்கும் அவமானத்துக்கும் அடையாளமாகக் கூறப்பட்டிருக்கிறது (யோவேல் 1:10) எண்ணெய் செழிப்புக்கு அடையாளமாகவும் (உபாகமம் 33:24) ஆறுதல் (யோபு 29:6) ஆவிக்குரிய போஷாக்கு (சங்கீதம் 45:7) இவற்றிற்கு அடையாளமாகவும் கூறப்பட்டிருக்கிறது.

## வல்லமை வாய்ந்த அடையாளங்கள்

பழைய ஏற்பாட்டை நாம் சுருக்கமாகப் பார்க்கும்போது உயர்ந்த ரக அடையாளங்களுடைய களஞ்சியங்கள், படங்கள், உருவங்களின் தொகுதி இவை பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பற்றியும், நம் வாழ்க்கையில் அவருடைய கிரியைகளையும் பற்றி நமக்கு அதிகமாக வெளிப்படுத்துகிறது.

இவை முன் வடிவங்களாக இப்பொழுது நம்மிடையே கிரியை செய்து வருகிற பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தையும் கிரியையும் உறுதிப்படுத்துகிறது. இந்த அபிஷேகத்தின் மூலம் நம் பரம பிதா மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன் (யோவேல் 2:28-32) என்று நமக்கு அருளிய வாக்குத்தத்தம் நிறைவேற்றிற்று. (அப்போஸ்தலர் 2:33-39).

பரிசுத்த அபிஷேக தைலத்தை உண்டு பண்ணுவதும் பயன்படுத்துவதுமே, அபிஷேகிக்கப்பட்ட பரிசுத்த ஆவியின் வல்லமையான அடையாள வடிவமாகும்.

பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின் இயல்பும் செயலும் பற்றிய உள்அறிவு கீழே கொடுக்கப்பட்ட பத்தியைப் படிக்கும் போது விளங்கும்.

*பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: மேன்மையான சுகந்த வர்க்கங்களாகிய சுத்தமான வெள்ளைப் போளத்தில் பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கலின்படி ஐந்நூறு சேக்கல் இடையையும் சுகந்த கருவாப்பட்டையிலே அதில் பாதியாகிய இருநூற்று ஐம்பது சேக்கல் இடையையும், சுகந்த வசம்பில் இருநூற்று ஐம்பது சேக்கல் இடையையும், இலவங்கப்பட்டையிலே ஐந்நூறு சேக்கல் இடையையும், ஒலிவ எண்ணெயில் ஒரு குடம் எண்ணெயையும் எடுத்து, அதனால், பரிமள தைலக்காரன் செய்வதுபோல, கூட்டப்பட்ட பரிமள தைலமாகிய சுத்தமான அபிஷேக தைலத்தை உண்டு பண்ணுவாயாக; அது பரிசுத்த அபிஷேக தைலமாயிருக்கக்கடவது. அதினாலே ஆசரிப்புக் கூடாரத்தையும், சாட்சிப் பெட்டியையும், மேஜையையும், அதின் பணிமூட்டுகள் எல்லாவற்றையும், குத்து விளக்கையும், அதன் கருவிகளையும், தூப பீடத்தையும், தகன பலிபீடத்தையும், அதின் பணி மூட்டுகள் எல்லாவற்றையும், தொட்டியையும், அதின் பாதத்தையும் அபிஷேகம் பண்ணி, அவைகள் மகா பரிசுத்தமாயிருக்கும்படிக்கு, அவைகளைப் பரிசுத்தப்படுத்துவாயாக; அவைகளைத் தொடுகிறதெல்லாம் பரிசுத்தமாயிருக்கும். ஆரோனும் அவன் குமாரரும் எனக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படிக்கு, நீ அவர்களை அபிஷேகம் பண்ணி, அவர்களைப் பரிசுத்தப் படுத்துவாயாக. இஸ்ரவேல் புத்திரரோடே நீ பேசிச் சொல்ல வேண்டியதாவது: உங்கள் தலைமுறை தோறும் இது எனக்குரிய பரிசுத்த அபிஷேக தைலமாயிருக்க வேண்டும். இது மனித சரீரத்தின் மேல் வார்க்கப்படலாகாது; இது செய்யப்பட்ட முறையின்படி அவர்கள் வேறொரு தைலத்தைச் செய்யவுங் கூடாது; இது பரிசுத்தமானது; இது உங்களுக்குப் பரிசுத்தமாயிருப்பதாக. இந்த முறையின்படியே தைலங்கூட்டுகிறவனும், அதில் எடுத்து அந்நியன் மேல் வார்க்கிறவனும், தன் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டு போகக் கடவன் என்று சொல் என்றார்."* (யாத்திராகமம் 30:22-33)

அபிஷேக தைலமானது புனிதமானது மற்றும் கர்த்தருக்குப் பரிசுத்தமானது. இஸ்ரவேல் புத்திரரும் அபிஷேக தைலத்தை இதைப் போலவே நோக்க வேண்டும். இந்த ஒப்பற்ற அபிஷேக தைலமாவது தனித்தன்மை வாய்ந்தது, புனிதமான நிகழ்வுகளுக்குப் பயன்படுவதுமாக உள்ள கலவையாகும். (வசனங்கள் 31-33)

கர்த்தர் தெய்வீக விதிமுறையை இந்த அபிஷேகத் தைலத்துக்குக் கொடுத்துள்ளார் (வசனங்கள் 22-25). மற்ற உபயோகத்துக்காக இதைப் போலொத்த தைலத்தைச் செய்யக் கூடாது. உடன்படிக்கை பண்ணப்பட்ட இஸ்ரவேல் ஜனங்களல்லாத அந்நியர் மேல் இது வார்க்கப்பட தடைவிதிக்கப்பட்டுள்ளது.

## தெய்வீகத் திட்டம்

பரிசுத்தாவியின் அபிஷேகத்தின் முன் மாதிரியாக இது இருப்பதினால் இந்த விசேஷித்த அபிஷேகத் தைலத்தைப் பற்றிய கண்டிப்பான கட்டளைகள் மூன்று மிக முக்கிய கொள்கைகளை வெளிப்படுத்துகிறது.

**முதல் திட்டம்:** அபிஷேக தைலத்திற்கான கலவையை அவர் கட்டளையிட்டது போலவே பரிசுத்தாவியின் அபிஷேகத்தைக் குறித்தும் தேவனுக்கு தலையாய சித்தம் உண்டு. (யாத்திராகமம் 30:22-25) தேவன் மட்டுமே அவருடைய அபிஷேகத்திற்கு வழிநடத்துவார், (1 சாமுவேல் 10:1) மேலும் இந்த அபிஷேகம் ஒரு மனிதனுடைய வாழ்க்கையின் மூலம்

எவ்வாறு வெளிப்பட வேண்டும் என்றும் வழிநடத்துவார். (1 கொரிந்தியர் 12:7, 11).

**இரண்டாவது,** ஆசரிப்புக் கூடாரத்தில் ஊழியம் செய்யும் ஆசாரியர்களுக்கு அபிஷேக தைலம் உரியது என திட்டமிடப் பட்டுள்ளது. (யாத்திராகமம் 30:30). இது மனிதனுடைய சரீரத்தின் மேல் வார்க்கப்படலாகாது (30:32) இயேசு கிறிஸ்துவுக்குள் உள்ள **எல்லா உண்மையான விசுவாசிகளும்,** கர்த்தருடைய ராஜரீகமான ஆசாரியர்களாக (1 பேதுரு 2:9, 10; வெளிப்படுத்துதல் 1:6) இருப்பதால் பரிசுத்தாவியின் அபிஷேகம் உடையவர்களாக இருக்கிறார்கள். (1 யோவான் 2:20-27)

இந்த அபிஷேகம் அவிசுவாசிகளுக்குக் கிடைக்காது. இரட்சிக்கப்பட்டவர்களுக்குள்ளும், கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து யாரெல்லாம் நடக்கிறார்களோ அவர்களுக்குள் மட்டும் தான் வாசம் செய்வார். (யோவான் 3:5, 6; ரோமர் 8:11-16; 1 கொரிந்தியர் 12:3).

**போதகரிடமிருந்து போதகருக்கு:** பழைய ஏற்பாட்டில், பிரதான ஆசாரியன் வருடத்திற்கு ஒரு முறை ஜனங்களின் பாவ நிவாரணத்திற்காக மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிப்பான். (லேவியராகமம் 16ம் அதிகாரம் பார்க்க) அவனுக்கு மட்டும் தான் ஒவ்வொரு வருடமும் தேவனை நேரடியாக அணுகக் கூடிய வழி உண்டு.

சிலுவையில் கிறிஸ்து மரித்த வேளையில், தேவாலயத்தில் உள்ள மகா பரிசுத்த ஸ்தலத்தை மூடியிருந்த திரைச் சீலை இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் மேலிருந்து கீழாக கிழிந்தது. (மாற்கு 15:38; யாத்திராகமம் 26:31-33) இந்த வல்லமையை வெளிப்படுத்தும் சம்பவம், எல்லா ஜனங்களும் தேவ சமூகத்தில் பிரவேசிப்பதற்குரிய வழி உண்டாயிருக்கிறதை வெளிப்படுத்துகிறது. கிறிஸ்து மனுக்குலத்தின் பாவங்களைச் சிலுவையில் எப்பொழுது நீக்கினாரோ, அப்பொழுதே அவரை ஏற்றுக் கொண்டவர்கள் அனைவருக்கும் அவர் மூலம் விசுவாசத்தினாலே இரட்சிப்பு உண்டானது. (ரோமர் 10:9, 10)

கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான் (ரோமர் 10:12, 13) இயேசு கிறிஸ்துவுக்குள் யாரெல்லாம் விசுவாசத்தினாலே இரட்சிக்கப்பட்டார்களோ அவர்கள்



தேவனுடைய பிரசன்னம் உள்ள கிருபாசனத்தண்டை சேரும் சிலாக்கியம் பெற்றவர்கள். அல்லேலூயா! (எபேசியர் 3:12; எபிரெயர் 4:16, 10:19)

கிறிஸ்தவர்களுக்கு கர்த்தரிடம் தங்கள் சார்பாகச் செல்வதற்கு ஆசாரியனோ அல்லது வேறு யாரோ இனிமேல் தேவையில்லை. ஒவ்வொரு விசுவாசியும் ஆராதனை ஜெபம் மற்றும் ஐக்கியம் மூலம் கர்த்தரோடு தனிப்பட்ட முறையில் உறவு கொள்ளலாம், உறவு கொள்ள வேண்டும். அவர்கள் அவரிடம் பேசலாம், ஜெபிக்கலாம், அவர்கள் பேசுவதை அவர்கள் கேட்கலாம்.

இரட்சிக்கப்பட தேவ குமாரனை விசுவாசிக்கிற **யாவரும்** தேவனை அடையக் கூடும். அதனால் தான் எல்லா விசுவாசிகளும் பரிசுத்த ஆசாரியக்கூட்டம் என்று அழைக்கப்படுகிறார்கள். *"....நீங்களும், ஜீவனுள்ள கற்களைப் போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனுக்குப் பிரியமானஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்கு* (ஆராதனை, ஜெபம், ஊழியர்கள், தசம பாகம் காணிக்கைகள்) *பரிசுத்த ஆசாரியக் கூட்டமாகவும் கட்டப்பட்டு வருகிறீர்கள்* (1 பேதுரு 2:5; பார்க்க ; வெளிப்படுத்துதல் 1:6)

நாம் கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்பட "ஆவிக்கேற்ற பலிகள்" **காரணமாகாது.** சிலுவையில் இயேசு தம்மையே பலியாகக் கொடுத்ததினிமித்தம் கர்த்தரால் நாம் அங்கீகரிக்கப்பட்டுள்ளோம். இயேசுவுக்குள் விசுவாசத்தினாலே இரட்சிக்கப்படுகிறோமே தவிர நமது எந்த கிரியையினாலுமல்ல. (எபேசியர் 2:8, 9)

தேவாலயத்திலுள்ள மகா பரிசுத்த ஸ்தலத்தை மூடியிருந்த திரைச்சீலை மேலிருந்து கீழாகக் கிழிந்ததற்கு இதுவே காரணம். இந்தச் செயல் இரட்சிப்பு தேவனால் உண்டானது என்பதைத் தெளிவுபடுத்துகிறது. இதன் பொருள் என்னவென்றால் கர்த்தரை நாம் அடைவதற்காக கிறிஸ்து தமது விலையேறப்பெற்ற ரத்தத்தைச்சிந்தி நமது பாவங்களுக்காக மரித்தார் என்பதே.

நாம் நீதிமான்களாவதற்கு முயற்சி எடுப்பது இறுதியில் பயனற்றதாகும். இது இரட்சிப்பை சம்பாதிக்க உதவாது. (ரோமர் 3:9-20; கலாத்தியர் 2:16)

எப்படியாயினும், நாம் விசுவாசத்தினாலே ஆவிக்கேற்றபடி பலிகளைச் செலுத்துவதினாலும், கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து நடப்பதினாலும் அவருடைய சரீரத்துக்கும், உலகத்துக்கும் ஊழியம் செய்வதன் மூலம் வெளிப்படுத்துகிறோம். (யாக்கோபு 2:14-26)

போதகரே, சிலுவையைப் பற்றிய மூல உபதேசத்தை அவர்களுக்குப் புரியும்படி அடிக்கடி பேச வேண்டும். உங்களால் நடத்தப்படுபவர்கள் அவர்கள் பெற்றுக்கொண்ட இரட்சிப்பு இலவசமானது என புரிந்து கொள்ள வேண்டும். மேலும், கிறிஸ்து ஏற்கெனவே சம்பாதித்து ஈந்த இரட்சிப்பை வேறு ஏதேனும் வழியில் சம்பாதிக்க முயற்சி எடுப்பவர்களுக்கு இதைத் தெளிவாக எடுத்துரைக்க வேண்டும். (1 பேதுரு 3:15)

**மூன்றாவது:** அபிஷேக தைலமானது செய்யப்பட்ட முறையின்படி வேறொரு தைலத்தையும் செய்யக்கூடாது, மற்ற உபயோகத்திற்காக பயன்படுத்தப்படவுங் கூடாது. (யாத்திராகமம் 30:32, 33)

பழைய ஏற்பாட்டில், ஒரு பொருளையோ, மனிதனையோ எண்ணெயினால் அபிஷேகம் செய்வது கர்த்தருடைய தெய்வீகத் தொடுதலுக்கு அடையாளமாகக் கூறப்படுகிறது. இந்த நிகழ்ச்சி ஒரு பொருளையோ மனிதனையோ தேவனுடைய திட்டத்தில் பிரதிஷ்டை செய்து ஒரு விசேஷித்த இடத்தை வகிக்கும்படி செய்கிறது. தேவன் உத்தரவிட்டதை நிறைவேற்ற ஒருவனுக்குத் தேவையான அதிகாரமும் வல்லமையும் கொடுக்கப்படுகிறது. (1 சாமுவேல் 16:13; ஏசாயா 61:1)

இதே கொள்கை புதிய ஏற்பாட்டு விசுவாசிகளுக்கும் உண்மையாக உள்ளது. ஆலயத்துக்கு வெளியேயோ, உள்ளேயோ கர்த்தர் அவர்களுக்கு ஊழியத்துக்கான இடத்தை எங்கு தருகிறாரோ அங்கு செய்ய வேண்டும். முழுநேர ஊழியத்திற்கென குறிப்பிட்டு அழைக்கப்பட்டவர்களுக்கும் இது பொருந்தும் (II கொரிந்தியர் 1:21; 1 தெசலோனிக்கேயர் 5:24). அவருடைய பயனுள்ள ஊழியர்களாக மட்டுமல்லாமல் வாழ்க்கையிலும் ஊழியத்திலும் கனிகளைத் தருகிறவர்களாகவும் இருக்கும்படி கர்த்தர் அதற்கான எல்லா தேவைகளையும் சந்திக்கிறவராக இருக்கிறார்.

### ஏமாற்றுகிறவர்களால் வரும் பிரச்சனைகள்

நமக்கு தேவனுடைய அபிஷேகம் கிடைக்கக் கூடிய ஒன்று என்பது அற்புதமான செய்தி! ஆனால், யாத்திராகமம் 30ம் அதிகாரத்தில்



கூறப்பட்டுள்ள போலியான அபிஷேக தைலத்தைக் குறித்த எச்சரிக்கையை நாம் தவற விடாதபடி கவனமாக இருக்க வேண்டும். கர்த்தர் இதைக் குற்றமுள்ளதாகவும், ஆபத்தானதாகவும் கருதுகிறார். (யாத்திராகமம் 30:32,33). இந்தக் காரியத்தில் பாவம் செய்தவன் யாரானாலும் அவன் இஸ்ரவேல் ஜனங்களிலிருந்து "அறுப்புண்டு போக" வேண்டும். வேதவல்லுநர்கள் இந்தப் பதத்தை மரணத்தண்டனையோடு அடிக்கடி இணைத்துப் பேசுவர்.

இந்த ஏமாற்றும் அடையாளங்கள் இன்றைய புதிய ஏற்பாட்டு ஊழியர்களாகிய நமக்கு எதைக் காட்டுகிறது? நமது சொந்த ஆதாயத்திற்காக தேவனுடைய அபிஷேகத்தைப் பயன்படுத்துவது பாவம் என்று ஏற்கெனவே நாம் பரிசீலித்து விட்டோம். (பிலிப்பியர் 1:15, 16) இன்றைய ஊழியத்திலே தேவனுடைய அபிஷேகம் தவறாகப் பயன்படுத்தப்படும் மற்ற வழிகள் உண்டு.

சில மனிதர் ஊழியத்திலே தங்களது போதனையினாலே ஜனங்களைக் கிளர்ச்சியடையச் செய்வதே தங்கள் இலக்கு என தவறாக நினைக்கிறார்கள். மகிழ்ச்சி பொங்கும் பாணியில் தங்களது சொற்பொழிவாற்றுதலுக்கு அல்லது போதிப்பதற்கு அவர்கள் அபிஷேகத்தைத் தவறாக பயன்படுத்துகிறார்கள். சில வேளைகளில் ஜனங்கள் எதைக் கேட்க விரும்புகிறார்களோ அதைப் பற்றியே கூறுவார்கள். அது வேதத்திற்கு மாறாக இருந்தாலும், அவர்கள் கற்பனைபண்ணிக் கதைகளைக் கூறலாம். அல்லது அவர்கள் வேறுவிதமாக ஜனங்களைக் கிளர்ச்சியூட்டக்கூடிய வகையில் திறமையாகக் கையாளலாம்.

பிறர் ஊழியத்திலே ஜனங்களைக் கவர்ந்து தங்களுக்கு ஆதாயம் தேட விரும்பலாம். அவர்கள் பிறர் ஒருவரும் அறியாத ஆழமான இரகசியங்களை அபிஷேகத்தினால் புரிந்துகொண்டதைப் போல் நடிப்பர். (2 கொரிந்தியர் 11:3, 4) மற்றவர்களைக் கவர்வதற்கு பட்டம் அல்லது பதவியை உரிமை கொண்டாடுவர். அல்லது அவர்களது நிலை அல்லது அதிகாரத்தைப் பயன்படுத்தி மற்றவர்களை அநீதியான அல்லது தலைவர் பயனடையக்கூடிய காரியங்களைச் செய்ய வற்புறுத்துவர்.

மக்கள் அபிஷேகத்தைப் போலியாகவும் தவறாகவும் பயன்படுத்த

பல வழிகளில் சோதிக்கப்படுகின்றனர். ஆனால் நாம் அறிய வேண்டியது, பரிசுத்தாவியின் அபிஷேகத்தைப் போலியாகவோ அல்லது தவறாகவோ பயன்படுத்துவது கர்த்தருக்கு முன் பெரிய குற்றமாகும். இதுவும் ஒருவிதமான வஞ்சகச் செயல். இது எப்பொழுது தொடருகிறதோ அப்பொழுது சபைத் தலைவருடைய வாழ்க்கையில் பிசாசின் ஆதிக்கம் இடம் பெறும். இறுதியில், கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அந்த மனிதனுடைய வாழ்க்கையில் வரும்.

இன்றைக்கும் கர்த்தரால் அபிஷேகிக்கப்பட்ட தூதுவர்களாக தோன்றினாலும் அவர்கள் அப்படிப்பட்டவர்களல்ல. புதிய ஏற்பாடு அவர்களைக் குறித்து அதிகமான எச்சரிப்புகளைக் கொடுக்கிறது. (மத்தேயு 7:15-20; அப்போஸ்தலர் 20:27-30; 2 கொரிந்தியர் 11:1-15, கலாத்தியர் 1:6-10; கொலோசெயர் 2:18-23; 1 தீமோத்தேயு 4:1-3; 2 தீமோத்தேயு 3:1-9; 2 பேதுரு 2:1-22; 1 யோவான் 4:1-6; யூதா 3-19).

இந்தப் பாடத்திற்குப் பின்னால், பரிசுத்தாவியின் அபிஷேகத்தை உண்மையாகப் பெற்று ஊழியஞ் செய்கிறவர்களிடம் காணப்படும் ஏழு குணங்களைப் பற்றி படிக்கலாம். இந்த பட்டியல் உன்னுடைய சொந்த ஊழியத்தைப் பரிசோதிக்கவும், அதே சமயம் மற்ற ஊழியர்களிடமும் சபைத்தலைவர்களிடமும் உண்மையான ஆவியின் அபிஷேகம் இருக்கிறதா என்று பகுத்தறியவும் உதவுவதாக இருக்கும்.

**போதகரிடமிருந்து போதகருக்கு:** நல்ல பயனுடைய ஊழியம் வேண்டுமென்பதிலும், பரிசுத்தாவியின் வல்லமையான அபிஷேகத்தை விரும்புவதிலும் எந்த தவறுமில்லை. ஆனால் நமக்கில்லாத ஒன்று இருப்பதாக நடிப்பதும், அபிஷேகிக்கப்பட்ட வர்களாக நடக்க முயற்சிப்பதும் தவறானதாகும்.

இதைத் தவிர, நாம் அபிஷேகிக்கப்படாமல், அபிஷேகிக்கப் பட்டதுபோல முயற்சி செய்து ஏன் நடிக்க வேண்டும்? நாம் உண்மையாகவே அபிஷேகிக்கப்பட முடியும் - நம் சொந்த முயற்சியினால் அல்ல. நாம் அவருடைய வழிநடத்துதலின்படி நடந்தால் மட்டுமே முடியும்.

நாம் நமது வாழ்க்கையைப் பாவத்திலிருந்தும், அபிஷேகம் சம்பந்தப்பட்ட வஞ்சகத்திலிருந்தும் காப்பாற்றிக் கொள்ளலாம்.



உண்மையான ஆவியின் அபிஷேகத்தில் எப்பொழுதும் வளர்வதற்கான பல வழிகளில் அடி எடுத்து வைக்கலாம்.

❒ வரங்களையும் கர்த்தர் உனக்குக் கொடுத்த அழைப்பையும் ஏற்றுக்கொள். மற்றவர்களிடம் உள்ளதைக் குறித்து குறைகூறவோ, பொறாமை கொள்ளவோ வேண்டாம் அல்லது அவர்களைப் போல் நடிக்க முயற்சிக்கவும் வேண்டாம்.

❒ உன்னைக் குறித்தும், உன் ஊழியத்தைக் குறித்தும் தேவனுடைய சித்தம் என்ன என்று தெரிந்து கொள்ல தினமும் ஜெபி.

கர்த்தர் உன்னை எங்கு அழைத்திருக்கிறாரோ அதில் திருப்தியாக இரு.

❒ அவருடைய சித்தத்தின்படி செய்ய தொடர்ந்து கர்த்தருடைய உதவிக்காகவும் வல்லமைக்காகவும் வேண்டிக்கொள்.

❒ தினமும் நீ கர்த்தருக்காகவும் மற்றவர்களுக்காகவும் சேவை செய்ய ஊழியத்தில் உள்ளாய் என்றும் உனக்காகவோ அல்லது உன்னுடைய சொந்த ஆதாயத்திற்காகவோ இல்லை என்பதை தினமும் ஞாபகம் வைத்துக் கொள்வாயாக.

போதிப்பதிலும் வழிநடத்துவதிலும் ஒரு குறிப்பிட்ட பாணி வேறு பாணியைக் காட்டிலும் அதிகமான அபிஷேகம் உடையது என்று ஒன்றுமில்லை என்பதை மனதில் இருத்திக் கொள். அபிஷேகிக் கப்பட்ட தலைவர்கள் பொறுமையாகவும் அமைதியாகவும் பேசுவதை நான் பார்த்திருக்கிறேன். அவர்கள் கர்த்தருடைய வார்த்தையைப் போதிக்கும்போதே ஜனங்கள் முழுவதுமாக சுகமடைந்திருக்கிறார்கள், அல்லது பரிசுத்த ஆவியினால் தொடப்படுகிறார்கள். மற்ற தலைவர்களில் பரிசுத்தாவியானவர் கிரியை செய்யும்போது உடல் அசைவு பிறர் காணும்படி இருக்கும் அல்லது ஆரவாரத்தோடு அதிக சத்தம் வெளிவரும். இந்தப் பாணி சரியோ தவறோ என நாம் கூற முடியாது?

ஒவ்வொரு நேரமும் நீ உழியம் செய்யும்போது பரிசுத்தாவியை உணரும் உணர்ச்சியை வளர்த்துக் கொள்வதே முக்கியமான செயலாகும். ஒரு குறிப்பிட்ட கூட்டத்தில் அவர் என்ன சொல்கிறார், என்ன செய்கிறார் என்பதை நிறுத்தி கவனித்து செயல்படு. பின்,

பரிசுத்த ஆவியானவர் அந்த நேரத்தில் எதைச் சொல்ல விரும்புகிறாரோ அதை உன்னுடைய பாணியில் வரிசைப்படுத்திக் கொள்.

நீ எப்படி இருக்கிறாயோ அப்படியேதான் கர்த்தர் உன்னை அழைத்திருக்கிறார் என்பதை ஞாபகப்படுத்திக்கொள். ஒரு காரணத்துக்காகவே உனக்கு குறிப்பிட்ட வரத்தைக் கொடுத்திருக்கிறார். அவர் உன்னை நீ இருக்கிற வண்ணமாகவே *உனக்குள்ள வரத்துடன் பயன்படுத்த விரும்புகிறார்.* பரிசுத்தாவியின் அபிஷேகத்துடன் பிறர் மனந்திரும்புவதற்கேற்ற ஊழியம் செய்ய வேண்டும்.

**2. அபிஷேக தைலத்திலிருந்து பாடங்கள்**

அபிஷேக தைலத்தில் அடங்கியுள்ள பொருட்களைப் பற்றி முழுவதுமாக இப்போது பரிசீலனை செய்வோம். அவை பரிசுத்தாவியின் அபிஷேகத்தைக் குறித்து என்ன வெளிப்படுத்துகிறது என்றும் பார்க்கலாம்.

குறிப்பாக அபிஷேக தைலமானது வெள்ளைப் போளம், சுகந்த கருவாப்பட்டை, சுகந்த வசம்பு, இலவங்கப்பட்டை மற்றும் ஒலிவ எண்ணெய் அடங்கியது.

**a. வெள்ளைப் போளம்:** வெள்ளைப் போளம் வலியை நீக்கவும் கொஞ்சம் தூக்கத்தைத் தரவும் பயன்படுத்தப்பட்டது. நறுமணமுடையது. இது வாசனை மற்றும் அழகு சாதனங்கள் செய்ய பயன்பட்டது.

இயேசு பாலகனுக்கு சாஸ்திரிகளால் கொடுக்கப்பட்ட பரிசுகளில் ஒன்று வெள்ளைப் போளம் ஆகும். (மத்தேயு 2:11) சிலுவையில் இயேசுவுக்கு வெள்ளைப் போளம் கலந்த திராட்ச ரசத்தை வலியைப் போக்கும்படி கொடுத்தாலும் அவர் அதை மறுத்தார். (மாற்கு 15:23) இந்த வலியைப் போக்கும் நிவாரணத்தை மறுத்தாலும், கிறிஸ்து இயேசு, ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசி பார்ப்பதில் உறுதியாய் இருந்தார். (எபிரெயர் 2:9) இதன் வாசனையினால் இயேசுவை அடக்கம் பண்ண சுகந்த வர்க்கங்களுடன் சேர்த்து வெள்ளைப் போளத்தையும் பயன்படுத்தினர்.



வெள்ளைப் போளத்தை வலியைப் போக்கும் நிவாரணியாக பயன்படுத்தினாலும் அதில் குறிப்பிடத்தக்க தீர்க்கதரிசனம் நமக்கு உள்ளது. அபிஷேகிக்கப்பட்ட இயேசு கிறிஸ்து சிலுவையில் நமது பாரங்களைச் சுமக்கும்படி வந்தார். அந்த பலி இடத்தில் இயேசு அவருடைய குறிக்கோளான நம்முடைய நோயைத் தீர்க்கும் பரிகாரி என்பதை நிறைவேற்றினார். மற்றும் பாவம் மரணம் என்ற அடிமைத்தனத்திலிருந்து நம்மை விடுவித்தார். (எபிரேயர் 2:9, 14-18)

அபிஷேக தைலத்தில், தீர்க்கதரிசனமாக வெள்ளப்போளம் பரிசுத்த ஆவியானவர் எவ்வாறு, ஜனங்களுக்கு சுகமும், நொறுங்குண்டதி லிருந்தும், பாவத்தின் கட்டுகளிலிருந்தும், வியாதியிலிருந்தும் விடுதலையைக் கொடுக்கவும் உதவுகிறார் என்று கூறுகிறது. ஏசாயா தீர்க்கதரிசி அபிஷேகத்தின் வல்லமையைப் பற்றி தீர்க்கதரிசனமாக உரைத்தார். “அபிஷேகம் நுகத்தை முறிக்கும்” (ஏசாயா 10:27) என்று கூறினார். எபிரெய வார்த்தையில் **நுகம்** என்பது ‘அழிக்கப்பட்டது” என்பதாகும். இந்த வசனத்தில் ‘அழிந்தது’ அல்லது ‘உடைந்தது’ என்பதற்கும் மேலாக ‘முழுவதுமாக அழிக்கப்பட்டது’ எனப்படும்.

பரிசுத்தாவியின் வல்லமை ஜனங்களை முழுவதும் விடுதலையாக்கி, வியாதியிலிருந்து பரிபூரண சுகத்தையும் அளிக்கும். இந்த பரிசுத்தாவியின் அபிஷேகத்தோடு நாம் மற்றவர்களுக்கு ஊழியம் செய்ய வேண்டுமென்பதே தேவனுடைய விருப்பம்.

**b. கருவாப்பட்டை** வேதகாலத்தில் கருவாப்பட்டை என்பது அரியதும் விலையுயர்ந்ததும், சுகந்த வாசனையில் உயர்வாக மதிக்கப்பட்டதுமாகும். (உன்னதப்பாட்டு 4:14) கருவாப்பட்டை வாசனையுள்ளது. குறிப்பிட்ட உணர்வில் இதைப் பயன்படுத்துவதற்குக் காரணம் இதன் காரத் தன்மையகும். இவ்வாறு அபிஷேக தைலத்தில் இந்த வாசனைப் பொருள் இருப்பது, பரிசுத்தாவியின் அபிஷேகத்திலிருந்து வரும் அக்கினி அல்லது வைராக்கியத்தைப் பற்றி நம்மிடையே கூறுகிறது.

**இயற்கைக்கு அப்பாற்பட்ட துணிச்சல்**

புதிய ஏற்பாட்டில் பரிசுத்தாவியினிடத்திலிருந்து வரும் அக்கினி போன்ற வைராக்கியத்திற்குத் தெளிவான ஒரு உதாரணம் உள்ளது.

பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்பு எருசலேமில் சீஷர்களும் சில விசுவாசிகளும் ஒரு அறையில் கூடி இருந்தனர். (அப்போஸ்தலர் 1:12-14) உலகத்திற்கு சுவிசேஷம் சொல்ல வேண்டுமென இயேசு அவர்களுக்குக் கூறியிருந்தார். (அப்போஸ்தலர் 1:8) இருந்தாலும் இவ்வளவு பெரிய வேலையை மிகவும் கொஞ்சம் மக்களாக எவ்வாறு நிறைவேற்றுவது? அவர்கள் பெரிய சொற்பொழிவாளர்களோ, தத்துவஞானிகளோ அல்லது நன்றாகப்படித்தவர்களோ இல்லை. அவர்கள் கலாச்சாரத்திற்கு மாறான சூழ்நிலையில் இருந்த சாதாரண மனிதர்கள். அவர்களது தலைவர் இதனால் சிலுவையில் அறையப் பட்டார்.

> **பயப்படுகிறவர்களுமாய் தெளிவில்லாத ஆட்டைப்போல் இருந்த சீஷர், தைரியமாகவும் சாட்சி கூறுபவர்களாகவும் அற்புதங்களைச் செய்கிற மேய்ப்பர்களாக மாறினார்கள்! பாடுகள் மற்றும் மரணத்தின் முனையிலும் அவர்கள் வெட்கமின்றி சுவிசேஷத்தை அறிவித்தார்கள். இந்த அக்கினி போன்ற வைராக்கியம் பரிசுத்தாவியின் அபிஷேகத்தினால் வருகிறது.**

இந்த ஆண்களும் பெண்களும் கோழைகளல்ல. ஆனால் மனக் குழப்பத்தில் இருந்தார்கள்; உறுதியற்ற மனதுடன் என்ன செய்வது, எப்படி செய்வது என்ற உணர்வும் இல்லாமலிருந்தார்கள். ஆனால் அவர்கள் ஞானமாய்க் காத்திருந்தனர். தொடர்ந்து ஜெபிப்பதிலும், அதே வேளையில் ஐக்கியத்தோடு, ஒருவருக்கொருவர் ஊக்கமளிப்பதையும் காத்துக் கொண்டனர். அவர்கள் புரிந்து கொள்ளாமலிருந்தாலும், இயேசு அவர்களுக்கு பரிசுத்தாவியிலிருந்து வரும் வல்லமையைக் கொடுப்பதாகச் செய்த வாக்குத்தத்தத்தைப்பற்றிக் கொண்டார்கள். (அப்போஸ்தலர் 1:5, 8) அவர்கள் காத்திருந்தனர்...

*''அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல் வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள் போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக்*



*காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது''.* (அப்போஸ்தலர் 2:2, 3)

அந்த நிமிடமே, கிட்டத்தட்ட 120 பேரின் வாழ்க்கையானது பரிசுத்தாவியினால் நிரப்பப்பட்டதினிமித்தம் மாறியது. உடனடியாக இந்த நிகழ்வு அனைவராலும் அறியப்பட்டது (அப்போஸ்தலர் 2:5-13). பேதுரு, கல்வி அறிவில்லாத மீனவர், பயத்தினால் கிறிஸ்துவை மறுதலித்தவர், சடிதியில் எழுந்து நின்று, பரிசுத்தாவியின் அபிஷேகத்தினால் நிறைந்து, தைரியமாக முதல் பிரசங்கத்தைப் பிரசங்கித்தார். (2:14-39) இதன் பிரதிபலனாக அன்றைய தினமே 3000 பேருக்கும் மேலான ஆத்துமாக்கள் கர்த்தருடைய இராஜ்ஜியத்தில் சேர்க்கப்பட்டார்கள் (2:41).

பயப்படுகிறவர்களுமாய், தெளிவில்லாத ஆட்டைப் போல் இருந்த சீஷர் தைரியமாகவும், சாட்சி கூறுபவர்களாகவும் அற்புதங்களைச் செய்கிற மேய்ப்பர்களாகவும் மாறினார்கள்! பாடுகள் மற்றும் மரணத்தின் முனையிலும் அவர்கள் கூச்சமின்றி சுவிசேஷத்தை அறிவித்தார்கள், இந்த அக்கினி போன்ற வைராக்கியம் பரிசுத்தாவியின் அபிஷேகத்தினால் வருகிறது. (அப்போஸ்தலர் 4:23-31)

இந்த வைராக்கியம், உணர்ச்சி வசப்பட்டு கடந்து போகிற ஒன்றல்ல. நமக்குள் எப்பொழுது பரிசுத்தாவியின் அபிஷேகம் உள்ளதோ, அப்பொழுது நமக்குள்ளாக பலத்தையும் தைரியத்தையும் தீச்சுடரைப் போல எழும்பப்பண்ணும். உண்மையான கர்த்தருடைய வார்த்தையில் ஆழ்ந்த நம்பிக்கை வைக்கவும், மற்றும் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தில் நம்பிக்கை வைப்பதினால் நம்மை செயல் புரிய வைக்கவும், ஜெபிக்கவும், பிரசங்கிக்கவும், அற்புதத்தை நம்ப வைப்பதும் பரிசுத்தாவியின் அபிஷேகத்தின் வல்லமையினால்தான்.

**c. சுகந்த வசம்பு** (sweet cane) இந்த உயர்ந்த நறுமணமான செடியின் தண்டு வேர் வாசனை திரவியம் செய்பவர்களுக்கு அதிகமாகத் தேவைபடுகிறது. இந்தச் செடியின் வேரை நொறுக்குவதினாலும், கசக்குவதினாலும் அருமையான நறுமணம் மிகவும் சிறந்த முறையில் வெளியேறுகிறது.

இந்த வழியிலேயே ஒரு விசுவாசியின் வாழ்க்கை நொறுக்கவும் கசக்கவும் படுகிறது. இது நமக்குள்ளாக கர்த்தருடைய பிரசன்னம் நறுமணம் மிக்கதாய் வெளிவரத் தேவைப்படுகிறது.

நாம் நினைவில் கொள்ள வேண்டியதென்னவென்றால், முரட்டாட்டமுள்ள பாவத்தினால் வரும் உடைக்கப்படுதலோ, அழிவோ இதைப் போன்றதல்ல. அதற்குப் பதிலாக இது தேவனுடைய கரத்திலிருந்து மட்டும் வரும் பரிசுத்த உடைக்கப்படுதலாகும்.

இந்த ஆவிக்குரிய நொறுக்குதல் சில வேளைகளில் வேதனையாக இருந்தாலும் இரண்டு காரியங்களை உருவாக்குகிறது.

முதலாவது, நமது சுய விருப்பங்களையும் *மாம்ச* சிந்தனையையும், மரணத்துக்கு ஒப்புவிக்கிறது. (லூக்கா 9:23-26; ரோமர் 12:12; 13:14; கலாத்தியர் 5:16-26) இரண்டாவது, நமது நொறுக்கப்பட்ட வாழ்க்கை, அதிக அளவில் கர்த்தருடைய கிருபையையும், வல்லமையையும் நமக்குள்ளும், நம்மூலமாகவும் வெளிப்படுத்துகிறது. கொரிந்தியருக்கு எழுதும் கடிதத்தில் இந்தக் காரியத்தைக் குறித்து பவுல் எழுதுகிறார். (2 கொரிந்தியர் 12:7-10)

**போதகரிடமிருந்து போதகருக்கு:** சபைத் தலைவர்களாகிய நாம் பலசாலிகளாகவும் நம்பிக்கையுள்ளவர்களாகவும் ஆற்றல் உடையவர்களாகவும் இருக்க வேண்டியது அவசியம் என்று அறிகிறோம். இதனால் பரிசுத்த ஆவியானவர் வல்லமையாக நம் மூலம் கிரியை செய்ய நாம் இடங்கொடுப்பதில்லை. நம்மிடையே உள்ள பலவீனமானது பரிசுத்தாவியின் மீது நாம் சரியான முறையில் சாய்ந்து இருப்பதற்கும் நம்முடைய வாழ்க்கையில் அவருடைய அபிஷேகத்தைச் சார்ந்து இருக்கவும் காரணமாகிறது. இவ்வாறு ஊழியமானது நம்மால் அல்ல, அவருடைய வல்லமையினால் செய்யப்படுகிறது.

பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தோடு ஒரு வகையான நொறுக்கப்படுதல் தொடர்புடையது என்பதற்கு வேதத்தில் ஆதாரம் உண்டு. இவ்வகையாக நொறுக்கப்படுதல் தவிர்க்க முடியாதது , தவிர்க்கவும் கூடாதது. கிறிஸ்துவின் சாயலைத் தரிக்க இது மிகவும் அவசியமானது. வாழ்க்கையை அர்ப்பணிக்க, நம்பிக்கை வைக்க, கீழ்ப்படிய இதைத் தவிர வேறொன்றாலும் முடியாது.

தயவு கூர்ந்து சில நிமிஷங்கள் எடுத்து கீழே கொடுக்கப்படும் வேதத்திலுள்ள உதாரணங்களைப் பார்த்து ஒவ்வொன்றிலுமுள்ள சத்தியத்தை தியானிக்கவும்.



❐ இயேசு - ஏசாயா 53:1-6; அப்போஸ்தலர் 3;18; எபிரெயர் 5:9; 12:2.

❐ பவுல் - (மற்றும் பிறர்) - அப்போஸ்தலர் 9:15, 16; ரோமர் 8:18; 2 கொரிந்தியர் 1:3-7; 4:7-18; 6:4-10; 11:22-30; 12:7-10)

❐ எல்லா விசுவாசிகளும் - 1 தெசலோனிக்கேயர் 2:14-16. II தீமோத்தேயு 3:12; 1 பேதுரு 4:1-19. ■

## உயிரைக் கொடுக்கும் சுய வெறுப்பு

வல்லமையான கொள்கைகளான உடைக்கப்படுதல் மற்றும் நொறுக்கப்படுதலைப் பற்றி வேதம் சில இடங்களில் குறிப்பிட்டுக் காட்டுகிறது. உதாரணமாக, **திருவிருந்தில்** உடைக்கப்படுதல் மற்றும் பிழிதல் எல்லாம் தேவைப்படுகிறது. (லூக்கா 22:14-20; 1 கொரிந்தியர் 1:23-26). இயேசு அப்பத்தைப் பயன்படுத்தினார். (உடைக்கப்பட்ட கோதுமை) மற்றும் திராட்ச ரசம் (நசுக்கி பிழிந்தெடுக்கப்பட்ட திராட்சைப் பழம்) இவைகளை சிலுவையின் மூலம் எல்லா மனித இனத்திற்காகவும் சிலுவையில் அறையப்படுவதற்காகவும் அவர் செய்ததற்கு அடையாளமானது.

நம்முடைய பாவங்களுக்கு உண்மையான பரிகாரமாக இயேசுகிறிஸ்து கர்த்தரால் அளிக்கப்பட்ட தண்டனையைத் தம்மேல் ஏற்றுக் கொண்டார். அவர் சிலுவையில் மரித்தது மனுக்குலத்தின் ஜீவனை மீட்க, அதற்குத் தேவையான நொறுக்கப்படுதல் அவசியமாயிற்று. (அப்போஸ்தலர் 2:23, 24) இயேசுவை விசுவாசிப்பதன் மூலம் நித்தியம் நமக்கு என்றென்றும் இருக்கும். நம்முடைய பாவம் மற்றும் அக்கிரமத்துக்கு ஈடாக நாம் தண்டனை அனுபவிப்பது தகுதியானது. ஆனால் அவ்வாறு அனுபவிக்க வேண்டியதில்லை. ஆதலால் கர்த்தருக்கு நன்றி சொல்லு. என்றாலும் நமக்குள் இருக்கும் சுயம் மரிப்பது, கர்த்தருடைய வல்லமை மற்றும் ஜீவன் நம்மூலம் வெளிப்பட அவசியமாகிறது.

## நம்பத்தகுந்த பாத்திரமாகுதல்

பாடுகளின் மத்தியிலும் இயேசுவின் சகிப்புத் தன்மை, நமக்கு முக்கியமான உதாரணமாகும். "*அவர் தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச்*

*சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்.''* (எபிரெயர் 12:2) இயேசு தமது பாடுகளினாலும் தியாகங்கள் மூலமாகவும் பிதாவின் **திட்டங்களை** முற்றிலுமாக நிறைவேற்றினார்.

நம்முடைய இடத்தில் அவர் பாடு அனுபவிக்கவும், மரிக்கவும் தயாராக இருந்ததினால் நமக்கு இரட்சிப்பை வெளிப்படுத்தினது மட்டுமல்ல. பிதாவினுடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கும் கீழ்ப்படிந்து நடந்தார். (மத்தேயு 26:39, 42, 44)

நம்முடைய பாடுகளும் தியாகங்களும், இயேசு நமக்கு அளித்தவையோடு ஒப்பிடும்போது மிகவும் சிறியதாக இருக்கலாம். என்றாலும் அது கடினமானதே. நம்முடைய பாடுகளை **அவருடைய** மகிமைக்காகவும், அதே சமயத்தில் **நம்முடைய** நன்மைக்காகவும் அவர் பயன்படுத்து கிறார் (யாக்கோபு 1:2-5, 12). நாம் இந்த வாழ்க்கையில் அனுபவிக்கும் பாடுகள் மற்றும் சோதனைகளைக் கர்த்தர் முடிவில் ஆசீர்வாதங்களாக மாற்றிவிடுகிறார். (ரோமர் 5:1-5; 8:18; 2 கொரிந்தியர் 4:17)

நமக்காக நமது பிதாவின் கடமை இன்னதென்று தெளிவாகக் கூறப்படுகிறது. *''அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி, அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்.''* (ரோமர் 8:28)

இரட்சிப்புக்காக கிறிஸ்துவின் மீது யாரெல்லாம் நம்பிக்கை வைக்கிறார்களோ அவர்களைப் பற்றிய தேவனுடைய நோக்கம் என்ன? அடுத்த வசனத்திலே தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. *''தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும் பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன் குறித்திருக்கிறார்.''* (ரோமர் 8:29)

தேவன் கிறிஸ்துவின் சாயலாக நம்மை வனைய நம்முடைய வாழ்க்கையின் எல்லாப் பகுதியையும் பயன்படுத்த விரும்புகிறார். (1 தீமோத்தேயு 2:19-21) இந்த உலகம் அழிவுக்கு நேராகப் போவதினாலும் பாவ சுபாவம் உள்ள மக்கள் நம்மைச் சுற்றி இருப்பதனாலும் நமக்குப்



பாடுகள் வருகிறது. மற்ற நேரங்களில், தேவன் தமது தெய்வீகத் திட்டத்துக்காவும் நோக்கத்துக்காகவும் நம்முடைய வாழ்க்கையில் சில சூழ்நிலைகளை உருவாக்குகிறார். கர்த்தர் யாவற்றையும் நமது நன்மைக்காகவே செய்கிறதாக வாக்களிக்கிறார்.

அவருடைய சித்தம் மற்றும் நோக்கத்தின்படி நாம் சுத்தமும் நம்பிக்கைக்குரிய பாத்திரமுமாக இருக்க கர்த்தர் நம்மை மாற்றுவார். தடையில்லாமல் பரிசுத்தாவியின் அபிஷேகம் நம்மூலம் பாய்ந்தோட விட்டுக்கொடுக்கவும் அவரோடு ஒத்துழைக்கவும் வேண்டும்.

### கிறிஸ்துவின் நறுமணம்

கிறிஸ்துவுக்குள் ஒவ்வொரு விசுவாசியும் விசேஷமாக ஒவ்வொரு சபைத் தலைவரும் *''எல்லா இடங்களிலும் எங்களைக் கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிறவர்.... இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளேயும், கெட்டுப்போகிறவர்களுக்குள் ளேயும், நாங்கள் தேவனுக்குக் கிறிஸ்துவின் நற்கந்தமாயிருக்கிறோம்.* (2 கொரிந்தியர் 2:14, 15) என்றபடி இருக்க வேண்டும். நாம் நம்மை அவருடைய பரிசுத்த நொறுக்குதலுக்கும் மற்றும் மறுரூபமாக்கும் வேலைக்கும் விட்டுக் கொடுக்கும்போது இந்த உண்மையான நறுமணம் நம்முடைய வாழ்க்கையின்மூலம் வெளிப்படுகிறது.

வேதாகமம் முழுவதிலும் அன்றும் இன்றும் கர்த்தர் சாதாரண ஆண்களையும் பெண்களையும் வல்லமையான வழிகளில் பயன்படுத்துகிறார். அடிக்கடி நசுக்கப்படுதலையும் நொறுக்கப் படுதலையும் அவர்கள் ஆயத்தமாகும்போதும் அவர்களது ஆராதனையின் போதும் தாங்கிக் கொள்வர். இதனால் கர்த்தருடைய நோக்கங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட்டன. மற்றும் கர்த்தரின் நறுமணமானது அவர்களுடைய வாழ்க்கையின் மூலம் வெளிப்பட்டது. உண்மையான தலைசிறந்த ஆண்களும் மற்றும் பெண்களும் தேவனால் பயன்படுத்தப்படவில்லை என்பதை நாம் நினைவு கூர வேண்டும்.

தாழ்மையான (நொறுக்கப்பட்ட, ஒப்புக்கொடுத்த) ஆண்களும் பெண்களும் மட்டும்தான் கர்த்தரால் பெரிதும் பயன்படுத்தப்பட்டனர்.

**d. காசியா** (Cassia) இது ஒரு செடியின் தண்டு, இது லவங்கப்பட்டை செடியைப் போன்றது. வேதகாலத்தில் காசியா ஒரு மலமிழக்கியாக பயன்படுத்தப்பட்டது. இது பரிசுத்தாவியின்

அபிஷேகத்தினால் தூய்மைபடுத்தப்படுவதற்கு அடையாளமாக பரிசுத்த அபிஷேக தைலத்தில் இடம் பெற்றுள்ளது.

பரிசுத்தாவியின் அபிஷேகமானது நமக்கு வல்லமை, வரங்கள் மற்றும் தெய்வீகத் திறமையைக் கொடுப்பது உண்மை. ஆனால் அதோடு கூட அவர் யாரையெல்லாம் அபிஷேகிக்கிறாரோ அவர்களுடைய வாழ்க்கையையும் மறுரூபப்படுத்துகிறார்.

இந்தத் தெளிவான உதாரணத்தை நாம் சவுல் இராஜாவின் வாழ்க்கையில் படிக்கலாம். சவுலை இஸ்ரவேலின் இராஜாவாக சாமுவேல் அபிஷேகித்தார். (1 சாமுவேல் 10:1) சவுல் தேவனுடைய திட்டத்தின்படி இராஜாவாக இருப்பதற்கு பிரித்தெடுக்கப்பட்டார். அபிஷேகமானது கர்த்தரால் அளிக்கப்பட்ட வேலைகளைத் தொடர்ந்து செய்ய, சவுலுக்கு அதிகாரங்கள் வரங்கள் மற்றும் திறமைகளைக் கொடுத்துள்ளது.

இதைக் காட்டிலும் இன்னும் அதிகமாக சவுல் தன்னுடைய அபிஷேகத்தோடு பெற்றுக் கொண்டதாக வேதம் கூறுகிறது, *"அப்பொழுது கர்த்தருடைய ஆவி உன் மேல் இறங்குவார்: நீ அவர்களோடே கூடத் தீர்க்க தரிசனம் சொல்லி* ***வேறு மனுஷனாவாய்.*** (1 சாமுவேல் 10:6) அதன் பின்பு சிறிது நேரத்திற்குப் பின்பு *"அவன் சாமுவேலை விட்டுப்போகும்படி திரும்பினபோது,* ***தேவன் அவனுக்கு வேறே இருதயத்தைக் கொடுத்து."*** (வ. 9)

அபிஷேகமானது, சவுலுக்கு என்ன தேவையோ அதற்கு *தயாராக்கினது* மட்டுமல்லாமல், அது *மறுரூபப்படுத்தும்* வேலையையும் சேர்ந்து செய்ததை நாம் பார்க்கலாம். இது இன்னும் அவரை அதிக தகுதியுடையவராகவும் கர்த்தருடைய கரத்தில் பயன்படக்கூடிய கருவியாகவும் ஆக்கியது. இது மிகவும் அற்புதமானது. பரிசுத்தாவியின் அபிஷேகமானது கர்த்தருடைய கருவியாக நாம் இருக்க வழி வகுக்கிறது.

எதிர்பாராத விதமாக சவுல் (மற்றவர்கள் செய்தது போல) தேவன் அவனுக்கு கொடுத்திருந்த எல்லாவற்றையும் விட்டு, கர்த்தருடைய வார்த்தையையும், கட்டளைகளையும் தள்ளி தன்னுடைய சித்தத்தை நிறைவேற்ற முற்பட்டான். (1 சாமுவேல் 15:22-33) இஸ்ரவேலின் மேல் ஆளுகை செய்பவராக ஆரம்பித்த சவுல் இராஜா மற்றும் அவர் குடும்பம் இறுதியில் அவல நிலைக்கு வந்து வெட்கத்தை அடைந்தனர்.



**போதகரிமிருந்து போதகருக்கு** : சவுல் இராஜாவிற்கு, அவருடைய வேலைகளை நிறைவேற்றவும் வெற்றியுடைய இராஜாவாக ஆகவும் தேவையான அனைத்தையும் கர்த்தர் கொடுத்தார். சில காலம் சவுல் அதைச் செய்தார். பலனடைந்தார். ஆனால் பின் சவுல் கர்த்தர் எதைக் கட்டளையிட்டாரோ அதைச் செய்யாமல் தனக்கு விருப்பமானதைத் தேர்ந்தெடுத்து செய்தார். அதனால் அவரது முடிவு தோல்வியே.

கர்த்தர் எப்போது நம்மை அழைக்கிறாரோ, அவருடைய சித்தத்தை நிறைவேற்ற நமக்கு என்ன தேவையோ அதை அவர் நமக்குக் கிடைக்கச் செய்வார். பிதா நம்மை எவ்வாறு இருக்க வேண்டுமென்று **உருவாக்குகிறாரோ,** அதைப் போன்றே முக்கியத்துவம் வாய்ந்தது அவர் நாம் எதைச் **செய்ய வேண்டும்** என்று அழைப்பது என்பதை ஒருபோதும் மறந்து விடக் கூடாது. நாம் கிறிஸ்துவைப் போல் குணத்திலும் செயலிலும் மாறும்படி கர்த்தர் விரும்புகிறார்.

நாம் அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியவும், எல்லாக் காரியங்களிலும் அவரை விசுவாசிக்கவும் நம் பிதா விரும்புகிறார். நாம் வளருவது வாழ்க்கை முழுவதும் தொடரும் அனுபவம்.

பரிசுத்த ஆவியானவர் நம்மைச் சீர்திருத்தி, கடிந்து கொண்டு குற்றத்தை உணர்த்துவார்! கர்த்தர் நம்மை ஆக்கினைத் தீர்ப்புக்குள்ளாக்குவதில்லை. (ரோமர் 8:1) ஆனால் நாம் கீழ்ப்படிவதும், அவருடைய மறுரூபமாக்கும் வேலைக்கு நம்மை ஒப்புக்கொடுப்பதும் தேவை. சில வேளைகளில் நாம் தள்ளாடலாம், தோல்வி அடையலாம். ஆனால் நாம் துரிதமாய் மனந்திரும்பி சரியான பாதையில் மீண்டும் வந்து அவருடைய சித்தத்திற்கு கர்த்தரிடத்தில் ஒப்புவிக்க வேண்டும்.

கர்த்தர் நம்மை மறுரூபப்படுத்த செயல்படுகிறார்.

- ❐ அவருடைய மகிமைக்காக
- ❐ நம்முடைய மகிழ்ச்சி, சமாதானம் மற்றும் ஆசீர்வாதத்துக்காக
- ❐ நம்மை அதிகக் கனி கொடுப்பவர்களாக மற்றும் பயன் தரக்கூடிய அவருடைய தூதுவர்களாகவும், மற்றவர்களுக்கு ஊழியத்தில் பணி செய்பவர்களாகவும் மாற்ற.

**நாம் எதை விதைக்கிறோமோ அது உண்மையும் நீதியுமுள்ளதோ, ஆசீர்வாதமானதோ அல்லது கறையுள்ளதோ, அதையே அறுப்போம். தேவன் தலைவர்களாகிய நம்மிடம் உயர்ந்த கண்டிப்பான நிலையை எதிர்பார்க்கிறார்.**

## ஆவியின் கிரியைகளுக்கு இடங்கொடுத்தல்

ஒரு உண்மையான அபிஷேகிக்கப்பட்ட மனிதர் மேலும் மேலும் கிறிஸ்துவின் சுபாவத்தைத் தரிப்பதை வெளிப்படையாகக் காணலாம். அவர்களிடம் பெரிய திறமையோ, வரமோ அல்லது ஊழியமோ இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை.

சபைத் தலைவர்களாக நம்முடைய மாம்ச பெலவீனங்களிலும், சோதனைகளிலும் தோல்விகளிலும் பரிசுத்த ஆவி தொடர்ந்து கிரியை செய்ய நாம் அனுமதிக்க வேண்டும். நமக்குள் மறுரூபமாக்கும் வேலையைத் தடைசெய்வதின் மூலம் பரிசுத்தாவியைத் துக்கப்படுத்தக் கூடாது. (எபேசியர் 4:30)

நாம் எதை விதைக்கிறோமோ, எது நீதியுள்ளதோ, ஆசீர்வாதமானதோ அல்லது கறையுள்ளதோ அதையே அறுப்போம். (கலாத்தியர் 6:7, 8) தேவன் தலைவர்களாகிய நம்மிடம் உயர்ந்த கண்டிப்பான நிலையை எதிர்பார்க்கிறார். (யாக்கோபு 3:1) ஏமாறாதீர்கள். தேவனை ஏமாற்ற முடியாது. நீ பாவத்தில் தரித்திருந்தால் அது முடிவில் வெளிப்படையாக எல்லாராலும் அறியப்படும். (எண்ணாகமம் 32:23)

ஆகவே நீதி நியாயத்தைத் தேர்ந்தெடு! பரிசுத்தாவியின் கிரியைக்கு உடன்படு. கர்த்தருக்குக் கீழ்ப்படி, விசுவாசி. உன்னுடைய வாழ்க்கைக்கும் ஊழியத்திற்கும் அவருடைய அபிஷேகத்தைப் பெற்றுக்கொள். பரிசுத்தாவியின் கிரியைக்கு உடன்பட்டு, போதிக்கப்பட்டு, ஒப்புக்கொடுக்கும் பாத்திரமாக மற்றவர்களுக்கு மாதிரியாக இரு. அவர் உன்னில் கிரியை செய்யட்டும், அப்போது உன் மூலம் இன்னும் அதிகமாய் அவர் மகிமைப்பட முடியும்! ஆமென்!

**e. ஒலிவ எண்ணெய்:** எண்ணெயானது பழைய மற்றும் புதிய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவிக்கு அடையாளமாக மிகவும் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. பரிசுத்த அபிஷேக தைலத்தில் ஒலிவ எண்ணெய் ஒரு பொருளாக அடங்கியுள்ளது. இது மிகவும்



முக்கியத்துவம் பெற்றுள்ளது. இது மற்ற ஒவ்வொரு நான்கு பொருட்களிலும் உள்ள குணங்களையும் மேலும் தன்னிகரற்ற குணத்தையும் பெற்றுள்ளது.

வேதாகமக் காலத்தில் ஒலிவ எண்ணெய் :

- வியாதியையும் வலியையும் போக்க மருந்தாக பயன்பட்டது
- விளக்குகளுக்கு எரிபொருளாக பயன்படுத்தப்பட்டது. இது தீயோடு சம்பந்தப்பட்டது.
- நொறுக்கி கசக்கிப் பிழிந்து எடுக்கப்படுகிறது. நறுமணத்தைத் தருகிறது.
- உள்ளும் புறம்பும் கழுவி சுத்திகரிக்க பயன்படுவது. (காசியா போல)

ஆனால் ஒலிவ எண்ணெயோடு மற்றுமொரு குணமும் இணைந்துள்ளது. ஒலிவ எண்ணெய் இயற்கையான ஒரு எண்ணெய். இதை இரண்டு பொருட்களுக்கு இடையில் அல்லது மேலாக வைக்கும்போது அது உரசுதலையும் தேய்மானத்தையும் குறைக்கும்.

இது கர்த்தருடைய பிள்ளைகளிடையே **ஐக்கியம்** தேவை அல்லது இன்றியமையாதது என்பதற்கு அடையாளமாக இருக்கிறது. வேதம் அபிஷேகம், ஐக்கியம் இரண்டையும் இணைத்து அழகான விதத்தில் முன்னிறுத்துகிறது. *"இதோ சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுகிறது.*



**சபை : மனதிற்கு இசைவான முழுமை....**

*எத்தனை நன்மையும் இன்பமுமானது? அது ஆரோனுடைய சிரசின் மேல் ஊற்றப்பட்டு, அவனுடைய தாடியிலே வடிகிறதும், அவனுடைய அங்கிகளின் மேல் இறங்குகிறதுமான நல்ல தைலத்துக்கும், எர்மோன் மேலும் சீயோன் பர்வதங்கள் மேலும் இறங்கும் பனிக்கும் ஒப்பாயிருக்கிறது; அங்கே கர்த்தர் என்றென்றைக்கும் ஆசீர்வாதத்தையும் ஜீவனையும் கட்டளையிடுகிறார்."* (சங்கீதம் 133).

கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் காணப்படும் ஐக்கியத்தினால் மகிழ்ச்சியும் சமாதானமும் இருக்கும். அவருடைய ஜனங்கள் ஒருவரோடு ஒருவர் தகுந்த உறவு முறையில் நடப்பது கர்த்தருக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தருகிறது. அவருடைய ஆசீர்வாதம் இறங்குகிறது. மற்றும் பரிசுத்தாவியின் அபிஷேகம் தாராளமாய் ஊற்றப்படுகிறது.

### ஒத்த இசையின் உறவு (Symphonic Relationship)

வேதத்தில் அடிப்படையிலுள்ள ஐக்கியம் அடிக்கடி தவறாகப் புரிந்து கொள்ளப்படுகிறது. வேதத்தில் ஐக்கியம் என்பதற்கு ஒரே மாதிரி என்ற பொருள் அல்ல.

*ஒரே மாதிரி (Uniformity)* என்பது எல்லா வகையிலும் ஒத்து இருக்க வேண்டும். எந்த வித வித்தியாசமும் இல்லாமல் இருப்பது.

ஆனால் ஐக்கியம் வேறு என்பது எல்லா இசைக்கருவிகளும் சேர்ந்து இசைக்கப்படும்போது உண்டாகும் கீதத்துக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. பாட்டுக் கச்சேரியில் அநேக வித்தியாசமான இசைக்கருவிகள் உண்டு. ஒவ்வொன்றும் வித்தியாசமான முறையில் இயங்கும். வித்தியாசமான முறையில் இயக்கப்படும் ஒலிகள் எல்லாம் நடத்துனரின் கீழ் அழகான கீதமாகும். இவ்வாறு அழகான கீதங்கள் உண்டாகிறது.

கிறிஸ்துவின் சரீரமாகிய சபையிலும் இது உண்மை. வித்தியாசமான வரங்கள், அழைப்புகள், பாங்குகள், ஆளுமைத்திறன் மற்றும் திறமைகள் உள்ளன. பலவித இசைக்கருவிகள் இசைப்பதால் பிறக்கும் பாடலைப்போல நாமெல்லாரும் ஒன்றாயிருக்க அழைக்கப்பட்டிருக்கிறோம் (யோவான் 17:20, 21)

ஒருவரும் மற்றவரைப் போல ஒரே மாதிரி இல்லை. இருந்தாலும் ஒவ்வொருவரும் ஒரு முக்கியமான பங்கை வகிக்க அழைக்கப்பட்டி



ருக்கின்றனர். தேவன் சந்தோஷமாய் பங்கேற்பவர்களை அவரது சரீரமாகிய இனிமையான சங்கீதத்தில் இணைத்து, உலகத்திற்கு சாட்சியாக ஒருவரை ஒருவர் நேசிக்க வழி நடத்துகிறார். (யோவான் 13:34, 35)

1 கொரிந்தியர் 12ம் அதிகாரத்தில் பவுல் ஆவியின் வரங்களின் *வெளிப்பாட்டைப்* பற்றி விவரிக்கும்போது இதைப் பற்றிக் கூறுகிறார் (1 கொரிந்தியர் 14:26-40 பார்க்கவும்) ஆதிச் சபை இந்த ஒற்றுமைக்கு ஒரு உதாரணம். இதை வளர்த்தது பரிசுத்த ஆவியின் அபிஷேகமே. (அப்போஸ்தலர் 2:42, 44-47)

### ஒற்றுமையின்மையினால் வரும் ஆபத்துகள்

கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் உள்ள அங்கத்தினர்களுக்கிடையே ஒற்றுமை இல்லாவிட்டால் சபை பல கிளைகளாகப் பிரிந்துவிடும். கொரிந்தியர் சபையை அவர்களிடையே காணப்படும் பிரிவினைகளுக்காக பவுல் கடிந்து கொண்டார் (1 கொரிந்தியர் 3:1-23) அவர் அவர்களை மாம்சத்துக்குரியவர்களென்றும் குழந்தையைப் போல வளர்ச்சியடையாமல் இருக்கிறார்கள் என்றும் கூறுகிறார். *"பொறாமையும் வாக்குவாதமும் பேதங்களும் உங்களுக்குள் இருக்கிறபடியால், நீங்கள் மாம்சத்திற்குரியவர்களாயிருந்து மனுஷமார்க்கமாய் நடக்கிறீர்களல்லவா?"* (1 கொரிந்தியர் 3:3)

சகோதரர் மத்தியில் ஒற்றுமையின்மையும் பிரிவினையும் ஆபத்தானதாகும். இது அழிவை உண்டுபண்ணுகிறது மாத்திரமல்ல தேவனுடைய இராஜ்ஜியத்திற்கான வேலைகளை சிறப்பாகவும், விரைவாகவும் செய்யப்படுவதை அதிகமாகத் தடுக்கிறது. மேலே கூறப்பட்ட ஆவியின் வரங்களின் வெளிப்பாடுகளைப் பற்றி பவுல் விவரித்துச் சொன்னதற்குக் காரணம் சபையில் ஒழுங்கின்மையும் ஒற்றுமையின்மையும் இருந்ததே. இதற்குக் காரணம் ஜனங்களுடைய பெருமையும் தன்னலபோக்கும் தான்.

மிகவும் வருந்தத்தக்கது என்னவென்றால், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் அங்கத்தினர்களுக்கு ஒருவர் மேல் ஒருவர் அன்பு இல்லாவிட்டால், ஒற்றுமையோடு கர்த்தருடைய திட்டங்களை நிறைவேற்றாவிட்டால், உலகத்துக்கு முன்பாக நமது சாட்சி கெட்டுவிடும். (யோவான் 13:35) உலகம் நம்மில் அன்பைக் காணாவிட்டால் நமது சாட்சி கேள்விக்குறியதாகிவிடும்.

கிறிஸ்துவின் நாமத்தினாலே பெரிய கிரியைகளைச் செய்யலாம், பெரிய போதகராக இருக்கலாம். பெரிய ஆவிக்குரிய கூட்டங்களை நடத்தலாம். இதற்கு மேலும் செய்யலாம். ஆனால் கிறிஸ்துவுக்குள் நம் சகோதர, சகோதரிகளிடம் அன்பாயிருக்காவிட்டால் நாம் செய்வது யாவும் வலுவிழந்து விடும் (1 கொரி. 13.

கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் ஒற்றுமையைக் குலைக்கும் விஷயங்களைக் குறித்து வேதத்தில் போதனை கொடுக்கும் அநேக பகுதிகள் உண்டு. தயவு செய்து கொஞ்சம் நேரம் எடுத்து சில பகுதிகளையாவது வாசியுங்கள்.

- ரோமர் 13:13, 14
- கலாத்தியர் 5:13-23
- எபேசியர் 4:20-29
- 1 தீமோத்தேயு 6:3-5
- தீத்து 3:9-11
- யாக்கோபு 3:14-16
- 1 யோவான் 2:9-11; 3:10-18

இந்த வசனங்கள் எங்கே பிரிவினைகள், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், பொறாமைகள், கோபங்கள், சண்டைகள் போன்றவை இருக்கிறதோ அங்கே ஒற்றுமைக்குப் பங்கம் ஏற்படுகிறது என்று தெளிவாகக் கூறுகிறது. ஏன் ஒற்றுமை குலைந்து கூடப்போய் விடும். இதுபரிசுத்தா வியானவரைத் துக்கப்படுத்தக்கூடும். அவரது அபிஷேகத்தை அவித்துப்போடவும் கூடும். (1 தெசலோனிக்கேயர் 5:19)

இத்தகைய மாம்சீக சிந்தை இருக்கும்போது பிசாசானவன் பின்னால் இருந்து கொண்டு தேவனுடைய ஊழியம் நடப்பதை தடைபண்ணவும் பிரிவினைகளை உண்டாக்கவும் அதிகமாக வேலை செய்கிறான் என்பது தெளிவாகத் தெரிகிறது. (யாக்கோபு 3:13-16) "பிரிவினை உண்டாக்கு - வெற்றி பெறு" என்ற அரசியல் தந்திரம் சாத்தானைப் போல பல்லாண்டு பழமை வாய்ந்தது. அவன் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை அழிப்பதற்கும் தடைபண்ணுவதற்கும் இந்த



தந்திரத்தை திறமையாகக் கையாளுகிறான். நாம் அவனோடு ஒத்துழைத்தால் மட்டுமே இந்த தந்திரங்களை அவன் திறமையாகச் செயல்படுத்த முடியும்!



பரிசுத்த ஆவியானவர் நம்மை சரியான உறவுக்குள் வழிநடத்துவார்.

**தேவனால் மதிக்கப்பட்ட உறவுகள்**

பரிசுத்த ஆவியின் அபிஷேகம், சபையின் மக்களிடையே ஒப்புரவாகும் ஆரோக்கியமான உறவைக் கொண்டு வருகிறது. இது தலைவர்கள் மத்தியிலே கண்டிப்பாக இருக்க வேண்டியது. தேவன் முதலில் தம்மோடும் பின் ஒருவரோடொருவரும் சரியான உறவு வைத்துக் கொள்ள வேண்டும் என்று எதிர் பார்க்கிறார். (எபேசியர் 2:14-17) இதற்குத் தடையாக இருப்பது பெருமை, பொறாமை, தன்னயமான குணங்கள். இவற்றை யெல்லாம் கொண்டு வருவது சாத்தான். அவனே சபையில் பிரிவினை, வெறுப்பு, ஒருவருக்கொருவர் மன்னியாமை போன்றவற்றை விதைக்கிறான்.

உன் சகோதரனுக்கு உன் பேரில் குறை உண்டென்று நீ அறிந்தால் அவனிடம் சென்று அவனோடு ஒப்புரவாகு. (மத்தேயு 5:23, 4) பிறன் ஒருவன் மேல் உனக்குக் கோபம் இருந்தால் சீக்கிரமாய் மனம்வருந்து (மத்தேயு 5:21, 22) நீ **கோபப்பட்டதற்காக** விரோதம், பகை, பிறரை நியாயத்தீர்ப்பு செய்ய வேண்டும் என்ற எண்ணம் உங்கள் இருதயத்தின் ஆழத்தில் பதிந்ததுக்காக மன்னிப்புக் கேள். அல்லாவிட்டால் தேவனுடைய நியாயத் தீர்ப்பு உன்மேல் வரும். (மத்தேயு 6:14, 15; இதையும் பார்க்கவும் மத்தேயு 18:21-35)

*தேவன் உறவுகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்.* மனிதனுடைய பாவத்தினால் தேவனுக்கும் மனிதனுக்கும் உள்ள

துண்டித்துப்போன உறவை மீட்க அவர் தமது குமாரனை இந்த உலகத்துக்குப் பாடுபடவும் மரிக்கவும் அனுப்பினார். அதுபோல அவர் நம்மேல் அன்பும் மன்னிக்கும் பண்பும் உடையவராக இருக்கிறதால் நாம் ஒருவரோடொருவர் சரியான உறவை வைத்துக் கொள்ள முடிகிறது.

**எல்லா நிரந்தரமான மனமாறுதல் உண்டாக்கும் ஊழியமும் நல்ல ஆரோக்கியமான உறவுகளிலிருந்து புறப்படுகிறது.** நாம் தேவனோடு கொண்டுள்ள உறவிலிருந்து, அவரிடமிருந்து பெற்றுக் கொள்வதிலிருந்து இது தொடங்குகிறது. நாம் தேவனிடத்திலிருந்து பெற்றுக் கொண்ட அன்பையும் இரக்கங்களையும் பிறருக்கு அளித்து அவர்களுக்கு சேவை செய்ய வேண்டும். இதுதான் கர்த்தர் ஊழியத்திற்காக ஏற்படுத்தியிருக்கிற திட்டம். இந்த உலகத்தில் இயேசு வாழ்ந்த வாழ்க்கை இவ்வகையான ஊழியத்துக்கு ஒரு உதாரணமாக இருக்கிறது.

### ஒற்றுமை, மாறுபாடு, அன்பு

கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் தோற்றங்களில் வித்தியாசம் உண்டு. இந்த வேறுபாடு ஒற்றுமைக்கும் உறவுக்கும் இடறலாக தடுக்கல்லைப் போல இருக்கக்கூடாது (ரோமர் 14:13). ஒற்றுமை என்பது பல வாத்தியக் கருவிகள் சேர்ந்து இசைத்து வெளிப்படும் சங்கீதம் போல, ஒவ்வொருவரும் தம் வாழ்க்கையில் பரிசுத்த அபிஷேகத்தின் உள்ளான கிரியைகளுக்கு இணங்கி ஐக்கியம் கொள்வதாகும். பரிசுத்த ஆவியானவர் எப்பொழுதும் நம்மை கடிந்துகொண்டு உதவி செய்வார். பிறரோடு சரியான உறவு கொள்ள அதற்கு இணங்கி நடந்தால், வழி நடத்துவார்.

ஐக்கியத்திற்கு ஒரு எளிய வழி முறையை இவ்வாறு அறிவிக்கிறது. *''தேவையில் ஐக்கியம், தேவையற்றதில் வேறுபட்டிருத்தல்; எல்லாவற்றிலும் அன்பு.*

பரிசுத்தாவியின் அபிஷேகத்தில் நாம் வளர்ந்து வாழும்போது நாம் ஒருவர் பேரில் ஒருவர் அன்பும் இரக்கமும் உள்ளவர்களாக இருக்க வேண்டும். நாம் இவ்வாறு செய்யும்போது, பரிசுத்தாவியின் அபிஷேகமும், கிறிஸ்துவின் சாட்சியும் நமக்குள்ளும் நம்மூலமாகவும் முழுவதுமாக வெளிப்படும்.



### புரிந்து கொள்ளுதலைப் பெறுவது

இந்த பரிசுத்த அபிஷேக தைலத்தைப் பற்றிய (யாத்திராகமம் 30:22-33) சுருக்கமான ஆராய்ச்சி, கர்த்தர் அவருடைய பரிசுத்தாவியின் கிரியைகளின் வியக்கத்தக்க ஒத்த வடிவங்கள், முன்வடிவங்களை வெளிப்படுத்துகிறது. உண்மையாகவே நாம் வேதத்தை படிப்பதினால் நமக்குப் புரிந்து கொள்ளும் அறிவு, ஞானம் நம்பிக்கை உண்டாகிறது. (ரோமர் 15:4)

இவ்வளவு நேரம் படித்ததில் உனக்குச் சில இது போன்ற கேள்விகள் எழும்பலாம்.

- நான் அபிஷேகத்தினால் வளர முடியுமா? அப்படியானால், எப்படி?
- ''தவறான அபிஷேகம்'' என்று ஏதேனும் உண்டா? அப்படியானால் நான் எவ்வாறு சரியான அபிஷேகத்தைத் தெரிந்து கொள்வது?
- என்னுடைய வாழ்க்கையில் உள்ள அபிஷேகத்தை எது துக்கப்படுத்தும் அல்லது அவித்துப் போடும்?
- என்னால் பரிசுத்தாவியின் அபிஷேகத்தினால் தொடர்ந்து நிரப்பப்பட்டிருக்க முடியுமா?

இந்த கேள்விகளைப் பற்றியும் இன்னும் அதிகமாகவும் நாம் “அபிஷேகத்தில் நடத்தல்” என்ற அடுத்த பகுதியில் காணலாம்.



## பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம்

மூன்றாம் பாகம்

# அபிஷேகத்தில் நடத்தல்

பரிசுத்த ஆவியானவருடைய அபிஷேகத்தில் நாம் அனுதினமும் நடப்பதைக் குறித்துப் படிக்கத் துவங்குவதற்கு முன், சில முக்கிய கோட்பாடுகளைச் சுருக்கமாகத் திரும்பிப் பார்ப்போம்.

பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் என்பது ஒரு ஆவிக்குரிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வது அல்ல, அல்லது மத சம்பந்தமான வார்த்தைகளையும் சொற்றொடர்களையும் அதிகமாக உபயோகிப்பதும் அல்ல, அது ஆவியானவரோடு நாம் நமது தனி வாழ்வில் ஏற்படுத்திக் கொள்ளும் ஜீவனுள்ள வளரும் உறவே ஆகும். இயேசுவானவரும், பிதாவும் ஒரே ஆள்தத்துவமுள்ளவர்களாக இருப்பதைப் போலப் பரிசுத்த ஆவியானவரும் ஒரு ஆள்தத்துவமுடையவர் என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். ஆகையால், அனுதினமும் பரிசுத்த ஆவியானவரோடு ஒரு ஜீவனுள்ள உறவில் நடக்கக் கற்றுக் கொள்ளுவது நம்மால் கூடும். அப்படி நாம் நடப்பது மிகவும் தேவையானதும்கூட. அபிஷேகம் என்பது புரிந்து கொள்ள ஒரு முடியாத சக்தியோ, அல்லது நாம் நமது, தன்னலமான நோக்கங்களுக்காக உபயோகிக்கவோ அல்லது கையாளவோ கூடியதோ **அல்ல** என்பதை நாம் கற்றறிந்திருக்கிறோம். எனினும், அபிஷேகம் ஒரு தெய்வீக வல்லமை என்றும், நமது வாழ்க்கையில் உள்ள தனிப்பட்ட ஆள்தத்துவமுடைய பரிசுத்த ஆவியானவரோடு திறமையிலும், வரத்திலும் தொடர்புடையதென்றும் அறிந்திருக்கிறோம். பரிசுத்த ஆவியானவருடைய பிரசன்னத்திலிருந்து கிடைக்கும் வல்லமையானது அவரோடு நாம் கொண்டுள்ள தனித் தொடர்பின் மூலமே சாத்தியமாகிறது.



**அபிஷேகம் என்பது பரிசுத்த ஆவியாகிய அந்த நபரும், அவரது பிரசன்னமும், அவரோடே கூடத் தேவையான எல்லா வல்லமையையும், வரங்களையும் அதிகாரத்தையும், பிதாவின் சித்தத்தை நிறைவேற்றத் தேவையான யாவற்றையும் - ஒரு குறிப்பிட்ட ஊழிய நேரத்திலோ வேறு வகையிலோ, நமக்குக் கொண்டு வருகின்றது.**

### நமது தலையாய கடமை

பழைய ஏற்பாட்டுக் காலங்களில் பரிசுத்த ஆவியானவர், அவருடைய தீர்க்கதரிசிகள், நியாயாதிபதிகள் மற்றும் அவரது ஊழியர்கள் மேல் “இறங்கி வந்தார்” என்பதைப் படித்திருக்கிறோம். புதிய ஏற்பாட்டுக் காலங்களிலும், அதன் பின்னர் தொடர்ந்து வந்த காலங்களிலும் அதாவது ‘திருச்சபையின் காலம்’ என்னப்பட்ட காலங்களில் பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்பட்டார். (அப்போஸ்தலர் 2) ஒவ்வொரு உண்மையான விசுவாசிக்குள்ளும், நம்மை நடத்தவும், நம்மைத் தேற்றவும், நமது மூலமாய்ப் பிறருக்கு ஊழியம் செய்யவும் பரிசுத்த ஆவியானவர் வாழ்ந்து வருகிறார். (யோவான் 7:37-39; 14:16, 17, 26)

இயேசு கிறிஸ்துவுக்குள்ளான எல்லா விசுவாசிகளுக்கும் பரிசுத்த ஆவியானவர் கொடுக்கப்பட்டிருக்கிறார். (I யோவான் 2:20, 27). இது தேவையானதே. ஏனெனில் ஒவ்வொரு விசுவாசியும், கிறிஸ்துவின் சரீரமாக, ஏதோ ஒரு ஊழியம் செய்யும்படியாக அழைக்கப் பட்டிருக்கிறார். (எபேசியர் 4:12) ஒவ்வொரு நாளும், நம் ஒவ்வொருவருக்கும் பரிசுத்த ஆவியானவரின் உதவி தேவைப்படுகிறது.

ஆனால், ஒரு குறிப்பிட்ட ஊழியத்திற்கென்று அழைக்கப் பட்டவர்களுக்கு, ஒரு குறிப்பிட்ட, மேலான அபிஷேகம் கிடைக்கிறது. இந்த அபிஷேகம் தேவனாலும், அவரது அதிகாரத்தினாலும் கொடுக்கப்படுகிறது. எவரும் இதைப் பெற்றுக் கொள்ளலாம். அதில் வளராமல், அல்லது அதைத் தள்ளி விடுவதையோ, அல்லது அசட்டை பண்ணுவதையோ தெரிந்து கொள்ளலாம்.

இந்த மாதிரியான அபிஷேகம் (பரிசுத்த ஆவியின் தெய்வீக வல்லமை) உன்னுடைய வரங்களையும் அழைப்பையும் நேரடியாகச் சார்ந்துள்ளது. உதாரணமாக ஒருவர் சுவிசேஷகனுடைய வேலையைச்

செய்ய வரம் பெற்றவர் (எபேசியர் 4:11) என்று வைத்துக் கொள்வோம். அவருக்கு ஒருவேளை பரிசுத்த ஆவியானவரின் அப்போஸ்தல ஊழியம் கொடுக்கப்படாமல் இருக்கக் கூடும். அவர் அந்த வல்லமைக்குள்ளும், வரங்கள், அதிகாரம் இவற்றோடும் அவரது அபிஷேகத்தின்படி செய்யலாம். அதாவது ஒரு சுவிசேஷகன் என்ற அழைப்பின்படி வேலை செய்யலாம்.

எனினும், அனுதினமும், நடைமுறையில் இதை அப்பியாசப் படுத்துவது அவ்வளவு எளிதானது அல்ல. ஒருவர் ஒரு குறிப்பிட்ட ஊழியத்திற்கென்று அழைக்கப்பட்டு, அபிஷேகிக்கப்பட்டு இருந்த போதிலும், நம் யாவருக்கும் பொதுவான அழைப்பு ஒன்று உண்டு. என்னவெனில், கிறிஸ்துவில் விசுவாசிகளான நாம் ஒவ்வொரு நாளும் கிறிஸ்துவில் அவரது சரீரத்தின் பங்காளராக வாழவும், செயல்படவும் அழைக்கப்பட்டிருக்கிறோம்.

உதாரணமாக, வேதத்திலிருந்து பார்க்கும்பொழுது, தீமோத்தேயு சபையில் கற்பிக்கவும், போதிக்கவும் அழைக்கப்பட்டிருக்கிறார். எனினும், பவுல் அவரை *"ஒரு சுவிசேஷகனுடைய வேலையைச் செய்"* (II தீமோத்தேயு 4:5) எனக் கட்டளையிட்டிருக்கிறார். ஒரு சுவிசேஷகனாக அல்ல, சில வேளைகளில் தேவையானால் பிறருக்கு சுவிசேஷத்தை அறிவிக்கும்படிக் கூறினார்.

ஆகவே, கிறிஸ்துவின் ஊழியர்களாகிய நாம் எல்லோருமே, நமது குறிப்பிட்ட அழைப்பிற்குள் சம்பந்தப்படாத பொதுவான சில உத்தரவாதங்களைச் செய்ய அழைக்கப்பட்டிருக்கிறோம். ஆனால், அவை நிச்சயமாகவே, கிறிஸ்துவின் சரீரத்தில் ஒரு ஆரோக்கியான செயல்பாட்டுக்குத் தேவையானதும், முக்கியமானதுமாகிறது.

இயேசு கிறிஸ்துவின் விசுவாசியாகவும், சபையின் தலைவருமாக அழைக்கப்பட்டிருக்கிற நமது முதன்மையானதும், முக்கியமான துமான உத்தரவாதம் கிறிஸ்துவுக்குக் **கீழ்ப்படிதலே** ஆகும். நாம் ஆண்டவருக்குக் கீழ்ப்படிந்து, அவரது வார்த்தையின் மூலம் அவர் நமக்குக் கொடுத்துள்ள தகுதியான திட்டத்தின்படி வாழ வேண்டும்.

வேதத்தில், விசுவாசிகளுக்கு அநேக உத்தரவாதங்கள் கொடுக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம். அதாவது பிறருக்கு ஊழியம் செய்தல், ஏழைகளுக்கு உணவு அளித்தல், அநாதைகளைப் பராமரித்தல், பரிசுத்தவான்களை ஆதரித்தல் காணாமற்போன



வர்களைத் தேடிக் கண்டுபிடித்தல் ....இந்தப் பட்டியல் நீண்டு கொண்டே போகக் கூடியது. உன்னுடைய தலையாய அழைப்போடு, இந்த விதமான வெளித் தொடர்பு ஊழியங்களுக்கென்று நீ உன் நேரத்தையும், உன் முயற்சியையும் கூட கொடுக்க வேண்டியதாக இருக்கும்.

உன் ஊழியத்தில் நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய் என்பதை நீ சரியாய் அறிந்து கொள்ள, நீ பின்பற்ற வேண்டிய வழியைக் காட்டும் முறை எதுவெனில் : *உன் கைக்கு நேரிடுவது எதுவோ, அதை உன் முழுப் பெலத்தோடே செய்"* (பிரசங்கி 9:10; கொலோசெயர் 3:23ஐப் பார்க்கவும்)

ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஜெபம் செய். அதன் பின்னர், மற்றவர்களுக்கு என்ன ஊழியம் செய்வதற்கு ஆண்டவர் உன்னை அழைத்திருக்கிறாரோ, அதற்குச் சீக்கிரமாய்க் கீழ்ப்படி. உன் முன் வைக்கப்பட்ட வேலை சிறிதோ, பெரிதோ, என்பது முக்கியம் அல்ல. ஆண்டவர் ஒரு காரியத்தைச் செய்யும்படி உன்னைக் கேட்டுக் கொள்ளும்பொழுது, அவருக்குக் கீழ்ப்படிவதே மிகவும் முக்கியமாநது.

**போதகரிடமிருந்து போதகருக்கு:** ஒரு தகுதிபெற்ற ஊழியக்காரனும், வேதபாட சாலையில் பட்டம் பெற்றவனுமாகிய எனக்குக் கிடைத்த முதல் **பதவி** ஒரு பெரிய சபையின் கட்டடத்தைப் பாதுகாக்கும் ஒரு காவலர் வேலையே. இரண்டு வருடங்கள், நான் குளிப்பறையைக் கழுவுகிறதும், குப்பையை அப்புறப்படுத்துகிறதும், கூட்டம் நடக்கும் இடங்களைச் சுத்தப்படுத்துகிறதும், குப்பைகளைப் பொறுக்குவதும், மற்ற தேவையான வேலைகளைச் செய்வதுமே!

நான் அந்த வேலைகளைச் செய்வதில் உண்மையாகவே மகிழ்ச்சியடையவில்லை. அது எளிதானதும் அல்ல. அது என்னை இழிவுபடுத்தும் வேலை. ஆனால், தேவன் அதை நான் செய்யும்படி சொன்னார் என்று அறிவேன். மேலும் நான் கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்கு ஊழியம் செய்வதற்குப் பெற்றுக் கொள்ள வேண்டிய மிகச் சிறந்த ஆயத்தங்களில் இவை சில என்று அறிந்தேன். உண்மையில் அது என் உண்மையைச் (faithfulness) சோதிக்கிறதாக இருந்தது.

இந்த வேலைக்கு நான் கீழ்ப்படிந்ததும், அதைக் கவனத்தோடு செய்ததும், அடுத்த வேலைக்கு என் கதவைத் திறப்பதுபோன்று காணப்பட்டது. மேலும் தொடர்ந்து வந்த வருடங்களில், அது

என்னுடைய ஒவ்வொரு ஊழியத்திற்கும் வாசலாய் அமைந்தது. நான் புதிய சபைகளை நடத்தியிருக்கிறேன். வாலிபருக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறேன். சபைகளில் போதகராக இருந்திருக்கிறேன். கருத்தரங்குகளில் பேசியிருக்கிறேன். சுவிசேஷக் குழுக்களை நடத்தியிருக்கிறேன். சுவிசேஷ வேலை செய்திருக்கிறேன். இன்னும் மற்ற வேலைகளையும் செய்திருக்கிறேன். எப்படியும் தேவ கிருபையால், கடந்த முப்பது வருடங்களாக தேவன் என்னை ஆயத்தம் செய்து, இப்போது நான் செய்து வருகிற உலக முழுவதற்கும் ஊழியத்தைச் செய்யும்படியாகக் கொண்டு வந்திருக்கிறார்.

அவருடைய நாமத்தில் செய்யப்பட வேண்டிய வேலை எதுவாயிருந்தாலும் படிப்படியாக ஒவ்வொரு வேலையையும் சரியாக நிறைவேற்றியிராவிட்டால், நான் என் முழுத் திறமையையும் கொண்டு எல்லா நிலைகளிலும், முழு மனதுடன் கீழ்ப்படிந்திரா விட்டால், நான் இப்போது இந்த (world MAP) ஊழியத்தை நடத்திக் கொண்டிருக்க மாட்டேன் என்று முழு நிச்சயமாய் நம்புகிறேன். நான் எப்பொழுதும் முற்றிலுமாகக் கீழ்ப்படியவில்லை. மேலும், நான் வழியில் தவறுகளைச் செய்திருக்கிறேன். ஆனால், மொத்தத்தில் தேவன் எனக்கு முன் வைத்த பாதையைக் கீழ்ப்படிதலோடு தொடர, நான் என்னால் இயன்றதைச் செய்திருக்கிறேன்.

தேவன் உன்னுடைய வாழ்க்கைக்கென்று ஒரு திட்டம் வைத்திருக்கிறார். அதை நீ நிறைவேற்றுவதற்கு, உன்னை நடத்தும் மிகச் சிறந்த வழியை அவர் அறிந்திருக்கிறார். நாம் தேவனுக்கும், அவருடைய வசனங்களுக்கும் கீழ்ப்படிவது நமது விருப்பப்படி செய்யும் ஒன்றல்ல. அது தேவையான ஒன்று ஆகும்.

### நமது முதன்மையான அழைப்பு

நாம் தலைமைத்துவத்துக்கோ, அல்லது பிறரை நமது எண்ணங்களோடு ஒத்துப் போகச் செய்வதற்கோ அழைக்கப்பட்டி ருக்கலாம். எதுவானாலும், **நமது முதல் அழைப்பு நாம் கிறிஸ்துவுடன் எப்போதும் கொண்டிருக்கும் உறவேயாகும்.** இந்த உறவானது, கீழ்ப்படிதல் நம்பிக்கை, ஊழியம், தனி வாழ்வில் பரிசுத்தம், தாழ்மை,



ஆவியின் கனிகள் வளருவதை உள்ளடக்கியதாகும். (கலாத்தியர் 5:22, 23) இந்த குணாதிசயங்கள், இயேசுகிறிஸ்துவோடுள்ள ஒரு மிகச் சிறந்த, வளரும் தன்மையுள்ள உறவுக்கு அஸ்திபாரமாய் அமைகின்றன. இந்த விதமான தேவனோடுள்ள தனித்தொடர்பான மிகச்சிறந்த, திடமான அஸ்திபாரத்தின் பலனாக, உன் மூலம் ஊழியத்தை வெளிக்கொண்டு வருவதற்கும், உன் ஊழியத்தின் வேலைகளை நீ செய்வதற்கும் தேவையான அபிஷேகத்தை உனக்குக் கொடுக்கின்றன. இந்த அடிப்படையான திறவுகோல்களாகிய தத்துவத்தை மனதில் கொண்டு, அபிஷேகத்தில் நடத்தல் என்பதை மேலும் கூர்ந்து நோக்குவோம்.

## A. அபிஷேகத்தைப் பாதுகாத்தல்

பரிசுத்த ஆவியானவர் நம்மை ஊழியத்திற்கென்று அபிஷேகிப்பது, ஒரு பரிசுத்தமானதும், விசேஷமானதுமான உரிமையாகும். அது, நாம் நமது வாழ்வில் வளர்த்துக் கொள்ள வேண்டியதும், பாதுகாக்க வேண்டியதுமாகும்.

அதாவது, பரிசுத்த ஆவியானவருக்கு (நம்மை அபிஷேகிப்பவர்) நமது பாதுகாவல் சிறிதளவாவது தேவைப்படுகிறது என்று நான் சொல்லவில்லை. அதுவன்றி நமது **சொந்த இருதயத்தையும்** வாழ்க்கையையும் இந்த உலகின் ஆவிக்குரிய மாசு படாதவாறு காத்துக் கொள்வதேயாகும் (II பேதுரு 1:2-4; I யோவான் 2:15-17)

நீதிமொழிகளை எழுதிய சாலொமோன் கூறும் அறிவுரையாவது : ‘‘எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக் கொள். அதனிடத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும்” (நீதிமொழிகள் 4:23) என்றார். நம்முடைய வாழ்க்கையின் மூலமே பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம், மற்றவர்களுக்குச் செய்யும் ஊழியங்களில் வழிந்தோடும். இப்படியாக நமது வாழ்க்கையும் நமது இருதயமும் தூய்மையாகக் காக்கப்பட வேண்டும்.

### 1. கிணற்றில் எலிகள்

ஒவ்வொரு விசுவாசியும் *“பரிசுத்த ஆவியின் ஆலயம்”* என்று பவுல் கூறுகிறார். (I கொரிந்தியர் 6:19, 20). இப்படியிருக்கிறபடியால் நாம் பாவத்தோடு தொடர்புகொள்வதால் நமது ஆலயத்தை அசுசிப் படுத்தக்கூடாது (ரோமர் 6 பார்க்கவும்).

வேதம், சரீரத்திலும், ஆவியிலும் ஆத்துமாவிலும் பரிசுத்தமாக இருக்க வேண்டுமென்பதைக் குறித்து ஏராளமான புத்திமதியைக் கூறுகிறது (I யோவான் 3:2, 3) இந்தப் பகுதிகள் ஒவ்வொரு விசுவாசிக்கும், குறிப்பாகக் **கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் தலைவர்களுக்கும் எழுதப்பட்டுள்ளது.**

தனிப்பட்ட பரிசுத்தம் ஏன் அவ்வளவு முக்கியமானது? ஏனெனில் பரிசுத்த ஆவியானவர் **நமக்குள்** வசிக்கிறார். அதாவது மீட்கப்பட்ட ஒவ்வொருவருக்குள்ளும் அவர் வாசமாயிருக்கிறார் (I பேதுரு 1:19)

நாம் பாவமான செயல்களைச் செய்யும்பொழுதும் பாவமான நோக்கங்கள் உடையவர்களாக இருக்கும்பொழுதும், பரிசுத்த ஆவியானவர் தங்க விரும்பும் இடமானது அசுத்தமடைந்து உபயோகமற்றதாகிறது.

### தூய்மையாக வைத்திருப்பது

வீடுகள் உள்ள ஒரு பெரிய நிலத்திலோ அல்லது கிராமத்திலோ ஒரே ஒரு கிணறு தான் இருப்பதாக வைத்துக்கொள்வோம். ஒவ்வொருவரும் அந்தக் கிணற்றையே உபயோகிக்கிறார்கள். அத்துடன், அந்தக் கிணற்றின் தண்ணீரையே சார்ந்திருக்கின்றனர். அந்தத் தண்ணீர், கழுவுகிறதற்கும், சமையல் செய்வதற்கும், துணி துவைப்பதற்கும், குடிப்பதற்கும் உபயோகிக்கப்படுகிறது. செத்த எலிகள் இந்தக் கிணற்றில் மிதக்கும்பொழுது இந்தத் தண்ணீரை உபயோகிப்பதைப் பற்றி நீ எண்ணிப் பார்க்க முடியுமா?

நமது தெரிந்தெடுப்புகள் நமக்குள் வசிக்கும் பரிசுத்த ஆவியின் ஆலயத்தை எவ்வாறு பாதிக்கின்றன என்பதற்கு இது ஒரு நல்ல பொருத்தமான பாடமாக அமைகிறது. அவரே நமது அனுதின வாழ்க்கையின் எல்லாத் தேவைகளுக்கும் மிகப் பெரிய மூலப் பொருளாக இருக்கிறார்.

ஆனால், தனிப்பட்ட வகையில் நமக்கு மட்டுமல்ல, சபைத் தலைவர்களாகிய நமக்குள் இருக்கிற தேவ ஆவியானவர், மற்றவர்களுக்கு ஒரு மூலப் பொருளாக (resource) இருக்க உதவி செய்கிறார். உண்மையாகவே, ஊழியத்தில் நாம் எப்படி இருக்கிறோமோ, எதைப் பெற்றுக் கொள்ளுகிறோமோ அதிலிருந்து தான் மற்றவர்களுக்குக் கொடுக்கிறோம். (மத்தேயு 10:8) (கலிலேயாக் கடல் /



சவக்கடல் சம்பவங்கள் (பகுதி II, பிரிவு-C 2) பார்க்கவும். ஆனால், நமது வாழ்வில் ''எலி'' களை வரும்படி அனுமதித்திருக்கிறோமா? நிச்சயமாகவே பாவப்பழக்க வழக்கங்களின் பிரசன்னமும், பாவமான நோக்கமும், நமது ஊழியத்தையும், நமது உறவு முறைகளையும், நமது குடும்பத்தையும், நமது வேலையையும் நாம் தொடும் எல்லாவற்றையும் நச்சுப்படுத்தி, நம்மை உபயோகமற்றவர்களாக்கி விடுகிறது.

சாதாரணமாக, இந்தக் "கிணற்றுக்குள் எலிகள்" என்பனவற்றில் அதிகமாகக் காணப்படுவது எது?

- மாமிசத்தின் கிரியைகள் (கலாத்தியர் 5:19-21).
- பாவத்தின் ஏமாற்றும் தன்மையினால் உண்டாகும் தவறான நடத்தை (எபேசியர் 4:17-32).
- அல்லது மதம் என்பதின் ஆவி (கலாத்தியர் 5:1-6) கொலோசெயர் 2:11-23).
- பதவி, பெயர், அதிகாரம் இவற்றைப் பெறுவதற்காகப் பெரு முயற்சி செய்தல் (மத்தேயு 6:1, 2, 5, 16; மத்தேயு 23:2-12).
- ஆஸ்தியையும், பொருட்களையும் சம்பாதிக்க ஊழியத்தை உபயோகித்தல் (மத்தேயு 6:19-21, 24; I தீமோத்தேயு 6:3-10; II தீமோத்தேயு 4:10).
- பிறரை நியாயந்தீர்த்தல், கசப்பு, பிறரை மன்னிக்காத குணம் (மத்தேயு 7:1-6; 18:21-35; கொலொசேயர் 3:12-19; எபிரெயர் 12:15; யாக்கோபு 3:13-18).
- தவறான போதனை, தவறான கோட்பாடுகள் (மத்தேயு 24:4, 5, 11, 23-27; கலாத்தியர் 1:8; II கொரிந்தியர் 11:13-15; I தீமோத்தேயு 4:1-5; II தீமோத்தேயு 2:14-18; II பேதுரு 2:1-22; யூதா 7-19).

இது 'எலி'கள் என்பதைச் சுருக்கமாகக் கூறுவது ஆகும். அதா வது உன் இருதயமாகிய சொந்தக் கிணற்றை மட்டுமல்ல, உன்னால் பாதிக்கப் படக்கூடிய, உன் வாழ்க்கையிலும், உன் ஊழியத்திற்குள்ளுமான ஒரு வட்டத்துக்குள்ளே இருப்பவர்களையும் கெடுத்துவிடக் கூடியது. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் ஒரு தலைவனாக இருக்கும் நீ பரிசுத்தமும், தூய்மை யுமான ஒரு வாழ்க் கைக்கு அழைக்கப் பட்டிருக்கிறாய். (மத்தேயு 5:8; I கொரிந்தியர் 9:24-27; எபிரெயர் 12:14; I பேதுரு 1:13-19) தேவன் அவரால் அழைக்கப்பட்ட தமது

**கிறிஸ்துவின் சரீரத்தில் ஒரு தலைவனாக இருக்கும் நீ, ஒரு பரிசுத்தமும் தூய்மையுமான வாழ்க்கைக்கு அழைக்கப் பட்டிருக்கிறாய். பழைய ஏற்பாட்டின் ஆசரிப்புக் கூடாரத்தில் இருந்த பரிசுத்த அபிஷேகத்தின் எண்ணெயைப் பார்க்கிலும், அவரால் அழைக்கப்பட்ட ஊழியர்களுக்கு தேவன் தரும் அபிஷேகமானது மிகப் பெரிய அளவில் அருமையானது. ஏனெனில், அது பரிசுத்த ஆவியானவரின் தனிப்பட்ட அவரது பிரசன்னமேயாகும்.**

ஊழியர்களுக்குக் கொடுக்கும் அபிஷேகமானது, பழைய ஏற்பாட்டில் உள்ள ஆசரிப்புக் கூடாரத்தில் சொல்லப் பட்ட அபிஷேகத்தை விட, அதிக அருமையும், பரிசுத்தமுமானது ஏனெனில் அது பரிசுத்த ஆவியானவருடைய நேரடியான பிரசன்னமாகும்.

நமது முதன்மையான அழைப்பு தேவனோடு சரியான உறவில் வாழுவதே ஆகும். இதற்குத் தேவையானது என்னவெனில், ஒரு பரிசுத்தமான, கறைதிரையற்ற, பரிசுத்த ஆவியானவர் தங்கி இருக்கத்தக்க ஒரு ஆலயம் ஆகும். (I கொரிந்தியர் 6:19, 20). ஒரு தூய்மையான வாழ்க்கையானது நமது பிதாவாகிய தேவனைப் பிரியப்படுத்துவதோடு, நமது எஜமானனுடைய கரங்களில் அவரால் உபயோகப்படுத்தப் படக்கூடிய நம்பிக்கைக்குரிய பாத்திரமாகுகிறது.

உன்னுடைய சொந்தக் கிணற்றைத் தூய்மையாக வைத்துக் கொள்ள **உன்னால் மட்டுமே** முடியும். தேவனுடை.ய பரிசுத்த ஆவியானவரும், கலப்படமற்ற வேதவாக்கியங்களும் தடையின்றி வழிந்தோடும் ஒரு சுத்தமான பாத்திரமாக இருக்கத் தீர்மானம் எடுத்துக்கொள். சுத்தமாக்கப்பட்டு, ஊழியம் செய்யக் கூடிய ஒரு நல்ல கருவியாக நீ மாறுவதால், தேவன் அவரது மகிமைக்காகவும், தேவைகளுக்காகவும், பெரிய காரியங்களைச் செய்ய உன்னை உபயோகிக்கக் கூடும். (I கொரிந்தியர் 10:31; II தீமோத்தேயு 2:19-21)



## தோல்வியிலிருந்து கற்றுக்கொள்ளும் பாடம்

சாலொமோன் என்ற அரசன் தேவனால் உயர்த்தப்பட்டு, விசேஷமான வரங்களை தேவனிடமிருந்து பெற்றவனாக இருந்தான் (I ராஜாக்கள் 3:5-14; 4:29-34) ஒரு முறை தேவன் அவனை அற்புதமாக சந்தித்தார் (I ராஜாக்கள் 3, 9ஐப் பார்க்கவும்). தேவனுடைய வழிகளில் நடக்கவும், அவருடைய கட்டளைகள், கற்பனைகளுக்குக் கீழ்ப்படியவும் அவன் கட்டளை பெற்றிருந்தான். I ராஜாக்கள் 3:14; 6:11-13; 9:4-9) சிறிது காலம் சாலொமோன் இதைச் செய்து வந்தான்.

பின்பு சாலொமோனுடைய ஆட்சி, அவரது தனிப்பட்ட வாழ்வின் அழிவை மட்டுமல்ல, அவனது முழு ராஜ்ஜியமும் அழிவைக் கண்டதிலேயே முடிந்தது. (I ராஜாக்கள் 11ஆம் அதிகாரத்தைப் பார்க்கவும்)

அநேகத் தலைவர்களைப் போல சாலொமோனும் நன்றாக ஆரம்பித்து, மோசமான முடிவுக்குள் வந்தான். இது எவ்வாறு ஏற்பட்டது? அது 'கீழ்ப்படியாமை' என்ற ஒரே சொல்லால் விளக்கிச் சொல்லக்கூடியது.

I ராஜாக்களின் புத்தகத்தை நோக்குவோமானால், சாலொமோன் ஒரு சிறந்த அறிவாளி என்பது தெரிய வருகிறது. அவன் எல்லா மனுஷரைக் காட்டிலும் அதிக ஞானமுள்ளவனாக இருந்தான் (I ராஜாக்கள் 4:31) அவனது காலத்தில் வாழ்ந்தவர்களில் அவனே மிகப் பெரிய ஐசுவரியம் உடையவனாக இருந்தான். (I ராஜாக்கள் 10:11-29) எல்லோராலும் புகழப்பட்டு, கனப்படுத்தப்பட்டவனாக இருந்தான. (10:1-9) ஆனால், பின்னர் சாலொமோன் தேவனுடைய கட்டளைகளை மீறத் தொடங்கினான். (11:1, 2) கொஞ்சம், கொஞ்சமாகத் தவறான தெரிந்தெடுப்புகளினாலும், உலகத்தோடு ஒத்துப் போகத் தொடங்கியதாலும், தேவன் தமது அபிஷேகத்தின் மூலம் தனக்குக் கொடுத்திருந்த ஆசீர்வாதங்களையும், சிலாக்கியங்களையும் இழக்க ஆரம்பித்தான். முடிவில் இது சாலொமோனுடைய ஆட்சிக்கே அழிவைக் கொண்டுவந்தது.

சாலொமோனுடைய வாழ்க்கையிலும் ஆட்சியிலுமிருந்து நாம் எதைக் கற்றுக் கொள்ளுகிறோம்?




**a. கவனம் சிதறும்போது அது ஒழுங்கில்லாமைக்கும், விழிப்பில்லாத வாழ்க்கைக்கும் வழி நடத்தும்.** ''திராட்சை தோட்டங்களைக் கெடுக்கிற சிறு நரிகள்'' என்று சாலொமோன் எழுதியுள்ளார். (உன்னதப்பாட்டு 2:15) சாலொமோனுடைய சபையில், ஐசுவரியமும், வாய்ப்புகளும் நிறைவாக இருந்தன. அதுவு மின்றி, எதையும் செய்யக் கூடிய அநேகர் அவனருகிலேயே இருந்தார்கள். தீமையே அல்லாத களங்கமற்ற சந்தோஷங்கள் கூட மனிதனுடைய இருதயத்தை வழுவிப் போகப் பண்ணக் கூடியது என்பதை தேவன் அறிந்திருக்கிறார். இதை நீ அறிந்திருக்கிறாயா? அது, படிப்படியாக ஒழுங்கற்ற நிலைக்குள் நடத்தி முடிவில் கீழ்ப்படியாமைக்குக் கொண்டுபோய் விடுமல்லவா? நிச்சயமாக அதை தேவன் அறிவார். அதை அறிந்த தேவன் தான் கூறின எல்லாவற்றிற்கும் கீழ்ப்படிய வேண்டும் என்பதைத் திரும்பத்திரும்ப சாலொமோனிடம் கூறினார். (I ராஜாக்கள் 6:12; 9:4) ஆனால் சாலொமோன் தேவனுக்குச்செவி கொடுக்கவில்லை. விசேஷமாக, அவன் வெற்றியுள்ள அரசனாக ஆனபின் கீழ்ப்படியவில்லை.

**போதகரிடமிருந்து போதகருக்கு:** சபையின் தலைவரே, தொடர்ந்து வரும் ஊழியத் தேவைகளால் ஏற்படும் அழுத்தத்தினாலோ, அளவுக்கதிகமாகப் பல காரியங்களில் ஈடுபட்டு, தேவ பிரசன்னத்திலிருந்து நீ இழுக்கப்படுவதினாலோ உன் ஊழியமே உன் கவனத்தைச் சிதறப்பண்ணும் ஒன்றாக அமையலாம். இயேசுவானவர் இந்த உலகத்திலிருந்த பொழுது, பிதாவின் சத்தத்தைக் கேட்கவும், ஆவிக்குரிய காரியத்தில் புதுப்பிக்கப்படவும் வேண்டுமென்று



மாதிரியைக் காண்பித்தார் (மாற்கு 1:35-39; லூக்கா 5:16; 6:12)

அவருடைய ஆவியின் அபிஷேகத்திற்கும், அவருடைய வார்த்தைகளை நாம் புரிந்து கொள்வதற்கும் நமது ஆண்டவரே ஊற்றும், பிறப்பிடமுமாக இருக்கிறார் என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது. (யோவான் 1:33; 6:63, 68) அவை, அவரிடமிருந்தே வருகின்றன. நாம் தேவனுடைய பாதத்தில் ஜெபத்தில் காத்திருந்து, அவருடைய வார்த்தைகளைப் படித்து, அதன் விளைவாக நாம் பெற்றுக் கொண்டதிலிருந்து வழிந்தோடும் ஊழியமே உண்மையிலே கனிதரும் ஊழியமாகும் (லூக்கா 10:41, 42; யோவான் 15:16). நம்மில் அநேகருக்கு இந்த அடிப்படைச் சத்தியம் தெரிந்ததே.

வல்லமை நிறைந்த வாழ்வுக்கும் ஊழியத்துக்கும் தேவையான இந்த அடிப்படைத் தத்துவத்தை நமது அன்றாட வாழ்வில் **நடைமுறைப்படுத்தாவிடில், அப்போது தான் பிரச்சனை ஏற்படுகிறது.**

இப்படியாக, நமது கவனத்தைச் சிதறடித்து, நம்மை வெறுமையாக்குவதற்கோ, அல்லது ஒத்துப் போவதால் பாவம் செய்வதற்கோ விலகி நம்மைப் பாதுகாத்துக் கொள்வோமாக. சாலொமோன் தன் வாழ்க் கையில் அனுமதித்த சில காரியங்களினால் அவனுடைய இருதயம் தேவனிடமிருந்து தூரமமாக்கப்பட்டது. (I ராஜாக்கள் 11:1-4, 9) உலக நாட்டத்தினால் அவனுக்கு தேவனிடமிருந்த பற்றுதலும் கீழ்ப்படிதலும் குறைந்து போயின. அது அவனுடைய சொந்த வாழ்க்கையின் அழிவுக்கும், தேவன் அவரை அதிகாரியாக வைத்த அனைத்திற்கும் அழிவைக் கொண்டு வந்தது.,

உன் வாழ்க்கையில் நீ கையிட்டுச் செய்யும் எந்தக் காரியத்தையும் குறித்து நீயே கேட்டுக் கொள்ள வேண்டிய சில நல்ல கேள்விகள் பின் வருபவை:

"நான் செய்கிற இந்தக் காரியம் அல்லது என் மனப்பான்மை, என்னைத் தேவனிடத்தில் நெருங்கி வரவும், தேவனது திட்டங்களுக்கும், நோக்கங்களுக்கும் நேராக என்னை எடுத்துச் செல்லுகிறதா? அல்லது, அதை விட்டு என்னைத் தூரப் படுத்துகிறதா?

**b. மனிதரின் புகழ்ச்சி ஒரு மரணப் படுகுழி.** போதிப்பதையோ அல்லது பிரசங்கிப்பதையோ நீ மனுஷர் புகழ வேண்டுமென்று செய்வாயானால் அது உன்னை ஏமாற்றும் ஒரு கண்ணியாக அமையும். நித்தியமான விலையேறப் பெற்ற காரியங்களை தேவன் ஒருவரே செய்ய முடியும் (சகரியா 4:6). ஆம், தேவன் தாம் உபயோகிப்பதற்கு ஏற்ற பாத்திரங்களாக நாம் இருக்கவேண்டுமென்று விரும்புகிறார். ஆனால், நமது மூலமாகச் செயல்படும் எந்தவிதமான செயலுக்கும் உரிய வல்லமையும் மகிமையும் அவருக்கே உரியவை ஆகும். ஏனெனில் அவரன்றி, நம்மால் எதையுமே செய்ய முடியாது (யோவான் 15:5)

தனது மகிமையை வேறு எவருடனும் தாம் பகிர்ந்து கொள்வதில்லை என்பதை தேவன் தமது வார்த்தையில் வெளிப்படுத்தியுள்ளார் (ஏசாயா 42:8; 48:11) நமது ஊழியங்களுக்கான மகிமையையோ அல்லது புகழ்ச்சியையோ நாம் மனிதரிடமிருந்து எதிர்பார்க்கக்கூடாது. (யோவான் 7:18)

வேதபாரகர், பரிசேயர் என்பவர்கள்மேல் இயேசு ஒரு கடுமையான குற்றம் சுமத்தினார். அதாவது அவர்கள் மனிதருடைய புகழ்ச்சியை விரும்பினதை அவர் கடிந்து கொண்டார் (மத்தேயு 23:5-12) யோவான் 5:41-44). அவர்கள் வேதத்தையும், தேவனது வழிகளையும் நன்கு அறிந்து அதில் பழகியிருந்த போதிலும், அவர்களது பெருமையினால் அவர்கள் இயேசுவை அவர்களது மேசியா என்பதை ஒப்புக்கொள்ளவோ அல்லது விசுவாசிக்கவோ முடியாமற் போனார்கள். (யோவான் 5:39, 40)

## அவரது அடிச்சுவடுகளில் பின் செல்லுதல்

இயேசுவானவருக்குப் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் அளவில்லாமல் கொடுக்கப்பட்டிருந்தது (யோவான் 3:34, 35) அவர் எல்லா ராஜாக்களுக்கும்மேலான ராஜாவாகவும் கர்த்தாதி கர்த்தாவாகவும் இருந்தார். இன்றும் இருக்கிறார். எனினும், நமது நிமித்தம் அவர் தம்மை ஒரு தாழ்மையான பணிவிடைக்காரனாக மாற்றினார். (மத்தேயு 20:28; பிலிப்பியர் 2:3-11)

மெய்யாகவே, தேவனுடைய சரீரத்தில் தலைவர்களாக இருக்கிற நாம் *“கிறிஸ்து இயேசுவிலுள்ள சிந்தையே உங்களிலும் இருக்கக் கடவது”* என்றவாறு இருக்க வேண்டும். (பிலிப்பியர் 2:5). இயேசுவைப் போல நமக்கு பரிசுத்த ஆவியானவரை அளவில்லாமல்



**கொடுக்கப்படவில்லை.** ஆனால், நாம் அவருக்குக் கீழ்ப்படிந்து, அவரோடும், பரிசுத்த ஆவியானவரோடும் உள்ள உறவிலும், நிலைத்து வாழ்ந்தால், அதாவது நமக்குத் தேவையான யாவுமே நமக்குக் கிடைக்கப் பெறுவோம் (II பேதுரு 1:2-4).

தேவன் நம்மை அவரது ஊழியத்தில் உபயோகப்படுத்தும் பொழுது, நாம் நம்மை உயர்ந்தவர்களாக எண்ணிக் கொள்ளுதல் கூடாது. நாம், பெருமை என்ற பிசாசின் பாவத்தைக் குறித்து அதிக விழிப்புடன் இருக்க வேண்டும் (I தீமோத்தேயு 3:6)

## பாவங்களில் மிக ஆபத்தான பாவம்

பெருமை என்ற கொடிய பாவமானது முற்றிலுமாய் அர்ப்பணித்த தலைவனைக் கூட மெதுவாக, அதாவது கொஞ்சம் கொஞ்சமாக, அவரது மனதை மாற்றி, அதன்மூலம் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை நிறுத்திவிடக் கூடும். ஒரு சபைத் தலைவர் மிகவும் திறமையானவராகவோ, ஞானமுள்ளவராகவோ அறிவில் சிறந்தவராகவோ இருக்கலாம். ஆனால், இவற்றைக் குறித்து, அவர் பெருமை கொள்வாரானால், அது மிகவும் தவறானதொன்றாகும்., முதலாவதாக, நமக்குக் கிடைத்திருக்கிற எல்லாமே தேவனிடமிருந்து பெற்றுக் கொண்டவை தான். இரண்டாவதாக, தேவனுடைய ஆவியின் அபிஷேகத்தோடும், தேவனே மட்டும் செய்யக் கூடிய காரியங்களோடும், நாம் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது நம்முடைய ஞானமும், காரியங்களைத் திறம்படச் செய்யும் சக்தியும், திறமையும் ஒன்றுமில்லை என்பது தெளிவாகிறது (மத்தேயு 7:21-23; I கொரிந்தியர் 3:18-21; 4:20; 8:1-3).

மிகக் கொடிய பாவம் என்பது பெருமையே ஆகும். சாத்தானுடைய அடிப்படையான பாவமே அதுதான். (ஏசாயா 14:12-14) தேவனை விட நல்ல முறையில் காரியங்களைச் செய்துவிடலாம் என்ற தீர்மானத்துக்குள்ளே பெருமை நம்மை நடத்துவதுமல்லாமல், முடிவாக, நாம் தேவனுக்கு எதிர்த்து நிற்கவும், நம்மை நடத்திவிடக்கூடும். தேவனுக்குக் கீழ்ப்படியாமல் நாமே நமது திட்டங்களை உருவாக்குவோமானால், நாம் மெய்யாகவே தேவனுக்கு எதிராகச் செயல்படுகிறவர்களாவோம். நாம் முற்றிலுமாக நம்மை அவருக்கு ஒப்படைக்காவிட்டால் நாம் அவரை விட்டுப் பிரிந்து வருகிறோம்.

ஏனெனில் "தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபையளிக்கிறார்" (யாக்கோபு 4:6)

பெருமை நம்மை சுய திருப்திக்கும் சுயத்தைச் சார்ந்திருப்பதற்கும் வழி நடத்துகிறது. அதன் விளைவாக, நாம், தேவனோ மற்ற மனிதரோ நமக்குப் போதிக்க வேண்டுவதில்லை என்று நம்புகிறோம். தேவனிடத்திலிருந்து நாம் எதையுமே கேட்க வேண்டியதில்லை என்று எண்ணி, நாம் கேட்பதை நிறுத்தி விடுகிறோம். நாம் பெற்றுக் கொள்வதும் நின்று விடுகிறது. (யாக்கோபு 4:1, 2). நமது பரலோகப் பிதாவிடம் கேட்பதற்கும், கற்பதற்கும், நமக்கு மனத்தாழ்மையான, குழந்தை போன்ற விசுவாசம் தேவைப்படுகிறது. (மத்தேயு 18:3, 4) நமக்குத் தேவையான எல்லாவற்றையும் நமக்குக் கொடுப்பவர் தேவனே: நாம் தாழ்மையோடு, அவரும், அவர் நமக்குத் தரும் எல்லாமுமே நமக்குத் தேவை என்று உணர்ந்து கொள்ளாவிட்டால், நாம் அவரிடமிருந்து எதையுமே ஒருபோதும் பெற்றுக்கொள்ள முடியாது. இவ்விதமான தாழ்மையிலிருந்து பெருமை நம்மைப் பிரித்து விடுகிறது. அதன் மூலம் அவருடைய அபிஷேகத்தை உள்ளடக்கிய தேவ ராஜ்ஜியத்தின் ஆசீர்வாதங்களை நாம் இழந்து விட நேரிடுகிறது.

### ஆண்டவரை மட்டும் நம்பு

ஒரு நாணயத்தை ஒரு வினாடி நினைத்துக் கொள். ஒரு பக்கம் 'பெருமை' என்று குறிக்கப்பட்டிருக்கிறது மறுபக்கம் "மனிதனுக்குப் பயப்படும் பயம்" என்று பொறித்திருக்கிறது. ஒரு நபரின் வாழ்வில் மாமிசத்தின் பாவங்களான இவ்விரண்டும் அடிக்கடி வெளிப்படுத்தப் படுகிறது.

*"மனுஷனுக்குப் பயப்படும் பயம் கண்ணியை வருவிக்கும்; கர்த்தரை நம்புகிறவனோ உயர்ந்த அடைக்கலத்தில் வைக்கப்படுவான்''* (நீதிமொழிகள் 29:25) மனிதனுக்குப் பயப்படும் பயம் ''அநேக முகங்களை''. உடையது. போதகர்களை இந்தக் கண்ணியில் விழச் செய்யும் சில சாதாரண காரியங்கள்:

- சபையில் ஜனங்களை வருத்தப்படுத்துவதற்கோ, அவர்கள் செய்வதைத் தடுப்பதற்கோ பயம்.
- பணம் கொடுப்பவர்களுக்கோ, அல்லது செல்வாக்கு உள்ளவர்களுக்கோ அதிகமான சலுகை கொடுப்பது.



- சபைப் போதகர்களுடைய, அல்லது சபை மக்களுடைய சம்மதத்தைப் பெற்றுக் கொள்வதற்காகச் சில காரியங்களைச் செய்வது அல்லது சொல்லுவது (அல்லது தன்னைப் பெரிதாக எண்ணுதல்) மனிதனுக்குப் பயப்படும் பயத்தினால் நாம் சிக்கிக்கொள்வதற்குப் பல வகையான வழிகள் உண்டு.

இந்த முறைகள் எல்லாவற்றையும் தவிர்த்தாலும், மனிதனுக்குப் பயப்படும் பயத்திற்கு நீ இடம் கொடுத்தால், மற்ற மனிதருடைய கண்ணியில் அகப்பட்டுக் கொள்வாய். அவர்களுடைய அபிப்பிராயங் களினாலும் அவர்களுடைய நியாயங்களாலும் நீ பாதிக்கப் படுவாய். இப்படியாக, நீ மனிதருடைய அபிப்பிராயங்களைச் சேவிக்கும்பொழுது, எப்படி நீ உன் முழு இருதயத்தோடு தேவனுக்குச் சேவை செய்ய முடியும்? '*இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய ஒருவனாலும் கூடாது"*(மத்தேயு 6:24). இருதயம் பிரிவுபட்டிருக்கும் பொழுது ஒருவரும் நிற்க முடியாது. (சங்கீதம் 86:11; மாற்கு 3:24, 25)

இயேசுவும், மக்களின் தன்னலமான விருப்பங்களினாலும் (மாற்கு 1:35-39). யோவான் (6:15, 22-40) பரிசேயருடைய நியாயந்தீர்க்குதலி னாலும் (மத்தேயு 22:15-22) லூக்கா 7:36-50) அல்லது அவரது உலகப்பிரகாரமான குடும்பத்தினராலும் (மத்தேயு 12:46-50; யோவான் 7:1-9) இந்தப் பிரச்சனையைச் சந்தித்தார்.

இந்த எல்லா விதமான காரியங்களிலும் இயேசு ஜனங்களுடைய அபிப்பிராயங்களுக்குப் பதிலளிக்கவில்லை. தன் முழுக் கவனத்தையும் தன்னைப் பாதித்த எல்லாக் காரியங்களுக்கும் மேலாக தேவனுடைய சித்தத்தைச் செய்வதிலேயே வைத்திருந்தார்.

உத்தமமாகவும், முழுவதுமாகவும் அவருக்கு ஏற்ற இருதயங்க ளுள்ள ஜனங்களை தேவன் தேடிக்கொண்டிருக்கிறார். இப்படிப்பட்டவர்கள் மூலமே அவர் பெரிய காரியங்களைச் செய்வார். அதுமட்டுமின்றி, இவர்கள் மேலேயே அவர் தமது அபிஷேகத்தை ஊற்றுவார்.

மனிதருக்குப் பயப்படும் பயத்தினின்று நம்மை எது காப்பாற்ற முடியும் என்பதைக் கவனித்துப் பார்ப்போம். அது தேவனிடம் வைக்கும் **விசுவாசமே.** (நீதிமொழிகள் 29:25) நாம் தேவனை அறிந்து, அவருடைய சித்தத்தைச் செய்ய நாம் அவரைத் தேடி, அவரை

நம்பும்போது, அவர் சொன்ன காரியங்களுக்குக் கீழ்ப்படியும்போது மனிதர் என்ன நினைப்பார்கள் என்பதைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. நம்முடைய விசுவாசம் தேவனில் இருக்க வேண்டும். அவர் என்ன நினைக்கிறார் என்பதை நாம் முக்கியமானதாகக் கருதும்போது மனிதர்கள் என்ன நினைக்கிறார்கள் என்ற கண்ணியில் நாம் சிக்கிக் கொள்ள மாட்டோம்.

**C. "சிறு நரிகள்" என்ற சின்னச் சின்ன விஷயங்களில் நாம் ஒத்துப்போகும்பொழுது பெரிய காரியங்களிலும் நாம் ஒத்துப் போகத் தொடங்குகிறோம் (உன்னதப்பாட்டு 2:15)** தேவன் முக்கியமான வழிகளில் உபயோகித்து வருகிற தலைவர்களிடையே ஒரு பொதுவான பிரச்சனை உண்டு. அவர்கள் மிக மிக முக்கியமானவர்களாகத் தங்களை எண்ணிக் கொள்ளுவதால், தேவனுடைய எல்லாச் சட்டதிட்டங்களுக்கும், தரத்திற்கும் தாங்கள் ஒத்து வாழ வேண்டியது அவசியம் அல்ல என்று எண்ணத் தொடங்குகிறார்கள். அவர்கள் அவைகளைக் குறித்து அறிந்திருக்கலாம், அவைகளைப் போதிக்கக்கூடியவர்களாக இருக்கலாம். ஆனால், தங்களைப் பொறுத்த மட்டில் அவைகளின்படி வாழ வேண்டுமென்பதை அவர்கள் விசுவாசிப்பது இல்லை.

இதையே நான் "தலைவர்களல்லாத தலைவர்கள்" என்ற ஒரு தனி வகுப்பாகக் குறிப்பிட்டுள்ளேன். தலைவர்கள் தாங்கள் மிக மிக முக்கியமானவர்களாகிவிட்டதாக கருதும்போது தாங்கள் தாழ்மையாக இருக்க வேண்டியதில்லை. அவர்களது எண்ணங்களில் அவர்கள் தேவனுடைய சட்டங்களுக்கு அவர்கள் '**விதி விலக்கு**' என்று கருதுகிறார்கள். அவர்களது தன்னலமானதும், மாமிசத்துக்கேற்றதுமான வழிகள் தங்களது முக்கியத்தையோ, தங்களது வெற்றியையோ தேடுவதால் பரவாயில்லை என்று எண்ணுகிறார்கள். உலகத்தோடொத்த சிந்தனைகளை ஒப்புக் கொள்ளுகிறார்கள். ஏனெனில் ஊழியத்தின் வெற்றியானது அவர்களது சிறந்த சக்தியினாலும், தாலந்துகளினாலும் உண்டானது என்பது அவர்கள் கருத்து. -ஆகவே, தாங்கள் மிக முக்கியமானவர் என்பதாகக் கருதி வாழத் தொடங்குகிறார்கள்.

தேவன் உண்மையுள்ளவராக அவர்கள் மூலம் ஊழியத்தைத் தொடருகிறார் (ரோமர் 11:29) ஆகவே, அவர்கள் தேவனுடைய நன்மை செய்யும் குணத்தைச் சார்ந்து வாழத் தொடங்குகிறார்கள். கொஞ்சம்



கொஞ்சமாக அவர்கள் முடிவில் பாவமனோபாவத்தையும், நடத்தையையும் பின்பற்றத் தொடங்குகிறார்கள். இது அவர்களது ஊழியத்தைத் தோல்விக்குள் நடத்துகிறது. முடிவில் அவர்களது விசுவாசத்தையே அது அழித்துவிடுகிறது. மனச்சாட்சியை மழுங்கிப்போகச் செய்கிறது (I தீமோத்தேயு 4:2).

**ஜனங்கள் இயேசுவை நம்பி அவரைப் பின்பற்றுவது போலக் காணப்பட்டாலும், அவர்களது இருதயங்கள் எவ்வளவு நிலையற்றவை என்பதையும் அவர் அறிந்திருந்தார். (யோவான் 2:23-25). அவரைப் பின்பற்றி வந்தவர்களையும் இந்த விதமாக மனுஷரை நம்புவதோ, (லூக்கா 6:36) அல்லது அவர்களது புகழ்ச்சியை நாடுவதோ கூடாதென்று எச்சரித்தார். இவ்வாறு, மனிதருடைய உயர்ந்த அபிப்பிராயங்களை நாம் நாடும்பொழுது, தேவனை முழு மனதோடு சேவிக்க நமது இருதயம் நாட்டம் கொள்ளாது.**

அது பரிசுத்த ஆவியானவரைத் துக்கப்படுத்தவும், அவித்துவிடவும் நம்மை நடத்திவிடும். முடிவாகப் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் ஊற்றப்படுவதை முற்றிலுமாய் இழந்துவிடுவோம்.

சபையின் தலைவர்களாக, நாம் கிறிஸ்துவின் குணாதிசயங்களை அவரது சரீரமான சபைக்கு வெளிப்படுத்த **மாதிரிகளாக** அழைக்கப்பட்டிருக்கிறோம். நாம் தேவனுடைய வார்த்தையை அறிந்து அதன்படி செயல்படவேண்டும். நம்மாலியன்ற வரை இதைச் செய்ய வேண்டும். நாம் இதில் தவறுவோமானால், சீக்கிரமாக நாம் மனம் வருந்த வேண்டும் (II கொரிந்தியர் 7:10; வெளி. 3:19)

நாம் ஒவ்வொருவரும் வேதத்தின் எச்சரிப்பைக் கவனிப்போமாக!

*"உங்கள் பாவம் உங்களைத் தொடர்ந்து பிடிக்கும்"* (எண். 32:23; கலா. 6:7; I தீமோ. 5:24,25).

## இருதயத்தைக் காத்துக்கொள்ளுதல்

வேதம் நமக்குப் போதிக்கிறது *“எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள்; அதனிடத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும்”* (நீதிமொழிகள் 4:23) இந்த வசனத்தை எழுதியவர் சாலொமோன் ராஜா. ஒரு வேளை அவர் இதை, தேவனோடுள்ள உறவை அழித்துத் தன்னுடைய ராஜ்ஜியத்தையும் இழந்த பின்னர் எழுதியிருக்கலாம். சாலொமோனால் எழுதப்பட்ட வார்த்தைகள் இந்த நாளிலும் நம்மிடம் தெளிவாகப் பேசுகின்றன. நம்மைச் சோதனைக்குட்படுத்த சாத்தான் அநேக ‘எலி’களை வைத்திருக்கிறான். நம்முடைய சரீரம், அதாவது மாமிசம் அநேக வேண்டாத ஆசைகளைக் கொண்டுள்ளது. ஆனால், நாம் நமது வாழ்க்கையின் கதவைத் திறந்தால் மட்டுமே, இவை உள்ளே வந்து நமது வாழ்க்கையாகிய கிணற்றை மாசுபடுத்த முடியும். நமது இருதயமாகிய வாசஸ்தலத்தை அவை அசுசிப்படுத்த முடியும். அதாவது, தேவனுடைய ஆவியானவர் வசிக்கும் இடமாகிய நமது இருதயத்தில் இவற்றிற்கு இடம் கொடுத்து, பாவத்திற்கு இடம் உண்டாக்கினாலொழிய அவை நம்மைத் தொடமுடியாது.

ஆகவே, நமது கிணற்றைச் சுத்தமாக வைத்துக்கொள்ள நாம் என்ன செய்ய வேண்டும்? நாம் பரிசுத்த ஆவியானவருடைய ஆலயமாக இருக்கிறபடியால் (I கொரிந்தியர் 6:19, 20) சில நடைமுறையான படிகளை நாம் மேற்கொள்ளலாம். அவை என்னவென்று இப்பொழுது பார்ப்போம்.

### 2) தூய்மையடயும் வழி

a) **தேவனுடைய வார்த்தைக்கு ஒத்த வாழ்க்கை வாழ வேண்டும்.** சங்கீதக்காரன் ஒரு கடினமானதும் முக்கியமானதுமான ஒரு கேள்வியைக் கேட்டு அதன்பின் பதிலளிக்கிறான். “வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம் பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக்கொள்ளுகிறதினால் தானே” (சங்கீதம் 119:9)

நமது வாழ்க்கையின் அளவுகோல் தேவனுடைய வார்த்தையே என்று இயேசு கூறுகின்றார். வேதத்தில் சொல்லப்பட்ட எல்லாவற்றையும் செய்வதில் குறைவுபடுதல் நியாயந்தீர்க்கப்பட வேண்டியதும், தோல்வியைக் குறிப்பதுமாகும். (மத்தேயு 5:17-20) வேத வசனமானது தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. (II தீமோத்தேயு 3:16; II பேதுரு



1:19-21). மேலும், அது பரிசுத்த ஆவியினால் உறுதிப்படுத்தப்படுத்தப் பட்டுள்ளது. (யோவான் 14:26; எபிரெயர் 4:12, 13)

மனிதருடைய கருத்துக்களும் வழிமுறைகளும் எவ்வளவு தான் நல்ல நோக்கமுடையதாகவும், விரும்பப்படத்தக்கதுமாய் இருந்த போதிலும், அவை நமது வாழ்க்கை முறைக்கு உகந்தது **அல்ல.** தேவனுடைய ராஜ்ஜியத்தைக் குறித்து நாம் நமது சபையாருக்குப் போதிக்கும்பொழுது அவைகளைப் போதிக்கக் கூடாது. நாம் அவர்களது கருத்துக்களுக்குச் சம்மதித்தாலும்கூட, நாம் மனிதருடைய கருத்துக்களைக் குறித்து மிகவும் எச்சரிக்கையோடு இருக்க வேண்டும் (I கொரிந்தியர் 2:1-16) நமது கனத்திற்கும், நம்பிக்கைக்கும் உரியவர்களாக இருந்தாலும், அவர்கள் மனிதரேயாவார்.

ஜனங்களுடைய கருத்துக்களோ அல்லது ஊழியத்தில் தற்போதுள்ள முறைகளோ, நமது வாழ்க்கையைச் சுத்திகரிக்க முடியாது. ஆண்டவரைப் பின்பற்றி அவரது வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தால் மட்டுமே, நாம் அவருக்கு முன்பாக நேராய் நடக்க முடியும். ஒரே ஒரு பரிசுத்த ஆவியானவரும், வேத வசனங்களுக்கு ஒரே ஒரு ஆதாரமும் உண்டு. அது வேத புத்தகமே! ஆகவே அதை வாசி, தியானம் செய், படி, மனப்பாடம் செய், அதற்குக் கீழ்ப்படி, அதன்படி வாழ்ந்து, அதைப் பிரசங்கித்துப் போதித்து வா. ஆமென்.

**b. ஆவியானவர் ஜெபத்தின் மூலம் கிரியை செய்கிறார்** *“மனுஷனுடைய ஆவி, கர்த்தர் தந்த தீபமாயிருக்கிறது. அது உள்ளத்தில் உள்ளவைகளையெல்லாம் ஆராய்ந்து பார்க்கும்”* (நீதிமொழிகள் 20:27)

நமது ஜெப வேளைகள் நமக்கு ஆசீர்வாதத்தையும், அறிவையும் தரும் ஆதார ஊற்றும், நம்மை ஒன்றுபடுத்துவதுமாகும். பரிசுத்த ஆவியானவரால் இயக்கப்படும்பொழுது, ஜெபமானது ஒரு வல்லமை நிறைந்த ஆயுதமாகப் பயன்படுகிறது. துரதிஷ்டவசமாக, வாழ்க்கையின் அவசர அலுவல்களினிமித்தம் உன்னையும், என்னையும் போன்ற சபைத்தலைவர்களாகிய நாம் மிக முக்கிய நேரமாகிய, தேவனிடத்தில் காத்து இருக்கும் வேளையை அலட்சியம் செய்து விடுகிறோம். ஆனால், நாம் காத்திருந்து, பரிசுத்த ஆவியானவரின் குரலைக் கேட்க நேரம் எடுத்துக் கொள்வதன் மூலமே பரிசுத்த ஆவியானவர் மெய்யாக நமது இருதயங்களில் கிரியை செய்ய முடியும்.

நாம் ஜெபித்து பரிசுத்தாவியானவரிடம் காத்திருக்கும்பொழுது, நமது மறைந்து கிடக்கும் நோக்கங்களையும், அசுத்தமான காரியங்களையும் அல்லது பலவீனமான இடங்களையும் அவர் நமக்கு வெளிப்படுத்தக் கூடும். அவர் நம்மீதும், தமது சரீரமாகிய சரீரத்தின் மேலும் கொண்ட அன்பினாலும் பரிசுத்த ஆவியானவர் நம்மை உணர்த்தி, உருவாக்க விரும்புகிறார்.

**சுய ஏமாற்றத்திலிருந்து பாதுகாத்தல்**

மனித இருதயம் ஏமாற்றப்படக்கூடியதும், பாவத்திற்கு இடம் கொடுக்கக் கூடியதுமான தன்மை வாய்ந்தது என்பதை அறிந்து, நாம் நம்மை அதிக விழிப்புள்ளவர்களாக மாற்றிக் கொள்ள வேண்டும்.

தயவு கூர்ந்து கொஞ்சம் நேரம் செலவு செய்து பின் வரும் வேத பகுதிகளை வாசிக்கவும்.

- ❒ நீதிமொழிகள் 16:2, 25; 28:26
- ❒ எரேமியா 17:9, 10
- ❒ I கொரிந்தியர் 10:12, 13

நமது இருதயங்களைப் பரிசுத்த ஆவியானவருக்கு முன்பு திறந்து வைப்பதன் தேவையைத் தெளிவு படுத்த இன்னும் அநேக வேத பகுதிகள் உண்டு. நமது வாழ்க்கையின் போராட்டமான பகுதிகளை தேவன் ஏற்கெனவே அறிந்திருக்கிறார். நாம் அதை அவரிடமிருந்து மறைக்க முடியாது. ஆனால், நாம் நம்மை ஏமாற்றிக் கொண்டு பாவத்திற்கு இடம் கொடுக்கலாம். மாமிச இச்சைகள், அல்லது பாவப் பழக்க வழக்கங்களால் உடைந்து, நம்முடைய வாழ்க்கையில் அநீதியாகிய கனிகளைத் தருமட்டும் அதில் தொடர்ந்து இருக்க முடியும்.

பாவத்திலிருந்து விடுபட்டு, சுத்தமாக வைக்கப்பட்டுள்ள இருதயங்களை தேவன் தேடிக் கொண்டிருக்கிறார். நமது அபிஷேகத்தையோ, அல்லது நமது வாழ்க்கையிலும் ஊழியத்திலும் களி கொடுக்கும் நிலைமையையோ எந்தக் காரியமும் தடை செய்வதை அவர் விரும்பவில்லை. மனத்தாழ்மையுடன் உன் இருதயத்தைப் பாவத்திற்கு விலக்கி, பரிசுத்த ஆவியானவர் உன்னைச் சுத்திகரிக்க இடம் கொடுப்பாயானால், தேவனுடைய அபிஷேகம் உன்மேல் அளவற்ற விதமாய்ப் பொழியக் கூடும்.



**போதகரிடமிருந்து போதகருக்கு :** ஒரு புதிய மதத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்று இயேசுவானவர் மரிக்கவில்லை என்பதைத் தயவு செய்து ஞாபகத்தில் வைக்கவும். நம்மை மறுபடியுமாக மீட்டு தேவனிடத்தில் சேர்க்கவும், அதன்பின் பாவத்தினால், கொடிய விதமாக அழிக்கப்பட்டுக் கிடந்த நம்மை, முதன் முதலாகத்தான் சிருஷ்டித்த அந்தச் சாயலுக்கொப்பாகப் படிப்படியாக மறுரூபமடையச் செய்யவும் அவர் தமது ஜீவனைக் கொடுத்தார் (மத்தேயு 15:10-20, 23:23-28; ரோமர் 12:1, 2; II கொரிந்தியர் 3:18; I யோவான் 3:1-3)

தலைவர்களாகிய நமக்கும் கூட இது ஒரு முழு வாழ்க்கைக்குரிய மாற்றம் என்பதை நாம் ஏற்கெனவே கற்றிருக்கிறோம். நாம் நமது உள்ளான இருதயத்தின் நிலைமை மேல் கவனம் செலுத்தாமல் உதாசீனம் செய்வோமானால், பாவத்தின் கண்ணியில் நாம் விழுந்து போவதற்கு அது மிகவும் சுலபமாக இருக்கும். பிரச்சனைகள் தொடக்கத்தில் மிகவும் சிறிதாகக் காணப்படலாம். ஆனால் சின்னச் சின்ன விஷயங்களில் ஒத்துப் போகுதல், பெரிய அதிகமான அழிவுள்ள காரியங்களுக்கு நடத்திச் சென்று விடும்.

ஆனபடியால், நாம் ஒவ்வொரு நாளும் பரிசுத்த ஆவியானவர் நமது இருதயத்தில் கிரியை செய்ய அனுமதிக்க வேண்டும். பிரச்சனைகள் நம்மைப் பாவத்திற்கு வழி நடத்துவதற்கு முன்னர், நம்மைக் கண்டித்துப் பாவத்தில் விழாதபடி பாதுகாக்க அது உதவும்.

**"தேவனே, என்னை ஆராய்ந்து பாரும்"**

பரிசுத்த ஆவியானவர் நமது ஆத்துமாவிலும் ஆவியிலும் ஒரு விளக்காக எரிந்து பிரகாசிப்பது நமக்கு அத்தியாவசியமான தேவையாகிறது. நாம் சுத்தமாக்கப்படவும், புதிதாக்கப்படவும், மறு ரூபமாக்கப்படவும் அவர் நமது இருதயத்தின் நிலைமையை நமக்குக் காட்டுவது தேவைப்படுகிறது. இதுவே, நமது வாழ்க்கையைக் குறித்த தேவனது சித்தமாகும் (பிலிப்பியர் 1:6; II கொரிந்தியர் 3:18; ரோமர் 8:29)

ஜெபத்தில் நாம் இவ்வாறு பரிசுத்த ஆவியானவரோடு சேர்ந்து செயல்படும்பொழுது நாம் "கனத்துக்குரிய பாத்திரங்களாக" வளர்ந்து விடுகிறோம். (II தீமோத்தேயு 2:20, 21). அப்போது, தேவன் தமது பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை அதிகமாக ஊற்றி, தான் யார் என்பதை

நம்மிலும், நமது மூலமாயும் பிறருக்கு நாம் செய்யும் ஊழியத்தில் வெளிப்படுத்துவார்.

நமது அனுதின ஜெபம் தாவீதைப் போல இருக்கட்டும் (சங்கீதம் 139:23, 24)

**C. கீழ்ப்படிந்து நட** (அப்போஸ்தலர் 5:32) *"இந்தச் சங்கதிகளைக் குறித்து நாங்கள் அவருக்குச் சாட்சிகளாயிருக்கிறோம். தேவன் கீழ்ப்படிகிறவர்களுக்குத் தந்தருளின பரிசுத்த ஆவியும் சாட்சி என்றார்கள்"*

நாம் தேவனுடைய கட்டளைகளை விட்டு விடும்போதோ, அல்லது பரிசுத்த ஆவியானவரால் நமது இருதயத்தில் வெளிப்படுத்தப்பட்ட வைகளைக்கைக் கொள்ளக் கவனம் செலுத்தாத போதோ, நாம் கீழ்ப்படியாமற் போகிறோம். (யாக்கோபு 1:21-25). சவுல் ராஜா, இந்த விதமான தோல்விக்கு ஒரு நல்ல எடுத்துக் காட்டு. (I சாமுவேல் 15:1-35). சவுலின் தோல்வியிலிருந்து தாவீது கற்றுக் கொண்டான். இந்த மாதிரியான கோட்பாடுகளை எழுதியும் வைத்தான். (சங்கீதம் 40:6-8).

சபைத்தலைவர்கள் அடிக்கடி ஊழியம் செய்வதற்குச் சம்மதிக்கிறார்கள் - மட்டுமல்ல, அதன் பொருட்டு தியாகம் செய்யவும் தாயாராக இருக்கிறார்கள். அது தவறு அல்ல. ஆனால், தேவன் பலியைக் காட்டிலும் அதிக முக்கியமானதொன்றை விரும்புகிறார். நமது தாழ்மையையும், ஒப்புக் கொடுக்கப்பட்ட கீழ்ப்படிதலையுமே அவர் விரும்புகிறார் (I சாமுவேல் 15:22, 23)

நமது உள்ளான நோக்கங்களைக் குறித்தும் மனோபாவத்தைக் குறித்தும், அனுதின நடத்தையைக் குறித்தும் அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவதைக் குறித்தும் நாம் ஏற்கெனவே படித்திருக்கிறோம். ஆனால், தேவனுடைய வேலையைப் பொறுத்த மட்டில் என்ன செய்கிறோம், அதை எவ்வாறு செய்கிறோம் என்பதற்கு ஆவியானவருக்குத் தேவையானது நமது கீழ்ப்படிதலே ஆகும்.

### கீழ்ப்படிதல்மூலம் தேவனோடு ஒத்துழைத்தல்

தேவனுடைய நடத்துதலுக்குக் கீழ்ப்படிகிற விஷயத்தில் மோசே பெரும் துன்பத்தின் வழியாகக் கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டான். (எண்ணாகமம் 20:7-13). கன்மலையைப் பார்த்துப் **பேசுவதற்கு** தேவனால் கட்டளை பெற்றான் (வசனம் 8). ஆனால், பதிலாக அவன் கன்மலையை



**அடித்தான்** (வசனம் 11). அதனால் விளைந்த பலன்? மோசே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டுக்குள் பிரவேசிக்க முடியவில்லை. (வசனம் 12) (உபாகமம் 31:1, 2; 32:48-52 பார்க்கவும்) இத்தனை தெளிவான கட்டளைக்கு மோசே ஏன் கீழ்ப்படியவில்லை? இதற்குமுன் வனாந்தரத்தில் இருமுறை இஸ்ரவேல் புத்திரர் பஞ்சத்தையும், தாகத்தையும் சந்தித்திருக்கிறார்கள் (யாத். 15:22; 17:1-7).

முதல் முறை தேவன், கசப்பான, குடிக்க முடியாத தண்ணீருக்குள், ஒரு மரக்கிளையைப் போடச் சொன்னார். அது தித்திப்பான தண்ணீர் ஆயிற்று. இரண்டாம் முறை மோசேயிடம், "கன்மலையை அடி' என்றார். அடித்தபோது, நல்ல தண்ணீர் ஓடிவந்தது.

ஆனால், இந்த முறை, தேவன் மோசேயிடம் வித்தியாசமான தொன்றைச் செய்யும்படி சொன்னார். கன்மலையைப் பார்த்துப் பேசும்படி தேவன் அவனிடம் கூறினார். ஆனால், அவன் மாறாக, முந்தின முறையை உபயோகித்துக் கன்மலையை அடித்தான். ஒரு வேளை தேவன் கூறிய இந்த முறை மோசேக்கு விளங்கவில்லை போலும்! ஏனெனில், மோசே அந்தக் குறை கூறும் இஸ்ரவேல் ஜனங்களிடம் கோபப்பட்டு பொறுமை இழந்தான். நமக்கு இது பற்றி, நிச்சயமாகத் தெரியவில்லை. ஆனால், நமக்கு ஒன்று தெரிகிறது. மோசேயின் கீழ்ப்படியாமை தேவனுக்குப் பிரியமானதாக இருக்கவில்லை. (எண்ணாகமம் 20:12).

முக்கியமான பாடம் இது: தேவனுடைய ஊழியக்காரன், பூரணமாய், முழுவதுமாக அவரது காரியங்களை நிறைவேற்ற அவருடைய வழியையே பின்பற்ற வேண்டும் என்பதே.

நம்முடைய குறுகிய அறிவில் தேவனுடைய காரியங்களை 'ஏன்' என்று விளங்கிக் கொள்ளாவிடினும், நாம் தேவனுடைய வார்த்தையையும், பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலையுமே பின் தொடர வேண்டும் (ஏசாயா 55:8, 9, I கொரிந்தியர் 1:18-25 பார்க்கவும்) தேவன் நம்மை நடத்தவும், நமக்கு வழி காட்டவும் பரிசுத்த ஆவியானவரைத் தந்திருக்கிறார். தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் அவரை நம்பிக் கீழ்ப்படியவே அழைக்கப்பட்டிருக்கிறோம். (ரோமர் 8:14).

கீழ்ப்படிதல் என்பது தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வதோ, அல்லது அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்வதோ **அல்ல** என்பதைத்

தயவுசெய்து புரிந்து கொள்ளவும். நாம் கீழ்ப்படிந்து நடக்கும்பொழுது, நாம் அவரோடு ஒத்துழைத்து, அவருடைய வசனங்களின் கோட்பாடுகளின்படி நடக்கிறோம். இப்படி நாம் செய்யும்போது, தேவனுடைய அபிஷேகத்தின் அதிகப்படியான வல்லமை நமக்குக் கிடைக்கிறது.

இந்தத் தத்துவத்தைப் பவுல் கூறுகிறார். (I கொரிந்தியர் 9:27) *"மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற நான் தானே* ***ஆகாதவனாய்ப்*** *போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கக் கீழ்ப்படுத்துகிறேன்"* தனது தனிப்பட்ட வாழ்க்கையின் நடைமுறை, தேவன் தனக்குக் கொடுத்த ஊழியத்தோடு இணைக்கப்பட்டதாய் இருக்க வேண்டும்.

## புதிய ஏற்பாட்டு அளவுகள்

ஒரு போதகருடைய வாழ்வில் இரு பகுதிகள் உண்டு. ஒன்று அவரது தனிப்பட்ட வாழ்க்கை. மற்றது அவரது பொதுவான அதாவது வெளிப்படையான வாழ்க்கை. இந்த இரண்டு பகுதிகளுமே கீழ்ப்படிதலுக்குள் இருக்க வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார். ஒரு போதகரது தனிப்பட்ட வாழ்க்கையும், அவரது பொது வாழ்க்கையும் பரிசுத்த ஆவியினாலும், வேத வசனத்தினாலும் ஒழுங்குபடுத்தப்பட்டு வளர்ச்சியடைய வேண்டும்.

ஒரு சபைத் தலைவர் அவரது முழு வாழ்க்கையையும் கீழ்ப்படிதலுக்கு ஒப்புக் கொடுத்து விடுவாரானால், அவருடைய வாழ்க்கையின் எல்லாப் பகுதிகளிலும் தேவனுடைய அபிஷேகம் வழிந்தோடும். அபிஷேகம் என்பது பொது ஊழியத்திற்கு மட்டுமே என்பது தவறான நம்பிக்கை ஆகும். தேவன், உன் குடும்ப வாழ்க்கை முறையிலும், உன் வெளி வேலையிலும், மற்றச் சந்தர்ப்பங்களிலும் உன்னை ஒரே மாதிரியாக உபயோகிக்கவே விரும்புகிறார்.

சபைப் போதகர்களுக்கு என்ன தேவை என்பது பற்றி புதிய ஏற்பாட்டில் கூறியிருப்பது நமது போதகர்களுக்குமுரிய தகுதியாகும்.

ஆதிகாலச் சபையின் மூப்பர்களே அந்த இடத்திலுள்ள திருச்சபையின் போதகராக இருந்தார்கள். இவ்வாறாக, அவர்களது கோட்பாடுகளும், வழியை நிர்ணயிக்கும் எல்லைகளும், அவர்களது தனிப்பட்ட, அல்லது பொதுவான வாழ்க்கையில் இன்றும் பின்பற்றப்படுகின்றன.



## வேதாகமத்தின் ஒழுங்குமுறை

தனது மனைவி, பிள்ளைகளுடைய தேவைகளைக் குறித்த மட்டில், அநேக போதகர்கள் இந்தக் கோட்பாடுகளை அலட்சியம் செய்து விடுகிறார்கள். தங்கள் குடும்பங்களை அலட்சியம் செய்து, தங்கள் முழு நேரத்தையும் ஊழியத்தில் செலவிடுவது கடவுளின் வழி என்று எண்ணுகின்றனர். போதகர்கள் இவ்வாறு செய்யவேண்டுமென்று சொல்லப்படவில்லை என்பதை வேத வசனம் சரியாகப் போதிக்கிறது

ஒரு கணவன் (போதகரும் கூட) தேவன் சபையை நேசிப்பது போலத் தங்கள் சொந்த மனைவியை மிக்க அன்புடனும் தியாகத்துடனும் நேசிக்கவேண்டும். போதகரும், அவரது மனைவியும் ஒருவரையொருவர் கனம் பண்ணுவது, உதவுவது தேவைப்படுகிறது. பிள்ளைகளைக் கெடுத்து விடவோ, வேலைக்காரராக வைத்துக் கொள்வதோ கூடாது. மாறாக, அவர்கள் நல்ல முறையில் பாதுகாக்கப்படவேண்டியது மட்டுமின்றி, மகிழ்ச்சி தரக்கூடியவர்களாகவும், தேவனுக்குப் பயப்படுகிறவர்களாகவும், அன்புள்ளவர்களுமாக வளர்க்கப்பட வேண்டும். நாம் கிறிஸ்துவின் குண லட்சணங்களை உடையவர்களாக வும், அன்புள்ள பரம தகப்பனின் நற்குணங்களால் நிறைந்து, நமது பிள்ளைகளுக்கு முன் மாதிரியாய் இருக்க வேண்டும். (எபேசியர் 5:22-33, 6:1-4; கொலோசெயர் 3:18-21; I பேதுரு 3:7 பார்க்கவும்)

நமது குடும்பங்கள் நமது முதன்மையான கடமையாகும். அவர்களது தேவைகளைச் சந்திப்பது நம்மால் தவிர்க்கமுடியாத நமது கடமை ஆகும் (I தீமோத்தேயு 5:8). *"ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற் போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயி ருப்பான்."* வேதத்தின்படி வரிசைப்படுத்தினால், முதலாவது தேவன், இரண்டாவது நமது குடும்பம், மூன்றாவது ஊழியம், நமது மற்றப் பொறுப்புகளும், இவை இரண்டிற்கும் பின்னரேயாகும்.

ஒரு போதகர் பணத்தைக் கையாளும் விதமானது வேத வசனத்தின் அடிப்படையில், பரிசுத்த ஆவியானவரின் கோட்பாடுகளால் நடத்தப்பட வேண்டும். தேவன் போதகருக்குக் கொடுக்கும் பணம் மற்றும் உதவிகள்:

- தசமபாகங்கள் காணிக்கையைக் கர்த்தருக்குக் கொடுக்க வேண்டும்.

❐ குடும்பத்தின் தேவைகளைச் சந்திப்பதால், குடும்பம் ஆசீர்வதிக் கப்பட வேண்டும்.

❐ தேவன் நமக்குக் கொடுத்ததிலிருந்து நாம் மற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டும்.

### நமக்குத் தேவையான எல்லா உதவிகளும்

ஒரு போதகருடைய பொதுவான ஊழியமானாலும் கூட, வேத வசனத்திற்கும் கீழ்ப்படிவதிலும், பரிசுத்த ஆவியின் நடத்துதலினாலும் அது நிறைவேற்றப்பட வேண்டும். குறிப்பிட்ட ஊழிய சந்தர்ப்பங்களில் நாம் என்ன செய்ய வேண்டுமென்பதைக் குறித்து பரிசுத்த ஆவியானவர் நமக்கு உதவி செய்வார். அத்துடன் நம்மை வழி நடத்துவார்.

தேவனுக்கேற்ற ஆலோசனைகளைக் கேட்பதிலும், வேதத்தைக் கற்றுக் கொள்வதிலும், ஒழுங்காக ஜெபிப்பதிலும் நாம் நம்மை அர்ப்பணித்து நம்மை ஒழுங்கு படுத்திக்கொண்டால் நாம் முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவத் தலைவர்களாக வளர்ச்சியடைவோம். இப்படியாக நாம் வளரும் பொழுது தேவனுடைய படிப்படியான அபிஷேகத்தை நமது வாழ்க்கையிலும், நமது ஊழியத்திலும் நாம் எதிர்பார்க்க முடியும். (பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதிய அறிவுரைகளைப் பார்க்கவும்)

இதுவே நம்மைக் குறித்த தேவனது விருப்பமாகும். அவரை நாம் உண்மையாய்ச் சேவிப்பதற்குத் தேவையான **எல்லாவற்றையும்** நமக்குத் தந்தருளியதுமன்றி, அவருடைய வழிகளில் நடக்கவும் அவர் செய்கிறார். ஆனால், அவருக்குக் கீழ்ப்படிவதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

**போதகரிடமிருந்து போதகருக்கு :** தன்னுடைய தனிப்பட்டதும், பொதுவானதுமான ஊழியத்தைக் குறித்த அடிப்படையான இந்தக் கோட்பாடுகளை ஒரு போதகரோ, அல்லது சபைத் தலைவரோ மீறவோ அல்லது தொடர்ச்சியாக அலட்சியம் செய்யவோ முற்படுவாரானால், பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் அணைந்து போகும். வீட்டிலும், ஊழியத்திலும் கனியற்ற ஊழியமாகி, நஷ்டம் ஏற்படும்.



பூரணமான ஒரு மனந்திரும்புதலும் தேவனுடைய நோக்கங்களுக்கு உண்மையான ஒப்படைப்பும் இல்லாவிடில் அவருடைய சொந்த வாழ்விலும், ஊழியத்திலும் கனியற்றதான தொரு நிலைமை ஏற்பட்டு விடும். இந்த அழிவுக்கான நிலைமை ஏற்படக் கொஞ்சம் காலம் செல்லலாம். ஆனால், நாம் விதைப்பதையே அறுவடை செய்வோம் என்பது உறுதியானது (கலாத்தியர் 6:7, 8).

துக்கமான செய்தி என்னவெனில், போலியான வாழ்க்கை வாழத் தொடங்குகிற வரம் பெற்ற, வல்லமையான, அபிஷேகம் பெற்ற ஊழியர்கள் நமது சபையில் இன்றும் உள்ளனர். நாம் ஒருவருமே பாவமற்ற பூரணர் அல்ல. வேறு விதமாய்ச் சொன்னால் அவர்கள் போதிப்பது ஒன்று செயல்படுத்துவது மற்றொன்று.

நாம் அனைவருமே சில வேளை தோல்வியடையலாம். நம்மில் ஒருவராவது பாவமில்லாத பூரணர் அல்ல. ஆனால், நான் எப்பொ முதாவது தவறுவதைக் குறித்துப் பேசவில்லை. அப்படியானால், அதன்பின் சீக்கிரமாக மனந்திரும்புதல் ஏற்படுமே. ஆகவே, நான் குறிப்பிடுவது ஒரு தலைவனுடைய தனிப்பட்ட வாழ்வில் ஏற்படும் தொடர்ச்சியான, திடுக்கிடக்கூடிய வெளிப்படையான, வேதத்திற்குப் புறம்பானதான மீறுதலையே ஆகும்.

இதன்மூலம் தேவனாகிய பிதாவின் பெயரும் இயேசுகிறிஸ்துவின் பெயரும் கனவீனப்படுத்தப்படுகிறது. இந்த மாய்மாலத்தின் மூலமாக இயேசுகிறிஸ்துவினால் உண்டாகும் இரட்சிப்பை விட்டு உலகத்திலுள்ள மக்கள் தூரப்படுத்தப்படு கிறார்கள். சபைத் தலைவர்களுடைய தனிப்பட்ட வாழ்வில் காணப்படும் இந்த உண்மையற்ற தன்மையினால் நமது சபையிலும், நமது குடும்பங்களிலும் உள்ளவர்கள் கூட தேவனுடைய காரியங்களைக் குறித்து ஏமாற்றமடைகிறார்கள். வருத்தமடை கிறார்கள்.

இது தவறானதாகும். உனது நடத்தை மற்றொருவர் இடறக் காரணமாயிருந்தால் இயேசுவானவர் அதைக் குறித்த ஒரு குறிப்பிட்ட நியாயத்தீர்ப்பைக் குறித்து எச்சரிக்கிறார் (லூக்கா 17:1, 2). நமது வேலைகளின் மேல் வரவிருக்கும் தேவனுடைய நியாயத் தீர்ப்பு நிச்சயமானதாக இருக்கும். (I கொரிந்தியர் 3:11-15)

ஒரே வயதும், வாழ்க்கை முறையும் உள்ள மற்றத் தலைவர்களோடு நாம் நல்லுறவில் வாழ வேண்டும். மற்றத் தலைவர்களோடு நமக்குச் சரியான உறவு முறை இல்லாவிடில் தலைவர்கள் என்ற முறையில் நமக்குள்ள செல்வாக்கைப் பெரிய அளவில் இழக்க நேரிடும். நாம் புரிந்து கொள்வதற்கும், நாம் ஒத்துக் கொள்வதற்கும் மேலாக *நாம் ஒருவருக்கொருவர் தேவைப்படுகிறோம்.*

**நமது வாழ்க்கையின் *எல்லாப்* பகுதிக்கும் ஆண்டவர்**

விசுவாசிகளான நமக்குள் பரிசுத்த ஆவியானவர் வாசம் செய்கிறார். தேவனுடைய நோக்கங்கள் நிறைவேற்றப்படும்படியாக அவர் நம்மை அபிஷேகம் செய்கிறார். அவர் நமது ஊழியத்தின் பகுதியை மட்டு மல்ல நம்மை அவர் முழுவதுமாக நிரப்ப விரும்புகிறார். அதாவது நமது வாழ்க்கையின் ஒரு பகுதிக்கு மட்டுமல்ல, நமது முழு வாழ்க்கைக்கும், நமது முழு இருதயத்திற்கும் ஆண்டவராக இருக்க விரும்புகிறார். (I பேதுரு 3:15). அவர் மகிமையடையும்படியாகவும், அவரது நோக்கங்கள் நிறைவேற நாம் உபயோகமான கருவிகளாக இருக்கும்படியாகவும் நமது வாழ்க்கையின் எல்லாப் பகுதிகளிலும் ஆண்டவருடைய வார்த்தைக்கு நாம் கீழ்ப்படிய வேண்டும்.

**d) ஒரே வயதும், வாழ்க்கை முறையும் கொண்டவர்களோடு நாம் சுமுக உறவுகொள்ள வேண்டும்.** போதகர்களும், தலைவர்களும், தங்களது வாழ்க்கையைப் பற்றிய காரியங்களை வெளிப்படுத்தத் தயங்குகிறார்கள். அவர்களது நிச்சயமற்ற தன்மையானது பொறாமையையோ அல்லது போட்டியையோ வரவழைக்கக் கூடும். இந்த விதமான பழக்கங்களை சாதகமாக்கிக் கொண்டு, பிசாசானவன் தேவனுடைய சரீரமாகிய சபையை விசேஷமாகத் தலைவர்களைப் பிரிவினைக்குள்ளும், ஒருவருக்கொருவர் கொள்ளும் பயத்திலும் நடத்துகிறான்.



மற்ற தலைவர்களோடு முறையான நல்ல உறவு இல்லாமையால் நாம் நமது குறிக்கோள்களில் பெரும் பகுதியை நிறைவேற்றமுடியாதபடி நஷ்டமடைகிறோம். நாம் புரிந்து கொள்வதற்கும், ஒத்துக் கொள்வதற்கும் மேலாக நாம் *ஒருவருக்கொருவர் தேவைப்படுகிறோம்.* போதகர்களும், விசுவாசிகளும், ஒரே **குடும்பத்தினர்** (சகோதர சகோதரிகள்) இது பதவியையோ, அவர்களது பெயரையோ சபைப்பிரிவையோ அல்லது உங்கள் சபையின் அளவையோவிட மிக அதிக முக்கியமான காரணமாகும்.

நாம் ஒன்றாக இணைந்து பயன்தரும் வகையில் வேலை செய்வதற்காக தேவனது சரீரமாகிய சபைக்குப் பலதரப்பட்ட வரங்களும், பொறுப்புகளும் கொடுக்கப்பட்டுள்ளன. (ரோமர் 12:3-8; I கொரிந்தியர் 12) மற்ற விசுவாசிகள், தலைவர்கள் துணையின்றி நாம் ஒருவரும் பயன் தரும் ஊழியத்தைச் செய்ய முடியாது. ஆனால், இந்த வகையான ஒற்றுமைக்குத் தேவையானது நல்ல வளர்ச்சி, அன்பு, ஊழியத்திற்கு வேண்டிய இருதயம், மனத்தாழ்மை ஆகும்.

**உறுதியான ஆதரவு**

போதகர்களுக்கு ஒருவருக்கொருவரின் ஆதரவு தேவையாகும். மற்ற போதகர்களுடனும், நற்பணியுள்ள, பக்தியுள்ள தலைவர்களுடனும் ஐக்கியம் வைத்துக்கொள்ள நாம் இடமளிக்க வேண்டும். இதன் மூலகாரணம் **ஒருவருக்கொருவர் பொறுப்புடையவர்களாய்** இருக்க வேண்டும் என்பதே. நம்முடைய ஆவிக்குரிய, ஆரோக்கியமான வாழ்வில் தோல்வியடையாமல் இருப்பதற்கு இது மிக அவசியம்.

இத்தகைய ஐக்கியம் ஊழியத்தில் ஏற்படும் சவால்களையும், தோல்விகளையும், வெற்றிகளையும் ஒளிவுமறைவின்றி பகிர்ந்து கொள்ளக்கூடிக்கூடியதாக இருக்க வேண்டும். இந்த நண்பர்களின் ஐக்கியத்தினால் நாம் ஊழியத்தையும் ஜெப உதவியையும், வேதத்தின் அடிப்படையில் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.

இத்தகைய ஐக்கியத்தை தேவன் நம்முடைய வளர்ச்சிக்காகவும் முதிர்ச்சிக்காகவுமே வைத்துள்ளார். *"இரும்பை இரும்பு கருக்கிடும்; அப்படியே மனுஷனும் தன் சிநேகிதனுடைய முகத்தைக்கருக் கிடுகிறான்". (நீதி 27:17)*

இத்தகைய நம்பகமான உறவுகள் நம்முடைய பயங்களையும், கவலைகளையும், சோதனைகளையும் பகிர்ந்துகொள்ள உதவும்.

நம்முடைய குற்றங்களையும், பாவங்களையும் அறிக்கை செய்யவும் (யாக்கோபு 5:16). ஊழியங்களைப் பெற்றுக்கொள்ளவும், ஊக்குவித்தலை அடையவும் முடியும்.

ஊழியத்தில் ஈடுபட்டிருக்கும் ஒவ்வொருக்கும் ஊக்குவித்தல் மிக அவசியமாகும். ஆவிக்குரிய தலைவர்கள், தங்கள் சொந்த வாழ்க்கையில் வீழ்ச்சியடையும்படி சாத்தான் சோதனைகளைக் கொடுத்து அவர்களை ஊழியத்தை வீட்டு விலகும்படிச்செய்ய கடுமையாக உழைக்கிறான். சில சமயங்களில் நம்முடைய சொந்த சபையில் இருப்பவர்கள் கூட, நம்மைத் தவறாகப் புரிந்துகொண்டு நம்மிடம் வெறுப்புடன் செயல்படுவார்கள். இப்படிப்பட்ட நேரங்களில் நாம் கிறிஸ்துவின் மூலம் வெற்றியோடு எழும்ப ஆவிக்குரிய வாழ்க்கையில் நமக்கு ஆதரவளிக்க உறுதியான, நம்பகமான நண்பர்களின் ஆதரவு நன்மை தரும்.

**போதகரிடமிருந்து போதகருக்கு :** மிகவும் பக்தியுள்ள ஆவிக்குரிய வாழ்க்கையில் பிறரின் உதவி தேவையில்லை என்கிற பொய்யை நம்ப வேண்டாம். மாறாக, நாம் முதிர்ச்சி அடைய, அடைய கர்த்தரின் சரீரமாகிய ஆவிக்குரிய உறவுகள் தேவை என்பதை அறிந்துகொள்ளலாம். நாம் அனைவரும் சேர்ந்து பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்ட ஆலயமாய் மாறுகிறோம் என்று (1 கொரி. 3:16,17) பவுல் கூறுகிறார்.

இவ்விதமான பொறுப்புள்ள, தோழமையுள்ள குழுக்களை அதிக ஜெபத்துடன் கவனமாகத் தேர்ந்தெடுக்க வேண்டும். நீங்கள் மதிக்கத்தக்க, நம்பத்தகுந்த, பரிசுத்தாவியானவரால் நிரப்பப்பட்டவர்களைத் தேடுங்கள்.

இக்குழுவில் உங்கள் நேரத்தை ஜெபிப்பதில் செலவிடுவதுதான் உங்கள் நோக்கமாக இருக்க வேண்டும். மட்டுமல்ல, இக்குழுக்கள் ஒரே பாலரோடு, அதாவது ஆண்கள், ஆண்களுடனும், பெண்கள் பெண்களுடனும் ஐக்கியம் வைத்திருக்க வேண்டும்.

இத்தகைய முக்கியமான தொடர்புகள் (உறவுகள்) நம்மை ஆவிக்குரிய வாழ்க்கையில் மிகக்கூர்மையாகவும், பரிசுத்தத்திலும், பரிசுத்த ஆவியின் அபிஷேகத்திலும் வளரவும் நம்மை முன்னேற்றத்தின் பாதையில் நடத்திச் செல்லும்.



## 3. உண்மையான அபிஷேகத்தின் ஏழு குணாதிசயங்கள்

ஊழியத்தின்போது ஒரு நிகழ்ச்சியில் அல்லது குறுகிய நிகழ்ச்சியில் அல்லது குறுகிய காலத்தில் மட்டும் பரிசுத்த ஆவி வெளிப்படும்போது பரிசுத்த ஆவியின் தன்மையையும், நோக்கத்தையும் குறித்துக் குழப்பம் உண்டாகிறது. அது ஒரு வல்லமை மிக்க பிரசங்கமாகவோ, உருக்கமான ஜெபமாகவோ, அல்லது கூட்டங்களில் ஏற்படும் அற்புத அடையாளமாகவோ இருக்கக்கூடும்.

இவ்வித குறுகியகால வெளிப்பாடு இரண்டு விதங்களில் தவறாகப் புரிந்துகொள்ளப் படலாம். முதலாவதாக, மக்கள் ஆர்வம், தாலந்து, வரங்கள், அல்லது ஊழியத்தில் திறமை போன்றவற்றை அபிஷேகம் என்று தவறாக உணர்ந்து கொள்ளுவார்கள். இரண்டாவதாக, இயற்கைக்கு அப்பாற்பட்ட முறையில் உச்சக்கட்டமாக வெளிப்படும் உணர்வை (peak moment of supernatural manifestation) பரிசுத்த ஆவியின் அபிஷேகம் என்று தவறாகப் புரிந்து கொள்வது.

இந்த அற்புதமான, உற்சாகப்படுத்துகிற சில நேரங்கள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின் வெளிப்பாடாக இருந்தாலும், இவைகளைக் காட்டிலும் மேலான அபிஷேகம் உண்டு என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

அபிஷேகத்தைக் குறித்து நாம் ஒரு *தொலைதூரக் கண்ணோட்டத்தை* வளர்த்துக்கொள்வது நல்லது. உண்மையான அபிஷேகம், மனிதர்களின், *வாழ்க்கையை அப்படியே மாற்றும்* என்பதை அறிந்து கொள்ளுதல் அவசியம். (ரோமர் 12:1,2).

நான் கூறும் இந்த *மாற்றமடைந்த வாழ்க்கை* என்பது தேவனுடைய வார்த்தையிலும், ஜெபத்திலும் திடமாக ஊன்றி இருப்பதே ஆகும். இப்படிப்பட்ட மாற்றமடைந்த வாழ்க்கையை வாழும் மனிதர்கள் தங்கள் நற்சாட்சியினாலும், பிறருக்குச் செய்யும் அன்பான சேவையாலும் உலகத்தைச் சந்திக்கின்றனர். அவர்கள் கிறிஸ்துவின் சரீரத்தின் வல்லமையைக் கண்டுகொண்டதால் உற்சாகத்துடன் தங்களுக்கு உள்ள ஆவியின் வரங்களை ஊழியத்தில் உபயோகிக்கின்றனர். எல்லா நேரங்களிலும் அவர்கள் கிறிஸ்துவைப் போலவே வாழ்ந்து காட்டுகின்றனர்.

இவ்விதமான குணங்களை முற்றிலும் மாற்றமடைந்த தலைவரும்,

அபிஷேகம் பண்ணப்பட்ட சபையின் தலைவரும் பெற்றிருக்கவேண்டும்.

ஒரு மெய்யான அபிஷேகிக்கப்பட்ட ஊழியம், தொடர்ந்து கனிதரும். அநேகர் இரட்சிக்கப்பட்டு கிறிஸ்துவை பின்பற்றுவர்களாக மாறுவார்கள்.

அபிஷேகிக்கப்பட்ட ஊழியம் உயர்ந்த அந்தஸ்துக்கோ, செல்வ செழிப்பிற்கோ, அல்லது சொகுசான வாழ்க்கைக்கோ வழியல்ல. ஆழமான அறிவுகொண்ட, அபிஷேகம் பண்ணப்பட்ட அப்போஸ்த லனாகிய பவுல் தேவனால் மிகவும் உபயோகப்படுத்தப்பட்டவர். ஆனால் அவர் கடுமையாகத் துன்புறுத்தப்பட்டு, ஏழ்மை, உபத்திரவம், அநேக சமயங்களில் சிறைச்சாலைக்காவலின் கொடுமையை அனுபவித்தார் (2 கொரி. 4:8-15; 7:2-6; 11:23-33). பவுல் கடைசியாக ரோமாபுரியில் வாளினால் கொல்லப்பட்டார்.

ஆனாலும் அவருடைய மரணத்திற்கு முன்பாக இவ்வாறு முழங்கினார். *"இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்"* (2 தீமொ, 4:8).

பவுலின் வாழ்க்கை இவ்வுலகத்தாரின் பார்வையின் தரத்தில் "வெற்றியுள்ள வாழ்க்கையாகாது." இன்றைக்கும் கிறிஸ்தவர்களில் சிலர் பவுலை ஒரு அப்போஸ்தலனாக நினைப்பதில்லை.

இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை தைரியமாக அறிவித்ததே (அப். 17:1-6) பவுலில் காணப்பட்ட மிகச் சிறந்த அம்சமாகும். பிசாசுகளின் மண்டலத்திலும் வல்லமையான அதிகாரம் செலுத்தினார். (அப். 19:5) அவர் மற்றவர்களுக்கு பிரசங்கித்து சபைகளை நிறுவினார். புதிய ஏற்பாட்டில் மூன்றில் ஒரு பகுதி பவுல் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதியவை. அவைகளில் அநேகம் அவருடைய விசுவாசத்திற்காக சிறையில் அடைக்கப்பட்டபோது எழுதப்பட்டவை. அப்போதைய உலகத்திற்கு சுவிசேஷத்தைப் பரப்பிய முதல் பிரதிநிதி பவுல் அப்போஸ்தலனே. பவுல் **உண்மையில்** தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டு, பரிசுத்த ஆவியின் வல்லமையால் முழுவதும் நிரப்பப்பட்டவர். (கொலோ. 1:24-29).



கர்த்தருடைய அபிஷேகத்தின் நோக்கத்தைக்குறித்து நாம் மிகத்தெளிவாய் இருக்க வேண்டும். நம்முடைய சொந்த ஆதாயத்திற்காகவோ, அல்லது பிறரை மகிழ்விக்கவோ தேவனுடைய அபிஷேகம் நமக்குத் தரப்படவில்லை. அது தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகக் கொடுக்கப்பட்டது! வசனத்தினாலும், தேவனுடைய வல்லமையினாலும் மக்களுடைய வாழ்க்கையை மாறச்செய்யும் ஊழியத்திற்காகக் கொடுக்கப்பட்டது.

### நம்மை நாமே சோதித்துப்பார்த்தல்

எது தேவனிடத்திலிருந்து வருகிறது, எது மனிதனிடத்திலிருந்து வருகிறது என்பதை பகுத்தறிந்து உணர வேண்டும். தேவனிடத்திலிருந்து வருவது எது அல்லது வேறு மாறுபட்ட ஆவியினிடத்திலிருந்து வருவது எது என்பதைப் பகுத்தறிய வேண்டும். (2 கொரி. 11:4). உலகம் முழுவதிலும் பிசாசுகளின் ஆதிக்கம் அதிகமாகி மக்களை வழி தவறச்செய்யும் என்று வேதாகமம் கூறுகிறது. கிறிஸ்தவர்கள் கூட ஏமாற்றப்பட்டு, வழிதவறி, தேவனிடத்திலிருந்து வரும் சத்தியத்தைப் புறக்கணிப்பார்கள் (2 தீமோ. 3:1-9; 4:3,4).

ஆவிகளை நாம் "சோதித்து அறிய வேண்டும்." (1 யோ. 4:1-6) ஏனெனில் பிசாசானவன் மக்களை ஏமாற்றி அழிக்க தீவிரமாக வகை தேடுகிறான். (2 கொரி. 2:11; 10:1-5; 11:14; 1 பேது. 5:8). மட்டுமல்ல, தீய மனிதர் தேவனையும் ஆவிக்குரியவைகளையும் தங்கள் சுய லாபத்திற்கென்று பயன்படுத்த வழி தேடுவார்கள். (2 கொரி. 11:13-15; பிலி. 1:15, 16; 2 பேது. 2). நாம் நம்முடைய உண்மையான அபிஷேகத்தின் மூலம் கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிந்து வாழ்கிறோமா என்பதை *நம்மை நாமே* சோதித்து அறிவது எப்படி?

பரிசுத்த ஆவியானவரின் உண்மையான அபிஷேகம்:

1) மனிதரையோ, ஊழியத்தையோ அல்ல, எப்போதும் இயேசுவையே மகிமைப்படுத்தும் (யோவான் 16:14).

2) பரிசுத்த ஆவியானவர் *ஒருபோதும்* தேவனுடைய வசனங்களை *மீறமாட்டார்.* ஆகவே தேவனுடைய வசனங்கள் மூலம் உள்ள போதனைகள் முரண்பாடற்றதாய் இருக்கும். (யோவான் 14:16)

3) ஊழியங்களுக்கும், ஊழியம் செய்வதற்கும் அழைப்புப் பெற்றவர்கள், இயேசுவுக்கும் அவர் வசனத்திற்கும், அவருடைய வழிகளுக்கும் தம்மை அர்ப்பணிப்பார்கள் (யோவான் 6:63).

4) பரிசுத்த ஆவியானவர் மக்களை இயேசுவினிடத்திற்கும், அவருடைய இரட்சிப்பிற்கும் வழிநடத்துவாரே அன்றி, இன்னொரு மனிதனிடமோ அல்லது அற்புத அடையாளங்களிடமோ அல்ல (யோவான் 15:26).

5. கர்த்தரையும், அவருடைய சபையையும், நேசிக்கிறவர்களுக்கு, பரிசுத்த ஆவியானவர் சமாதானத்தையும் , கிறிஸ்துவின் சரீரத்தின் மூலம் ஐக்கியத்தையும், பெருகப்பண்ணுவார் (1 கொரி. 12:1-14).

6. வாழ்க்கையை மாற்றக்கூடிய பண்புடைய பரிசுத்த ஆவியின் ஊழியமே அபிஷேகம் பண்ணப்பட்ட ஊழியமாகும் (1 கொரி. 2:4, 5; 4:20).

7. பரிசுத்த ஆவியின் அபிஷேகம் கிறிஸ்துவின் குணாதிசயங்களை மக்களிடத்தில் உருவாக்கும். கிறிஸ்துவைப் பின்பற்றும் ஒவ்வொருவருக்கும் தேவனின் சித்தம் இதுவே (கலா. 5:16-24; 2 கொரி. 3:18).

பரிசுத்த ஆவியின் அபிஷேகத்திற்கு நேராக வழிநடத்தும் ஊழியத்தில் இருப்பவர்களிடம் இந்த ஏழு முக்கியமான குணாதிசயங்கள் காணப்பட வேண்டும். சில ஊழியங்களில் குறுகிய கால அல்லது உடனடி அபிஷேகம் ஊழியத்தில் குறிப்பிட்ட நேரத்தில் நடக்கலாம். ஆனால் இயேசு கிறிஸ்துவின் சரீரத்தில் பங்குள்ள மேய்ப்பர்களாகிய நமக்கு, சீடர்களை *உருவாக்குவதும், தேவனுடைய பிள்ளைகளை செயலாற்றுவதற்கு தயார் செய்வதுமே நம் பணியாக இருக்க வேண்டும்.* **தொலைதூரப் பணி** என்பது தற்காலிகமாக உற்சாகப்படுத்தும் பணி இல்லை என்பதை உணர வேண்டும்.

மேற்கண்ட குறிப்புகளைக் கொண்டு உங்கள் சொந்த ஊழியத்தை சோதித்தறியுங்கள்.

நீங்கள் மக்களை கிறிஸ்துவின் சரீரத்திற்கு நேராக வழிநடத்தும் மேய்ப்பனாக, ஒரு சபையின் தலைவராக மிக முக்கியமான, விலையேறப்பெற்ற அழைப்பைப் பெற்றிருக்கிறீர்கள். இயேசுவே நம் பிரதான மேய்ப்பர். அவர் உங்களிடம் ஒப்படைத்துள்ள ஆடுகளைக் குறித்த கணக்கை நீங்கள் அவரிடம் ஒப்படைக்க வேண்டும். (1 பேது. 5:1-14)

### நாம் இன்னும் அதிகம் பெற்றுக்கொள்ள முடியுமா?

தளராத உழைப்புடன் உண்மையாக கிறிஸ்துவைப் பின்பற்றுவதே நம்முடைய பங்காகும். நாம் தேவ வசனத்தின் உயர்ந்த ஸ்தானத்தையும்



நோக்கங்களையும், உணர்ந்து, வழிநடத்துதலின்படி நடக்க வேண்டும்.

ஊழிய அழைப்பு என்பது தேவன் உங்களுக்கு அளித்த *உங்கள்* சொந்த ஊழியம் அல்ல. அவருடைய விருப்பங்களை உங்கள் மூலம் நிறைவேற்றுவதே **அவருடைய** ஊழியமாகும்! தேவனுடைய நடத்துதலின்படி ஊழியம் செய்யும்போது மிகுந்த கனிகளைக் கொடுப்பது மட்டுமல்ல (யோவா 15:14-16) அவை அபிஷேகத்துடனும் இருக்கும்.

பரிசுத்த ஆவியின் ஆளுகை தேவனால் ஏற்படுத்தப்பட்டது. அபிஷேகத்தை *பெற்றுக்கொள்வதும், தள்ளிவிடுவதும்* நம் விருப்பம் என்றாலும் மனித சித்தத்தின்படி பெற்றுக்கொள்ள முடியாது.

தேவனுடைய அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்வது மட்டுமல்ல. அதில் வளர்வது முடிகிற காரியமா? நாம் இப்போது பெற்றுள்ளதை விட அதிகம் பெற்றுக்கொள்ள முடியுமா? சுருக்கமாக இக்கேள்விகளைக் குறித்துப் பார்ப்போம்.

**தேவனுடைய அபிஷேகத்தில் வளருவதற்கு எவ்வித குறுக்கு வழியும் இல்லை. நம் சொந்த ஆதாயத்திற்காக ஊழியத்தை அதிக வல்லமையுடன் செய்ய, அபிஷேகத்தை வலுக்கட்டாயமாகப் பிடுங்க முடியாது. தேவனின் வல்லமையை அவருடைய தெய்வீகத் தன்மையினின்று பிரிக்க முடியாது என்பதை நினைவில் கொள்ளுங்கள். அபிஷேகம் என்பது பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னம் - அது எப்போதும் தேவனுடைய நோக்கத்தையும் எண்ணத்தையும் சார்ந்தது அன்றி நம்முடைய சுயத்திற்காகக் கொடுக்கப்படுவதல்ல.**

## B. அபிஷேகத்தில் வளருதல்

நீங்கள் அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதே கர்த்தரின் விருப்பம். நீங்கள் *உங்கள் திறமைகளை வளர்த்து பரிசுத்த ஆவியின்* அபிஷேகத்தோடு ஊழியம் செய்ய வேண்டும் என்பதே அவரின் விருப்பம்.

தேவனுடைய அபிஷேகத்தில் வளருவதற்கு எவ்வித குறுக்கு வழியும் இல்லை. நம் சொந்த ஆதாயத்திற்காக ஊழியத்தை அதிக வல்லமையுடன் செய்ய, அபிஷேகத்தை வலுக்கட்டாயமாக பிடுங்க முடியாது. தேவனின் வல்லமையை அவருடைய தெய்வீகத்தன்மையினின்று பிரிக்க முடியாது என்பதை நினைவில் கொள்ளுங்கள். அபிஷேகம் என்பது பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னம். அது எப்போதும் தேவனுடைய நோக்கத்தையும் எண்ணத்தையும் சார்ந்ததன்றி நம்முடைய சுயத்திற்காகக் கொடுக்கப்படுவதல்ல.

### 1. குணாதிசயங்களும் அபிஷேகமும்.

நீங்கள் கிறிஸ்துவின் குணாதிசயங்களில் வளரும்போது உங்கள் அபிஷேகமும் வளரும். நம் நற்குணமே நம் வாழ்க்கையில் நிறைவையும், அபிஷேகத்தையும் நன்கு செயல் புரியச்செய்யும், அல்லது நம் மூலம் அபிஷேகத் தடை செய்து பரிசுத்த ஆவியானவரின் செயல்களை தடைசெய்யும். (எபேசி. 4:30; 1 தெச. 5:19 படிக்கவும்)

குமாரரும், குமாரத்திகளும் சபைக்குத் தலைவரான இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்ய, நமக்கு ஆவிக்குரிய வரங்களை அளித்திருக்கிறார். (எபே. 4:11-16; 2 தீமோ. 1:9). இந்த ஆவிக்குரிய வரங்களும், அழைப்பும் பரிசுத்த ஆவியானவரால் வல்லமையுடன், வழிநடத்தப்படும்போது மட்டுமே *நிறைவாக, சரியாக* செயல்படும். (1 கொரி. 12:7 - எல்லா வரங்களும் இந்த அடிப்படையில் தான் செயல்படுகிறது)

இதனால் தான் எல்லா *உண்மையான ஆவிக்குரிய ஊழியமும் உறவின் மூலம் வெளிப்படுகிறது.* கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிந்து அவருடன் உறவு கொள்வதே வாழ்க்கையை மாற்றும் ஊழியத்தின் அடிப்படையாகும்.

இயேசு கிறிஸ்துவுடன் உள்ள ஆழமான உறவின் மூலம்தான் பலனுள்ள ஊழியம் பெருகும் என்பதை ஒருபோதும் மறவாதிருங்கள்!



**போதகரிடமிருந்து போதகருக்கு:** கர்த்தரோடு நமக்கு உள்ள உறவை அசட்டை செய்வது ஊழியத்தில் நடைபெறும் எளிதான செயல். நேற்றைய "மன்னாவே" இன்றைக்கும் போதும் என்று நினைக்க ஆரம்பிக்கிறோம். ஆனால் அது உண்மையல்ல!

இயேசு இந்தப் பிரச்சனைகளைக் குறித்து வல்லமையான ஒரு எச்சரிப்புக் கொடுக்கிறார். (மத். 7:21-23 படிக்கவும்) இந்த வசனங்களில் கூறப்படும் மனிதர்கள் தேவாலயத்தில் இருக்கிறவர்கள். இவர்கள் தீர்க்கதரிசன ஊழியம், கட்டுக்களை உடைக்கும் ஊழியம், அற்புதங்கள் அடையாளங்கள் செய்கிறவர்கள்.

ஆனால் இந்தத் தலைவர்கள் ஒரு கட்டத்தில் "ஆதி அன்பை" விட்டு விட்டார்கள் (வெளி. 2:1-5). ஊழியத்தில் வெளிப்புறமாகக் காணப்பட்ட வெற்றிகரமான தோற்றங்களினால் அவர்கள் ஏமாற்றப்பட்டார்கள். அவர்கள் வேதாகமத்திலுள்ள வசனங்களையும், இயேசுவின் நாமத்தின் அதிகாரத்தையும் பயன்படுத்தினார்கள். ஆனால் கர்த்தரோடு உண்மையான, கீழ்ப்படிந்து, புதுப்பிக்கப்பட்ட உறவு அவர்களுக்கு இல்லை. அவர்கள் அவரை அறியவில்லை. அவர்கள் முடிவு மிக பரிதாபமான முடிவாகும் (மத். 7:23)

### சாத்தானின் செயல் திறன்

நாம் இரட்சிக்கப்பட்ட பிறகு நம் சொந்த வாழ்வில் ஏற்படும் மாற்றங்களே ஆவியானவரின் செயல்கள் என அறிந்து கொண்டோம் (ரோம 8:19; 2 கொரி. 3:18). நாம் அனுதினமும் தேவனுடைய வசனத்திற்கு கீழ்ப்படிந்து, அவரது பிரசன்னத்தில் இருந்து, அவருடன் நம் வாழ்நாளெல்லாம் செய்யும் ஒரு கூட்டு முயற்சியே நமக்குள் *தெய்வீக குணநலன்களை உருவாக்கும்.*

சபைத்தலைவர்களிடம் தெய்வீக குணங்கள் உருவாகுவதை சாத்தான் முழுமையாக எதிர்க்கிறான். நமக்குள் இருக்கும் வரங்களையோ, பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தையோ, சாத்தானால் கெடுக்கவோ, திருடவோ முடியாது. மாறாக, எதிரிடையாக விளைவே நடக்கிறது. *"பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்"* (1 யோவ 3:8; கொலோ. 2:14, 15, எபி. 2:14 படிக்கவும்).

ஏனெனில் அபிஷேகத்தையோ, அல்லது பரிசுத்த ஆவியானவரின் வரங்களையோ கெடுத்துப் போட அல்லது ஊறு விளைவிக்க சாத்தானுக்கு வல்லமை இல்லை. அவன் முதலாவதாகக்குறிவைப்பது உங்களைத்தான்.



**சாத்தான் நெடுங்காலமாய் மனிதப் பண்புகளைக் கருத்துடன் கவனித்துக் கொண்டிருப்பவன்**

சாத்தான் நற்சாட்சி பெற்றவர்களை (Saints) அழிக்கவும், திருடவும், கொல்லவுமே வகை தேடுகிறான். (யோவா. 10:10) முக்கியமாக, சபைத் தலைவர்களிடமுள்ள போற்றத்தக்க குணநலன்களை நாசப்படுத்துவதே அவன் குறியாகும்.

சபைத் தலைவர்களை களங்கப்படுத்தி அவர்களை தேவனுடைய நோக்கத்திற்குத் தகுதியற்றவர்களாகும்படி செய்ய வகை தேடுகிறான் (1 கொரி. 9:24-27, 2 தீமோ. 2:19-22) சபலம், ஏமாற்றுதல், பயமுண்டாகுதல், பிரிவினை, பெருமை தன்னலம் போன்ற எல்லாப் பாவங்களுக்கும் மூலகாரணம் அவனே.

சாத்தானுடைய சோதனைகள் முதலில் சிறிய அளவில்தான் ஆரம்பிக்கும். அவன் நம்முடைய மாம்சீக ஆசைகளையும், சுயநலத்தையும், தூண்டிவிடுவான். சாத்தான் மனிதப் பண்புகளைப் பல நூற்றாண்டுகளாகக் கருத்துடன் கவனித்துக் கொண்டிருப்பதினால் நம்மை வீழ்ச்சியடைய பல வழிகளில் முயற்சிப்பான். ஆகவே நாம் எப்போதும் எச்சரிக்கையாக நம்மைக் காத்துக் கொள்ள வேண்டும் (1 பேது. 5:8, 9).

நாம் இயேசுகிறிஸ்துவுடன் தொடர்ந்து வளருகின்ற உறவை அசட்டை பண்ணும்போது நாம் சாத்தானின் தந்திரங்களினால் மிக எளிதில் காயமடைவோம் என்பதை நினைவில் வைத்துக்



கொள்ளுங்கள். (1 தீமோ. 4:1, 2; 2 தீமோ. 1:1-9; எபி. 2:1-3) நாம் கிறிஸ்துவை நெருங்கி இராவிட்டால், நாமே அவரைவிட்டு விலகிச் செல்வதற்குத் தூண்டப்படுவோம்.

தேவனுடைய அபிஷேகம் நம்முடைய குணங்களையும், ஊடுருவ வேண்டும் என்பதே அவரது விருப்பமாகும். தெய்வீக குணங்கள் நம்மை கனியுள்ள வாழ்க்கைக்கு நடத்தும். தேவன் தம் அபிஷேகத்தை வழிந்தோடச் செய்து, எவ்வித பரிசுத்த குலைச்சலும் இல்லாமல் நம் வாழ்நாளெல்லாம் தடங்கலின்றி அது ஓட வேண்டும் என்று விரும்புகிறார்.

நமக்கு முன் வாழ்ந்த வல்லமையான அபிஷேகம் பண்ணப்பட்ட மனிதர்களின் வாழ்க்கையில் இருந்து நாம் என்ன அறிந்து கொள்ளலாம் என்பதைப் பார்ப்போம்.

**2. எஜமானின் காலடிகளைப் பின் தொடருதல்**

உண்மையில் உலகில் வாழ்ந்தவர்களில் இயேசு கிறிஸ்துவே மிகுந்த வல்லமையான அபிஷேகத்தைப் பெற்றிருந்தவர். அவர் அளவே இல்லாத அபிஷேகத்தைப் பெற்றிருந்தார். (யோவா. 3:33-35) அவருடைய நிகரில்லாத அபிஷேகத்தைக் குறித்து அவர் பிறப்பதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது. (ஏசாயா 61:1-3). இயேசு தம்முடைய ஊழியத்தை ஆரம்பிக்கும்போதே அந்த தீர்க்கதரிசனத்தை உறுதி செய்தார். (லூக்கா 4:17-20)

இவ்வுலகில் இயேசு செய்த ஊழியம் அவரே மெய்யான அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்பதை உறுதி செய்தது. லூக்கா சுவிசேஷம் 14, 15 அதிகாரங்கள் அவருடைய ஊழியத்தில் வெளிப்படுத்தப்பட்ட வல்லமையை விளக்குகின்றன. இயேசு அபிஷேகம் பண்ணப்பட்டது. எதனாலெனில்:

- பிசாசுகளை விரட்ட (லூக் 4:33-37, 41);
- அதிகாரத்தோடு பிரசங்கம் செய்ய (4:22, 32);
- வியாதியஸ்தர்களை குணமாக்க (4:38-40; 5:15);
- மக்களை மனந்திரும்பச் செய்ய (5:17-26, 31, 32);
- அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்ய (5:4-9);
- மக்களை ஊழியம் செய்யத் தீர்க்கத்தரிசனமாய் அழைக்க (5:10;27);

- தலைமையை மையப்படுத்தி குழுக்களை உருவாக்க - (5:11);
- குஷ்டரோகிகளை குணமாக்க அக்காலத்தில் அது திகைப்படையச் செய்த காரியமாயிருந்தது (5:12-15).

இவையெல்லாம் இயேசுவின் ஊழியத்தில் ஏற்பட்ட அற்புதங்களில் சில உதாரணங்களே. அவர் ***இதைவிட மிக அதிகமானவற்றை*** செய்து முடித்தார். ஒரே ***ஒரு*** மனுஷகுமாரன் உலகில் வந்து நமக்காக மரித்து உயிர்த்தெழுந்து அவர் உண்மையான தேவன் என்பதை நிரூபித்தார்!

இயேசு ஒருவரே நம்மை அழைத்தவர். (1 கொரி. 1:26-31). அவர் நமக்குத் தேவையான எல்லா வரங்களையும் அளித்திருக்கிறார் (எபே. 4:11-16). மட்டுமல்ல அவர் சித்தத்தை நிறைவேற்ற (யோ. 15:16) வல்லமையையும், அளித்திருக்கிறார். (யோ. 16:7)

கிறிஸ்து தம் பணியைத் தொடர்ந்து செயல் படுத்த நமக்குக் கட்டளையிட்டுள்ளார். (அப். 148) தேவனுடைய பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின் மூலம் மட்டுமே நாம் இப்பணியை முடிக்க முடியும். இயேசுவை அபிஷேகித்த அதே ஆவி இந்த உலகில் பொழியப்பட்டுள்ளது. இரட்சிப்புக்காக இயேசுவை விசுவாசிக்கும் யாவருக்கும் அது கிடைக்கும் (ரோமர் 8:14-17) அல்லேலூயா!

**இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவது**

தேவன் தமக்கு உண்மையாய் இருப்பவர்களைத் தேடுகிறார். (2 கொரி. 16:9). இயேசு அவருக்கு பிரியமானவராகத் தம்மை வெளிப்படுத்தினார். (மத். 3:17) இயேசு பிதாவின் சித்தத்திற்கு எல்லாவற்றிலும் கீழ்ப்படிந்தார் (எபி. 10:5-7). இயேசுவினால் பாவம் செய்திருக்க முடியும். ஆனால் அவர் ஒருபோதும், ஒரு முறை கூட பாவம் செய்யவில்லை (எபி. 4:15).

அவர் எல்லாவற்றிலும் நமக்கு முன்மாதிரியாய் இருப்பதினால் அபிஷேகத்தில் வளருவதைக் குறித்து நாம் அவருடைய வாழ்க்கையின்மூலம் என்ன கற்றுக்கொள்ளலாம்? நாம் இயேசுகிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி அவர் பண்புகளிலும், ஆவிக்குரிய காரியங்களிலும் எப்படி முன்னேறலாம் என்பதைக் கற்றுக் கொள்ளலாம்.

**a. இயேசு அதிகாரத்திற்கு கீழ்ப்படிந்தார்.** இயேசு தமக்கு மேலான அதிகாரத்திற்கு கீழ்படிந்தார். அவர் சிறுவனாக இருந்தபோது கூட,



அவருடைய பெற்றோருக்கும், சமூக சூழ்நிலையில் இருந்த அதிகாரத்திற்கும் கீழ்ப்படிந்திருந்தார் (லூக். 2:41-51). இயேசு இவ்வுலக ஊழியத்தில் தொடர்ந்து தம் பிதாவிற்குக் கீழ்ப்படிந்திருந்தார்.



**உங்கள் வளர்ச்சிக்கு இயேசு ஒரு மாதிரி வழிகாட்டி**

நாம் ஒரு தலைவராய் இருந்தாலும் சமுதாயத்தில் உள்ள அதிகார அமைப்பிற்கு கீழ்ப்படிய வேண்டும் என்று வேதம் போதிக்கிறது. அரசாங்கம், அதன் பல பிரிவுகள், சபைகள், வேலைகள் எல்லாவற்றிலும் அதிகாரத்திற்குட்பட்ட அமைப்பு இருக்கிறது.

இப்படிப்பட்ட அதிகாரங்கள் அனைத்தும் நமக்கு பாதுகாப்பையும், நன்மையையும் அளிப்பதாக எண்ணுகிறார். ஆனால் சில காரியங்களில் நாம் இந்தக் கூற்றை ஏற்றுக்கொள்ள முடியாது. கடவுள் பயமற்ற, சுயநலமான கொடுமைக்காரர்களால் நாம் துன்பப்படலாம்.

நம் வாழ்நாட்களில் நாம் நன்மை செய்யக் கூடியவர்களிடம் மட்டுமல்ல, அநியாயம் செய்யும் மனிதர்களின் கீழும் வேலை செய்ய வேண்டியிருக்கும். ஆனால் எப்படிப்பட்ட அதிகாரமாயிருந்தாலும் நாம் அதிகாரத்திற்கு கீழ்ப்படிய வேண்டும் என்று வேதம் போதிக்கிறது. இது கீழ்க்கண்டவற்றையும் அடக்கியது.

- தேவன் - (யாக். 4:7)
- அரசாங்க அதிகாரிகள் - (ரோம 13:1-7; 1 பேது. 2:13-17;
- கிறிஸ்துவின் சரீரத்தின் (1 கொரி. 16:15, 16; 1 தெச 5:12, 13; சபைத் தலைவர்கள் எபி. 13:7, 17)
- கிறிஸ்துவின் அங்கத்தினர்கள் (எபே. 5:21; 1 பேது. 5:5)

- மனைவிகள், கணவர்களுக்கு (எபே. 5:21; 1 பேது. 5:5)
- பிள்ளைகள் பெற்றோருக்கு (எபே. 6:1-3; கொலோ. 3:20)
- வேலைக்காரர் தங்கள் எஜமான்களுக்கு - (எபே. 6:5-9, கொலோ 3:22; 4:1; 1 பேது. 2:18-21)

**குறிப்பு :** நாம் கிறிஸ்தவர்களாக நம்முடைய அரசாங்கத்தை அனுசரித்துப் போக வேண்டும். ரோமப் பேரரசு இஸ்ரவேலை மிகவும் துன்பப்படுத்தியது (ரோம பேரரசைத் தள்ளிவிடும்படி இயேசு அழைப்பு விடுவிக்க வில்லை). ஆனால் ஒரு அரசாங்கம் அல்லது தலைவர், மக்களுடைய அடிப்படை உரிமைகளைக் கொடுக்காமல் தேவனை ஆராதிப்பதையும் கீழ்ப்படிவதையும் தடுக்கும்போது நாம் துன்புறுத்தப்படும்போது கூட நாம் தொடர்ந்து தேவனை ஆராதிக்க வேண்டும். (1 பேதுரு. 4:12-19)

அதிகாரத்தில் இருப்பவர்கள் வேதாகமத்தைப் புறக்கணிக்கக் கூறும்போதும், அல்லது நல்லொழுக்கத்திற்கு விரோதமான செயல்களைச் செய்யத் தூண்டும்போதும், அவர்களுடைய கட்டளைக்கு *கீழ்படிய வேண்டியதில்லை.*

உதாரணமாக ஒரு அரசாங்க அதிகாரி சுவிசேஷத்தை பிரசங்கிப்பதை நிறுத்தக் கூறினாலோ, அல்லது இயேசுவைப் பற்றிக் கூறக்கூடாது என்று கூறினாலோ கிறிஸ்துவின் மேலான அதிகாரம், அவரைப்பற்றி நீங்கள் பேசவேண்டும் என்று வற்புறுத்துகிறது. அப்போஸ்தலர்கள் இவ்விதமாய்த்தான் தொடர்ந்து பிரசங்கித்து வந்தனர். (அப். 4:1-31; 5:17-42; 8:1-4). நீங்கள் இப்படிப்பட்ட சூழ்நிலையைச் சந்திக்கும்போது மிகுந்த எச்சரிக்கை, விவேகம், தைரியம் தேவை. நீங்கள் பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்படும்போது தேவன் மகிமைப்படுவார் (மாற்கு 13:9-13).

### கீழ்ப்படிதலின் அடிப்படை கொள்கை

கீழ்ப்படிதல் என்பது ஒரு விசுவாசியின் வாழ்க்கையிலும், மிக முக்கியமாக ஒரு சபைத் தலைவருக்கும் வேண்டிய அடிப்படைக் கோட்பாடாகும். முதலாவது நாம் தேவனுக்கு எல்லாவற்றிலும், எல்லாவற்றிற்கும் கீழ்ப்படிய வேண்டும். பின்பு சமூக அமைப்புகள், வேலை அல்லது எந்த இடங்களிலும் நமக்கு மேல் உள்ள அதிகாரத்திலுள்ளவர்களுக்கு கீழ்ப்படிய வேண்டும்.



**போதகரிடமிருந்து போதகருக்கு.:** சில சமயங்களில் அதிகாரத்தில் இருப்பவர்களோடு சில இடர்கள் ஏற்படலாம். நாம் மரியாதைக் குறைவாக நடத்தப்படுவதாகவோ அல்லது சரியாக அங்கீகரிக்கப்படாததாகவோ உணரலாம்.

அதுபோன்ற சூழ்நிலைகளில் இயேசுவே முன்மாதிரியாக இருக்கிறார். தம்மைத் தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து... என்று (பிலி. 2:7)ல் வாசிக்கிறோம். கிறிஸ்து யாருடைய அங்கீகாரத்தையோ, புகழ்ச்சியையோ தேடவில்லை. ஏனெனில் அவைகளெல்லாம் வீண் என அவர் அறிந்திருந்தார். மக்கள் வெகு சீக்கிரத்தில் அவர்களுடைய அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்வார்கள் (யோவா. 2:23-25; 6:15, 26, 60-66).

மாறாக இயேசுகிறிஸ்து பரலோகத்திலிருக்கிற பரம பிதாவைப் பிரியப்படுத்துவதைத் தெரிந்துகொண்டார். மட்டுமல்ல, ஒரு ஊழியக்காரனுடைய பங்கைத் தெரிந்துகொண்டார். (மத். 20:28). அவருடைய மனப்பூர்வமான கீழ்ப்படிதலும், ஊழியமும் நமக்கு இரட்சிப்பையும், தேவனுக்கு மகிமையையும் கொண்டு வந்தது (பிலி. 2:7-11).

சபைத் தலைவர்களாகிய நாம் சில சமயங்களில் அதிகாரமுள்ள பதவியை வகிக்க நேரிடும். அதிகாரத்தோடு பிறரை முன் நடத்திச் செல்ல நாம் முதலில் **அதிகாரத்தின்கீழ்** எப்படி வாழ நடக்க வேண்டும் என்று அறிந்திருக்க வேண்டும். சுருங்கச் சொன்னால் முதலில் நாம் கீழ்ப்படிதலின் அடிப்படைத் தத்துவத்தை நன்கு புரிந்திருக்க வேண்டும்.

உங்களுக்கும், அதிகாரத்திலிருக்கும் தலைவருக்கும் ஏதேனும் பிரச்சனை இருக்குமானால் அதைத் தீர்க்க சரியான முயற்சி எடுக்க வேண்டும். முதலில் அந்த நபருக்காக *தினமும் ஜெபியுங்கள்.* இது தேவன் அவருக்கு வைத்திருக்கும் நோக்கத்தை அறிந்துகொள்ள உதவும். அடுத்து, உங்களுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சனைகளுக்கு தீர்வு கர்த்தரே என்று அவரைத் தேடுங்கள். வேதத்தை வாசித்து தேவனின் பதிலுக்காக காத்திருங்கள்.

நீங்கள் அந்த நபரிடம் சென்று உங்களுடைய பிரச்சனையைக் குறித்து தாழ்மையாகப் பேசிப்பாருங்கள். ஞானமுள்ள, நியாயமுள்ள

பிரச்சனையை தீர்க்கக் கூடிய, ஒருவரைத் தேர்வு செய்து அவரிடம் ஆலோசனைக் கேட்கலாம்.

இறுதியாக உங்கள் இருதயத்தைச் சீர் செய்யுங்கள். (குறை சொல்லுதல், புறம் பேசுதல் போன்றவை) தேவனே உங்களைப் பாதுகாக்கிறவர் என்று நம்புங்கள். (சங். 5:1; 7:10; 31:2; 59:16, 17)

நம் வாழ்வில் ஏற்படும் எல்லா சோதனைகளுக்கும், துன்பங்களுக்கும் தேவன் காரணரல்ல. மாறாக எல்லா சூழ்நிலைகளையும் நம்முடைய நன்மைக்காக உபயோகிப்பதாக வாக்களிக்கிறார். கிறிஸ்துவின் சாயலாய் *நம்மை* உருவாக்குவதே அந்த நன்மையாகும் (ரோம. 8:28, 29).

நம் துன்பங்களில், கிறிஸ்துவின் சாயலையும், சிந்தையையும் நாம் தெரிந்து கொள்ளும்போது தேவன் அவருடைய அளவில்லாத அதிகாரத்தையும், செல்வாக்கையும், அபிஷேகத்தையும் நம்மிடம் ஒப்படைப்பார்.

**b. இயேசு வளர்ச்சியடைந்து முதிர்ச்சி பெற்றார்**

இயேசு சீராக, சமநிலையில் வளர தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்தார் (லூக். 2:52). இந்த வசனம் இயேசுவின் வாலிபப் பருவத்தில் நடந்ததாக சுட்டிக் காட்டினாலும், நாம் ஆரோக்கியமான முறையில் வளரவும், முதிர்ச்சியடையவும் இது மாதிரியாக உள்ளது.

*1) ஞானத்தில் விருத்தியடைதல்* - வேதவசனமே ஞானத்திற்கு அடிப்படையாகும். அதை நீங்கள் படித்து ஆராயும்போது ஆவியானவர் உங்களுக்கு உணரும் திறனை அளித்து, சத்தியத்தைக் குறித்து அவர் உங்களிடம் பேசுவார் (2 தீமோ. 2:15; யோவான் 14:26).

நம் இருதயத்தில் பதிந்துள்ள வேத வசனங்களைப் பரிசுத்த ஆவியானவர் எடுத்து உபயோகிப்பார். நாம் வேதத்தை ஆராய்ந்து படிப்பதின் மூலமும், ஆரோக்கியமான வேத கருத்தரங்குகள், பிரசங்கங்கள் கேட்பதின் மூலமும் இவ்வாறு பதியவைக்கலாம்.

இப்படிப் படிப்பதும், ஆராய்தலும், பிரசங்கம் தயார் செய்ய **அல்ல!** நம்முடைய தனிப்பட்ட வளர்சிச்காகவேயாகும்.

*2) வளச்சியில் விருத்தியடைதல் :* நம்முடைய சரீரம் பரிசுத்த ஆவியானவருடைய ஆலயம் என்பதை அறிவோம். (1 கொரி. 6:12-20; 1 தெச. 4:1-8). எனவே தேவன் நமக்கு அளித்த சரீரத்தை நன்கு பராமரிப்பவராக இருக்க வேண்டும். நம் உடல் ஆரோக்கியமாக இருந்தால்தான் தேவ ஊழியத்தை திறமையாக செய்ய முடியும்.



நம் சரீர ஆரோக்கியத்தைக் கெடுக்கக் கூடியவற்றை நாம் தவிர்க்க வேண்டும். மது அருந்துதல், போதைப் பொருட்களை உபயோகித்தல் (எபே. 5:18), பாலியல் சீர்கேடுகள் (1 தெச. 4:3-5) அளவுக்கு அதிகமாக உணவு உண்ணுதல் (1 கொரி. 6:12, 13; 9:24-27) இவைகளைத் தவிர்த்து நம் சரீரத்தை கர்த்தரின் ஊழியத்திற்கு அர்ப்பணிப்போம்!

உடற்பயிற்சியைக் காட்டிலும் தெய்வ பக்தி விலையேறப்பெற்றது என வேதம் கூறுகிறது. (1 தீமோ. 4:8) ஆனால் உடற்பயிற்சியினால் சில நன்மைகளும் உண்டு. ஆனாலும் நாம் எதற்கு முன்னுரிமை அளிப்பது என்பதை அறிந்திருக்க வேண்டும்.

*3) தேவ கிருபையில் வளர்தல்* - இயேசு பிதாவின் சித்தத்திற்கு கீழ்ப்படிந்து நடந்தார் பிதாவாகிய தேவன் அவரை என்னச் செய்யச் சொன்னாரோ, அதைச் செய்வதே அவருடைய ஊழியமாயிருந்தது (யோ. 5:19, 30). பிதாவாகிய தேவன் என்ன பேசச் சொன்னாரோ அதையே பேசி (யோ. 8:26, 28) தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றினார். (யோவா. 5:17; 9:4; 14:10).

இயேசு பிதாவிற்கு முழுமையாக கீழ்படிந்தபடியால் அவர் இவ்வாறு கூற முடிந்தது.

*“பிதாவுக்குப் பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறடியால் அவர் என்னைத் தனியேயிருக்க விடவில்லை.”* (யோவா. 8:29; யோ. 4:34; 6:38 படிக்கவும்)

இயேசு அவருடைய கீழ்ப்படிதலுக்கு மேலாக, அவர் தம் ஆவியினால் பிதாவோடு நெருக்கமான உறவு வைத்திருந்தார். இயேசு அடிக்கடி தனியே போய் ஜெபம் செய்தார். (லூக்கா 5:16)

இயேசுவின் இந்தக் கீழ்ப்படிதல் எந்தப்பாவமும், அவருக்கும், பிதாவுக்கும் உள்ள உறவைத் துண்டிக்கப்படாதபடி செய்தது. இயேசு இவ்விதமான உறவை நமக்கு அளிக்கச் சித்தமாயிருக்கிறார் என்பதே மிக ஆழமான உண்மையாகும்.

இயேசுவின் கட்டளைகளுக்கு நாம் கீழ்ப்படிந்து நடக்கும்போது அவர் நமக்கு தம்மை வெளிப்படுத்துவதாக வாக்களிக்கிறார் (யோ. 14:21-24). இயேசுவுக்கும், அவருடைய வசனத்திற்கும் சிறிய, பெரிய

காரியங்களில் கீழ்ப்படிந்து நடப்பது, நாம் கர்த்தருடன்ஆவிக்குரிய வாழ்க்கையில் நெருங்கி நடக்க உதவுகிறது. நம் கீழ்ப்படிதலினால் கர்த்தரின் தயவைப் *சம்பாதிக்க முடியாது.* ஒரு ஆழமான உறவை ஏற்படுத்திக்கொள்ள முடியும். இந்த நெருக்கமான உறவில்தான் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் ஊற்றப்பட்டு, தொடர்ந்து பெருக ஆரம்பிக்கிறது.

*4) மனுஷர் தயவில் வளர்தல்* - எல்லா மனுதருக்கும் மேலானவராக இயேசு இருந்தாலும் அவர் கர்வமாக இல்லை, மாறாக இயேசு **அன்பாக பேசி**, அன்பாக வாழ்ந்து காட்டினார்.

## கிருபையும், சத்தியமும்

தேவனுடைய சாயலை நிலையாக தரித்திருந்ததில் இயேசு நமக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்தார். "அந்த வார்த்தை மாம்சமான, **கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய்** நமக்குள்ளே வாசம் பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது. எப்படியெனில் நியாயப் பிரமாணம் மோசேயின் மூலமாய் கொடுக்கப்பட்டது. **கிருபையும் சத்தியமும்** இயேசுகிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின.

இயேசு பாவிகளுடனும், மதபோதகருடனும் தம் நேரத்தை செலவழித்தார். (மத். 9-9-13). அவர் தேவனுடைய அன்பையும், நோக்கத்தையும் கேட்பதற்கு ஆவலாய் இருந்தவர்களுக்கு எடுத்துரைத்தார். அவர் மனிதருடைய புகழையோ, அங்கீகாரத்தையோ தேடவில்லை. மாறாக தேவனின் இருதயவாஞ்சையையும், வேதவசனத்தையும் எந்த சூழ்நிலைகளிலும் தெரிந்து கொண்டார்.

நாம் ஒருவருக்கொருவர் பரிசுத்தமான மாசற்ற உறவுடன் இருக்கவேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார் என்பதை இயேசு போதித்தார். மன்னியாமை, கசப்பு, கோபம், பொறாமை, சண்டை சச்சரவு, வீண்பேச்சு, பிறரைக் குற்றப்படுத்தல் போன்ற பாவமான காரியங்கள் தேவனுக்குப் பிரியமில்லாதவை என வேதம் தெளிவாக விளக்குகிறது (மத் 5:21-24, 43-48; 6:12, 14,15; 7:1-6; 18:21-35; ரோமர் 12:9-21; கலா 5;13-15, 19-21; 1 யோவா. 2:9,10; 3:10-18 இவைகளெல்லாம் ஒருவரோடொருவர் கொள்ள வேண்டிய சரியான உறவுகளைக் குறித்து தேவன் ஆழமாக எடுத்துரைக்கிற எடுத்துக்காட்டுகளேயாகும்.



நாம் தேவனின் கிருபையுடனும், சத்தியத்துடனும் ஆரோக்கியமான உறவுக்காக பிரயாசப்படும்போது அது ஒற்றுமையைக் கொண்டு வருகிறது. கிறிஸ்துவின் சரீரத்தினால் ஒற்றுமையாக இருக்கும்போது பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் நம் வாழ்க்கையிலும், சபைகளிலும், நம்முடைய சமுதாயத்திலும் ஊற்றப்படுவது மட்டுமல்ல, சுவிசேஷத்தின் சத்தியமானது உலகிற்கு சாட்சியாக வெளிப்படுத்தப்படும் (யோவா. 17:20,21).

**C. இயேசு தாழ்மையாக நடந்தார்.** தேவனுடைய குமாரன், எல்லா மனிதரைக் காட்டிலும் தாழ்மையாக இருந்தார் என்பதற்கு சந்தேகமேயில்லை. மனுஷகுமாரனாகிய இயேசு முழுவதும் தேவனாக இருந்தாலும், அவர் மனுஷசாயலாகி, அடிமையின் ரூபமெடுத்து நமக்காக தமது ஜீவனைக்கொடுத்தார் (பிலி. 2:7,8). நாம் அவரின் அடிச்சுவடுகளில் நடத்தப்பட வேண்டுமானால், நாமும் தாழ்மையாக நடந்துகொள்ள வேண்டும்.

இயேசு தம்முடைய ஊழியத்தை, தம்மைத்தாமே தாழ்த்தி ஆரம்பித்தார். யோவான் ஸ்நானகன் மக்களுக்கு பாவத்திலிருந்து மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தபோது இயேசுவும் அங்கே வந்து ஞானஸ்நானம் பெற்றார் (மத். 3:13-17).

இயேசு பாவமே இல்லாதிருந்ததினால் அவர் மனந்திரும்ப வேண்டிய அவசியமில்லை (எபி. 4:15). ஆகவே யோவான் இயேசுவுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதைத் தெரிந்துகொள்ளவில்லை (மத். 3:14). ஆனால் இயேசு யோவானை தனக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி கேட்டுக்கொண்டார் (மத். 3:15). *"இப்போது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது" (வ.7).*

ஏன் இயேசு ஞானஸ்நானம் பெற வேண்டும்? இக்காரியம் இயேசுவின் ஊழியத்திற்கு திறப்பாயிற்று. உங்களையும், என்னையும் போலவே *பாவிகளுடன் தன்னை இணைத்துக்கொள்ளும் அளவுக்கு தன்னைத் தாழ்த்தினார்.*

பாவமில்லாத மனுஷகுமாரனாகிய இயேசு, இரட்சிப்பின். நிச்சயத்தைப் பாவ மனுக்குலத்திற்கு அளிக்க தன்னை ஒப்புக்கொடுத்தார்.

*நீதியை நிறைவேற்றத்தக்கதாக* பிதாவின் சித்தப்படி, மனுக்குலத்தின் பாவச்சுமையை ஏற்று அதற்கு மீட்பராகவும், இரட்சகராகவும் தம்மை ஒப்புக்கொடுத்தார்.

**ஊழியர்களுக்கெல்லாம் ஊழியர்**

இயேசுவுக்கு, தேவன் தமக்கு நியமித்திருக்கின்ற பணி தாம் மனுக்குலத்துக்கு ஒரு தாழ்மையான ஊழியக்காரராயிருப்பதே எனத் தெரியும். (மத்தேயு 20:22). தம்முடைய பன்னிரெண்டாம் வயதிலேயே அவருக்கு அது தெரியும் (லூக்கா 2:41-50). அது, அவருடைய முழுக்கு ஞானஸ்நானத்தைத் தொடர்ந்து நடைபெற்ற காரியங்களினால் உறுதிசெய்யப்பட்டது.

*"இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ, வானம் அவருக்கு திறக்கப்பட்டது; தேவ ஆவி புறாவைப்போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார். அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி: இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது"* (மத்தேயு 3:16, 17).

ஞானஸ்நானத்தின்போது பிதாவுடைய சித்தத்துக்கு இயேசு தம்மைத் தாழ்மையாகக் கீழ்ப்படுத்தினபோது மூன்று காரியங்கள் நிகழ்ந்தன:

*1) "வானம் திறக்கப்பட்டது"* (வ. 16) - தேவன் தம்முடைய குமாரன் மூலமாகத் தம்மையும் தம்முடைய நோக்கங்களையும் ஒரு புதிய வல்லமையான வகையில் வெளிப்படுத்தியதற்கு இது அடையாளமாகியது. இயேசு தேவனாக இருந்தார், இருக்கின்றார் (கொலோசெயர் 1:15, 16, 19; எபிரெயர் 1:3). அவரைக் காண்பதும், கேட்பதும், தெரிந்து கொள்வதும் உண்மையிலேயே தேவனை அறிந்து கொள்ளுவதாகும். பாவமுள்ள மனிதனுக்குத் தம்மை முன்பு வெளிப்படுத்தியதைக் காட்டிலும் இப்போது தெளிவாகத் தம்மை இயேசுவில் வெளிப்படுத்தினார்.

*2) "தேவ ஆவி இறங்கினது"* (வ. 16) - இயேசு தேவ ஆவியின் வல்லமையான அளவற்ற அபிஷேகத்தைப் பெற்றார். தேவனுடைய சித்தத்தை இன்னும் அதிகமாக வெளிப்படுத்தி, எல்லாருக்கும்



இரட்சிப்பின் பாதையை திறந்து வைத்து, தேவனுடைய நோக்கத்தையும் சித்தத்தையும் நிறைவேற்றுவதற்கு இது அவரை பெலப்படுத்தியது. பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்வதின் மூலம் இயேசு, விசுவாசிக்குப் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் கொடுக்கிறவரானார் (லூக்கா 3:16).

*3) "இவர் என்னுடைய நேசகுமாரன். இவரில் பிரியமாயிருக்கிறேன்"* (வசனம் 17) கிறிஸ்துவின் அடையாளத்தை உறுதிப்படுத்துகின்ற தீர்க்கமான வெளிப்பாட்டுடன் தேவன் பேசினார். இந்த அறிக்கை மேலும் ஆழமான அர்த்தத்தை அதற்குள் கொண்டிருந்தது.

மேசியாவைப் பற்றிய பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன பகுதிகளில், இந்த அறிக்கைக்கு இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. *"நீர் என்னுடைய நேசகுமாரன்..."* என்பதை சங்கீதம் 2:7ல் காணலாம். யூதர்கள் இந்த முழு சங்கீதத்தையும் மேசியாவைப் பற்றிய தீர்க்கதரிசன விவரிப்பு என்று வரலாற்று வழியாக ஏற்றுக்கொண்டார்கள்.

*"என் ஆத்துமாவுக்குப் பிரியமானவர்"* என்கிற இரண்டாவது பகுதி ஏசாயா 42:1ல் இருக்கிறது. ஏசாயாவின் இந்த முழு அதிகாரமும், ஏசாயா 43ம் அதிகாரத்துடன் இணைந்து மேசியாவை, தேவனுடைய நீதி இரக்கம் இரட்சிப்பு ஆகியவைகளை எல்லாருக்கும் கொண்டுவருகின்ற துன்புறும் ஊழியக்காரராகவும் மீட்பராகவும் முன்னறிவிக்கின்றன.

தேவன் இந்த வார்த்தைகளைக் கூறியபோது, இயேசு உண்மையிலேயே நீண்டகாலம் காத்திருக்கப்பட்ட, முன்னுரைக்கப்பட்ட மேசியா என்று உறுதிசெய்தார். அவர் இரட்சகராகவும், இராஜாதி இராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தராகவும் தேவனால் தெரிவு செய்யப்பட்டார். நித்தியமான தெய்வீகமான கிரீடத்துக்கு சிலுவைதான் ஒரே வழி என்பதையும் இது உறுதிசெய்தது! இராஜாதி இராஜா முதலில் எல்லாருக்கும் தாழ்ந்த ஊழியராயிருக்க வேண்டும். (பிலிப்பியர் 2:5-11).

**இயேசு எல்லாரையும் சென்றடைந்தார்**

இயேசுவின் ஞானஸ்நானத்தை சுற்றியிருந்த இந்த நிகழ்வுகளிலிருந்து அபிஷேகத்தைப் பற்றிய முக்கியமான பாடங்களை நாம் கற்றுக்கொள்ளலாம்.

முதலாவதாக, அவசியமில்லாதபோதுகூட, தம்மைத்தான் தாழ்த்திக் கொள்வதற்கு இயேசு விரும்பிக் கீழ்ப்படிந்தது, *அவருக்காகவும்* அவர்

*மூலமாகவும்* தேவன் வைத்திருந்ததை அதிகமாக வெளிப்படுத்தியது. தேவனுடைய அன்பு, மன்னிப்பு, இரட்சிப்பு ஆகியவைகளை இயேசு யாரையும் கடிந்துகொள்ளாமல் **எல்லாருக்கும்** கொண்டு சென்றார் (யோவான் 8:1-1). தேவனுடைய அன்பான இருதயத்தை இறுதியாக சிலுவையில் வெளிப்படுத்தி (1 யோவான் 4:9-10) **தாழ்மையின்** *எடுத்துக்காட்டாக* அவர் இருந்தார் (யோவான் 13:1-17).

**போதகரிடமிருந்து போதகருக்கு :** சபைத் தலைவரே நாமும் தேவனுக்கு முன்பாக தாழ்மையான கீழ்ப்படிதலில் நடக்கவேண்டும். சுவிசேஷத்துடன் தாழ்மையாக *எல்லாரிடமும்* சென்றடைய வேண்டும். இந்த சத்தியங்கள் வெளிப்படையாகத் தெரிவது போலிருக்கும். ஆனால் அது அவைகளை நாம் செய்வதாகாது! நம்மை நாமே தாழ்த்திக் கொள்வது பல நேரங்களில் மிகப்பெரிய அறைகூவலாகவே இருக்கின்றது. தாழ்மை நம்முடைய குணத்தோடு நேரடியாக இணைக்கப்பட்டிருக்கின்றது. பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தில் நாம் வளருவதற்கும் பயன்படுத்துவதற்கும் நம்முடைய குணம் முக்கியமான ஒன்றாகும்.

பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார்; ஆனால் தாழ்மையுள்ளவர்களுக்கோ அவர் *கிருபை* அளிக்கிறார். அது பிறர்மீதான தன்னலமற்ற கரிசனையைக் காட்டுகின்ற தன்மையாகும். அது அகம்பாவம் அல்லது போலியான தற்பெருமை அறவேயில்லாத ஒரு நிலையாகும்.

கீழ்ப்படிதலோடு தாழ்மையில் நடப்பதற்கு நமக்கு உதவிசெய்கின்ற பல்வேறு தெய்வீகப் பண்புகளையும் செயல்களையும் நான் கூறுகின்றேன். இவைகளை அன்றாடப் பழக்கமாக ஆக்கிக்கொள்வது விவேகமாகும்.

- நாம் காயப்படுத்திவிட்ட அல்லது கோபப்படுத்திவிட்ட நபர்களிடம் மன்னிப்பு கேட்பது.
- கேட்கப்படவில்லையென்றாலும் கூட நம்முடைய இருதயத்திலிருந்து மன்னிப்பை நாம் வழங்குவது.
- நேசிக்கப்படமுடியாத அல்லது அதற்கு அருகதையற்ற நபராக நமக்கு தோன்றுகிறவர்களை நேசிப்பது.



- உதவியைக் கேட்டு அதைப் பெற்றுக்கொள்வது
- நம்மைப் பிறருக்கு ''மேலாக'' காட்டுவதற்கு மட்டுமே பயன்படுகிற பட்டங்கள், பதவிகள் அல்லது சலுகைகள் ஆகியவைகளைப் பெற்றுக்கொள்ள மறுப்பது.
- யாருடைய கவனத்தையும் ஈர்க்காத, எந்த மரியாதையையும் அல்லது உடனடி பலனையும் அளிக்காத கடினமான பணியை தேர்வு செய்வது.
- உங்களுக்குச் சேர வேண்டிய நற்பெயரை இன்னொருவர் எடுத்துக்கொள்வதை அனுமதிப்பது.

இயேசு, பெருமையைப் பற்றிய மனித இயல்புகளை அறிந்திருந்ததால் தாழ்மையைக் குறித்து அடிக்கடி போதித்தார் (மத்தேயு 6:1-15; 18:1-4; 20:20-28). பரிசுத்த ஆவியின் சரியான அபிஷேகத்தை நாம் பெற்றுக்கொள்வதற்கு விரும்பினால், இயேசு நடந்ததுபோல நாமும் நடக்கவேண்டும்.

அது தாழ்மையான கீழ்ப்படிதலான நடத்தையும், வெளிப்படுத்தப் பட்டிருக்கிற தேவ வார்த்தைக்கு உண்மையாயிருப்பதுமான நடத்தையுமாகும்.

**d. இயேசு சோதனையைப் புரிந்து கொண்டார்.** தம்முடைய ஞானஸ்நானத்தைப் பின் தொடர்ந்து, இயேசு உபவாசிக்கவும், ஜெபிக்கவும், சாத்தானுடன் போரிடவும் *''பரிசுத்த ஆவியினால் கொண்டுபோகப்பட்டார்''* (லூக்கா 4:1-12). ஞானஸ்நானம் மற்றும் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் ஆகிய அனுபவங்களுக்குப் பிறகு வெளிப்படையாகத் தெரிகின்ற வல்லமையான ஊழியத்துக்கு இயேசு அனுப்பப்படுவார் என்று நாம் நினைக்கலாம்.

ஆனால் தேவனுடைய ஞானம் நம்முடைய அறிவுக்கு அப்பாற்பட்டது (ஏசாயா 55:8, 9). அவருடைய நோக்கங்களெல்லாம் நித்தியத்தை மனதில் வைத்து வடிவமைக்கப்பட்டவைகளாகும். இயேசு சோதிக்கப்பட்டது தேவனுடைய திட்டத்தின்படி என்பது தெளிவாக இருக்கிறது. (மத்தேயு 4:1; மாற்கு 1:12, 13; லூக்கா 4:1).

இயேசு சோதிக்கப்பட்டபோதும், பரீட்சை செய்யப்பட்டபோதும் அவர் கையாண்ட இயல்புகளிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியது

நிறைய இருக்கின்றது. அவர் முறுமுறுக்கவில்லை. குற்றங்கூறவுமில்லை; பயத்துக்கோ அல்லது குழப்பத்துக்கோ இடமளிக்கவில்லை, சோதனை முழுவதிலும், அதனைத் தொடர்ந்து வந்த வெற்றியிலும் இயேசு பிதாவாகிய தேவன்மேல் முழு நம்பிக்கையையும் வைத்திருந்தார்.

**போதகரிடமிருந்து போதகருக்கு :** சபைத்தலைவர்களே, பல்வேறு விதமான யாரும் அனுபவித்திராத சோதனைகளை, உபத்திரவங்களை, தூண்டப்படுதல்களை நாம் சந்திக்கின்றோம். சபையில் தலைவனாயிருப்பது என்பது மகிழ்ச்சியின் கோபுர உச்சியிலிருந்து ஆர்வக்குலைவு, தோல்வி ஆகிய ஆழங்களுக்கு நம்மை அனுப்பிவிட முடியும். பலநேரங்களில் அது ஒரு ஞாயிறு முதல் அடுத்த ஞாயிறு வரை இருக்கும்!

உடன் ஆயரே, சபையில் ஒரு தலைவன் என்கிற முறையில் பிசாசின் தாக்குதலுக்கு நீங்கள் ஒரு இலக்காக இருக்கிறீர்கள். யாரும் உங்களைப் புரிந்து கொள்ளவில்லையென்று நினைத்துக்கொண்டு, உங்கள் போராட்டங்களில் நீங்கள் தனிமையாக இருப்பதாக உணரலாம். இன்னும் கொஞ்சம் அதிகமான முதிர்ந்த அனுபவம் அல்லது ஆவிக்குரிய நிலை இருந்திருந்தால் இதுபோன்ற கடினமான நேரங்கள் வழியாக நீங்கள் கடந்து செல்லாமலிருந்திருக்கலாம் என்று நினைப்பதற்கு உங்கள் மனம் தூண்டப்படலாம். ஊழியத்தை விட்டுவிட்டுப் போய்விடக்கூட நீங்கள் தூண்டப்படலாம். பிசாசின் இந்தப் பொய்களெல்லாம், உங்களை உற்சாகமிழக்கப்பண்ணுவதற்காகவே - அவைகளை நம்ப வேண்டாம்! தேவன் மேல் நம்பிக்கையுடனும், வெற்றியின் உற்சாக உணர்வுடனும் சோதனைகளை எவ்வாறு சந்திப்பது, தாங்குவது என்பதற்கு அவருடைய வாழ்க்கை நமக்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

இயேசுவுக்கு, தேவன் தம்மைவிட்டு விலகுவதுமில்லை கைவிடுவதுமில்லை என்பது தெரியும். தேவன் உண்மையுள்ள வரென்றும் அவருடைய வாக்குறுதிகள் உண்மையானவையென்றும் தெரியும். பரிசுத்த ஆவியின் வல்லமையாலும், தேவனுடைய உதவியாலும் பிதாவின் சித்தத்தை தம்மால் நிறைவேற்ற முடியும்



என்பதும் அவருக்குத் தெரியும். இயேசுவின் வாழ்க்கையிலிருந்து கொள்கைகளையும், உள்நோக்கப் பார்வைகளையும் கவனமாகப் படிப்பதற்கு நேரமெடுத்துக் கொள்ளுங்கள் (பகுதி III B2). அறைகூவலான நேரங்களில் இவைகள் உங்களுக்கு உதவிசெய்யும்.

இயேசு, இது தமக்கு ஏன் நிகழ்கின்றது என்று கேள்வி கேட்கவில்லை. மாறாக தேவனுடைய ஏதோ ஒரு நோக்கம் தம்மிலும், தம் வாழ்க்கையின் மூலமும் நிறைவேறுகிறது என்று நம்பி இந்த சோதனையைத் தாங்கிக் கொண்டார். தேவனுக்குப் பணிவதிலும், தேவனுடைய வார்த்தையில் மாறாத வல்லமை இருக்கிறது என்று நம்புவதிலும் இயேசு சமாதானத்தையும் பெலனையும் கண்டார்.

### சரியாகப் பொருந்துகின்ற சர்வாயுதவர்க்கம்

தேவன் புது அபிஷேகத்தை நம்முடைய வாழ்க்கையில் ஊற்றும்போது, பல நேரங்களில் அதைத் தொடர்ந்து ஒரு சோதனை காலத்தை அவர் அனுமதிக்கின்றார். இந்த சோதனை ஏன் அவ்வளவு முக்கியமானது என்பதற்கான சில காரணங்களை நாம் பார்க்கலாம்.

தேவன் நமக்களிக்கின்ற அபிஷேகத்தில் நாம் வளருவது அவசியமாயிருக்கிறது. தேவன் நம்முடைய நன்மைக்காக நம்மை ஆவிக்குரியபடி வளர்ச்சியடையச் செய்கிறார். ஆனால் வளர்ச்சி சௌகரியமில்லாததாக இருக்கலாம். அதன்மீது கசப்பைக் காட்டவோ அல்லது அதை எதிர்த்து நிற்கவோ நாம் தூண்டப்படலாம். ஆனால் நம்முடைய எதிர்காலத்தில் நமக்கு என்ன இருக்கிறது என்று தேவன் அறிந்திருப்பதால், தோல்வியை அல்ல வெற்றியையே நாமடைவதற்கு நம்மை ஆயத்தப்படுத்த அவர் நாடுகிறார்.

அதேபோல அபிஷேகமும் வரங்களும் வேறு எவருடையதாக வுமல்ல - நம்முடையவைகளாக இருக்க வேண்டும். இன்னொருவரு டைய வரத்திலும் அபிஷேகத்திலும் நாம் நம்பிக்கை வைப்பது எளிதாக இருக்கும்.

ஆனால் மற்ற ஒருவருடைய அபிஷேகத்தில் நாம் பணியாற்ற முயற்சி செய்வது ஒரு பிரச்சினை. ஏனெனில் கர்த்தர் *உங்களைத்தான்* அழைத்திருக்கிறார். அவர் *உங்களைப்* பயன்படுத்த விரும்புகிறார். அவர் உங்களுக்களித்த ஆயுதம் *உங்களுக்கானது.* குறிப்பிட்ட வகையில்

தேவன் பயன்படுத்த விரும்புகின்ற சிறப்பான பாத்திரம் நீங்கள். அவர் வைத்திருக்கிற வேலை *உங்களுக்கானது.* அவர் தருகின்ற அபிஷேகம் உங்களுக்காக ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கின்ற பணிக்கு சரியாகப் பொருந்தும்.

ஆனால் உங்களுடைய அழைப்பை, உங்களுக்கு ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்ற வேலையை, உங்களுடைய அபிஷேகத்தை புரிந்து கொள்வதற்கும் "அதில் வளருவதற்கும்" காலமாகிறது. உங்களை மேம்படுத்துவதற்கு உதவி செய்யவும், உங்களுக்கு வைத்திருக்கின்ற ''ஆயுதத்தில் நீங்கள் பொருந்துவதற்கும்'' சில சமயங்களில் சோதனையான காலமொன்றை தேவன் பயன்படுத்துவார். அதுபோன்ற காலத்தில் நீங்கள் தேவனுக்குப் பணிந்து செயலாற்றும்போது நீங்கள் பெலனடைந்து, அவர் உங்களுக்களித்த அபிஷேகமாகிய உங்களுடைய சொந்த "ஆயுதத்தில்" பணியாற்றுவதற்கும் உங்களை வளரவிடுவார். அப்போது நீங்கள் வெற்றி கொண்டு அவருடைய அழைப்புக்கேற்ற கனிகளைக் கொடுப்பார்கள்.

சோதனைகள் நம்முடைய போதாமையை பல நேரங்களில் வெளிப்படுத்துகின்றன. மற்ற நேரங்களைவிட கடினமான நேரங்களில் கர்த்தர் நமக்குத் தேவை என்பதையும் அவரால் மாத்திரமே என்னவெல்லாம் தரமுடியும் என்பதையும் நாம் ஒப்புக்கொள்கிறோம்.

### தேவன் நமக்குத் தொடர்ந்து தேவைப்படுகிறார்

நாம் தேவனுடைய அபிஷேகத்தில் நிறைந்து நிச்சயத்துடனும் நம்பிக்கையுடனும் கீழ்ப்படிதலின் அடிப்படையில் செயல்படும்போது நாம் அறிந்து கொள்ளவேண்டிய ஒரு ஆபத்து இன்னுமிருக்கின்றது. சிறிது, சிறிதாக நாம் நம்மேல், நம்முடைய மொத்த அனுபவத்தின்மேல் நம்முடைய திறமையின்மேல் சார்ந்துவிடத் துவங்குவதுதான் அந்த ஆபத்து. பிறகு கர்த்தர் மீது அல்லது பரிசுத்த ஆவியின் வல்லமைமீது சார்ந்திருப்பது குறைந்து கொண்டே போகிறது. இப்படி நடந்துவிட வேண்டும் என்கிற *அவசியமில்லை;* ஆனால் நாம் கவனமாயில்லை யென்றால் இது நடக்கக்கூடும்.

இயேசு, *''நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும், நான் அவனிலும் நிலைத்திருந்தால்,* (உடனிருப்பது, காத்திருப்பது, தங்கியிருப்பது, குடியிருப்பது) *அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" என்று கூறினார்.* (யோவான் 15:5)



*பரிசுத்த ஆவியின் அபிஷேகம்* என்பது முழுவதும் இயேசுவைப் பற்றியது என்று இங்கே நான் வலியுறுத்துகிறேன். அது வரங்கள், வல்லமை அல்லது ஊழியத்தைப் பற்றியது அல்ல. அது நாம் ஊழியம் செய்கின்ற மக்களைப் பற்றியதும் அல்ல. அது இயேசுவைப் பற்றியது. மெய்யான அபிஷேகத்தின் ஏழு குணவியல்புகளில் ஒன்றைப் பொதுவாகக் காணலாம். (பகுதி III; பிரிவு A-3). அவைகள் **எல்லாமே** இயேசுவையே காட்டுகின்றன.

தேவ ஆவியினால் அவருக்குள்ளேதான்...... நாம் *"பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்''* (நடபடிகள் 17:28). தேவன் நம்மை எவ்வளவு பயன்படுத்துகிறார் என்பது முக்கியமல்ல; நாம் எவ்வளவு அனுபவம் பெறுகின்றோம் என்பதும் முக்கியமல்ல. நாம் எளிதான குழந்தையின் விசுவாசம் போன்ற விசுவாசத்தை *எப்போதும்* கர்த்தர்பேரில் வைத்திருக்க வேண்டும். இது மாதிரியான விசுவாசத்தில் தாழ்மையான நம்பிக்கையும் கர்த்தர் பேரில் ஆழமான சார்ந்திருத்தலும் இருக்கிறது.

நமது மானிட இயல்பு நம்மைத் தன்னலத்துக்கும், தேவனிடமிருந்து விலகியிருக்கின்ற சுதந்தரமான உணர்வுகளுக்கும் வழிநடத்த முடியும். ஆனால் சோதனைகளும் பரீட்சைகளும், அவர் நமக்குத் தொடர்ந்து தேவை என்பதையும், அவருடைய கிருபையும் அவருடைய தொடுதலும் நம்முடைய வாழ்க்கையில் தொடர்ந்து அவசியம் என்பதையும் நமக்கு நினைவுறுத்துகின்றன.

*அவருடைய அபிஷேகத்தை இன்னும் அதிகமாகப் பெற்றுக் கொள்வதற்கு நாம் தூய்மைப்படுவது தேவை.* (யோவா. 6:63).

நம்முடைய வாழ்க்கையில் தேவ ஆவியின் பிரசன்னம். பாவ இயல்புக்கு இக்கட்டான நிலையைக் கொடுக்கலாம் - இப்படிக் கொடுக்கவேண்டும்!

ஏனெனில் ஆவியும் மாம்சமும் (பாவ இயல்பு) ஒன்றோடொன்று போரிடுகின்றன அல்லது ஒன்றுக்கொன்று எதிராயிருக்கின்றன (காலத்தியர் 5:16, 17; யாக்கோபு 4:1-10; 1 பேதுரு 2:11). சோதனைகளும் துன்பங்களும் நம்மைப் புடமிட்டு தூய்மையாக்குகின்றன.

## அழுக்கானவைகளைச் சுத்தம் செய்தல்

வெள்ளி, தங்கம் செய்யும் தொழிலில் பணியாற்றுகின்ற கைவினைஞர்கள், தாதுப் பொருட்கள் சுரங்கத்திலிருந்து முதலில் எடுக்கப்படும்போது முழுவதும் அசுத்தமாக இருப்பதாகக்கூறுவதைக் கேட்டிருப்பீர்கள். அழுக்கெல்லாம் மேல்மட்டத்துக்கு வரும்படி அதை சூடாக்கி, உருகவைக்க வேண்டும். பிறகு கழிவுப்பொருட்கள் திரவகத்திலிருந்து மிகுந்த திறமையாக நீக்கப்படும் (நீதிமொழிகள் 25:4). உலோகம் தூய்மையாகி பயன்படுத்துவதற்க்கு ஏற்றதாக ஆகும்வரையில் இப்படித் திருப்பித் திருப்பி செய்யப்படும். மதிப்புமிக்க உலோகம் சேதமாகிவிடாதபடி தீயிலிருந்து அவைகளை எந்த நேரத்தில் வெளியே எடுக்க வேண்டும் என்று தாதுப்பொருட்களை சூடேற்றுபவர்களுக்கு தெரியும்.

அதேபோல் தேவன் நம்முடைய வாழ்க்கையில் வருகிற சோதனைகளை நமக்குள்ளிருக்கின்ற தூய்மையற்றவைகள் வெளிப்படுத்தப்படவும், மேல்மட்டத்துக்கு வரவும்' பயன்படுத்துவார். பின்பு அவைகளை அடையாளம் தெரிந்து கொண்டு, மனந்திரும்புதல், சுகமளித்தல், விடுதலை ஆகியவைகள் மூலமாக நம்முடைய பாவ இயல்பிலிருந்து நாம்விடுதலையடையலாம்.

**போதகரிடமிருந்து போதகருக்கு :** சபைத் தலைவரே, சூழ்நிலைகள் 'சூடாகும்போது' அல்லது உங்களுக்கு அழுத்தங்கள் ஏற்படும்போது உங்களுடைய வாழ்க்கையின் மேல்மட்டத்துக்கு வருவது எது? அப்போது அதை சரிசெய்ய என்ன செய்கிறீர்கள்? எதை நோக்கி திரும்புகிறீர்கள்? மேல்மட்டத்துக்கு வருவது உங்களுடைய எந்த இயல்பை அல்லது நடக்கையை சுத்தமாக்க, குணமாக்க அல்லது உங்கள் வாழ்க்கையிலிருந்து, அகற்றி விட தேவன் விரும்புகின்றார் என்பதைக் காட்டுகிறதா? உங்களுடைய சோதனையிலும் அல்லது துன்பத்தின் மத்தியிலும் உங்களுக்கு அவர் கற்றுக் கொடுக்க விரும்புகின்ற ஏதேனும் இருக்கிறதா?

நம்முடைய பலவீனங்கள் அல்லது அசுத்தங்கள் ஆகியவற்றை நாம் சந்திக்கிற இந்த வேளைகளுக்காக நாம் பயப்படத் தேவையில்லை. தேவன் தம்முடைய அன்பினால் நம்முடைய சோதனைகளையும், உபத்திரவங்களையும் நம்மை சுத்தம் பண்ணவும்,



திருத்தி வடிவமைக்கவும் பயன்படுத்துகிறார். அவர் நமக்கு வெளிப்பாட்டையும், புரிந்து கொள்ளுதலையும், அன்பான தொடுதலையும், கிருபையையும், அவருடைய வார்த்தையில் உட்பார்வையையும் நமக்களிப்பார். இந்த சந்தர்ப்பங்களை நமக்கு நம்பிக்கை அதிகரிப்பதற்கும் நம்முடைய குணத்தை மாற்றுவதற்கும் பயன்படுத்துகிறார். அப்போது நாம் இன்னும் அதிக திறமையாகவும் பயனுள்ள பாத்திரங்களாகவும் மாறுவோம்.

## சோதனைக்குட்பட்டிருக்கிற விவேகம்

தேவன் சோதனைகளை நம்மை சுத்தப்படுத்துவதற்கும், பெலப்படுத்துவதற்கும் பயன்படுத்துகிறார். நாம் தோல்வி அடைந்தவர்கள் அல்லது 'போதுமான அளவு நல்லவர்களாக இல்லை' என்பதை நாம் உணருவதற்காக தேவன் நம்மை பரீட்சை செய்வதில்லை. இல்லை! நம்முடைய பெலத்தை வளர்ப்பதற்காக தேவன் பரீட்சைகளையும் சோதனைகளையும் நம் வாழ்வில் அனுமதிக்கிறார்; ஏனெனில் நமக்கு பெலன் தேவையாயிருக்கும்போது நாம் பெலவீனமாயிருப்பதற்கு தேவன் விரும்புவதில்லை (நீதிமொழிகள் 24:10; எரேமியா 12:5). அவருடைய அபிஷேகத்தை நாம் அதிகமாகப் பெற்றுக்கொள்ளவும், அதை வைத்துக்கொண்டு உண்மையுள்ளவர்களா யிருக்கவும் நம்முடைய சோதனைகளை தேவன் பயன்படுத்துகிறார்.

அதனால்தான் யாக்கோபு "நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, ....அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்" என்று உற்சாகப்படுத்துகிறார் (யாக்கோபு 1:2). நம்முடைய உண்மையுள்ள தேவன் நம்முடைய சோதனைகளை நம்முடைய நன்மைக்கும் அவருடைய மகிமைக்காகவும் பயன்படுத்துவார் என்று அறிந்து, நம்பி அவைகளை பொறுமையாக சகிக்க வேண்டுமென்று வேதாகமம் நம்மை உற்சாகப்படுத்திக் கொண்டேயிருக்கிறது (வசனம் 3, 4) இது அவர் நமக்குக் கொடுத்திருக்கின்ற வாக்குறுதியாகும் (ரோமர் 8:28, 29).

யாக்கோபு, நம்பிக்கையுடனும் தேவனிடமிருந்து பதில் வரும் என்ற எதிர்பார்ப்புடனும் ஞானத்தைக் கேட்கச் சொல்லி நமக்கு ஆலோசனை கூறுகிறார் (யாக்கோபு 1:5-8) நமக்கு இந்த ஞானம் ஏன் வேண்டும்? சோதனையிலிருந்து தப்பித்துக் கொள்ளுவதற்கு மட்டுமா? இல்லை. மாறாக, பகுத்தறிதலையும் புரிந்து கொள்ளுதலையும் நமக்குத்

தருவதற்காக. சோதனையின் மூலாதாரம் எதுவாயிருப்பினும், தேவன் நம்மில் கிரியை செய்யும்போது நாம் என்ன செய்ய வேண்டும் என்பது நமக்குத் தெரியும்.

### பரிசுத்த ஆவியைக் கொடுப்பதில் தேவன் கவனிப்பது

தேவன் தம்முடைய ஆவியை நமக்கு அதிகமாக அளிக்க விரும்புகிறார். ஆனால் அதற்கு, அவருடைய வரங்களை வீணாக்காத அல்லது தவறாகப் பயன்படுத்தாத அளவுக்கு நம்முடைய குணம் வலுவுள்ளதாக இருக்க வேண்டும். ஐந்து வயது பிள்ளைக்கு அது எவ்வளவு ஆயத்தமாயிருந்தாலும் ஒரு காரைக் (Car) கொடுக்கமாட்டீர்கள். கொடுப்பீர்களா? பொறுப்பை சரியாகக் கையாளுவதற்கு அவர்களுக்கு வயது முதிர்ச்சி இருக்காது. அவர்கள் சரீரப்பிரகாரமாக, உளரீதியாக, உணர்வுபூர்வமாக வளரவேண்டும்.

இதே கொள்கை தேவனுடைய இராஜ்யத்திலும் உண்மையாயிருக்கிறது. மூப்பர்கள், உதவிக்காரர்கள் நியமனம்பற்றி தீமோத்தேயுவுக்கு பவுலுடைய அறிவுரைகளைப் பாருங்கள் (1 தீமோத்தேயு 3:1-13). எவரேனும் தலைவராக விரும்பினால் அது பாராட்டத் தக்கதும் நல்லதுமாகும். ஆனால் அவர்களுடைய பக்தியுள்ள நடக்கை, நற்குண பின்னணி மற்றும் வாழ்க்கையில் முதிர்ச்சி ஆகியவைகள் மெய்ப்பிக்கப்பட்டதாக இருக்க வேண்டும். குறிப்பாக, புதிதாக மனம் மாறுதலடைந்த ஒருவர் மூப்பராக நியமிக்கப்படக்கூடாது என்று பவுல் தீமோத்தேயுவுக்கு எடுத்துரைக்கிறார். ஏனெனில் புதிதாக மனம் மாறியவர்கள் இன்னும் அந்த அளவுக்கு முதிர்ச்சி அடைந்திருக்க மாட்டார்கள்.

### சோதனை வேளையில் நிமிர்ந்து நிற்பது

நமது தேவன் பரிசுத்தத்தில் பரிபூரணர். தீய காரியம் எதையும் **ஒருபோதும்** செய்யமாட்டார். பாவத்தை அல்லது தீமையை நாம் செய்வதற்கு நம்மை ஒருபோதும் தூண்டவுமாட்டார். அது அவருடைய அன்பின் குறிக்கோள் (யோபு 34:10-12; யாக்கோபு 1:13-18).

தீமைக்கு காரணனாயிருப்பது சாத்தான். அவன் திருடவும், கொல்லவும், அழிக்கவும் வருகிறான். ... நம்முடைய வரங்களையோ அல்லது அபிஷேகத்தையோ பிசாசு அழிக்கவோ அல்லது கட்டுப்படுத்தவோ முடியாது. ஏனெனில் அவைகளெல்லாம்



தேவனுடைய இறையாண்மை அதிகாரத்தின் கீழேயிருக்கின்றன. ஆனால் சாத்தான், நம்முடைய குணத்தைத் தூண்டிவிட்டு நம்மைத் தாக்கவும், ஏமாற்றவும், களங்கப்படுத்தவும், நாம் தேவனுடைய கருவிகள் என்பதற்கு அருகதையற்றவர்களாக்கவும் முயற்சிப்பான். பாவமான நடக்கைகளையோ அல்லது இயல்புகளையோ நாம் தெரிவு செய்துகொள்ள அவன் நம்மை தூண்டிவிட முடியுமென்றால் நம்முடைய வாழ்க்கையின்மூலம் நடந்தேற வேண்டிய தேவனுடைய பணிகள் தடை பண்ணப்படலாம் அல்லது நம்முடைய தோல்வியின் மூலம் அழிக்கப்பட்டு விடலாம்.

இயேசு வனாந்தரத்தில் சோதனையை எப்படிக் கையாண்டாரோ அதே வழியைத்தான் நாமும் கையாள வேண்டும் (லூக்கா 4:3-12).

*"தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்"* - தேவனுக்கு கீழ்ப்படிந்து அவர்மேல் நம்பிக்கையாயிருங்கள். அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்திருப்பது சோதனைக்குட்படுத்துகிற சூழ்நிலைகள் அல்லது இடங்கள் ஆகியவைகளைவிட்டு நம்மை வெகு தூரத்தில் வைத்துவிடும். சோதிக்கப்படும்போது *முதலில்* அவரிடம் ஜெபத்தில் ஓடுங்கள்; தேவனுடைய உதவி இல்லாமல் சோதனையை மேற்கொள்ள முயற்சிக்க வேண்டாம்.

*"பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்"* - தேவனுடைய வார்த்தையையும் உங்களுடைய ஆவிக்குரிய ஜெபவார்த்தைகளையும் (''அந்நிய பாஷைகள்'') பயன்படுத்துங்கள் (1 கொரிந்தியர் 12, 14); நீங்கள் நம்பக்கூடிய ஒருவருடன் ஜெபத்தில் சேர்ந்து ஜெபியுங்கள்.

*''தேவனிடத்தில் சேருங்கள்''* - உங்களுடைய முழு சூழ்நிலைகளையும் தேவனிடம் ஜெபத்தில் கொண்டுவாருங்கள். அவருடைய ஆவியின் வெளிச்சத்தையும் அவருடைய வார்த்தையும் உங்கள் இருதயத்தில் பிரகாசிக்கும்படி விடுங்கள். அவர் மாத்திரமே செய்யமுடிகின்ற காரியத்தை அவர் செய்வதற்காக பொறுமையாயிருங்கள்; காத்திருங்கள். காரியங்களை உங்கள் கையில் எடுத்துக்கொள்ளும்படியான சோதனையை எதிர்த்து நில்லுங்கள். சூழ்நிலையை தீர்மானிப்பதற்கு அல்லது முடிவு செய்வதற்கு நீங்களே முயற்சி செய்யுங்கள்.

*"உங்கள் கைகளை சுத்திகரியுங்கள்", "உங்கள் இருதயங்களை*

*பரிசுத்தமாக்குங்கள்", "தாழ்மைப்படுங்கள்"* - உங்களுடைய வாழ்க்கையிலிருக்கின்ற கட்டு, பாவம், பலவீனம் ஆகிய பகுதிகளைக் குறித்து பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்துகிறபடி அல்லது உணர்த்துகிறபடி தாழ்மையான, மனம் வருந்துகின்ற இருதயத்தோடு அவைகளை ஜெபத்தில் தேவனிடம் கொண்டு வாருங்கள். உங்களுடைய தோல்விகளை அறிக்கை செய்யுங்கள்; தேவன் உங்களைச் சுத்திகரிக்க வேண்டிய காரியங்கள், அவருடைய மன்னிப்பு, சுகமளித்தல், மீட்பு ஆகிய தேவைகளையும் அறிக்கை செய்யுங்கள்.

**வெற்றி பெறுபவர்களுக்குக் கிருபை**

ஆவிக்குரிய போர்களில் எவ்வாறு ஈடுபடுவது என்பதைத் தெரிந்து கொள்வதற்கு வல்லமையான அறிவுரைகள் பட்டியல் இன்னொன்று இருக்கிறது. எபேசியர் 6:10-18 வசனங்களை வாசிக்கவும். இது, நாம் நம்முடைய ஆயுதங்களைத் தரித்துக் கொள்ளவும், ஆவியின் பட்டயத்தை (தேவனுடைய வார்த்தையை) எடுத்துக் கொள்ளவும், ஜெபத்தில் 'மூழ்கி'யிருக்கவும் நமக்கு அறிவுறுத்துகிறது. அதன்பிறகு, உங்களால் முடிந்த இவைகளையெல்லாம் செய்து முடித்த பிறகு, உங்கள் விசுவாசத்திலும், நம்பிக்கையிலும், தேவனுக்குக் கீழ்ப்படிவதிலும் *உறுதியாயிருங்கள்.* பிசாசையும் அவனுடைய செயல்களையும் உங்களால் எதிர்த்து நிற்க முடியும். அவன் உங்களை விட்டு ஓடிவிடுவான்! தேவன் இன்றே உங்களுக்கு வெற்றியைத் தருவார்!

சத்துரு அப்படியே விட்டுவிடுவதில்லை. உங்களுடைய அழிவு அவனுடைய நோக்கமாயிருப்பதால் அவன் மீண்டும் முயற்சி செய்வான். இயேசுவுக்கும் இப்படித்தான் நடந்தது. அவர் வனாந்தரத்தில் பெரிய சோதனையை சந்தித்தாலும் - மாபெரும் வெற்றியைப் பெற்றாலும் - அதுவே அவருக்கும் சத்துருவுக்கும் இடையேயான இறுதி மோதல் அல்ல. (லூக்கா 4:13; மத்தேயு 16:23; லூக்கா 22:1-6 ஆகியவைகளைப் பார்க்கவும்). ஆனால் ஒவ்வொரு சோதனையின்போதும், இயேசு பாவத்துக்கு இடங்கொடுக்கவேயில்லை.

தேவன் முழுவதுமாக உங்களுக்காக இருக்கிறார் என்பது நினைவிருக்கட்டும் (ரோமர் 8:31). உங்களுடைய திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுவதற்கு அவர் அனுமதிப்பதில்லை என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறார். தப்பித்துக்கொள்ளும் வழியொன்றை



அவர் எப்போதும் வைப்பார்' (1 கொரிந்தியர் 10:13; 2 பேதுரு 2:9).

ஆகவே, நம்முடைய போராட்டங்களை நெருக்கமாக அறிந்திருக்கின்ற, புரிந்திருக்கின்ற ஒரு இராஜாவை நாம் பெற்றிருப்பதைக் குறித்து நாம் மகிழ்ச்சியடைவோம். இந்த நேர்மையான அன்பான இரட்சகர், நாம் அவரைப்போல வெற்றி பெற்றவர்களாயிருப்பதற்கு, தம்முடைய பெலன், வல்லமை, கிருபை ஆகியவைகளை நாம் பெற்றுக்கொள்வதற்காக நிபந்தனையின்றி நம்மை அழைக்கிறார் (எபிரெயர் 4:14-16).

**பரிசுத்த ஆவியானவரின் வல்லமை மீது சார்ந்து கொள்கிற செயல்முறையை வாழ்க்கை முழுவதும் நாம் தொடர்ந்து பின்பற்ற வேண்டும்.**

இயேசு தம்முடைய மேசியா-பணி கர்த்தருடைய ஆவியினால் நடைபெற வேண்டும் என்று கூறினார். இயேசு, பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டார், வல்லமை பெற்றார். அவருடைய ஊழியத்தைக் குறித்து தீர்க்கதரிசனமாக அவர் உரைத்தவைகளையெல்லாம் இந்த அபிஷேகத்தினால் தான் அவரால் செய்ய முடிந்தது.

**கர்த்தர் மீது முழுமையான சார்ந்திருத்தல்**

இயேசு, இந்தப் பகுதியில், பிதாவின் சித்தத்தை எவ்வாறு செயல்படுத்துவது என்பதற்கான பூரண மாதிரியைக் காட்டுகிறார். நாமறிந்திருக்கின்றபடி, இயேசு தம்முடைய சித்தத்தையல்ல பிதாவின் சித்தத்தையே செய்வதற்கு வந்தார். அதைப்போல நீங்களும் நானும் நம்முடைய சொந்த சித்தத்தையல்ல பிதாவின் சித்தத்தையே செய்வதற்கு அழைக்கப்பட்டிருக்கின்றோம். "நம்முடைய திட்டங்கள்" எவ்வளவு அருமையாக இருப்பதாக நாம் எண்ணிக்கொண்டாலும் அவைகளை செய்வதற்காக நாம் அழைக்கப்படவில்லை. மாறாக, தேவனுடைய திட்டத்தை மட்டுமே செய்வதற்காக நாம் அழைக்கப்பட்டிருக்கின்றோம்;

*தேவனுடைய சித்தத்தை செய்வதற்கு நமக்கு தேவனுடைய வல்லமை தேவை!*

நாம் அறிந்திருக்கிறபடி, தேவனுடைய காரியங்களில் நாம் முதிர்ச்சி அடைகின்றபோது, தேவன் மீதும், அவருடைய பரிசுத்த ஆவியானவர் மீதும் அதிகமதிகமாக சார்ந்திருப்பது எவ்வாறு என்பது பெரிய

அறைகூவலாக இருக்கிறது. வளர்ந்து வருகின்ற நம்முடைய வரங்கள், திறமைகள் ஆகியவை களின்மீது சார்ந்தி ருக்கத் துவங்குவது மிகவும் எளிது. சில வெற்றிகளை நாம் பெற்றிருக்கலாம், எனவே தொடர்ந்து ஜெபிப்பதிலிருந்தும் வேதத்தை வாசிப்பதிலிருந்தும் நாம் பின் வாங்கி விடலாம். நம்முடைய வாழ்க்கையில் அல்லது நமது சமுதாய வாழ்க்கையில் தேவனுடைய கிரியைகளைக் காண்பதற்கு ஆவிக்குரிய பசி அல்லது உணர்வு இல்லாமலிருக்கலாம். தேவ ஆவியின் அபிஷேக வல்லமை மீது நம்பிக்கை குறைந்து, அனுபவம், திறமை ஆகியவைகள் மீது அதிக நம்பிக்கை வைக்கப்படலாம்.




***இடங்கொடுத்து விடாதே!***

அப்போது ஏற்படும் சிரமங்களும் சோதனைகளும் நம்மை மீண்டுமாக நம்முடைய முழங்கால்களுக்கு கொண்டு வரச்செய்ய முடியும். நம்முடைய வாழ்க்கை, ஊழியம் ஆகியவைகளுக்கு நமக்குத் தேவைப்படுகின்ற ***அனைத்துக்கும்*** திருப்பவும் நாம் கர்த்தரைச் சார்ந்திருக்கிற நிலைக்கு கொண்டுவரச் செய்ய முடியும்.

இயேசுவின் வாழ்க்கையில் பெரும் அற்புதங்களும் ஊழியங்களும் நிறைந்த காலகட்டத்தையும், பெரும் சோதனை எதிர்ப்பு ஆகிய காலகட்டத்தையும் நாம் பார்க்க முடியும். ஆனால் எல்லா நிலையிலும் பாவமில்லா தேவகுமாரன், செயலாற்றல் மிக்க தேவ ஆவியின் வல்லமை மீது முழுவதுமாக சார்ந்திருந்தார்.

குமாரனாகிய தேவன் இயேசுவுக்கு, பிதாவின் சித்தத்தை செய்வதற்கு பரிசுத்த ஆவியின் அபிஷேக வல்லமை



தேவையாயிருந்ததென்றால் - உங்களுக்கு எனக்கும் *இன்னும் எவ்வளவு அதிகமாகத் தேவை?*

## சோதனைகள் : நம்மை வடிவமைக்கிற தேவனுடைய கருவிகள்

நம்முடைய வாழ்க்கையில் வருகின்ற சோதனைகளை தேவன் பயன்படுத்துவார். இந்த நேரங்களில் அவர் நம்மைத் தண்டிப்பது *இல்லை.* அதற்கு எதிர்மறையானது தான் உண்மை. தேவன் நம்மை நேசிக்கின்ற *காரணத்தால்* அவர் நம்மை ஒழுங்குபடுத்துகின்றார் (எபிரெயர் 12:3-11). உண்மையிலேயே நாம் அவருடைய குமாரர்களும் குமாரத்திகளுமாக இருக்கின்ற *காரணத்தால்* (ரோமர் 8:14-16). நம்மை நன்கு வடிவமைக்கவும் அவருடைய சாயலில் வளரவும் தேவையானவைகளை அவர் செய்கிறார் (2 கொரிந்தியர் 3:18). கிறிஸ்துவுடன் நாம் உடன்பங்காளிகள் ஆனதால் (ரோமர் 8:17), அவருடனே ஆளுகை செய்ய நியமிக்கப்பட்டிருக்கின்றபடியினால், (2 தீமோத்தேயு 2:12; வெளிப்படுத்தின விசேஷம் 5:10), வரவிருக்கின்ற காரியத்துக்காக நாம் ஆயத்தமாகும்படி பரீட்சைக்குள்ளாகக் கடந்து செல்கின்றோம் (ரோமர் 8:18); 2 கொரிந்தியர் 4:17).

நம் ஒவ்வொருவருக்கும் வரவிருக்கின்ற சோதனைகள், கஷ்டங்கள் ஆகியவைகளைப் பார்த்து நாம் பயப்பட வேண்டாம் அல்லது ஓடிவிட வேண்டாம். மாறாக யாக்கோபு எழுதுகிறதுபோல, "நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, ... அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்'' (யாக்கோபு 1:2). ஏனெனில் தேவன் தம்முடைய பயன்பாட்டுக்காகவும், மகிமைக்காகவும் நம்மை நல்வடிவமைக்கின்ற, மாற்றுகின்ற, ஆயத்தம் செய்கின்ற தேவனுடைய கருவிகள் இவைகளேயாகும்.

### 3. தேவனுடைய ஆள்தத்துவத்தைப் பின்தொடர்ந்து செல்லுதல்

நாம் பார்த்தபடி இயேசுவினுடைய வாழ்க்கையிலிருந்தும் அவருடைய ஊழியத்திலிருந்தும் அநேகக் கோட்பாடுகளையும் படிப்பினைகளையும் நாம் கற்றுக் கொள்ளலாம். அவரைப் போல போதித்தவர்கள் எவருமே இல்லை (லூக்கா 4:32). இயேசு தமது ஊழியக்காலம் முழுவதும் அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தார். அவை அனைத்தையும் எழுதினால் எழுதப்படும் புஸ்தகங்கள்

உலகம் கொள்ளாதென்று யோவான் அப்போஸ்தலன் குறிப்பிட்டுள்ளார் (யோவான் 21:25).

இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராக இருக்கிறபடியால் (எபிரெயர் 13:8) **அவர் இவ்வுலகத்திலிருந்தபொழுது செய்த ஊழியங்கள் இன்றும் செய்யப்பட்டுக்கொண்டே இருக்கின்றன.** இந்தப் பெரிய அற்புதங்களும் ஊழியங்களும் பரிசுத்த ஆவியானவரால் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கங்களின் மூலமாக தொடர்ந்து செய்யப்பட்டு வருகின்றன. அப்படியானால் இயேசு இந்த உலகத்தில் தொடங்கின ஊழியத்தைத் தம்மைப் பின்பற்றுகிறவர்கள் தொடர்ந்து செய்வதற்கு அவர்களிடம் ஒப்படைத்துள்ளார் என்பது தெளிவாகிறது (அப். 1:1-8).

உலகத்தின் பாவத்திற்காக சிலுவையின்மீது நாம் மரணமடைய தேவனால் நாம் அழைக்கப்படவில்லை. அது கிறிஸ்துவினுடைய பணி மட்டுமேயாகும். அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை (அப். 4:12). இந்த மகத்துவமான செய்து முடிக்கப்பட்ட வேலையோடு ஒன்றையும் கூட்ட ஒருவராலும் முடியாது. அதனை நாம் தாழ்மையோடு **பெற்றுக்** *கொள்ள* வேண்டும்!

**போதகரிடமிருந்து போதகருக்கு :** இயேசுவின் ஊழியம் அவருடைய சிலுவை மரணத்தினால் **குறைக்கப்படவில்லை** என்பதை தயவு செய்து புரிந்து கொள்ளுங்கள். இயேசு இந்த உலகத்திற்கு வந்ததின் முக்கிய காரணம் மனிதகுலத்திற்கு இரட்சிப்பை அளிப்பதற்காக சிலுவையில் மரிப்பதற்கேயாகும். இந்த இரட்சிப்பு அவருடைய மரணத்தினாலும் அவருடைய உயிர்த்தெழுதலினாலும் மகிமையாய் நிறைவேறிற்று (யோவான் 19:30; எபேசியர் 1:17-23; பிலிப்பியர் 2:5-11; எபிரெயர் 9:11-15).

ஆகவே, இயேசுவை ஒருவரும் அவருடைய சித்தத்திற்கு விரோதமாகக் கொலை செய்யவில்லை என்று உறுதியாக கூறலாம். மாறாக கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரிக்க வேண்டும் என்று தேவன் முன்குறித்திருந்தார் (யோவான் 1:29; 12:27; 19:5-11; அப். 2:22-24, 33). இயேசு இதை மனமுவந்து ஏற்று அதனை நிறைவேற்றினார்.



## பெரிய கிரியைகள்

இயேசு கிறிஸ்துவின் மூலம் இரட்சிப்பைப் பெற்றுக்கொண்ட நமக்கு அவருடைய ஊழியத்தை *"பூமியின் கடைசிபரியந்தமும்"* (அப். 1:8) **கொண்டு செல்லும்** பொறுப்பு கொடுக்கப்பட்டுள்ளது. ஆசீர்வதிக்கப் பட்ட இந்தக் கட்டளையை நிறைவேற்றுவதற்கு பரிசுத்த ஆவியானவர் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறார்.

*"மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிறகிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்"* (யோவான் 14:12) என்று இயேசுவும் கூறியிருக்கிறார். இந்த வசனத்தில் இயேசு தம்முடைய ஊழியத்தை நாம் தொடர்ந்து செய்ய வேண்டும் என்று சொல்வதைத் தெளிவாக பார்க்கிறோம்.

எனினும் நம்முடைய கிரியைகள் கிறிஸ்துவின் கிரியைகளை விட உயர்வானதாக இருக்கவே முடியாது என்று **அறிய** வேண்டும். நாமும் கிறிஸ்துவுக்கு எந்த விதத்திலும் சரி சமமாகவும் முடியாது (மத். 10:24, 25; யோவான் 13:16). ஏனெனில் இயேசு மாத்திரமே தேவனாயிருக்கிறார்; பிதாவோடும், பரிசுத்த ஆவியோடும் ஒரே சாராம்சமாய் இருக்கிறார் (யோவான் 10:30).

இயேசு *"பெரிய கிரியைகள்"*, என்ற போது *பெரிய அதிகமான எண்ணிக்கைகளையும் வாய்ப்புகளையும்* குறிப்பிட்டார். இயேசு வினுடைய ஊழியக் காலம் இந்த உலகில் கிட்டத்தட்ட மூன்றறை ஆண்டுகள் ஆகும். நம்முடைய ஊழியம் நம் வாழ் நாள் முழுவதும் நீடிக்கும்.

இயேசுவின் பூலோக ஊழியம் ஒரு சிறு பகுதியில், ஒரு சிறு கூட்ட மக்கள் மத்தியில் மட்டுமே நடைபெற்றது. இப்போது இயேசுவைப் பின்பற்றுவோரின் எண்ணிக்கையோடு ஒப்பிடும்போது அது மிகவும் சிறியதாகும். நமக்கு அவர் கொடுக்கும் அழைப்பு *"பூமியின் கடைசிபரியந்தமும்"* (அப். 1:8) *"சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்"* (மாற்கு 16:15) *"சகல ஜாதிகளையும் சீஷராக்"* குங்கள் (மத் 28:19) என்பதாகும். இவைகளே நாம் செய்யப்போகும் "பெரிய கிரியைகள்" ஆகும்!

## எல்லாருக்கும் நற்செய்தி

எல்லா மக்களுக்கும் இரட்சிப்பை அருள வேண்டுமென்பது நம்முடைய பரமபிதாவினுடைய திட்டமாகும். இயேசுவின் மரணத்தினாலும் உயிர்த்தெழுதலினாலும் இது இப்போது சாத்தியமாயிற்று. ஆனால் இந்த அற்புதமான நற்செய்தி எல்லா நாடுகளுக்கும் அறிவிக்கப்பட வேண்டும் (மத். 24:14; யோவான் 4:35). ஒருவரும் அவர்களுக்கு சொல்லாவிட்டால் எப்படி அவர்கள் அறிந்து கொள்வார்கள்? (ரோமர் 10:14, 15)

ஒவ்வொரு விசுவாசிக்கும் கொடுக்கப்பட்டுள்ள வேலை, கிறிஸ்துவின் மூலமாகக் கிடைத்துள்ள இரட்சிப்பின் நற்செய்தியை எல்லா மக்களுக்கும் அறிவிப்பதாகும். இதை செய்து முடிப்பதற்கு தேவனுடைய பரிசுத்த ஆவியானவரின் அதிகாரமும், பெலனும் வேண்டும்!

பரிசுத்த ஆவியானவர், *“பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத் தீர்ப்பைக்குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்”* (யோவான் 16:7-11). பரிசுத்த ஆவியானவரினாலே ஆதி அப்போஸ்தலர்கள் அற்புதங்களும் அடையாளங்களும் செய்தார்கள் (அப். 2:43; 5:12; இன்னும் பல). திருச்சபையின் காலம் முழுவதிலும், இன்றும் புரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் செய்யப்பட்ட அற்புதங்களும் அடையாளங்களும் செய்யப்பட்டு வருகின்றன (1 கொரி 12:9, 10).

அநேக போதகர்களும் சபைத் தலைவர்களும் தேவனுடைய வல்லமை தங்கள் ஊழியத்தில் காணப்பட ஆவலாகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இயேசுவின் நாமம் மகிமைப்படும்படியான வியாதியஸ்தர் குணமடைவதையும், அசுத்த ஆவிகள் விரட்டியடிக்கப்படுவதையும், மரித்தவர்கள் உயிரோடெழுவதையும், மேலும் பல அதிசயங்களையும் காண ஊழியக்காரர்கள் வாஞ்சையோடு காத்துக் கொண்டிருக்கிறார்கள்!

பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் இந்த விதமான ஊழியங்கள் இன்றும் நடைபெறுகின்றன. இயேசு தம்முடைய ஊழியத்தில் பரிசுத்த ஆவியானவரின் பெலத்தினால் அற்புதங்கள் செய்தார் (அப். 2:22). (யோவான் 14:12) பரிசுத்த ஆவியானவரால் பெரிய



காரியங்களைச் செய்ய முடியுமென்று இயேசு வாக்களித்திருக் கிறார் (1 கொரி 12:11).

நாம் நற்செய்தியைப் பிரசங்கிக்கும்போது தேவன் தாமே வசனத்தை அடையாளங்களினால் உறுதிபடுத்துவார் என்ற எதிர்பார்த்தலோடு நாம் தேவனை விசுவாசிக்க வேண்டும் (மாற்கு 16:19, 20). இதனை அவர் தமது பரிசுத்த ஆவியானவரின் பெலத்தினால் *செய்வார்,* அல்லேலூயா!

## அடையாளங்கள் தேவனை சுட்டி காட்டுகின்றன

நாம் இதை கவனமாய் சீர்த்தூக்கிப் பார்த்து ஒரு தெளிவை பெறவேண்டும். நம்முடைய ஊழியத்தின் நோக்கம் *அற்புதங்கள், அடையாளங்கள், அதிசயங்களாயிருக்கக்கூடாது.* அவை நம்முடைய இருதயத்தின் வாஞ்சையாகவும் இருக்கக்கூடாது.

தேவன் இன்றும் அநேக அற்புதங்களை செய்கிறார் என்பது உண்மையே ஆகும். ஆனால் இந்த மாபெரும் அடையாளங்கள், அதிசயங்கள், அற்புதங்களின் **உள்நோக்கம்** என்ன?

“அடையாளம்” அல்லது “அதிசயம்” என்பது அசாதாரணமான, இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு சம்பவமாகும் நம்முடைய கவனத்தை ஈர்ப்பதற்காக தேவன் அடையாளங்களைப் பயன்படுத்துகிறார். உதாரணமாக, வனாந்தரத்தில் முட்செடி பற்றி எரிவது ஒரு சாதாரணமான காரியமாகும். ஆனால் அதிக நேரமாக எரிந்தும் *அது வெந்துபோகாமல் இருந்தால்* அது நம்முடைய கவனத்தை நிச்சயமாய் கவர்கிறது (யாத்திராகமம் 3:1-3 பார்க்கவும்).

ஆனால் ஒரு அடையாளம் அசாதாரணமான வியக்கத்தகு நிகழ்ச்சி மட்டும் அல்ல. அற்புதங்கள், அடையாளங்களின் அடிப்படை நோக்கம் **எதையோ சுட்டிக் காட்டுவதற்காக அவை திட்டமிடப் பட்டதாகும்.** எதை அடையாளமும் அற்புதமும் சுட்டிக்காட்டுகிறதோ அது அடையாளத்தின் முக்கியத்துவத்தை தீர்வு செய்யும்.

**பரிசுத்த ஆவியானவரால் செய்யப்படும் எந்த அற்புதமும், அடையாளமும் எப்பொழுதும் பிதாவாகிய தேவனை அல்லது குமாரனாகிய தேவன் இயேசுவையே மக்களுக்கு சுட்டிக்காட்டும்.**

வெந்து போகாத எரிகிற முட்செடியின் மூலம் தேவன் மோசேயின் கவனத்தைக் கவர்ந்தார். தேவன் மோசேயின் கவனத்தைப் பெற்றதும்,

அவர் தம்மையும் (யாத். 3:4-6) அவர் தமது மக்களுக்கு வைத்திருந்த திட்டத்தையும் வெளிப்படுத்தினார் (யாத். 3:7-4:17).

எது மிகவும் முக்கியமானது? தேவன் முட்செடியை வெந்து போகாமல் எரியச்செய்ததா அல்லது தம்மையும் தம் திட்டத்தையும் வெளிப்படுத்தியதா?

**நற்செய்தி தெளிவாக பிரசங்கிக்கப்படுகிறதா?**

அடையாளங்கள், அற்புதங்கள், தீர்க்கதரிசன வார்த்தைகள், தரிசனங்கள் மேலும் இது போன்ற ஆவிக்குரிய அனுபவங்களை கூர்ந்து பார்ப்பது அவை அசாதாரணமானதா அல்லது இயற்கைக்கு அப்பாற்பட்டதா என்று தீர்ப்பளிப்பதற்காக அல்ல. சாத்தானும் ஏமாற்றுவதற்கு இயற்கைக்கு அப்பாற்பட்ட அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வான் (2 கொரி. 11:14). கடைசி காலம் நெருங்குகிறபடியால் இந்த விஷயத்தில் சாத்தானுடைய வேலைகள் அதிகரிக்கும் (மத். 24:23-25; 2 தெச 2:8-10; வெளி. 13:13, 14; 16:14; 19:20).

பிசாசானவன் மக்களை ஏமாற்றுவதற்காக போலியான அற்புதங்களைச் செய்து, அவர்களை இரட்சிப்பிற்கு இயேசுவே ஒரே வழி என்ற சத்திய சுவிசேஷத்தை விட்டு விலக்கி நடத்துவான்.

இந்த எதிர்மறையான அடையாளங்களும் அற்புதங்களும் மக்களுடைய கவனத்தை ஈர்க்கின்றன.

## அடையாளங்கள் அற்புதங்கள்மீது ஒரு கண்ணோட்டம்

தேவனிடத்திலிருந்து வரும் அடையாளங்களும் அற்புதங்களும் நல்லவையாகும். அவற்றை நாம் இந்த நாட்களிலும் எதிர்பார்க்கலாம். ஆதி அப்போஸ்தலர்களின் மறைவிற்குப் பிறகு அவை மறைந்து போகவில்லை (A.D. 100). திருச்சபையில் புதிய ஏற்பாடு தேவனால் வழங்கப்பட்டு அப்போஸ்தலர்களால் எழுதப்பட்டது என்று அதிகாரப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகு அவை நின்றுவிடவில்லை (A.D. 300).

பரிசுத்த ஆவியானவர் 2000 ஆண்டுகளுக்கு முன்பு இயேசு துவங்கிய வேலைகளை இன்றும் செய்துகொண்டிருக்கிறார்!



*“இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்* (எபி. 13:8). அவருடைய வேலைகளை நாம் பரிசுத்த ஆவியானவரின் உதவியோடே தொடர்ந்து செய்யும்படிக் கூறியிருக்கிறார் (யோவான் 14:12).

அடையாளங்களும் அற்புதங்களும் உணர்வைத் தூண்டு கிறதாய் இருந்தாலும் அவை நிறைவேறக் கூடிய ஒரு எல்லைக்கு உட்பட்டதேயாகும். அடையாளங்கள் மக்களுடைய கவனத்தை கவருவதற்காகவே என்றும் அவை எப்போதும் இயேசுவண்டையே மக்களை நடத்தும் என்றும் பார்த்தோம்.

இது மிகவும் முக்கியமானதாகும். ஏனென்றால் **அடையாளங்களும் அற்புதங்களும் இரட்சிப்பிற்கேதுவான விசுவாசத்திற்குள்ளாக ஒருவரை நடத்துவதில்லை.** அடையாளங்கள், அற்புதங்கள் மீது கட்டப்பட்ட விசுவாசம் ஆழமற்றதும் நிலைத்து நிற்காததுமாய் இருக்கும். (இதற்கு எடுத்துக்காட்டாக யோவான் 6 வாசிக்கவும். விசேஷமாக 14, 15, 26-35, 60-64 வசனங்களை வாசிக்கவும்).

ஒருவர் இரட்சிப்பைப் பெறுவதற்கு இயேசு கிறிஸ்து யார் என்றும் அவர் தனக்கு சிலுவையில் என்ன செய்தார் என்ற சத்தியத்தையும் அறிந்திருக்க வேண்டும். அவர்கள் அவரில் விசுவாசம் வைக்க வேண்டும். தங்கள் பாவத்திற்காக மனம் வருந்தி அவரைத் தங்கள் சொந்த இரட்சகராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

**முதலிடம் இயேசுவுக்கே உரியது**

இயேசு தம் ஊழியத்தின் துவக்கத்திலேயே, மனிதனின் இருதயம் திருக்குள்ளதும் மகாகேடுள்ளதுமாயிருக்கிறது என்று அறிந்திருந்தார் (எரே. 17:9). இயேசு தம்மைப் பின்பற்றி வந்தவர்களிடம் தம்மை ஒப்படைக்கவில்லை (யோவான் 2:23-25). அவர் தாம் செய்த அற்புதங்களை அவர்கள் கண்டதினால் தம்மீது ஒரு மேலோட்டமான விசுவாசமே வைத்திருக்கிறார்கள் என்பதை உணர்ந்தார் (வச. 23).

பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் செய்யப்பட்ட அற்புதங்களும் அடையாளங்களும் தேவகட்டளைகளுக்கு

உட்பட்டதும் நியாயமானதுமாகும். ஆனால் நிலைத்து நிற்கும் விசுவாசமானது அதைவிட நித்தியமான உறுதியான இயேசு கிறிஸ்துவின் மேல் கட்டப்பட வேண்டும்.

நமது பாவங்களுக்காகத் தம்மையே பலியாக ஒப்புக்கொடுத்தத் தனி நபரான கிறிஸ்துவின் மேல் நமது விசுவாசம் இருக்குமானால் அது நிலைத்ததும் இரட்சிப்பிற்கேற்ற விசுவாசமுமாயிருக்கும். இது வாழ்க்கையை மாற்றும் விசுவாசமாகும். இந்த விசுவாசம் துன்பங்கள் கஷ்டங்கள் மத்தியிலும் வளர்ந்து வலுவடையும். இப்படிப்பட்ட விசுவாசம் வாழ்நாள் முழுவதும் மேலும் நித்திய காலத்திற்கும் நிலைத்து நிற்கும்!

மக்களின் கவனத்தை ஈர்ப்பதற்காக பரிசுத்த ஆவியானவர் அற்புதங்களையும் அடையாளங்களையும் பயன்படுத்துகிறார். அவர் அப்படிச் செய்வதற்குக் காரணம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கை வைத்து இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ள அவர்களுக்கு ஒரு வாய்ப்பளிப்பதற்காகவே ஆகும். இரண்டு உதாரணங்களைப் பார்ப்போம்.

முதல் உதாரணம் (யோவான் 9:1-41). இயேசு பிறவிக் குருடனை சுகப்படுத்துவதாகும். இந்த மனிதனை இயேசு சுகப்படுத்துகிறார். அதன் பின்னர் தன் மீது நம்பிக்கை வைப்பதற்கு அவனுக்கு வாய்ப்பளிப்பதற்காக அவனோடு பேசுகிறார் (9:35-38).

இரண்டாவது உதாரணம் (அப். 13:4-12), பொல்லாத மாயவித்தைக்காரனைப் பவுல் எதிர்த்து நிற்பதாகும். பரிசுத்த ஆவியானவரினால் நிறைந்தவராய் பவுல் மாயவித்தைக்காரனுக்கு தீர்க்கதரிசனமாக தீர்ப்பளித்தார் (வச. 9-11). தேவனுடைய வல்லமையைக் கண்ட அதிபதி, பவுல் பிரசங்கித்த கிறிஸ்து உண்மையானவர் என்று நம்புகிறார் (வச. 12).

இந்த இரண்டு உதாரணங்களும் கிறிஸ்துவின் மேல் வைத்த விசுவாசம் அடையாளங்களின் அடிப்படையில் உண்டானதல்ல என்று காட்டுகின்றன. அவர்கள் இயேசு கிறிஸ்துவின் மேல் விசுவாசம் வைக்கிறார்களா இல்லையா என்ற கேள்வியின் அடிப்படையில் ஏற்பட்டதாகும் (யோவான் 9:35-38; அப். 13:12). அற்புதங்களும் அடையாளங்களும் இயேசு கிறிஸ்துவைக் குறித்த



நற்செய்தியின் வல்லமையையும் சத்தியத்தையும் உறுதிப்படுத்துகிற வைகளாய் மட்டும் விளங்குகின்றன.

சபை தலைவர்களே, அற்புதங்களும் அடையாளங்களும் உங்கள் ஊழியத்தில் காணப்பட வேண்டும். ஆனால் எல்லாவற்றிலும் முதலிடம் இயேசுவுக்கே உரியது; மற்றவை அனைத்தும் தெளிவாக இயேசுவை மக்களுக்கு சுட்டிக் காட்டவேண்டும்.

இயேசுவே அவர்கள் இரட்சகர்! இயேசுவே அவர்கள் ஆண்டவர்! சகல துதி கனம் மகிமை அனைத்தும் கிறிஸ்துவுக்கே!

ஒரு சம்பவம் **இயேசுவை மகிமைப் படுத்துகிறதா** என்பதே அடையாளங்களும் அற்புதங்களும் பரிசுத்த ஆவியினால் தான் செய்யப்பட்டதா இல்லையா என்பதற்கான உண்மையான அடிப்படையாகும். மக்களை **அவரிடம்** நடத்துகிறதா? அது மக்கள் அவரை நேசிக்க, வழிப்பட, கீழ்ப்படிய, பின்பற்ற ஏவுகிறதா? இயேசுவின் நாமம் எல்லா நாமத்திற்கும் மேலாக உயர்த்தப்படுகிறதா? அற்புதங்களையும் அடையாளங்களையும் பகுத்தறியவும், அவற்றைப் புரிந்து கொள்ளவும், இந்த கேள்விகளுக்கு பதிலைக்கண்டுபிடிக்க வேண்டும்.

## வேறே தேவர்கள் இல்லை

நாம் தேவனோடு நடப்பதும், ஊழியஞ்செய்வதும் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தில் வளருவதும் - **அவர் நமக்கு என்ன செய்வார் என்பதற்காகவா அல்லது அவர் தேவனானதால் அவரோடு உறவு கொள்ள விரும்பி அவரை நன்றாக அறிந்து கொண்டு மற்றவர்களும் அவரை அறியும்படி செய்வதற்காகவா?** என்ற மிக முக்கியமான உண்மையைக்காண நம்மைக் கொண்டு வரும்.

தேவனுக்கு தன்னை முற்றிலும் ஒப்படைத்த ஒரு மனிதனின் மூலமாக தேவனுடைய ஆவியானவர் கிரியை செய்வதே தேவனுடைய அபிஷேகம் ஆகும்.

ஆனால் ஒருவர் தேவன் மீதிருந்த தம் கவனத்தை இழந்து போனால் அல்லது தன் ஆன்மீக பசியை வேறெங்காவது ஆற்ற முயற்சித்தால் என்ன சம்பவிக்கும்? இதன் விபரீத விளைவை இயேசுவின் காலத்திலிருந்த யூதமதத் தலைவர்களிடத்தில் காணலாம்.

யூத மதத் தலைவர்கள் வேதவாக்கியங்களை நன்றாக அறிந்திருந்தும், தங்கள் முன்பாக நின்று கொண்டிருந்த **ஜீவ வார்த்தையான** இயேசுவைக் காணத் தவறினார்கள் (யோவான் 1:1-5,14).

பிறகு அநேக அடையாளங்களைக் கண்டிருந்தும், மேலும் அடையாளங்களைத் தேடிக்கொண்டிருந்த மதத் தலைவர்களை இயேசு கடிந்து கொண்டார் (மத். 12:38,39). மூன்றாவது முறையாக அடையாளங்களைக் காண்பிக்கும்படிக் கேட்ட பரிசேயர் சதுசேயர் நியாயசாஸ்திரிகள் இவர்களுடைய குருட்டாட்டத்தை இயேசு கடிந்து கொண்டார் (மத் 16:1-4).

இயேசு நமது ஊழியத்தின் கடைசிக் கட்டத்தில் சத்தியத்திற்கு தங்கள் கண்களைக் குருடாக்கிக்கொண்ட பரிசேயருடைய இருதய கடினம் மாறாதிருப்பதைக் கொண்டு அவர்களை நியாயந்தீர்த்தார் (மத். 23:37-39).

இங்கு இயேசு வலியுறுத்துவது என்ன? இயேசுவுக்கும் அவர் காலத்திலிருந்த மதத் தலைவர்களுக்கும் இடையே ஏற்பட்ட வாதங்களிலிருந்து அநேகக் காரியங்களை நாம் கற்று கொள்ளலாம். ஆனால் இங்கு மிக முக்கியமாக, யூதர்கள் **தேவன் தங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்பதிலேயே குறியாயிருந்தார்களே தவிர தேவனுக்காக அல்ல** என்பதைச் சுட்டிகாட்டுகிறார்.

---

**நம்முடைய அன்பையும் பக்தியையும் தேவனுக்கன்றி வேறெதற்கும் கொடுப்பதைக் குறித்து தேவன் எரிச்சல் அடைவது நீதியானது. தேவன் நம்முடைய அன்பும் பக்தியும் அவருக்கே வேண்டும் என்று எதிபார்ப்பது நீதியும் நியாயமுமானது. இப்பிரபஞ்சத்தில் உள்ள எல்லாவற்றிலும் அவர் ஒருவரே நமது அன்பிற்கும் வழிபாட்டிற்கும் தகுதியுடையவர். அவரே நம் சிருஷ்டி கர்த்தா; அவர் தம்முடைய அன்பினால் சிருஷ்டித்த மனிதனை பாவத்திலிருந்தும் மரணத்தினின்றும் மீட்டெடுக்க நம்முடைய சொந்தை குமாரனையே கொடுத்தார் (கொலோசெயர் 2:11-15; 1 யோவான் 4:9,10).**

---



மதத் தலைவர்கள் தாங்கள் சேவிப்பதாகக் கூறிய தேவனுடைய அடிப்படை உண்மையை மறந்து போனார்கள். *"என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்... உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவன்"* (யாத். 20:3,5).

நம்முடைய அன்பையும் பக்தியையும் தேவனுக்கில்லாமல் வேறெதற்கும் கொடுப்பதைக் குறித்து தேவன் எரிச்சல் அடைவது நீதியானது. தேவன் நம்முடைய அன்பும் பக்தியும் அவருக்கே வேண்டும் என்று எதிர்பார்ப்பது நீதியும் நியாயமுமானது. அவரே நம் சிருஷ்டி கர்த்தர். *ஏனெனில்* முதலாவதாக இப்பிரபஞ்சத்தில் உள்ள எல்லாவற்றிலும் அவர் ஒருவரே *நமது அன்பிற்கும், வழிபாட்டிற்கும் தகுதி உடையவர்* (ஆதி. 1:26,28; 2:18-25; யோவான் 1:3). மூன்றாவதாக, அவர் தம்முடைய அன்பினால் சிருஷ்டித்த மனிதனை பாவத்திலி ருந்தும் மரணத்திலிருந்தும் மீட்டெடுக்க தம்முடைய சொந்த குமாரனையே கொடுத்தார் (கொலோ. 2:11-15; 1 யோவான் 4:9,10).

மீண்டும் இந்த சத்தியம் புதிய ஏற்பாட்டில் *"நம்மில் வாசமாயிருக்கிற ஆவியானவர் நம்மிடத்தில் வைராக்கிய வாஞ்சையாயிருக்கிறா ரென்று"* (யாக். 4:5) உறுதி செய்யப்பட்டிருக்கிறது. இது தேவனைத் தங்கள் சரீர வாஞ்சைகள், சுய விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்காக பயன்படுத்த முற்பட்ட ஆதி கிறிஸ்தவர்களைக் கடிந்து கொள்ள எழுதப்பட்டதாகும். இந்த வாக்கியம் (யாக் 4:1-4). தங்களுடைய லௌகீக இச்சைகளைப் பூர்த்தி செய்வதற்காக, தங்கள் இரட்சகரோடு ஏற்படுத்திய பரிசுத்தமான உறவை அவமதித்து நம்பிக்கை துரோகம் செய்ததினால் அவர்கள் *"விபசாரரே, விபசாரிகளே"* (வச.4) என்று அழைக்கப்படு கிறார்கள்.

அப்படியிருந்தும், அவர் அவர்களை நிராகரிக்காமல், அவர்களை அவர் உண்மையாய் நேசித்ததினால் அவர்களுக்காக வைராக்கியத் தோடு ஏங்கினார். உண்மையாக மனந்திரும்புகிற எந்த விபசாரியையும் தேவன் மன்னித்து ஏற்றுக்கொள்வார் (யாக். 4:6-10).

மற்ற காரியங்களில் மயங்கி, தேவனுக்கு சேவை செய்வதையும் அவர் மேல் அன்புகூருவதையும் அவமதிக்கக் கூடாது என்பது தெளிவாகிறது.

### அவரை விட்டு இழுக்கப்படுவதைத் தவிருங்கள்

கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் போதகராகவும், தலைவராகவும் இருக்கிற நம்முடைய விசுவாசம், பக்தி, வாஞ்சை, நம்பிக்கை யாவும் **இயேசு**வுக்கு மட்டுமே!

- அடையாளங்களுக்கோ, அற்புதங்களுக்கோ அல்ல
- பெரிய ஊழியங்களுக்கோ அல்லது ஊழியக்காரர்களுக்கோ அல்ல
- வரங்களுக்கோ, அழைப்பிற்கோ, திறமைக்கோ, பட்டங்களுக்கோ, பதவிகளுக்கோ அல்ல.
- அவருடைய ஆசீர்வாதங்களுக்காகவும் அல்ல.

விசுவாசிகளுக்கு பெருந்தடையாய் இருப்பது தேவனிடத்திலிருந்து அவர்கள் பெறும் ஆசீர்வாதங்களே ஆகும். ஏன் அப்படி? ஏனெனில் தேவன் பேரிலிருந்த நம்முடைய வாஞ்சைகளும், கவனமும் அவரை விட்டு, அவர் அளித்த ஆசீர்வாதங்கள் மேல் பதிந்து விடுவதால் ஏற்படுவதாகும். நம் இருதயம் வஞ்சனையும் தன்னலமும் நிறைந்தது (எரே. 17:9). நாம் இரட்சிக்கப்பட்டிருந்தாலும், நாம் பாவஞ்செய்யக்கூடியவர்கள் தான் (1 யோவான் 1:8).

**போதகரிடமிருந்து போதருக்கு:** சபைத் தலைவனான நண்பனே, உங்கள் மீதும் உங்கள் ஊழியத்தின் மீதும் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் வேண்டும் என்று வாஞ்சிப்பதில் தவறில்லை என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். இதுவே தேவனுடைய வாஞ்சையுமாகும்!

நாம் ஞானத்தோடு எச்சரிக்கையாய் இராவிட்டால், நம் இதயம் மயங்கி வீழ்ச்சியடையும். நம்முடைய ஊழியம் வெற்றிகரமாக நடக்க வேண்டும் என்ற வாஞ்சையில், தேவனை நேசிப்பதை விட்டு, தேவன் நமக்கு என்ன செய்வார் என்பதிலேயே நோக்கமாக இருப்போம்.

நம்மையே அறியாமல் மெதுவாக **தேவனின் ஆள்தத்து வத்தைப் பின்தொடர்வதை விட்டுவிட்டு அவர் நமக்கு என்ன செய்வார் என்ற ஆர்வத்தோடு பின்தொடர்வோம்.** பரிசேயரிடத் திலும் சம்பவித்தது இதுவே ஆகும். *தேவனோடு* உண்மையான உறவு கொள்வதற்குப் பதிலாக தேவனைக்குறித்த ஞானத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள். வேதத்தைக்குறித்தும் சமய சடங்காசாரங்களைக்குறித்தும் அவர்கள் அதிகம் அறிந்திருந் தார்கள். ஆனால் *அவரையோ அவர்கள் அறியாதிருந்தார்கள்.* அவர்கள் தேவனைத் தேடவில்லை அவரிடமிருந்து எதைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதை மட்டுமே நாடினார்கள்.

சில தலைவர்கள் தேவனிடத்தில் ஈர்க்கப்படாமல், பரிசுத்த ஆவியாவரின் அசைவாடுதலின் போது ஏற்படும் இயற்கைக்கு அப்பாற்பட்ட வியத்தகு நிகழ்ச்சிகளண்டையில் ஈர்க்கப்படுகிறார்கள். ஒருவர் ஒரு பணக்காரப்பெண்ணையோ அல்லது ஆணையோ அவரது செல்வத்திற்காகத் திருமணம் செய்து கொள்வதற்கு இது ஒப்பாகும் அவர்கள் தாங்கள் திருமணம் செய்து கொண்ட நபரை நேசிப்பதைவிட அவர்களது செல்வத்தையும் அதனால் தங்களுக்கு என்ன நன்மை என்பதை மட்டுமே நினைப்பார்கள். இது எத்தனை அக்கிரமமான தன்னலம்!

இயற்கைக்கு அப்பாற்பட்ட அனுபவங்களை நாடித்தேடும் பொழுது, தேவன்மீது நாம் கொள்ளும் அன்பு தூய்மையற்றதாய் இருக்கும்.

நம்முடைய தேவன் நமக்காக வைராக்கியம் உள்ளவராய் இருக்கிறார். அவர் நம்மை நித்திய அன்பினாலே அன்புகூருகிறபடி யினாலே அவர் நம்மிடமிருந்து வஞ்சனையற்ற அன்பையும், அர்ப்பணிப்பையும் விரும்புகிறார் (ரோமர் 5:5; 1 யோவான் 3:1). தங்களுடைய முழு இருதயத்தோடும் தேவனை நேசிக்கிறவர்களுக் காக அவர் தேடிக்கொண்டிருக்கிறார். ஏனெனில் அவர்கள் மூலமாகத் தான் அவர் தம்மை வல்லமையாக வெளிப்படுத்த முடியும் (தானியேல் 11:32).

### நம்முடைய முதல் அழைப்பு

வேதம், அநேக முறை தேவனுடைய *"முகத்தைத்"* தேடும்படி நமக்கு புத்திமதி சொல்லுகிறது (2 நாளா 7:14; ஓசியா 5:15; சங். 27:8). தேவனுடைய முகம் என்று பரிசுத்த வேதாகமத்தில் கூறியுள்ளது தேவனுடைய ஆள்தத்துவத்தையும் அவரது இருதயத்தையும் குறிக்கும்.

எப்படியிருப்பினும், வேதாகமத்தில் எந்த இடத்திலும் தேவனுடைய ''கையைத்'' தேடும்படி கூறவில்லை. தேவனுடைய ''கை'' என்று

சொல்லும்பொழுது அவரது கைகளின் கிரியை, மகத்துவமான செயல்கள், ஆசீர்வாதம் இவற்றைத் தான் குறிக்கின்றன. தேவனுடைய கிரியைகளின் (கரத்தின்) பெலனை நம்மால் காணமுடியும். நம்முடைய ஊழியத்தில் அவர் கிரியைகளின் பெலனைக் காண வேண்டும் என்று விரும்புவதில் தவறொன்றும் இல்லை.

ஆனால் தயவுசெய்து புரிந்து கொள்ளுங்கள்; தேவனுடைய முகத்தைத் தேடும்பொழுது (அவர் இருதயத்தை, அவரது ஆள்தத்துவத்தை) நாம் அறிந்து கொள்கிறோம். அவர் சித்தத்தின்படி செய்ய வாஞ்சிக்கிறோம்.

**நாம் அவருக்குக் கீழ்ப்படிந்து அவர் சித்தத்தின்படி செய்யும்போது** தேவனுடைய வல்லமையான கரம் அவரது ஆவியானவரின் மூலமாக மகத்துவத்தைச் செய்வதைக் காண்போம்! தேவனைத் தேடுவதும் அவரது உறவை நாடுவதும் எப்போதும் நமக்குப் பிரதானமாயிருக்க வேண்டும். அவர் இடத்திலிருந்து தான் ஊழியத்திற்குத் தேவையான யாவும் வரும்.

### உண்மையான குமாரர், உண்மையான ஊழியக்காரர்

*"ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன். நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்"* என்று இயேசு சொன்னார் (யோவான் 12:26).

இந்த வசனத்தை கவனித்துப் பாருங்கள், இயேசு முதன்மையான இடத்தில் இருக்கிறார். அவர் சபையின் தலையானவர் (எபே. 1:22). நாம் *அவரைப் பின்பற்ற* வேண்டும். நம்முடைய ஊழியங்களில் நாம் கேட்கிறவைகளை ஆசீர்வதிக்க அவர் நம்மைப் பின்பற்றி வருவதில்லை.

சபைத்தலைவர்களான நமக்கு முதலாவது அழைப்பு, தினந்தோறும் அவரைத் தேடி அவரோடு உள்ள உறவைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும் என்பதே. அவரை அறிந்து கொள்ள வேண்டும். அவரில் அன்புகூர வேண்டும், ஆராதிக்க வேண்டும், அவரோடு பேச வேண்டும் (சங்கீதம் 63:1-8). இந்த இடத்தில் இருந்துதான் நம்மைக் குறித்தும் நம்முடைய ஊழியத்தைக் குறித்தும் அவர் வைத்திருக்கிறத் திட்டத்தை நாம் உண்மையாகக் கண்டுபிடிக்க முடியும்.



தேவனுக்கு தமது ஆசீர்வாதங்களையும், அபிஷேகத்தையும், அடையாளங்களையும், அற்புதங்களையும் தமது சபையின் மேலும், அவரால் அழைக்கப்பட்ட சபைத் தலைவராகிய உங்கள் மேலும் ஊற்ற வேண்டும் என்பது வாஞ்சையாகும்.

ஆனால் அவர் உங்களை நம்பலாமா? அவருக்கே என்றும் உண்மையாயிருக்கக் கூடிய மனப்பக்குவம், முதிர்ச்சி, ஞானம் இவை உங்களிடத்தில் உண்டா?

நம்முடைய இருதயம் முற்றிலும் தேவனுக்கே சொந்தமானால் தேவன் தமது "கரத்தை" விடுவிப்பதாக வாக்களிக்கிறார். *"தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்குத்* (முற்றிலும் ஒப்படைத்து கீழ்ப்படிகிறவர்களுக்கு) *தம்முடைய வல்லமையை விளங்கப் பண்ணும்படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக்கொண்டி ருக்கிறது"* (2 நாளா. 16:9).

அவர் தமக்கே நமது இருதயம் முற்றிலுமாய் வேண்டுமென்று நீதிக்குட்பட்ட பொறாமையோடு நித்திய அன்போடு நம்மை நேசிக்கிறார் (ரோமர் 8:31-39).

**போதகரிடமிருந்து போதகருக்கு:** தேவன் உன்னை முற்றிலுமாக நிபந்தனையற்ற அன்புடன் நேசிக்கிறார்! உன்னுடைய குறைகள் ஒன்றையும் பொருட்படுத்தாது உன் மேல் மிகுந்த உருக்கமாய் நித்திய நித்தியமாய் அன்புகூருகிறார். நீ ஊழியஞ் செய்வதற்காக மட்டும் படைக்கப்படவில்லை.

தேவனுக்கு அநேக ஊழியக்காரர் தேவைப்பட்டிருந்தால் அவர் அதிகமான தேவதூதர்களைப் படைத்திருப்பார். அவர் உங்களைப் படைத்ததின் காரணம், அவரோடு உறவு கொள்ள அவருக்கு குமாரரும், குமாரத்திகளும் வேண்டும் என்பதே. தேவதூதர்களுக்கு தங்கள் சிருஷ்டிகரோடு இதுபோன்ற உறவுக்கொள்ள முடியாது. மனிதராகிய நம்மால் மட்டுமே இந்த அனுபவத்தைப் பெற முடியும் (எபி. 2:14-18; 1 பேது. 1:1-12).

நீங்கள் ஊழியம் செய்வதற்காக கிறிஸ்து மரிக்கவில்லை. மனிதன் தேவனோடு கொண்டிருந்த உறவைப் புதுப்பிப்பதற்காகவே அவர் உங்கள் பாவங்களின் பலியாக மரித்தார்.

நாம் தேவனின் ஊழியக்காரர் *மட்டும்* அல்ல. நாம் கிறிஸ்துவின் சிநேகிதரும் (யோவா. 15:15) உடன் சுதந்தரருமாய் (ரோமர் 8:17) இருக்கிறோம். ஆண்டவருக்கும் அவரது சரீரத்துக்கும் அன்புடனும் நன்றியறிதலுடனும் சேவை செய்வதற்குரிய வாய்ப்பும் சலுகையும் நமக்குக் கிடைத்துள்ளது.

## தினமும் அவர் பிரசன்னத்தில்

பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெறுவதற்கும் தேவனை எப்போதும் தேடுவதற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. தேவனால் *"தாவீதை என இருதயத்துக்கு ஏற்றவனாகக் கண்டேன்" (அப். 13:22).* என்றழைக்கப்பட்ட தாவீது ராஜா தேவனோடு நாம் கொள்ள வேண்டிய உறவிற்கு ஒரு திசையைக் காட்டுகிறார். *"என் முகத்தைத் தேடுங்கள் என்று சொன்னீரே. உம்முடைய முகத்தையே தேடுவேன் கர்த்தாவே, என்று என் இருதயம் உம்மிடத்தில் சொல்லிற்று"* (சங். 7:8).

விடாமுயற்சியுடனும், ஆவலுடனும் தேடுகின்ற பொருள் கிடைக்கும்வரை குறியாயிருப்பது ''*தேடுதல்*'' ஆகும். இந்தக் கோட்பாட்டையே இயேசுவும் கூறியுள்ளார் (மத். 6:33; 13:44-46; லூக் 11:9-13).

தேவனைத் தேடுவதற்கு நேரமும், பெலனும் செலவாகும். நாம் சில சௌகரியங்கள், சலுகைகள், செயல்களை விட்டுக் கொடுக்க வேண்டியதாயிருக்கும். ஆனால் நாம் தேவனைத் தேடும்பொழுது தான் அவரைப் பற்றி அறிந்துகொள்வோம். அந்த நெருங்கிய உறவின் மூலம் நமது வாழ்க்கை, ஊழியம் இவற்றில் தேவனுடைய சித்தம் எது என்பதை அறிய ஆரம்பிக்கிறோம். அவருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து நாம் நடக்கும்பொழுது அவர் தம் அபிஷேகத்தை தம்மீதும் நம்மூலமாயும் வெளிப்படுத்துகிறார்.

அனுதினமும் தேவனுடைய பிரசன்னத்தில் இருப்பதற்கு எப்பொழுதும் முதலிடம் கொடுக்க வேண்டும். அங்கு தான் நாம் குறையாததும் மங்காததும் நித்தியமும் சத்தியமுமான பங்கைப் பெற்றுக் கொள்கிறோம் (லூக் 10:38-42). இந்த நாளும் ஒவ்வொரு நாளும் "*உம்முடைய முகத்தையே தேடுவேன் கர்த்தாவே*" என்று தீர்மானிக்கவும்.



## மறுஆய்வு செய்தல்

'அபிஷேகத்தில் வளருதல்' என்ற இந்தப் பகுதியை நாம் முடிக்கும்பொழுது, நீங்கள் ஒவ்வொருவரும் நினைவிற்கொள்ள வேண்டியது பரிசுத்த ஆவியானவரின் வல்லமையான அபிஷேகத்தில் **வளர முடியும், வளர வேண்டும் என்பதே.** இதில் உங்களுக்கும் (போதகராகவும், தலைவராகவும்) - **மேலும்** நீங்கள் நடத்தும் மக்களுக்கும் ஆனது.

தேவனுடைய மக்களைக் குறித்து பிரதான மேய்ப்பனுக்குக் கீழ்ப்பட்ட மேய்ப்பனாக (1 பேதுரு 5:2-4) உங்களுக்குப் பொறுப்புகள் உண்டு. இந்த பொறுப்புகளில், நீங்கள் நடத்தும் ஒவ்வொரு நபரும் தேவனுடைய வார்த்தையைப் புரிந்து கொள்வதில் வளருவதும் ஊழியத்தைத் திறமையுடன் செய்வதற்குப் பரிசுத்த ஆவியானவரில் வளருவதும் அடங்கும். இதுவே கிறிஸ்துவினுடைய சரீரம் ஆரோக்கியமாய் வேதாகமத்தின் அடிப்படையில் வளருவதற்கேற்ற முறையாகும் (பார்க்க. எபே. 4:11-16; விசேஷமாக வசனம் 12).

அபிஷேகத்தில் வளருவதற்கான வழிமுறைகள் ஒருவேளை நீங்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக இருக்கலாம். அபிஷேகத்தில் வளருவதில் முக்கியமான கொள்கைகளை இப்போது மறுஆய்வு செய்வோம்.

- பரிசுத்தம்
- தேவன் பேரில் பலவீனம்
- தாழ்மை
- அதிகாரத்திற்குக் கீழ்ப்படிதல்
- சோதிக்கப்படும் போது சரியான முறையில் பிரதி செயல் செய்தல்
- தேவனுக்கு மட்டுமே உள்ளத்தில் இடங்கொடுத்தல்
- தேவனோடு அனுதின உறவிலும், நடப்பதிலும் வளருதல்

இந்த எல்லா குறிப்புகளுக்கும் நமக்கு எடுத்துக்காட்டு இயேசு மட்டுமே. இந்த உலகத்தில் வாழ்ந்தவர்களில் மிகுந்த அபிஷேகம் பெற்றவர் அவர், நம்மை அழைக்கிறார். நாம் அப்படிச் செய்யும் பொழுது, தேவன் நம்மை அழைத்திருக்கும் அந்தப் பெரிய அழைப்பை நிறைவேற்றுவதற்கான சகலத்தையும் நிறைவாய்ப்பெறுவோம்!

## C. அவருடைய அபிஷேகத்தைப் பெறுதல்

கியூபாவில் நடைபெற்ற போதகர்களின் மாநாட்டில் ஊழியக்காரர் குழுவிலொருவனாய்ப் பங்கேற்றேன். மாநாட்டின் இறுதிக் கட்டத்தில் பங்கேற்றவர்கள் சாட்சி பகருவதற்காக சமயம் கொடுக்கப்பட்டது. அப்போது கண்பார்வையற்ற, வயது முதிர்ந்த, மெலிந்த பெரியவர் ஒருவர் பலரது உதவியுடன் மெதுவாக மேடைக்கு வந்தார்.

இந்த மூத்த சகோதரன் தன் வாழ்நாள் முழுவதும் தாம் தேவனுக்குச் செய்த ஊழியத்தைப் பற்றிய சாட்சியைப் பகிர்ந்து கொண்டார். அவரது குடும்ப அங்கத்தினரும் தேவனுக்கு ஊழியஞ் செய்கிறவர்கள். தாம் அநேக சபைகளைத் தம் ஊழியக் காலத்தில் ஸ்தாபித்ததாகவும் கடந்த ஒரு வருடத்தில் ஆறு சபைகளை ஏற்படுத்தியதாகவும் அந்தக் கூட்டத்தில் கூறினார்!

அவர் தம் கண் பார்வையை இழந்ததையும் அது அவருக்கு எத்தனைப் பெரிய சவாலாக இருக்கிறதென்றும், ஒவ்வொரு நாளும் வேதம் வாசிக்க யாராவது தமக்கு உதவிசெய்ய வேண்டி இருப்பதைப் பற்றியும் கூறினார்.

பிறகு அவர் தலையைக் குனிந்து மௌனமாய் இருந்தார். அந்த அரங்கத்திலிருந்த 1,000க்கும் மேற்பட்ட போதகர்கள் அமைதி ஆனார்கள். திடீரென்று அந்த மனிதன் தன் கரங்கள் இரண்டையும் வெற்றிக்கு அறிகுறியாக உயர்த்தி, “என் பார்வையை இழந்து விட்டேன், ஆனால் தீயை அல்ல!” ("I have lost my right, but not my fire") என்றார். கூடியிருந்த அனைவரும் குதித்தெழுந்து உற்சாகத்துடன் தேவனைத் தொழுது கொண்டார்கள்.

ஒரு 76 வயது நிரம்பிய மனிதனை “ஆர்வமாகியத் தீயில்” - இன்னும் பிரசங்கித்துக் கொண்டும், கற்பித்துக் கொண்டும், சுவிசேஷத்தை அறிவித்துக் கொண்டும், சபைகளை ஏற்படுத்திக் கொண்டும் வைத்திருப்பது எது? பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகமும், தேவனால், அவருடைய சித்தத்தை, அவர் மகிமைக்காக மட்டுமே செய்வதற்காகத் தன்னை அவர் முற்றிலும் ஒப்புக் கொடுத்ததுமேயாகும்.



### மண்பாண்டங்களில் பொக்கிஷம்

தேவன் என்னைப் பரலோகத்திற்கு அழைக்கும் வரை என் வாழ் நாளின் ஒவ்வொரு நாளும் அவர் என்னைப் பயன்படுத்துவார் என்பது என்னுடைய நம்பிக்கை. ஊழியம் செய்யும் பொழுது ஒவ்வொரு படியிலும் வெகு சீக்கிரத்தில் சரீர, மன, உணர்வு, ஆவியின் பிரகாரமாக களைப்பும் சோர்வும் அடைவதை உணர முடியும்.

களைப்பும் சோர்வும் அடைவது ஆபத்தானதல்ல, ஏனெனில் நாம் நம்முடைய வரங்கள், வல்லமை, தேவனிடத்திலிருந்து பெறும் அபிஷேகம் இவைகளைக் குறித்து தன்னயமாக இருத்தலே மோசமானது. மட்டுமல்ல, நம் ஊழியத்தில் நாம் அசதியாகவோ, மனம் போனபடியோ இருக்கக் கூடாது (லூக். 9:62; பிரச. 9:10; கொலோ. 3:23). ஆகவே கர்த்தருக்கடுத்தவற்றில் முழு முயற்சியோடு செயல்பட வேண்டும்.

எனினும், நாம் முற்றிலும் தொய்ந்து போய் அல்லது ‘‘அவிந்துபோய்’’ விட்டால் அது மகா பெரிய இக்கட்டுகளை உண்டாக்கக் கூடும். நாம் அநித்தியமானவர்கள், பெலனற்றவர்கள் என்று தேவன் அறிந்திருக்கிறார். ஆதலால் தேவன் தம்முடைய பலம், ஞானம், கிருபை, காரியசித்தி, வல்லமை இவற்றை அவரது சித்தத்தை நிறைவேற்ற நமக்குத் தருகிறார். நமக்கு இவை அத்தியாவசியத் தேவையுமாகும். ஏனென்றால், அவரின்றி நம்மால் ஒன்று செய்ய இயலாது (யோவான் 15:5).

*“இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டான ஒன்று என்றிராமல் தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்”* (2 கொரி 4:7) என்று பவுல் இதன் தேவையைப் புரிந்து கொண்டு எழுதுகிறார். தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கான ஆற்றல் அல்லது உந்துதல் மனிதனுடைய இயல்பான ஆற்றலுக்கும் செயலுக்கும் உட்பட்டதல்ல என்பதை அனுபவமிக்கவரும், அறிவில் சிறந்தவரும், கிறிஸ்துவின் அப்போஸ்தலனுமான பவுல் அறிந்திருந்தார். எனினும் நமக்குத் தேவையான யாவற்றையும் தருகிற நம் வாழ்க்கையாகிய மட்பாண்டங்களில் உள்ள இந்த பொக்கிஷமானது பரிசுத்தஆவியானவரது அபிஷேகமே! (வாசிக்க 2 கொரிந்தியர் 3:1-4:18.)

## நமது தேவையை தேவன் சந்திக்கிறார்

ஊழியத்தின் தேவைகள் (அல்லது தற்கால உலகில் கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வது) நம்மில் தேவனுடைய வல்லமையையும் ஆற்றலையும் மட்டுப்படுத்தக் கூடும். தேவ ஆவியினால் ஊழியத்தைப் பெற்றுக் கொண்ட இயேசுவுக்கே ஆவியில் புதுப்பிக்கப்பட வேண்டிய அவசியம் இருந்தது.

சுவிசேஷத்தை ஆராயும்பொழுது இயேசு அடிக்கடி தனிமையான இடங்களுக்கு ஜெபிப்பதற்குப் போனார் என்பது பல சந்தர்ப்பங்களில் காண்கிறோம் (லூக். 4:42; 5:16; 6:12). இந்த ஜெப வேளைகளுக்குப் பிறகு, இயேசு வல்லமையாகக் கிரியை செய்தார். தமது ஊழியத்தில் முக்கியமான தீர்மானங்கள் எடுத்தார். பாடுகள் அனுபவிக்க பெலப்படுத்தப்பட்டார்.

**இயேசுவின் முன்மாதிரியினால் நமக்கு வெளிப்படுத்தப்படுவது என்ன?** இந்த கேள்விக்குப் பதிலை இரண்டு வேத பகுதிகளில் பார்ப்போம்.

**1. ஆவியினால் நிறைந்து!**

*"துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிகொள்ளாமல், ஆவியினால் நிறைந்து;"*(எபே. 5:18)

மூல கிரேக்க மொழியில் *"ஆவியினால் நிறைந்து"* என்ற சொற்றொடர் மூன்று குறிப்பிடத்தக்க கொள்கைகளை வெளிப் படுத்துகிறது.

**a. இச்சொற்றொடர் நிகழ்காலத்தில் உள்ளதால்** ஆவியால் நிரப்பப்படுதல் இப்பொழுதும், **தொடர்ந்தும்** நடைபெற்றுக் கொண்டேயிருக்கிறது. *"ஆவியினால் நிறைந்து"* என்றால் இடைவிடாமல் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுதல் என்றும் சொல்லலாம். இது வியக்கத்தக்க செய்தி! தொடர்ந்து நிரப்பப்படுவது என்றால் ஒரேயடியாக அல்ல. **மீண்டும், மீண்டும்** நிரப்பப்படுவதாகும்!

நாம் இரட்சிக்கப்படும்போது ஆவியானவரைப் பெற்றுக்கொள்கி றோம் (ரோமர் 8:15, 16; எபே. 1:13-15).

இது எல்லா விசுவாசிகளும் பொதுவாக பெறும் அபிஷேகமாகும் (1 யோவா 2:20, 27). நாம் அதிகாரப்பூர்வமாய் ஊழியத்திற்கு



அழைக்கப்படும்பொழுது நம் ஊழியம் கனி தருவதற்கு தேவன் கூடுதலான அபிஷேகத்தைத் தருகிறார்.

தேவன் நமக்குத் தம்மையும், தமது வல்லமை, வரங்களையும் தருகிறார். இவற்றை ஊழியத்தில் நாம் உபயோகித்து விடுவதினால் இவைகள் நம்மிடமிருந்து வெளியேற்றப்பட்டு ஆவியில் தாழ்ச்சி அடைகிறோம். ஆகவே தேவன் மீண்டும் மீண்டும் நாம் ஆவியினால் நிரப்பப்படுவதற்காக ஏதுக்களை உண்டாக்கியுள்ளார். ஆதித்திருச்ச பையின் பணிகளில் இதைக் காண்கிறோம். அப்போஸ்தலரது நடபடிகள் நமக்கு இத்தகைய சம்பவங்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளது:

- பேதுரு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும் விசுவாசத்தைக் காக்கவும் ஆவியினால் நிறைக்கப்பட்டார் (அப். 4:8).
- சீஷர்கள், உபத்திரவம் இருந்தபோதும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கத் தைரியத்தையும், வல்லமையையும் பெற்றுக் கொண்டார்கள் (அப். 4:31).
- பவுல் ஏற்கெனவே பரிசுத்த ஆவியால் நிறைக்கப்பட்டிருந்தும் (அப். 9:17), அந்தகாரசக்திகளை எதிர்க்கும்போது மறுபடியும் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டார் (அப். 13:9).
- மதத்தலைவர்களை எதிர்த்து நின்றதைத் தொடர்ந்து சீஷர்கள் மறுபடியும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார்கள் (அப். 13:42-52).
- ஸ்தேவான் பரிசுத்த ஆவியினால் நிறைந்திருந்தார்; மறுபடியும் நிரப்பப்பட்டார் (அப். 13:52).
- பர்னபாவுங்கூட மேலும், மேலும் நிரப்பப்பட்டார் (அப். 13:52).

மீண்டும் மீண்டும் பரிசுத்த ஆவியினால் நிறைக்கப்பட்டதால், சீஷர்களுடைய பிரசங்கங்களும் போதனைகளும் வல்லமை பெற்றன. சுவிசேஷம் தைரியமாய் சொல்லப்பட்டதை அடுத்து அடையாளங்களும் அற்புதங்களும் தொடர்ந்தன (அப். 5:12).

சிலர் ஆதி அப்போஸ்தலர்களால் மாத்திரமே அத்தகைய அற்புதங்கள் நடைபெற்றன என்று நினைக்கலாம். ஆனால் அப்போஸ்தல நடபடிகள், யார் யாரை தேவன் தெரிந்து கொண்டாரோ அவர்கள் மூலமாய் பரிசுத்த ஆவியானவரால், அடையாளங்களும் அற்புதங்களும் நடந்தன என்று தெளிவாக்குகிறது.

**கொடுப்பதன்மூலம் அதிகரித்தல்**

தொடர்ந்து பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுதல் கூடுதலான நன்மையாகும். நாம் இலவசமாய்ப் பெற்று இலவசமாய்க் கொடுக்கும்பொழுது (மத். 10:8). **மிகுந்த** அபிஷேகத்தைப் பெறும் **திராணியை** அடைகிறோம்! தேவனுடைய இராஜ்யத்தின் இந்தக் கோட்பாடானது, பண விவகாரம், நேரம், சேவை இன்னும் மற்ற காரியங்களிலும் உண்மையாயிருக்கிறது. - அதிகம் கொடுத்தால் அதிகம் பெறுவோம்.

பிறருக்கு நாம் பரிசுத்த ஆவியானவருடைய ஜீவன் வல்லமை இவற்றை ஒவ்வொருமுறை கொடுக்கும்பொழுது நாம் *வளர்ந்து* கொண்டேயிருக்கிறோம். இதனால் நாம் அதிகம் பெறமுடியும் அதிகம் கொடுக்கவும் முடியும்.

கொடுத்தலும் பெறுதலுமான இந்த ஆசீர்வாதம் எல்லாருக்குமே நன்மையைத் தருகிறது. தேவனுடைய சித்தம் நிறைவேறுவதால் அவர் துதியையும் மகிமையையும் பெறுகிறார். கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபையின் அங்கத்தினர் உறுதியான சீஷர்களாய் உருவாகு கிறார்கள் (எபே. 6:12-16). வல்லமையும் உண்மையுமுள்ள தேவ ஊழியக்காரர்களாக அழைக்கப்பட்ட நீங்கள், ஆவியானவரால் மற்றவர்களுக்கு கொடுக்கிறவர்களாகவும் அதிகம் பெற்றுக் கொள்ளுகிறவர்களாகவும் ஆசீர்வதிக்கப்படுகிறீர்கள்!

**b. ‘ஆவியினால் நிறைந்து” (எபே. 5:18) என்னும் சொற்றொடர்** *ஒரு கட்டளை, ஆலோசனை* **அல்ல.** நமக்கு எவ்வளவு வல்லமையும் திறமையும் வேண்டும் என்பதை தேவன் நன்றாக அறிந்திருக்கிறார். வெற்றியுடன் மேற்கொள்ளும் அன்றாட வாழ்க்கைக்கு ஆவியானவர் உண்மையாகவே தேவை. மேலும், கனிதரும் பலனுள்ள ஊழியத்தை நிறைவேற்ற ஆவியானவரின் பொங்கி வழியும் பிரசன்னம் நமக்குத் தேவையாகும்.

தேவன் ஒரு கட்டளையைக் கொடுக்கும் பொழுது அது எப்பொழுதும்:

- நீதியும் நியாயமுமானது
- அவருடைய மகிமைக்கு ஏற்றதாயிருக்கும்
- நமக்கு நன்மை தருவதாயிருக்கும்
- நிறைவேற்ற போதுமானவராயிருப்பார்!



தேவன் பரிசுத்த ஆவியானவரை அளவில்லாமல் நாம் பெற்றுக்கொள்ள சித்தம் கொண்டிருக்கிறார். நாம் இடைவிடாமல் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட வேண்டுமென்பது அவருடைய கட்டளையும் தெய்வீக சித்தமுமாகும். அல்லேலூயா!

இந்தக் கட்டளையை நாம் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வினாடியும் துரிதமாய்க் கீழ்ப்படிய வேண்டிய ஆவலோடு செல்ல வேண்டும்.

**c. ‘‘ஆவியினால் நிறைந்து’’ என்றும் இச்சொற்றொடர்** ***செயல்பாட்டு வினையில் உள்ளது.*** அப்படியென்றால் தொடர்ச்சியாகப் புதிதாகப் பரிசுத்த ஆவியை நமது சுயமுயற்சியால் பெற்றுக் கொள்ள முடியாது. நாம் அவரை சம்பாதிக்கவோ, ஏதோ பிரயாசப்பட்டு தகுதியை அடைந்து அதன் மூலம் அவரைப் பெற்றுக் கொள்ளவோ முடியாது. அவர் தேவனால் நமக்குக் கொடுக்கப்படும் ஈவு. நாம் நம்முடைய இதயத்தைத் திறந்து அவர் கொடுக்க சித்தமானதைப் பெற்றுக் கொள்ள மட்டுமே இயலும்.

ஆனாலும் அவரைப் பெற்றுக் கொள்ள நாம் ஆயத்தமாயிருக்க வேண்டும்! இதில் தான், பரிசுத்த ஆவியினால் நிறைக்கப்பட்ட வாழ்க்கை வாழ்வதற்கும், பரிசுத்த ஆவியின் நிறைவினால் செய்யப்படும் ஊழியத்திற்குமுரிய அடிப்படை உள்ளது.

ஆவியின் வரங்கள், ஞானம், வல்லமை, பரிசுத்த ஆவியின் நிறைவு ஆகியவற்றை எப்போதுமே பெற்றவர்களாய் ஏன் சிலர் காணப்படுகிறார்கள் என்றும் சிலர் ஏன் அப்படியில்லை என்றும் நீங்கள் வியந்தது உண்டோ?

தேவனுடைய பரிசுத்த ஆவியினால் என்றுமே நிறைக்கப்பட ஆயத்தமாயிருப்பதற்கு நீங்கள் உங்களை **ஒப்புக்கொடுக்க** வேண்டும். அதாவது, உங்களுடைய சித்தம், திட்டம், பெலவீனம், பெலன் இவற்றையும் உங்களை வாழ்க்கையை முற்றிலுமாகவும் தேவனிடம் ஒப்படைக்க வேண்டும். நீங்கள் இப்படிச் செய்யும் போது உங்களை முற்றிலுமாகப் பரிசுத்த ஆவியானவரின் விருப்பத்துக்கு ஒப்புக்கொடுப்பீர்கள்.

ஆவியானவருக்கு நம் வாழ்க்கையை ஒப்புக்கொடுக்கும் போது அவர் கொடுக்க விரும்புவதை உடனடியாகவும் தாராளமாயும் நமது ஆவிக்குரிய நிலைமையில் நாம் பெற்றுக் கொள்ளமுடியும்.

ஆவியானவருக்கு ஒப்புக்கொடுத்தல் என்பதும் ஆவியானவரைப் பெற்றிருக்கிறோம் என்பதும் ஒன்றல்ல என்பதைக் கவனிக்கவும். பிசாசுகள் மாத்திரமே ஒரு மனிதனுடைய சித்தத்தையும், மனிதத்துவத்தையும் தரித்துக்கொள்ள முயற்சிக்கின்றன (லூக். 8:29-38).

நாம் நாமாகவே சிந்திக்கத் தெரியாத, மதக்கொள்கைகளால் ஆட்டிவைக்கப்படும் "பொம்மைகள்" அல்ல. மாறாக நாம், அன்பு, நம்பிக்கை, ஒத்துழைப்பு என்னும் உறவுகளை நம்முள் வசிக்கும் பரிசுத்த ஆவியானவரின் சந்நிதியில் அனுபவிக்க அழைக்கப்பட்டிருக்கிறோம். அவர் நம்மில் கிரியை செய்ய, நம்மை மறுரூபப்படுத்த, நம்மை பரிசுத்தமாக்க நமக்குள் வசிக்கிறார். தேவனுக்கு ஊழியம் செய்யும் பாத்திரங்களாய் நம் மூலமாய்க் கிரியை செய்கிறார். இவ்வாறு நாம் நம் வாழ்க்கையை தேவனுக்கும் அவர் பணிக்கும் அளிக்கும் பொழுது நாம் புதியதும், இடையறாததுமான நிரப்புதலைப் பெறும் நிலையை அடைகிறோம்.

**போதகரிடமிருநது போதகருக்கு:** பரலோகப் பிதாவின் பிள்ளைகளாக நாம் பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்பட வேண்டும் (ரோமர் 8:14). ''நடத்தப்படுகிறார்களோ'' என்னும் சொல் **நிகழ்காலத்திலுள்ளது** இதன் பொருள் நாம் இடையறாது நடத்தப்படுகிறோம் என்பதாகும்."

பரிசுத்த ஆவியானவரின் *இடையறாத* நடத்துதல் என்பது வேதத்திலுள்ள கட்டளைகள், கொள்கைகளைப் பற்றிய அறிவையும் அவைகளுக்குக் கீழ்ப்படிவதைப் பற்றியும் மட்டும் அறிவதல்ல.. நாம் அனுதினமும் எவ்வாறு வாழவேண்டும் என தேவன் தம் வார்த்தையின் மூலம் ஏற்கெனவே வெளிப்படுத்தியுள்ளதால் ஆவியானவரால் நடத்தப்படுவதற்கு இதுதான் முதற்படி.

ஆனால் *இடைவிடாமல்* பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்படுவது அது எந்த நேரத்திலும் வரக்கூடிய அவரது உந்துதலை நாம் உணரக்கூடிய தன்மையை நமக்குள் ஏற்படுத்துகிறது. பரிசுத்த ஆவியானவர் உன் சொந்த வாழ்க்கையைப் பற்றியும், மற்றவர்களுடைய தேவைகள் இன்னும் பல காரியங்களையும் உனக்கு உணர்த்தலாம். இந்த ஜீவியத்தில் உனக்கு வழிகாட்ட எப்பொழுதும் உன்னுடன் இருக்கிறார். மற்றவர்களுடைய



தேவைகளுக்கு ஏற்ப, பரிசுத்த ஆவியானவரோடு சேர்ந்து ஊழியத்தை நிறைவேற்ற உதவி செய்கிறார்.

பரிசுத்த ஆவியின் **தூண்டுதலையிருக்குமானால்** அது தேவனுடைய வசனத்தின்படி , நல்லொழுக்கத்திற்கும். அவரது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதற்கும் உங்களை நடத்தும். ஒருவேளை. ஒரு காரியத்தை எப்பொழுதும் போல செய்வதிலிருந்து, ஒரு பெரிய மாற்றத்தைக் கொண்டுவரும்படி பரிசுத்த ஆவியானவர் நடத்துகிறார் என்று நினைத்தீர்களானால். வேதத்திலுள்ள புத்திமதிகளைப் பின்பற்றவும், ஆவியில் தேறினவர்களது ஆலோசனையைக் கேட்பதும் ஞானமாகும் (நீதி 11:14; 24:6). அவர்கள் உணர்வது பரிசுத்த ஆவியானவர் தானா இல்லையா என்று உறுதிப்படுத்தும். இது தவறோ, ஏமாற்றமோ அடையாதபடிக் காத்துக் கொள்ளும்.

## தொகுப்பு

''ஆவியினால் நிறைந்து'' (எபே. 5:18) என்ற வேதத்திலுள்ள சொற்றொடரைப் பற்றி மூன்று கருத்துக்களைக் கற்றுக் கொண்டோம்.

- ஒரே தரம் ஆவியினால் நிரப்பப்படும் அனுபவத்திற்கு அப்பாற்பட்டு **தொடர்ச்சியான** நிரப்புதலை நாம் அனுபவிக்க முடியும்.
- தேவனே கட்டளையிட்டபடி நாம் ஆவியானவரால் இடையறாது நிரப்பப்பட **வேண்டும்.**
- நாம் இந்த இடையறாத நிறைதலையும் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தையும், தேவன் மூலமாய் மாத்திரமே **பெற்றுக்கொள்ள** முடியும். அது தேவனுடைய ஈவு. அதைப் பெற்றுக் கொள்ள நமது வாழ்க்கையை அவருக்கு ஒப்புக் கொடுக்க வேண்டும்.

### 2. தேவனைத் தேடுங்கள்!

இப்பொழுது ஒருவேளை நீங்கள் பரிசுத்த ஆவியானவரின் புத்தம்புதிதான அபிஷேகத்தைப் பெற என்ன செய்யவேண்டும் என்று கேட்கலாம். ''அதற்கென்று ஒரு பிரத்தியேக இடத்திற்கு செல்ல வேண்டுமா? ஜெபிக்கும்படி யாரையாவது தேடிப் போக வேண்டுமா? தனிப்பட்ட கூட்டங்களுக்குச் செல்ல வேண்டுமா?"

கீழ்க்கண்ட வேதபகுதி எவ்வாறு. எப்பொழுது நாம் பரிசுத்த

ஆவியானவரின் மிகுந்த அபிஷேகத்தைப்பெற இயலும் என்பதை வெளிப்படுத்துகிறது. இயேசு: *''மேலும் நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது, கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான். தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்."*

*உங்களில் தகப்பனாயிருக்கிற ஒருவனிடத்தில் மகன் அப்பங்கேட்டால், அவனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக்கேட்டால் மீனுக்குப் பதிலாய்ப் பாம்பைக் கொடுப்பானா? அல்லது முட்டையைக் கேட்டால் அவனுக்குத் தேளைக்கொடுப்பானா? பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா''* (லூக்கா 11:9-13) என்று சொன்னார்".

இந்த வேதபகுதியில் எவ்வாறு புதிதாக மீண்டும், மீண்டும் ஆவியானவரால் நிரப்பப்பட முடியும் என்பதற்கு மிகவும் எளிய வழியைக் காட்டுகிறார்.

a. **நாம் கேட்க, தேட, தட்ட வேண்டும்.** தேவன் பரிசுத்த ஆவியானவரைத் தருபவர் (வச. 13). தேவனைப் பின்பற்றுவதில் இந்த வசனத்தில் காணும் எச்சரிக்கை யாதெனில் கேள், தேடு, தட்டு என்பவை நிகழ்காலத்தில், மூல கிரேக்க மொழியின்படி கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த சொல்லின் அமைப்பு, செய்து கொண்டேயிரு என்ற பொருள்படும்படி எழுதப்பட்டுள்ளது. அன்பின் ஆண்டவரிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் வரை நாம் கேட்டுக்கொண்டே தேடிக்கொண்டே, தட்டிக்கொண்டே இருக்க வேண்டும். *"கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான். தேடுகிறவன் கண்டடைகிறான். தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்''* (வச. 10) என்று அவர் வாக்களித்திருக்கிறார். அல்லேலூயா! தேவன் நம்மீது ஆவியானவரை ஊற்றுவதில் பூரிப்படைகிறார். ஆனால் நாம் அவரைக் கேட்க வேண்டும்.

இயேசு பரிசுத்த ஆவியானவரைத் தேடுவதற்கு மூன்று உதாரணங்களைப் பயன்படுத்தியுள்ளார் - கேட்பது, தேடுவது, தட்டுவது.



இதன் மூலம் அவர் மூன்று வேறுபட்ட காரியங்களை வெளிப்படு த்த**வில்லை**. ஆனால் அவர் கர்த்தரை உத்தமமாகவும், உண்மையோடும் பின்பற்ற புத்தி கூறுகிறார்.

இங்கு *இரந்து கெஞ்சுவதைக் குறித்தோ* அல்லது ஆவியானவரைப் பெற்றுக்கொள்வதற்கு *உங்களுடைய தராதரத்தை நிரூபிப்பதைக்* குறித்தோ எதுவும் கூறப்படவில்லை என்பதை கவனித்திருப்பீர்கள். இந்த முயற்சிகள் தேவையற்றவை. உண்மையில் இத்தகைய மனப்பான்மைகள் தேவனுக்குப் பிரியமான பிள்ளைகளாக நாம் விசுவாசத்தின் மூலம் பெற்றுக் கொள்ள வேண்டிய தகுதியைத் தடுத்து நிறுத்திவிடும்.

b. **பரிசுத்த ஆவியானவர் குமாரருக்கும் குமாரத்திகளுக்கும்.** ஆவியினால் மறுபடியும் பிறந்த தேவனுடைய பிள்ளைகள் தங்கள் பரம தகப்பன் வாக்குப்பண்ணின ஆசீர்வாதங்களுக்காக இரக்க வேண்டியதில்லை (யோவான் 1:12, 13:3; 5:8).

இயேசு இந்த மேன்மையான சத்தியத்தை, உலகப்பிரகாரமான பெற்றோராகிய நாம் எப்படி நாம் நம்முடைய பிள்ளைகளின் தேவைகளை சந்திக்கிறோமோ (வச.11, 12), அதற்கு ஒப்பிட்டு விளக்குகிறார். மேலும் இயேசு, பெற்றோராகிய நமது கடமையைப் பரமதகப்பனாகிய தேவனுடையதோடு ஒப்பிட்டுக் காட்டுகிறார் (வச.13).

அதன் பின் இயேசு, நமது குறைவுள்ளதும் பாவம் நிறைந்ததுமான தன்மைக்கும், தேவனுடைய பூரண சம்பூரண குணத்திற்கும் அவரது அன்பிற்கும் உள்ள வேறுபாட்டைக் காட்டுகிறார்.. பொல்லாதவர்களான நாம் நம் பிள்ளைகளுக்கு நலமான ஈவுகளை மாத்திரமே கொடுக்கும்போது, நமது பரிபூரணமும், பரிசுத்தமுமான பரம்பிதாவும் அப்படியே செய்வார் என்று ஏன் நினைக்கக் கூடாது? (தேவன் நம்மைக் குறித்து நினைப்பதைப் பற்றி மேலும் அறிந்துகொள்ள ரோமர் 5:6-10; 8:31-39; 1 யோவான் 3:1; 4:10,12-19 வாசியுங்கள்).

கொடுக்கத் தயங்குகிற தேவனிடத்தில் பிச்சைக்காரரைப் போல நாம் பிச்சைக் கேட்பவர்கள் அல்ல. நாம் தேவாதி தேவனின் **குமாரரும், குமாரத்திகளும்** ஆவோம். அவர் நம்மைத் தமது பரிசுத்த ஆவியினால் நிறைக்க வாஞ்சையாயிருக்கிறார்.

நாம் நம்மை முற்றிலும் அவருக்கு அர்ப்பணித்து, தாழ்மையோடு கேட்க வேண்டும். நாம் குமாரரும், குமாரத்திகளும், *"ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங்கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்."* (எபி. 416; மேலும் எபேசியர் 3:12; எபிரெயர் 10:19-22).

c. **நாம் ஆவியானவரைப் பெறாதபடி தடைசெய்வது எது?** இடையறாது பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்வதற்குத் தடையாக சில பிரச்சனைகள் இருக்கின்றன.

**1) அது நம்மில் காணப்படும் பாவம் அல்லது உலகத்தோடு ஒத்து வாழும் நம் வாழ்க்கை ஆகும்** (ரோமர் 12:14; 1 கொரி, 5:6,7). இந்த வாழ்க்கையில் நாம் பாவமில்லாத பூரணராயிருக்க முடியாது என்று வேதம் போதிக்கிறது (1 யோவான் 1;8). நாம் எல்லாருமே பாவஞ்செய்கிறோம். அப்பொழுது நாம் சீக்கிரமாக மனம் வருந்தி தேவனுடைய மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

ஆயினும், நாம் உலகம், மாம்சம், பிசாசு இவைகளோடு ஒத்துப் போகக்கூடாது. வேதம் இத்தகைய நடத்துதலை பாவம் என்று சொல்லுகிறது (கலா. 5:21). அப்படியானால், நாம் திரும்பத் திரும்ப பாவஞ்செய்யும் பழக்கமுடையவர்கள் ஆவோம்.

பாவத்திலே போய்க்கொண்டிருந்தால் நம் எஜமான் உபயோகிப் பதற்கு உதவாத பாத்திரமாக நிராகரிக்கப்படுவோம் (1 கொரி. 9:24-27; 2 தீமோ. 19-21). நமது தேவன் பரிசுத்த தேவன். அவரது ஆவியின் வல்லமையால், பரிசுத்தத்திற்கென்று அழைக்கிறார் (1 பேதுரு 1:13-19).

ஆவியானவர் பரிசுத்தமுள்ளவர் (ரோமர் 1:14) ஆதலால், அவர் பரிசுத்தமான கருவிகள் மூலமாக செயல்பட வாஞ்சிக்கிறார்.

**2) அகங்காரம், தற்பெருமை ஆகிய தன்னை உயர்த்திக் கொள்ளக்கூடிய நோக்கம்** (மத். 7:21-23; பிலி. 2:3,4; 1 தீமோ. 6:3-5). நாம் ஏற்கெனவே பெருமை என்னும் பாவம், அதனால் விளையும் ஆபத்துக்களைக் குறித்துப் படித்தோம். நாம் ஆலயத் தலைவர்களாக இருக்கும்போது, கிறிஸ்துவைப் போல சாந்தமும் மனத்தாழ்மை யுள்ளவர்களாய் இருக்க வேண்டும் (மத் 11:29).

தவறான நோக்கங்களோடு செயல்படுகிறவர்களை தேவன் அபிஷேகிக்கமாட்டார் (யாக். 4:6). பரிசுத்த ஆவியானவர் நம் இருதயங்களை ஆராய அவருக்கு அனுமதி அளிக்க வேண்டும் (நீதி



16:2). நம் சொந்த மேன்மையைத் தேடும் ஆசையினின்று சுத்திகரிக்கப்பட வேண்டும். நீங்கள் வாசித்துத் தியானிக்க சில வேதவசனங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. 2 நாளாகமம் 16:9; நீதிமொழிகள் 13:10; 16:5-18; மத்தேயு 23:8-14; கலாத்தியர் 5:20; பிலிப்பியர் 1:15,16, 1 தீமோத்தேயு 3:6; யாக்கோபு 3:14-4:4.

**3) முழு வாழ்க்கையையும் முற்றிலுமாய் அர்ப்பணியாமலிருத்தல்** (ரோமர் 12:1, 22; கலா . 2:20). நான் ஏற்கெனவே உங்கள் வாழ்க்கையை முற்றிலுமாக ஒப்புக்கொடுப்பதின் முக்கியத்துவத்தைப் பற்றி எழுதியிருக்கிறேன். ஒப்புக்கொடுக்கும் ஊழியக்காரனுக்கு, அவர் செய்யும் **சேவையில்** வல்லமை விளங்குவதற்காக பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் அளிக்கப்படுகிறது. தேவனுக்கும், மற்றவர்களுக்கும் சேவை செய்வதைத் தவிர்த்து வேறு காரணத்திற்காக அவரது அபிஷேகத்தை இச்சித்தோமானால் நம் வாழ்வில் அவரது அபிஷேகத்தை எதிர்பார்க்க முடியாது.

அர்ப்பணிக்கப்பட்ட நமது ஊழியம் தேவனால் நடத்தப்பட வேண்டும். ஏனெனில், திருச்சபையாகிய கிறிஸ்துவின் சரீரத்தில் எவ்வளவு சிறப்பாக நம்மைப் பயன்படுத்த முடியும் என்று அவருக்குத் தெரியும். நம்முடைய இருதயம் அவர் எதைக் கேட்டாலும் அதை செய்வதற்கு வாஞ்சையாயிருக்க வேண்டும்.

தேவனுடைய சித்தத்தை அறியவும், அவரிடமிருந்து வல்லமையைப் பெற்றுக்கொள்ளவும் முழுமையான அர்ப்பணிப்பு தேவை. அவருக்கு கீழ்ப்படிவதைத் தெரிந்து கொள்ள வேண்டும். அப்பொழுது உண்மையான கனிதரும் ஊழியத்தைச் செய்ய முடியும்.

**4) பலவீனமான விசுவாசம்** (எபி. 11:6; யாக். 1:6). *விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்"* (ரோமர் 10:7). தேவன் நமக்கென வேதத்தில் அருளிச் செய்தவைகளிலி ருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டும். இல்லாவிடில் நமது விசுவாசம் பலவீனமாயிருக்கும்.

இந்தப் பாடங்கள் மூலம் நீங்கள் பரிசுத்த ஆவியானவருடைய வல்லமை உங்களுக்கு இன்றே கிடைக்கும் என்று அறிந்து கொண்டீர்கள். அது பாலைவனத்தில் விழும் ஒரு துளித் தண்ணீராக அல்ல, பரிசுத்த ஆவியானவர் உங்கள் மூலமாய் **நதிகளைப்** போலப் பாய்கிறார்! (யோவான் 7:37-39).

தேவன் ஒரு அன்புள்ள தகப்பன், தம்முடைய பிள்ளைகளுக்கு ஜீவனையும், வல்லமையையும் கொடுப்பதில் மகிழ்ச்சி அடைகிறார். நம் இருதயத்தின் கூப்பிடுதலுக்குப் பதில் தருவார் என்று நம்பி *விசுவாசத்துடன் கேட்க* வேண்டும் (சங். 138:3).




உங்களுடைய விசுவாசம் பலவீனமானது அல்லது சிறியது என்று நீங்கள் கவலைப்பட்டால், இயேசு விசாவாசத்தைப் பற்றி சொன்னதை நினைத்துக் கொள்ளுங்கள். *"கடுகுவிதையளவு விசாவாசம் உங்களுக்கு இருந்தால் நீங்கள் இந்த மலையைப்பார்த்து இவ்விடம் விட்டு அப்புறம்போ என்று சொல்ல அது அப்புறம் போம்; உங்களால் கூடாத காரியம் ஒன்றுமிராது என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்"* (மத். 17:20b).

இயேசு நமது விசுவாசம் சிறியதாயிருந்தாலும், **அது தேவனை நோக்கி இருந்தால்** பயனுள்ளதாயிருக்கும் என்பதை வெளிப்படுத்தினார். நாம் நம்மீது விசுவாசம் வைக்காமல், தேவன் மேலும் அவரது வசனத்தின் மேலும் விசுவாசம் வைக்க வேண்டும். அவர் சொன்னதைச் செய்வார்!

**5) ஆவியில் பசியில்லாமை** (சங். 63:1,2; 84:1,2; மத். 5:6; யோவா. 6:35,48; 7:37-39). ஆவியில் பசி நிறைந்தவர்களாய்த் தேவனைத் தேடுகிறவர்களுக்கு அவர் எப்பொழுதும் பதிலளிக்கிறார்.

ஆவியின் பிரகாரம் பசி இல்லாதிருந்தால் அதற்கு அநேகக் காரணங்கள் உண்டு அவை:

- துன்பம், துக்கம், மரணம் (குடும்பத்தினரை இழக்க கொடுத்தல்) இவை ஆவியில் சோர்வை உண்டாக்கலாம்.



- மனத்தளர்ச்சி, தோல்வி அல்லது களைப்பு இவை அவநம்பிக்கையை உண்டாக்கும் அல்லது தேவனைத் தேடுவதைத்தடுக்கும்.
- கோபம், கசப்பு அல்லது பிறரை, தன்னையே, தேவனையுங்கூட மன்னியாதிருத்தல், இவை தேவனை விரும்பும் வாஞ்சையை அவித்து விடும்.
- சிற்றின்பங்கள், நம் கவனத்தைக் கவரும் உலகக் காரியங்கள், சோம்பல், தன்னிறைவு இவை தேவன் மேல் நீதியாய்க் கொள்ளும் பசிதாகத்தை தடுக்கும் அல்லது அழிக்கும்.

இவ்வுலக வாழ்க்கை கடினமானதும், மேற்கொள்ள முடியாததுமான சவால்களும் நிறைந்தது. ஆனால் நாம் அனுபவிக்கும் துக்கம், மனமடிவு, தோல்விகளைக் கடந்து செல்லக் கூடிய வழிகளை காட்டியுள்ளார். அவர் தரும் சுகமும், விடுவிக்கும் வல்லமையும், அன்பும், மன்னித்தலும், இரக்கமும், கிருபையும், முக்கியமாக அபிஷேகமும் நாம் அவரை நாடிச்சென்றால் நம்முடையதாகும்.

பவுல் அப்போஸ்தலன் ஒவ்வொரு எதிர்ப்பு, சோதனையிலும், ஒவ்வொரு சந்தோஷத்திலும், வெற்றியிலும் முழு மனதோடு தேவனைப் பின்பற்றினார். வறண்ட தரிசு நிலத்தைப் போன்ற நம் இருதயத்தை உடைப்பது என்றுமே எளிதானதல்ல. ஆனால் நம்மை உண்டாக்கினவரும், இரட்சித்தவரும், நம்மை நேசிக்கிறவருமான தேவனிடத்திற்கு ஒளிவுமறைவில்லாமல் போனால் நாம் புதுப்பிக்கப்பட்ட இருதயத்தையும், தேவன் மேல் புதிய தாகத்தையும் பெற்றுக்கொள்வோம் (எசே. 36:26,27).

**d) கர்த்தருக்கு காத்திருக்க வேண்டும்.** "கர்த்தருக்கு காத்திரு" என்று வேதாகமம் அடிக்கடி சொல்லுகிறது (சங். 25:5; 27:14; 37:7,9,34; ந;ங். 30:18; 40:31; 3:25,26; மேலும் பல).

ஆயினும், காத்திருக்கும் குணம் நம்மிடத்தில் இல்லை. நாம் பொறுமையிழந்து, பயந்து அல்லது மறந்து விடுகிறோம். இதைத் தவிர நம் நெரிசலான வாழ்க்கை, ஊழியம், தீர்மானங்கள் எடுப்பதில் நெருக்கடி போன்றவை நம்முடைய நேரத்தை சூறையாடுகின்றன.

ஆனால் வேதனை அளிக்கக்கூடிய உண்மை என்னவென்றால் *உங்களுக்கு முக்கியமாய்த் தோன்றுகிறவைகளுக்காக நேரத்தை ஒதுக்குவீர்கள்.* வருத்தத்திற்குரியது என்னவென்றால், காலங்கடந்த

பின்னரே உண்மையில் எது முக்கியமானது என்று நாம் உணர்கிறோம்.

**போதகரிடமிருந்து போதகருக்கு :** நாம் நம் வாழ்க்கை முறையை நன்கு புரிந்து கொண்டு, நாம் எதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறோம், நம் செயல்பாடுகள் என்னென்ன என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். பின்னர் இவற்றை தேவன் முன் வைத்து அவருடைய வார்த்தைகளோடு நாம் முக்கியத்துவம் கொடுப்பவை ஒத்துப்போகிறதா என்று கணிக்க வேண்டும்.

"கர்த்தருக்குக் காத்திரு" என்பதற்கு நமது பட்டியலில் உயர்ந்த இடம் கொடுக்கப்படாதிருந்தால் அதை மாற்றிக்கொள்ள வேண்டும். ஏனெனில் இதுவே அவர் நம்மிடத்தில் பேசுவதைக் கேட்பதற்கு ஒரே வழி யாகும்.

## தேவனிடம் நெருங்கி சேர்தல்

அதிகப்படியாக பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்வதற்கு, நாம் கேட்க வேண்டும். பின் கர்த்தருக்குக் காத்திருக்க வேண்டும்.

அவ்வாறு நாம் காத்திருக்கும் போது, அவரது *"மெல்லிய சத்தத்தை"* (இரா. 19:12), நாம் கேட்பதற்கு வாய்ப்புகள் அதிகம். காத்திருத்தல், பரிசுத்த ஆவியானவர் நம் உள்ளத்திலும், வாழ்க்கையிலும் கிரியை செய்து, நம்மை அவரது மிகுதியான பிரசன்னத்திற்கும், வல்லமைக்கும் ஆயத்தப்படுத்துகிறது. நாம் அவரைப் பெற்றுக்கொள்வதற்குத் தடையாயுள்ளவற்றை வெளிப்படுத்துவார்; நம் குற்றத்தை உணர்த்துவார். போதிப்பார் அல்லது வழி நடத்துவார்.

அநேகமாக பொறுமையோடு காத்திருக்கும் சமயத்தில், நம் வாழ்க்கையில் நல் மாற்றம் அடைகிறோம். நாம் மாறும்போது பரிசுத்த ஆவியானவரை நிறைவாய் பெற்றுக்கொள்கிறோம். அதனால் நம் ஊழியம் பயனுள்ளதாயும், கனிதருகிறதாயும் அமைகிறது.

கர்த்தருக்குக் காத்திருக்கையில் பெற்றுக்கொள்ளும் இன்னொரு பெரிய நன்மை என்னவென்றால், நாம் அவர் பிரசன்னத்தில் இன்னும் நெருங்கி சேர்கிறோம். அவரைப் பற்றி அதிக ஆழமாகவும் தனிப்பட்ட முறையிலும் அறிந்து கொள்ளுகிறோம்.

நீங்கள் கர்த்தருக்குக் காத்திருக்கும்போது, நீங்கள்



மௌனமாயிருக்கலாம் (சங். 46:10). அல்லது அமரிக்கையாக ஆவியின் மொழியில் ஜெபிக்கலாம் அல்லது அமைதியாக தேவனை ஆராதிக்கலாம் (1 கொரி. 14:2,15). ஆனால் காத்திருப்பதின் தலையாய நோக்கம் தேவன் *பேசுவதைக் கேட்பதும், பெற்றுக்கொள்வதும்* என்பதை மறக்கக் கூடாது. இதை அமைதியான சூழ்நிலையில் தான் செவ்வனே செய்ய முடியும்.

தேவன் மீது அதிகம் தாகம் கொண்டால் நமது ஜெபம் பெருகும். ஆனால் ஜெபத்தின் பெருக்கத்தினால் நமது வாஞ்சை, பாத்திரத் தன்மை, இவ்வற்றை நிரூபிக்க முடியாது என்றும் தேவன் உங்கள் ஜெபத்திற்கு செவி சாய்த்து, பதிலளிக்க நீங்கள் உரத்த சத்தமாய் ஜெபிக்க வேண்டியதில்லை என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

இதற்கு மாறாக, *"பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா"* (லூக். 11:13) என்ற வாக்குத்தத்தத்தை நம்புங்கள்.

## பயப்பட வேண்டாம்

சிலர் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் அதிகம் வேண்டுமென்று கர்த்தருக்குக் காத்திருந்தால் மாறாக பிசாசின் ஆவி வந்து விடும் என்று பயப்படுகிறார்கள். இது சாத்தியம் அல்ல! பில்லிசூனியம் போன்ற பேய்த்தனத்தில் ஈடுபடுகிறவர்களிடத்தில் அல்லது அவைகளை அழைக்கிறவர்களிடத்தில் மட்டும் தான் பிசாசுகள் புக முடியும். நீங்கள் தேவன் மேல் வாஞ்சை கொண்டு அவரை மட்டும் நோக்கி ஜெபிக்கிறவர்களானால் எந்தப் பிசாசும் திடீரென்று உங்களுக்குள் "நுழைய" முடியாது. இதைக் குறித்து நீங்கள் பயப்படத் தேவையில்லை!

நீங்கள் பரிசுத்த ஆவியானவரை மிகுதியாகப் பெறும் பொழுது தேவனுடைய பெலத்தினால் பெரிய அளவில் செயலாற்றுவீர்கள் என்று அந்தகாரலோகம் அறிந்திருக்கிறது. அதாவது ஆவிக்குரிய காரியங்களில் உங்களுக்கு துணிச்சலும் அதிகாரமும் இயற்கையாகவேபெருகும் என்பதாகும். ஆகவே பிசாசானவன் உங்களைச் சோதிக்கவும், தேவனோடு செலவிடும் சமயத்தில் உங்கள் ஈடுபாட்டைக் குறைக்கவும் முயற்சிப்பான்.

**நீங்கள் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்டு விலைக்கு வாங்கப்பட்ட பரிசுத்தவான்கள். சாத்தானுக்கும் அவன் சேனைகளுக்கும், நீங்கள் இடம் கொடுக்காவிட்டால் உங்கள் மீது எந்த ஒரு வல்லமையும் அவனுக்குக் கிடையாது. சிலுவையில் சாத்தான் தோற்க்கடிக்கப்பட்டான் (கொலோ. 2:14,15).**

நீங்கள் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்டு விலைக்கு வாங்கப்பட்ட பரிசுத்தவான்கள். சாத்தானுக்கும் அவன் சேனைகளுக்கும், நீங்கள் இடம் கொடுக்காவிட்டால், உங்கள் மீது எந்த ஒரு வல்லமையும் அவனுக்குக் கிடையாது என்று நினைவில் கொள்ளுங்கள். சிலுவையில் சாத்தான் தோற்க்கடிக்கப்பட்டான் (கொலோ. 2:14,15(. ஆகவே உங்கள் கவசத்தையும், பட்டயத்தையும் எடுத்துக் கொண்டு (எபே. 6:10-18 ஆவியானவர்மூலம் தேவனோடு நெருங்கி நில்லுங்கள் (யாக். 4:7,8).

**e) விசுவாசத்தின்மூலம் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ளுதல்.** நாம் தேவனுடைய வாக்குத்தத்தங்களுக்கு சுதந்திரவாதிகளான அவரது பிள்ளைகள் (ரோமர் 8:17; 2 கொரி. 1;20; கலா. 3:26). இதில் ஆவியானவரைக் குறித்த வாக்குத்தத்தமும் அடங்கும் (அப். 2:38,39). இது ஒரு முறை மட்டும் கிடைக்கும் நிறைவு அல்ல, ஆனால் புதிதான அவரது பிரசன்னம் வல்லமையோடும் தொடர்ச்சியாகவும் நமக்குக் கிடைப்பது என்று நாம் கற்றோம் (எபே. 5:18). தேவன் தாம் வாக்களித்ததைக் கண்டிப்பாக நிறைவேற்றுவார் - கேளுங்கள் அது போதும்!

ஆகவே கேட்டுக்கொண்டேயிருப்போம், தேடிக்கொண்டேயிருப்போம், கிடைக்கும் வரைத் தட்டிக்கொண்டேயிருப்போம் (லூக் 11:9,10). தேவன் பரிசுத்த ஆவியானவரின் முழுமையையும் தர ஆசிக்கிறார் (லூக். 11:13). உங்கள் உள்ளத்தைத் திறந்து கொடுங்கள். பொறுமையோடு காத்திருந்து அவரையும் அவர் உங்களை நிரப்ப ஆவலாயிருக்கிறார் என்பதையும் நம்புங்கள் (எபி. 11:6).



புதிய நிரப்புதலுக்காக அனுதினமும் ஜெபிக்க வேண்டும். ஏனெனில் நாம் தொடர்ச்சியாக நிரப்பப்படுவது அவசியம். நாம் செய்கிற எல்லாவற்றிற்கும் ஒவ்வொரு வினாடியும் அவரது வல்லமையும் பிரசன்னமும் தேவை.

### பெற்றுக்கொள்ளுங்கள்

புதிதாக ஆவியானவரின் நிறைவை நாம் விசுவாசத்தின் மூலமாகப் பெற்று கொள்கிறோம். நாம் தேடுவது, பரிசுத்த ஆவியானவர் தமது பிரசன்னத்தை பகிர்ந்து அளிப்பதையாகும், உணர்வுபூர்வமான ஓர் அனுபவத்தை அல்ல, நீங்கள் உட்கார்ந்தோ, முழங்காலிலோ, நின்று கொண்டோ அல்லது படுத்துக்கொண்டோ எந்த நிலையிலிருந்தும் கேட்கலாம். ஜெப அறை,, சமையலறை, படுக்கை அறை, ஆலயம் அல்லது திறந்த வெளியிலோ உங்கள் உள்ளத்தில் தோன்றும் வார்த்தைகளைக் கொண்டே கேட்கலாம். ஜெபிப்பதற்கு சரியான முறை தவறான முறை என்று ஒன்றும் இல்லை. நீங்கள் இருக்கும் வண்ணமாக உங்களிடமிருந்து கேட்க தேவன் விரும்புகிறார்.

நீங்கள் கேட்கும் முறை இவ்வாறு இருக்கலாம்: ‘‘பரிசுத்த ஆவியானவரே, வாரும் உம்மிடத்திலிருந்து ஏராளமாய்ப் பெற்றுக்கொள்ள என் இருதயத்தை திறந்து கொடுக்கிறேன். புதிதான நிரப்புதலை வேண்டுகிறேன். உம் பிரசன்னத்தினால் என்னை நிரப்பும்; துதிகளால் என் வாய் நிறைந்திருப்பதாக. தேவனுக்குப் பிரயோஜனமான பாத்திரமாக நான் இருக்க என் ஊழியத்தை உமது வல்லமையால் நிரப்பும்.” உங்களுடைய சொந்த வார்த்தைகளை உபயோகியுங்கள் உங்கள் இருதயத்தை தேவனுக்குத் திறந்து கொடுங்கள். ஜெபியுங்கள், பெற்றுக் கொள்ளுங்கள், இயேசுவின் நாமத்தினால் நிரப்பப்படுங்கள்! அல்லேலூயா!

### முடிவுரை

சகோதர, சகோதரிகளே, பணித்தள சக ஊழியர்களே, சுவிசேஷ ஊழியப் பங்காளிகளே நீங்களும் நானும் பெற்றிருப்பது ஓர் உன்னதமான அழைப்பே! கிறிஸ்துவின் சரீரத்திற்கு *“அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல்... குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற*

*இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே"* (1 பேதுரு 1:18,19). ஊழியம் செய்யும் பணியைப் பெற்றிருக்கிறோம்.

இந்த அழைப்பை நம்முடைய சுய பெலத்தைக் கொண்டு செய்யவோ அல்லது முயற்சிக்கவோ கூடவே கூடாது. உண்மையாகவே கனிதரக்கூடியதற்கும், **பலனளிக்கக்கூடியதற்கும்**, தேவனை **மகிமைப்படுத்தக்கூடியதற்கும்** ஏதுவான சகலத்தையும் நமக்கு அவர் கொடுத்திருப்பதினால் அவருக்கு ஸ்தோத்திரம்!

நாம் இப்பாடத்தைத் தேவனுடைய வார்த்தையைக் கொண்டு ஆரம்பித்தோம்:

*"பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" (சகரியா 4:6).*

காலாகாலமாய் தேவன் ஏற்கெனவே பெரியதும் ஆச்சரியப்படக் கூடியதுமான காரியங்களைச் செய்திருக்கிறார். ஆனாலும் அவர் செய்யப் போவதாகக் கொடுத்த வாக்குத்தங்கள் நிறைவேற வேண்டியிருக்கிறது!

இயேசுவானவர் மகிமைப்பட அற்புதங்கள், அடையாளங்கள், அதிசயங்களாகிய *"பெரிய காரியங்கள்"* இன்னும் நடைபெற வேண்டியிருக்கிறது (யோவா. 14:12). தேவன் உங்கள் மூலமாய் இவற்றை செய்ய விரும்புகிறார்.

தைரியமாக சுவிசேஷத்தை அறிவிப்பதையும், கிறிஸ்துவை விட்டு விலகினவர்கள் மனம் மாறுவதையும், சபையை நாட்டுவதையும் தேவன் வாஞ்சிக்கிறார். உங்கள் சபைக்கு, உங்கள் பட்டினத்திற்கு, உங்கள் ஜனத்துக்கு இதை வாஞ்சிக்கிறார்!

தேவன், தங்கள் வாழ்க்கையை அவருக்கு ஒப்புக்கொடுக்கிறவர்களைத் தேடிக்கொண்டேயிருக்கிறார். *"இதோ அடியேன் இருக்கிறேன் என்னை அனுப்பும்"* (ஏசா. 6:8) என்று சொல்லக்கூடியவர்களுக்கும், அவரை எல்லாவற்றிற்கும் மேலாக ஆவிக்குரியத் தாகத்தோடு தேடுகிறவர்களுக்கும் பதிலளிக்க ஆவலாயிருக்கிறார். நம் வாழ்க்கையிலும் ஊழியத்திலும் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற ஒரே ஒரு வழி தான் உண்டு - அது பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின் மூலமே! பரிசுத்த ஆவியின் வல்லமையினால் தான் நாம் மனமாற்றம்,



வரங்கள், தேவன் வாஞ்சிப்பவற்றை நிறைவேற்ற பலன் ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ளுகிறோம். கேட்ட உடனே இவை கிடைக்கும்! தேவன் தமது ஆவியை உங்களுக்கு அளவில்லாமல் தருவார் என்று நம்புங்கள். அவருடைய அபிஷேகத்தைப் பெற்று ஊழியஞ் செய்யுங்கள். ஊழியத்தில் ஆவியானவரின் வல்லமையைப் பிறருக்குக் கொடுக்கிறீர்கள். ஆதலால் அவர் இன்னும் **அதிகமாக** *உங்களுக்கும் உங்கள் மூலமாய் பிறருக்குமாக* ஊற்றப்படுகிறார்.

தேவன் தாமே உங்களை ஆசீர்வதித்து தங்கள் சத்தியத்தை அறிந்து கொள்ள உங்கள் ஆவியின் கண்களைத் திறப்பாராக. அவருடைய கிருபையை நீங்கள் பெற்று எல்லாவற்றிலும் அவருக்குக் கீழ்ப்படிய உதவி செய்வாராக. அவர் தாமே உங்கள் ஊழியத்தையும், உங்களையும் நிறைவாய் அபிஷேகிப்பாராக. அதன் மூலம் அநேகருடைய வாழ்க்கைச் சீர்ப்படுவதாக. அவர்களுக்காக சிலுவையில் மரித்தவருக்கு உரிய மகிமை உண்டாவதாக. பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தில் வளர்ந்து பெருகுவீர்களாக. உங்கள் ஊழியத்தின் மூலமாய் தேவனுக்கே துதி, கனம், மகிமை உண்டாவதாக. இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வேண்டிக் கொள்ளுகிறோம் பிதாவே. ஆமென்!

## அவசரம்! ஸ்டாம்பு / நேரம் சேமிக்கலாம். இமெயில் மூலம் புதுப்பிக்கலாம். - அவசரம்!

**அடுத்த நடபடிகள் இதழை முதலாவது பெற்றுக்கொள்ளும் சபைத்தலைவராக இருங்கள்.**

**இணையதளத்தில் பி.டி.எப் (PDF files) மூலம் வாசிக்க கீழ்க்கண்டவற்றை கவனிக்கவும்.**

1. உங்கள் சந்தாவைப் புதுப்பிக்கும் நேரமா? விலாச லேபலில் முடியும் தேதி (Expire date) உள்ளது.
2. அது இப்போதிலிருந்து 6 மாதத்துக்குள்ளிருந்தால் இதுவே நீங்கள் புதுப்பிக்க வேண்டிய நேரம்.
3. உங்கள் 3 வருட சந்தா முடிந்து விட்டாலோ இன்னும் 6 மாதங்களில் முடியப்போவதாக இருந்தாலோ புதுப்பியுங்கள்.

**உங்கள் நடபடிகள் சந்தாவை போஸ்ட் ஆபீஸ் மூலமாகவோ ஆன்லைன் (online) மூலமாகவோ புதுப்பிக்கலாம்.**

- **ஆன்லைனில் புதுப்பிக்க wmap_india@hotmail.com என்ற இமெயிலுக்கு அனுப்பவும்.**
  1. சீக்கிரமாக புதுப்பிக்க "Renew my ACTS Subscription' என்று "Subject" அருகே எழுதவும்.
  2. உங்கள் முதலாவது, ***கடைசி பெயரையும் உங்கள் நடபடிகள் லேபலில் மேலே காணப்படும். எண்ணையும் எழுத வேண்டும்.***
  3. விலாசம் மாறினால் உங்கள் பெயர், லேபல் எண், பழைய, புதிய விலாசங்கள் கொடுக்கவும். உங்கள் மாகாணம், போஸ்டல் கோட் (போஸ்ட் மூலம் வேண்டுமானால்) அவசியம்.
  4. கீழ்க்கண்ட படிவத்தை நிரப்பவும் (இ-மெயிலில் "attached files" அனுப்பவேண்டாம்.
  5. நடபடிகள் இதழை pdf-ல் வாசிக்க உங்கள் இமெயில் விலாசம் தேவை. கவனமாக, சரியாக எழுதவும். பின்னர் தபாலிலும் அனுப்புவோம்.



- **போஸ்ட் மூலம் புதுப்பிக்க கீழ்க்கொடுக்கப்பட்ட படிவத்திலோ, அது போன்று மற்ற தாளிலோ எழுதலாம்.**
  1. புதுப்பித்தல், படிவத்தில் கொடுக்கப்பட்டபடி YES அல்லது NO எழுதவும்.
  2. ஒவ்வொரு வினாவுக்கும் பதில் அவசியம். பெரிய எழுத்தில் எழுதவும்.
  3. இ-மெயிலில் நடபடிகள் பெற்றுக்கொள்ள உங்கள் விலாசத்தை 'பெரிய எழுத்தில்" (block letters) எழுதவும்.
  4. புதுப்பித்தல் படிவம் World MAP Acts India, Post Box 1037, Kilpauk, Chennai-600 010. India என்ற விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும்.

**கவனிக்க :**




நடபடிகள் இதழ்கள் சபைத் தலைவர்களுக்கு சந்தா பணமின்றி அனுப்பிவைக்கப்படும். அவர்கள் வாரத்திற்கு ஒருமுறை 20 பேரிடமாவது வசனத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். மூன்று வருடங்களுக்கு இந்த இதழ் அனுப்பப்படும். அதன்பின் சந்தாவைப் புதுப் பித்தால் இன்னும் 3 ஆண்டுகளுக்குப் பெற்றுக் கொள்வீர்கள்.

நடபடிகள் இதழ் ஒரு "அஞ்சல் வழிப் **பாடத்திட்டமல்ல**". நடபடிகள் இதழை வாசித்தபிறகு, உங்களுக்கு ஒரு "நற்சான்றிதழோ" அல்லது "டிப்ளமாவோ" கொடுக்கப்படுவதில்லை. இன்னும் மேன்மையான ஒன்றை நீங்கள் பெறவேண்டுமென்பதே எங்கள் நம்பிக்கையாகவும், ஜெபமாகவும் இருக்கிறது. **வேதாகம அடிப்படையிலான போதனை மற்றும் செயல்பூர்வமான ஊழியப் பயிற்சியே இது!** நீங்கள் போதிப்பதிலும், ஊழியம்செய்வதிலும், சாட்சிகூறுவதிலும் இந்த இதழ் உங்களைப் பலப்படுத்தும்.

**TA**

## ‘நடபடிகள்’ புதுப்பித்தல்/ ‘மேய்ப்பனின் கோல்’ விண்ணப் படிவம்

**கீழ்க்கண்ட கேள்விகளுக்கு ஆம்/இல்லை எனும் பதிலை சுற்றி வட்டமிடவும்**

1. என் நடபடிகள் பத்திரிகை அடுத்த 6 மாதத்தில் முடிவடைவதால், அதைப் புதுப்பிக்க விரும்புகிறேன். **ஆம் இல்லை**
2. என் நடபடிகள் லேபல் எண்.......................... முடியும் தேதி .......................................
3. நான் உண்மையாகவே சபை ஊழியன். ஒரு வாரத்தில் 20 பேருக்காவது வேதாகமத்தைப் போதிக்கிறேன். **ஆம் இல்லை**
4. உங்களிடம் *'மேய்ப்பனின் கோல்'* உள்ளதா **?** **ஆம் இல்லை**
5. இப்போது *'உங்களுக்கு மேய்ப்பனின் கோல்'* வேண்டுமா? **ஆம் இல்லை**
6. உங்களுக்கு இந்த இதழை Pdf மூலம் அனுப்ப வேண்டுமா?
7. **கீழே பெரிய எழுத்துக்களில் உங்கள் பெயர், விலாசம் எழுதவும்**

என் கடைசி பெயர் (குடும்ப பெயர்) ________ முதல் பெயர் ________

விலாசம் ________

________

இடம் / மாவட்டம் ________ மாநிலம் ________

என் நாடு ________ தபால் கோடு ________

சபையில் பொறுப்பு ________

என் கையெழுத்து________ என் இ-மெயில் ________

8, நீங்கள் வாசித்த போதனைகள் வாசிப்பதற்கு
எளிதா____ கடினமா?____ உதவியதா____ உதவவில்லையா ____

தனித்தாளில் உங்கள் கருத்தையும், சாட்சியையும் அனுப்பலாம்
நடபடிகள் / மேய்ப்பனின் கோல் பற்றி எழுதி அனுப்பலாம்
இ-மெயிலிலும் எழுதலாம்: wmap@world-map.com
அனுப்ப வேண்டிய விலாசம் :
**WORLD MAP, ACTS INDIA, Kilpauk, Chennai - 10. T.N. INDIA**